முப்பால் மலர்

1099

திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுவிழா
வெளியீடு

திருவள்ளுவர் கழகம்
தென்காசி

முதற்பதிப்பு:
திருவள்ளுவர் ஆண்டு 2001. கி. பி. 1970.

விஜயா பிரிண்டர்ஸ், மதுரை - 1970.

விலை ரூ. 5-00



திருவள்ளுவர்

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு



ஐ. எ. சிதம்பரம்பிள்ளை, M. A., M. L. A.

தென்காசித் திருவள்ளுவர் கழகத்தலைவர்

1954 — 1967



ஸ்ரீ சி. வேம்பய்யர்
(கிருஷ்ணபுரம் மிட்டாதார்)
நூற்றாண்டு விழா
8 — 1 — 1970

பதிப்புரை

1952 என்று நினைவு: சென்னைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் சொல்லின் செல்வர் இரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் அருள் நிழலில் ஆராய்ச்சி மாணவனாக இருந்த காலம்—அதுவும் பேராசிரியரின் அறையிலேயே தங்கி ஆய்வு செய்யும் பேறு எனக்குக் கிடைத்தது. பேராசிரியரிடம் ஒரு பழக்கம் உண்டு-யார் தன்னைப் பார்க்க வந்தாலும் அவரை எனக்கும் அறிமுகம் செய்து வைப்பது; என்னையும் உடன் வைத்துக் கொண்டு உரையாடுவது; (இவை நான் பெற்ற மாபெரும் பாக்கியங்கள்) அந்த நேரத்தில் தான் தென்காசித் திருவள்ளுவர் கழகத்தாரின் பழக்கம், அறிமுகம் எனக்கு ஏற்பட்டது.

சொல்லின் செல்வரின் இலக்கிய வாழ்வுக்கும் தென்காசித் திருவள்ளுவர் கழகத்தாருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. தமது இலக்கிய நண்பர்களையெல்லாம் இக்கழகத்தின் மூலம் அறிமுகம் செய்தார். தமது புகழால் இக்கழகத்தை வளர்த்தார். ஆண்டுதோறும் இக்கழக விழாவில் கலந்து கொள்வதைத் தலையாய கடமையாகவும் கொண்டார்.

1952-ல் கழகத்தின் வெள்ளி விழா ஆண்டு: அதற்குரிய மலர் வெளியிடும் பொறுப்பைச் சொல்லின் செல்வர் அவர்களே ஏற்றுக் கொண்டார்கள். அம் மலருக்கு ‘அணில்’ போலப் பணிபுரியும் பேறு எனக்கும் கிடைத்தது. அப்போது நான் நினைத்துக் கூடப்பார்க்கவில்லை—1970-ல் இதே கழகத்தார் வெளியிடும் வள்ளுவர் ஈராயிரமாண்டு மலரைப் பதிப்பிக்கும் பேறு எனக்குக் கிடைக்கும் என்று; கழகத்தின் வெள்ளி விழா மலர் எனது பேராசிரியரின் கைவண்ணத்தால் பெருமை பெற்றது; பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு அதே கழகம் வெளியிடுகின்ற இம்மலரால் அவர்கள் மாணவனாகிய நான் பெருமை பெறுகிறேன். ‘குருவிடம் வாங்கிய கடனை’ மாணவனாகிய நான் திரும்பப் பெற்றுவிட்டேன், தென்காசித் திருவள்ளுவர் கழகத்தாரிடமிருந்து—அவ்வளவுதான்,

ஒரு புத்தகத்தை—அல்லது மலரைப் பதிப்பித்து வெளியிடுவது என்பது எவ்வளவு சிரமமான காரியம் என்பதை இப்போதுதான் உணர்கிறேன். தமிழகத்து அறிஞர் பெருமக்களது கருத்துக்களை, வள்ளுவர், வள்ளும் பற்றிய அவர்தம் சிந்தனைகளைத் தொகுத்து ஓர் கருத்துக் கருவூலமாக அப்பெருந்தகையின் ஈராயிரமாண்டில் வெளியிட நினைந்தோம். தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் இந்நினைவுக்கு உருவம் தந்து, ஊக்கமும் தந்தார்கள். கிருஷ்ணபுரம் திரு. V. S. மணி பி. ஏ. பி. எல். அவர்களோ' 'எனது தந்தையார் பெயரால் மலருக்கு ஆயிரம் ரூபாய் தருகிறேன். இப்போதே மலர் வேலையைத் தொடங்குங்கள்' என்றார். 'ஆயிரம் ரூபாய் போதுமா?— ஐயாயிரமாவது வேண்டுமே!' என்று சிந்தித்துக் கொண்டிருக்கும்போது அருமை நண்பர்கள் திரு. தெ. கணபதியப்பனும், திரு. ஆ. சிவராமகிருஷ்ணனும் 'கவலை வேண்டாம்! நாங்கள் எப்படியும் வசூல் செய்து தருகிறோம்' என்று உற்சாகத்தோடு கூறினார்கள்! ஆயிற்று! பொருளாதாரப் பிரச்சினை தீர்ந்தது— அல்ல தீர்ந்தது என்று நான் நினைத்துக்கொண்டேன். சரி! கட்டுரை வேண்டுமே! எழுதினோம்—தமிழகத்திலுள்ள தலைசிறந்த சிந்தனையாளர் அனைவருக்கும். சிலர் அனுப்பினர் கட்டுரைகளை! பலரிடமிருந்து பதிலே இல்லை— 'ரிமைண்டர்' 1, 2, 3, அதற்கு மேல் வேண்டாம் என்று விட்டு விட்டோம். எப்படியோ முயன்று கட்டுரைகள் அனைத்தையும் தொகுத்து உங்கள் முன் காணிக்கையாகத் தருகிறேன்.

இம்மலரின் பதிப்பாசிரியர் 'மகுடம்' எனக்குச் சூட்டப்பட்டபோது — என்னவெல்லாமோ திட்டமிட்டிருந்தேன். ஆங்கில நூல்களைப் போல அழகான அமைப்புடன், சிறப்புச் சொற்களைப் பற்றிய பிற்சேர்க்கையுடன் இம்மலரை வெளியிட நினைத்தேன். பதிப்புக் கலையின் முன்னோடிகளான மறைந்த பேராசிரியர்களையெல்லாம் நினைத்துக் கொண்டு தொடங்கினேன். ஆனால் அனைத்தும் 'ஆரம்ப சூரத்தன'மாகப் போய் விட்டது. கட்டுரை கிடைப்பதிலுள்ள 'சுணக்கம்' அச்சகம் ஏற்பாடு செய்வதிலுள்ள 'சிக்கல்', நான் பொறுப்பேற்றுப் பணிபுரியும் கல்லூரியின் அலுவல்கள் இவை காரணமாக நினைத்தபடி பல சிறப்புக்களுடன்

மலரை வெளியிட முடியவில்லை. மலரின் குறையெல்லாம் எனக்குரியதே! நிறையெல்லாம் தென்காசித் திருவள்ளுவர் கழகத்துக்குரியது.

கடந்த 43 ஆண்டுகளாக திருக்குறள் நெறியினைத் திக்கெல்லாம் பரப்பும் பணியில் ஈடுபட்டுள்ள திருவள்ளுவர் கழகத்தின் சார்பாக குறளாசான் இணைமலர்ப் பாதங்களில் இம்மலரைப் படைகின்றேன். இம்மலருக்குக் கட்டுரை தந்த அறிஞர் பெருமக்கட்டும், செவ்விய முறையில் அச்சிட்டுதவிய மதுரை விஜயா அச்சகத்தாருக்கும் என் நன்றி.

வணிக நோக்கின்றி வெளிவரும் இம்மலரைத் தமிழ் மக்கள் விரும்பி வரவேற்பர் என நம்புகிறேன்.

மதுரை
15—5—70

அன்பன்
தி. அ. சொக்கலிங்கம்

திருவள்ளுவர் கழகம் தென்காசி

நன்றியுரை

பொய்யில் புலவன் பூங்கழல் போற்றி!

இது குறள் யுகம். புதிய சிந்தனையும், புதுமைக் கருத்தும் பூத்துப் பொலியும் பொன்யுகம். தமிழகத்தின் பழங்கால வரலாற்றுக்கு எடுத்துக் காட்டுகளாகத் திகழ்பவை திருக்கோயில்கள். பழைய நாகரிகத்தின் சின்னங்களாக நின்று இன்றும் உயிரூட்டுபவை இலக்கியங்கள் அவற்றுள் தலையாக வைத்தெண்ணப் படுவது திருக்குறள். தமிழ்ச் சமுதாயத்தின் ஆக்கத் திற்கும், வளர்ச்சிக்கும், நிலை பேற்றிற்கும் இந்நூலே அடிப்படை. இச்செய்தியினை உலகிற்கு எடுத்தோதுவ தற்கென 43 ஆண்டுகட்கு முன் தோன்றிய கழகம் தான் ''தென்காசித் திருவள்ளுவர் கழகம்''

43 ஆண்டுகளாக இவ்வையகத்தில் குறள் பரப்பி சிந்தனை உலகில் ஒரு மறுமலர்ச்சியினைத் தோற்று வித்துவரும் தென்காசித் திருவள்ளுவர் கழகத்தின் இரண்டாவது முயற்சியின் விளைவே இவ்விரண்டாயிர ஆண்டு விழா மலர். தமிழகத்துச் சொல்லேருழவர் களின் அரிய கருத்துக்கள் நிறைந்த சீரிய சிந்தனைக் கட்டுரைகள் இம்மலருக்கு அழகு செய்கின்றன.

இம்மலருக்கென தம் தந்தையாரின் நூற்றுண்டு விழா நினைவாக ஸ்ரீ வேம்பய்யர் சாசுவத தர்மசாசன நிதியிலிருந்து ரூ. 1000/- கொடுத்தருளிய மிட்டாதார் பெருந்தகை உயர்திரு. V. S. மணி அய்யர் அவர் களுக்கும், மற்றும் மனமுவந்து பொருளுதவிய ஏனைய நன்கொடையாளரனைவருக்கும் இக்கழகம் என்றும் கடமைப்பட்டுள்ளது.

**''பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்''**

என்பது குறள். அதற்கிணங்க வாழ்பவர் மதுரை யாதவர் கல்லூரி முதல்வர் உயர்திரு **தி. அ. சொக்க லிங்கம்** அவர்கள். அவ்வாறு அரிய முயற்சியே இம்மலர்

சிறப்புற அமைவதற்குத் தலையாய காரணம். அப்பெருந் தொண்டினை நினைந்து போற்றிய வண்ணம் அவர் களுக்கு இக்கழகத்தார் தம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

இக்கழகத்தின் வேண்டுகோளுக் கிணங்கி உயரிய கட்டுரைகள் எழுதி உதவிய பேரறிஞர்கள் அனைவ ருக்கும் இக்கழகத்தின் பணிவார்ந்த நன்றி என்றும் உரியதாகும்.

மிக்க மகிழ்ச்சியோடும் நன்றியுணர்வோடும் இக்கழகம் தனது இவ்வெளிய படைப்பினை, திருவருளை நினைந்து, தமிழுலகின் முன், பணிவுடன் உலவவிடு கிறது. அன்புடன் ஏற்று உதவுமாறு உளங்கனிய வேண்டுகிறோம்.

வாழ்க வள்ளுவம்!

டி. எஸ். சங்கரநாராயண பிள்ளை,
தலைவர்.

நெ. கணபதியப்பன்,
துணைத்தலைவர்.

ஆ. சிவராமகிருஷ்ணன்,
செயலர்.

வாழ்த்துரை

இரா. நெடுஞ்செழியன்.
கல்வி-நலத்துறை அமைச்சர்.

தமிழக அரசு
தலைமைச் செயலகம்
சென்னை-9.
மார்ச் 29, 1970

காலத்தால் அழியாத இலக்கியம் திருக்குறள், உலகத்தில் எத்தனை எத்தனையோ இலக்கியப் படைப்புக்கள் இருந்தபோதிலும், திருக்குறளுக்கு ஈடாக எதையும் சொல்வது கடினம். மனித சமுதாயத்திற்கு வழிகாட்டியாக அமைந்த பலவற்றுள்ளும் திருக்குறள் தனித்தன்மை வாய்ந்தது. பெரும்பாலான இலக்கியங்கள் அற்புதங்கள் நிறைந்ததாகவும், அதிசயங்கள் நிகழ்ந்ததாகவும் பலப்பல கூறி அதன் வாயிலாக நீதி புகட்டுகின்றன. ஆனால் திருக்குறள் மட்டுமே மனித சமுதாயத்திடம் நேரிடை நம்பிக்கை வைத்து மனிதன் உய்யும் வழியை வரையறுத்துக் கூறுகிறது. மனித சமுதாயத்திடம் அத்தகைய நம்பிக்கை வைத்து, திருக்குறள் யாத்த திருவள்ளுவப் பெருந்தகை பிறந்த மண். இந்தத் தமிழகம். இன்றல்ல .... நேற்றல்ல .... இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அப்படிப்பட்ட உயர்நோக்குக் கொண்டதாக விளங்கியதும் தமிழ் சமுதாயம் என்பதையே இது காட்டுகிறது.

திருவள்ளுவர் பிறந்த மண்ணில் பிறந்த நாம் அவரது வழி நின்று உலகுக்கு வழிகாட்டுவோமாக! தாங்கள் வெளியிட இருக்கும் திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டு நினைவு மலர் சிறப்புடன் வெளிவர எனது வாழ்த்துக்கள்.

இரா. நெடுஞ்செழியன்

வாழ்த்துரை

எழுதரிய உணர்வினுக்கும் வடிவமைக்கும் புலமோ
இலக்கியநல் அணியதற்குப் புனைந்தளிக்கும் திறமோ
முழுதுலகும் ஏற்கும்அறக் கொள்கைகளும் நலமோ
முன்னேற்ற வாழ்வெவர்க்கும் பரிந்துரைக்கும் மனமோ

செந்தமிழர் பண்பாட்டைத் தொகுத்தளித்த பேரோ
தெய்யத்தமிம் மொழியிலதை வகுத்தமைத்த சீரோ
பைந்தமிழ் நடையழகைப் பண்படுத்தும் விரோ
பலகலையும் வல்லதிரு வள்ளுவனார் சீர்காண்!

எழுசீராய் விரிகின்ற வள்ளுவச்சீர் ஏழு
ஈராயிரம் ஆண்டின்மேறும் ஏழு சீர்கான்!
தொழுதுகுறள் அறநெறியைக் கடைப்பிடித்து நாளும்
தொகையாகச் சீரனைத்தும் தொடர்ந்துவர வாழ்வோம்!

டாக்டர் **தமிழண்ணல்,**
தியாகராசர் கல்லூரி, மதுரை.

ஏற்றுநாம் வாழ்வோம் இனிது

''காசே''

முப்பாலில் தோய்ந்தெடுத்த முத்துக் குறள்மணிகள்
எப்பாலும் எக்காலும் எவ்விடத்தும் ஒப்புதலால்
ஒப்புவமை கூறு உலகப் பொதுமறையைத்
தப்பாமல் கற்றுத் தழை.

ஏழ்சீரால் பாட்டெழுதி இவ்வுலகைத் தன்னகத்தே
ஆழ்த்தி அளந்த அருங்குறளோன் வாழ்வியலைப்
போற்றிப் புகழாதார் பூவுலகில் இல்லாதால்
ஏற்றுநாம் வாழ்வோம் இனிது.

உள்ளுரை

பேதைமை

டி. கே. சி

திருவள்ளுவர் ஒன்றும் தெரியாத அசடுகளோடு ரொம்ப ரொம்பக் கஷ்டப் பட்டிருக்கிறார். கஷ்டம் எல்லாம் வின்யாசமாக வெளி வருகின்றன.

பேதையர் என்ற வர்க்கம், அநாதியான வர்க்கம், அது மனுஷ இனத்தில் ஒரு பெரும் பகுதியென்று சொன்னால் குற்றமில்லை.

என்ன செய்வார் அப்பாவி திருவள்ளுவர். அழுது தொலைக்கிறார், கண்ணீர்த் துளி ஒவ்வொன்றும் அழகிய செய்யுளாய் உருவெடுக்கிறது.

*

பேதைமை என்பதைப் பற்றிச் சொல்ல வருகிறார். ''நேயர்களே, அது உங்களுக்குத் தெரியாது, நான் சொல்லுகிறேன் கேளுங்கள்'' என்று ஆரம்பிக்கிறார்.

பேதைமை என்பதொன்(று)
யாதெனின்

''அதொரு பெரிய விஷயம், சொல்லுகிறேன், கவனமாய்க் கேளுங்கள்''

பேதைமை என்பதொன்(று)
யாதெனின் ; — ஏதங்கொண்(டு)
ஊதியம் போக
விடல்

நஷ்டமான காரியம் கொஞ்சம் எட்டியே இருக்கும். லாபமான காரியம் கைக்குள்ளேயே இருக்கும்.

ரொம்ப சிரமப்பட்டு நஷ்டமான காரியத்தைப் (ஏதங்கொண்டு) பிடிப்பார்கள். லாபத்தைக் (ஊதியம்) கவனியாமல் அப்படியே நழுவ விட்டு விடுவார்கள்.

'' தெரிந்து விட்டதல்லவா பேதைமை இன்னதென்று! '' என்று கேட்கிறார் குறளாசிரியர்.

*

சில காரியத்தை ஒருவன் சாதித்துக் கொள்ளலாம். சௌகரிய மாய் அதை அனுபவித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் அப்படி இருக்க ஒட்டுமா விதி!

தனக்கு எவ்விதத்திலும் முடியாத ஒரு காரியத்துக்குள் பிரவேசிக் கிறது. அதில் மோகங் கொள்ளுகிறது. நஷ்டமடைகிறது. கடை சியில் வேண்டாத துன்பத்துக்கு உள்ளாகிறது.

இதைவிடப் பேதைமையான காரியம் ஒன்று இருக்கவா செய்யும் உலகத்தில்!

பேதைமை யுள்எல்லாம்
பேதைமை காதன்மை
கையல்ல தன்கட்
செயல்

[கையல்ல தன்கட் செயல் காதன்மை: தன்னாலாகாத ஒரு காரி யத்தைத் தானே செய்து சாதிக்க வேண்டும் என்ற ஆத்திரம்.]

❋

ஒருவர் வயசானவர். பல நூல்களையும் நன்றாய்க் கற்றவர், நூல்களில் உள்ள விஷயங்களையும் நன்றாய் அனுபவித்து அறிந் தவர். அனுபவித்த விஷயங்களைப் பிறருக்கு எடுத்துச் சொல்வது அபாரமாய் இருக்கும். பொறுமை, அடக்கம் எல்லாம் அவருடைய வாழ்க்கையில் நன்றாய்க் காணலாம், சாமானியமாக அவருக்குக் கோபம் வருவதே இல்லை.

ஆனாலும் ஒரு விஷயம். அதாவது பிள்ளைகளுடைய அபரிமித மான செலவைப் பற்றி பிரஸ்தாபிக்க நேர்ந்து விட்டால் போச்சு காரியம், ஒரே ஆங்காரம், கோபாவேசம், தகாத வார்த்தைகள் எல் லாம் அவரைப் பிச்சுக்கொண்டு வந்துவிடும், நமக்கே கஷ்டமாய்ப் போய்விடும், அந்தக் கண்ணராவியைப் பார்க்க,

ஓதி உணர்ந்தும்
பிறர்க்(கு) உரைத்தும் தானடங்காப்
பேதையில்ப் பேதையார்
இல்.

[ஓதி: அறியவேண்டிய நுண்ணிய நூல்களைக் கற்று; உணர் ந்தும்: அப்படிக்கற்று வந்ததனால் ஆன பயனை அனுபவித்தும் பிறர்க்கு உரைத்தும்: மற்றவர்களுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்லுகிற பயிற்சி இருந்தும்! தானடங்காப் பேதையில்: மித மிஞ்சிப் போகாமல் அடக்கமாய் பேசவோ செயல் செய்யவோ முடியாத பேதையைப் போல்; பேதையார் இல்: பேதை ஒரு வனும் இல்லை இந்த உலகத்தில்.]

❋

விஷயம் தெரியாதவன் கையில் பெரும் பணம் சேர்ந்துவிட்டால் என்ன விபரீதமெல்லாமோ நேர்ந்து விடும். வேண்டியவர்களாய், அவன் விஷயத்தில் உண்மையான அக்கரை உடையவர்களாய்ச் சிலர் இருப்பார்கள். அவர்களைப் பற்றி இல்லாத பொய் பொலைகள் சொல்லிப் பிரித்துவிடுவார்கள் வேண்டாதவர்கள். அந்த வேண்டாத ஆசாமிகளுக்கே சலுகைகள் எல்லாம். வேண்டியவர்களுக்கு ஒன்றுமே இல்லை. மூன்று கலமும் பூஜ்ஜியம்.

ஏதிலார் ஆரத்
தமர்பசிப்பர் பேதை
பெருஞ் செல்வம் உற்றக்
கடை.

[ஏதிலார்: வேண்டாதவர்கள், – நம்மிடத்தில் அக்கரை இல்லாதவர்கள்; ஆர: வயிறு நிறையச் சாப்பிட்டுக்கொண்டிருக்க; தமர் பசிப்பர் : தமக்கு உண்மையிலேயே வேண்டியவர்கள் சாப்பாட்டுக்கு வழியில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டே இருப்பார்கள்; பேதை பெருஞ் செல்வம் உற்றக்கடை: ஒன்றும் தெரியாத அசட்டுக்கு அதிகமான செல்வம் வர நேர்ந்து விட்டால்.]

✻

அறிவில்லாதவன் ஒன்றுமே செய்யாமல் சும்மா இருந்தால் நல்லது. ஏதேனும் ஒன்றைச் செய்ய ஆரம்பித்துவிட்டால் தொலைந்தது காரியம். ஒரு செயலில் இருந்து பத்துக் கேடுகள் விளைந்துவிடும். ஏன், முடிவில்லாதபடி கேடுகள் விளைந்து கொண்டே இருக்கும். ஏழு ஜென்மத்துக்குமே விளைந்துகொண்டிருக்கும் கேடு என்று எண்ணத் தோன்றும்.

ஒருமைச் செயலாற்றும்
பேதை எழுமையும்
தான்புக்கு அழுந்தும்
அளறு.

[ஒருமைச் செயலாற்றும் பேதை: இந்த ஜென்மத்தில்தான் ஒரு வேலையைச் செய்வான் பேதை. ஆனல் அதன் விளைவு எப்படி இருக்கும் – எழுமையுந்தான்புக்கு அழுந்தும் அளறு: ஏழு ஜென்மத்துக்கும் நரகத்தில் போய் கஷ்டப்படுவதாக ஏற்பட்டு விடும். (அளறு : நரகம்.]

✻

ஒருவனுக்கு பைத்தியம் பிடித்திருந்தால் என்ன கேடெல்லாமோ உண்டாக்கிக் கொள்ளுவான். அவன் கள்ளையும் குடித்து விட்டானுல் எப்படி இருக்கும்! அதே மாதிரிதான் பேதை ஒருவனுடைய கையில் இரண்டு காசு சேர்ந்து விட்டால்.

மையல் ஒருவன்
களித்தற்றால் பேதைதன்
கையொன்(று) உடைமை
பெறின்.

[மையல் ஒருவன் களித்தற்றால்: பைத்தியம் பிடித்தவன் கள்ளையும் குடித்த மாதிரிதான்; பேதை தன் கையொன்று உடைமை பெறின்: பேதையினுடைய கைக்கு கொஞ்சம் பணம் வந்து விட்டால்.]

*

பேதைகளோடு வாழ்கிறது என்றால் சதா துன்பந்தான், எரிச்சல்தான். விபத்துகளுக்கு குறைவு இல்லை. இவ்வளவும் நீங்கி விடும் அந்த பேதையைவிட்டுப் பிரிந்துவிட்டால். ஆகையினால்:

"பெரிதினிது பேதையார்
கேண்மை"
என்றார்.

பெரிதினிது பேதையார்
கேண்மை; பிரிவின்கண்
பீழை தருவதொன்(று)
இல்.

[பெரிதினிது பேதையார் கேண்மை: பேதைகளுடன் சிநேகிதம் வைத்துக்கொள்ளுவது ரொம்ப ரொம்ப நல்ல காரியம். ஏன்: பிரிவின்கண் பீழை தருவதொன்று இல்: அவர்களை விட்டுப் பிரிய நேரும்போது துன்பம் தரக்கூடியதான அம்சம் ஒன்றுமே இராது.]

இதிலிருந்து என்ன தெரிகிறது: நல்ல அறிவாளிகளோடு சிநேகம் வைத்துக்கொண்டால் அவர்களைவிட்டுப் பிரியநேரும்போது மனசுக்கு எவ்வளவோ துன்பம் என்பது தெரியக்கிடக்கிறது.

*

சென்னையில் மாணவர் விடுதியில் இருந்தபோது இரவு பத்து மணிக்கு நாங்கள் இருபது மாணவர்கள் விக்டோரியா பப்ளிக் ஹாலுக்கு ஒரு பிரசங்கத்தைக் கேட்கப் போனோம். பேசியவர் ஒரு புகழ் பெற்ற அமெரிக்கப் பாதிரியார்.

பதினோறு மணிக்கு முடிந்தது பிரசங்கம்.

இருபது பேரும் நடந்து திரும்பி வந்தோம் ஹாஸ்டல் இருந்த லிங்கிச் செட்டி தெருவுக்கு. ஹாஸ்டலுக்குள் போனோம்.

தூசி படிந்திருந்த காலைக் குழாயில் கழுவி விட்டு மாடிக்கு ஏறி படுக்கையில் படுத்துக் கொண்டோம்.

விடியற் காலம் எழுந்து பார்த்ததும் படுக்கையின் மேல் விரித்திருந்த வெள்ளைத்துப்பட்டியில் கால்மாட்டில் கருப்புச் சாயத்தினுல் எப்படியெல்லாமோ பல கோடுகள் தீட்டியிருந்தன.

காரணம் முதலில் தெரியவில்லை. பிறகு தெரிய வந்தது, காலில் ஒட்டியிருந்த வண்டி மசகு குழாய்த் தண்ணீரில் போகவில்லை என்று. ஆகவே அது வெள்ளைத் துப்பட்டியில் மேலே சொன்ன விசித்திரமான கோடுகளைத் தீட்டி விட்டது.

மனசுக்கு அருவெறுப்பை உண்டாக்கத்தானே செய்யும் வண்டிமையின் காரியம், இனி:

குறளாசிரியர் அனுபவத்தைப் பார்க்கலாம்.

நல்ல அறிவாளிகளாய் நாலைந்து பேர் உட்கார்ந்து பெரிய விஷயம் ஒன்றைப் பற்றி ரசமாய் ஆராய்ந்து பேசிக்கொண்டிருக்கிருர்கள்.

அந்தக் குழாத்துக்குள் அந்தஸ்தான உடை அலங்காரங்களோடு ஒருவர் வந்தார். எல்லாரும் அவரை உட்காரச் சொன்ஞர்கள். சிறிது நேரங்கழித்து விஷயத்தைச் சிறிதும் உணராமல் அசந்தர்ப்பமாக ஏதோ ஒன்றைச் சொன்னுர். எல்லாருக்கும் ரொம்பச் சங்கடமாகப் போய்விட்டது. 'ஏன்டா அவரை இருக்கச் சொன்னேம். ஏன்தான் அவர் இந்தக் கூட்டத்துக்கு வந்நார்' என்று பட்டது அவர்களுக்கு.

"எவ்வளவு தெளிவாக அழகாக ஆராய்ச்சி போய்க்கொண்டிருந்தது. எல்லாவற்றையும் ரஸாபாசமாய் ஆக்கி விட்டானே இந்த மனுஷன்" என்ற அருவெறுப்பான நிலைக்கு வந்து விட்டது குறளாசிரியரது மனசு.

கழாஅக்கால் பள்ளியுள்
வைத்தற்ருல், சான்ருேர்
குழாஅத்துப் பேதை
புகல்

[கழா அக்கால் பள்ளியுள் வைத்தற்ருல்: அழுக்கு ஒட்டிய காலை துப்புரவாகக் கழுவாமல் படுக்கையில் வைத்த கணக்குத்தான்;]

சான்ருேர் குழாஅத்துப் பேதை புகல்: அறிவாளிகள் குழாத்துக்குள் பேதை புகுவது; – பேசவும் செய்வானுனல் அதைப் பற்றிச் சொல்லவா வேண்டும்.

வள்ளுவரும் சங்கரரும்

V. S. மணி, B. A. ,B, L., கிருஷ்ணபுரம்.

வையகமெல்லாம் தமிழ் மணம் கமழச் செய்தார் வள்ளுவர். அவர் வழி வந்த சங்கரரும் வையமெலாம் வேதாந்தம் பரவச் செய்தார். வள்ளுவருக்கு எண்ணூறு ஆண்டுகளுக்குப் பின் வந்தவர் சங்கரர். சங்கரர் நூல்களில் சிவனடியார்களான ஞானசம்பந்தர், கண்ணப்பர் முதலிய அருட்செல்வர்களின் வரலாறுகள் காணப்படுகின்றன. ஆனால் வள்ளுவரைப் பற்றிய குறிப்புகள் ஒன்றுமில்லை. ஆயினும் கொள்கைகள், கோட்பாடுகள் எல்லாம் திருக்குறளைப் பின் பற்றியிருக்கின்றன. நீதி நெறிகளை விளக்கும் போது திருக்குறட் பாக்களுக்கு விரிவுரையாக அழகாக அமைந்து விடுகின்றன சங்கரின் சுலோகங்கள். சங்கரரின் '' பஜ கோவிந்தம் '' என்ற கற்றும் மற்றும் விரும்பும் ஒரு நூலை எடுத்துக்கொண்டு எவ்வளவு தூரம் வள்ளுவரை அவர் பின்பற்றுகிறார், எவ்வளவு அழகாக திருக்குறளுக்கு வியாக்கியானம் செய்கின்றார் என்று பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

> **'' இறலீனும் எண்ணாது வெஃகின் விறலீனும்**
> **வேண்டாமை என்னுஞ் செருக்கு ''**

பின் விளைவை எண்ணிப் பாராமல் செல்வத்தை [பிறர் பொருளை - தேவைக்கு மேற்பட்டதை] விரும்பினால் அவனுக்குத் துன்பமே உண்டாகும். வேண்டாமை என்னும் செருக்கு அதாவது ஒன்றை விரும்பாமல் வேண்டாம் என்று எண்ணினால் அதுவே செல்வம். வெற்றியையும் கொடுக்கும். தேவைக்கு மேல் செல்வம் இருப்பது திருட்டுச் சொத்து என்று உபநிடதம் கூறுகிறது. ஆகையினால் நல்வழியில் பாடுபட்டு அடைந்த செல்வத்தை வைத்து திருப்திப்பட வேண்டும். 'இஃது இல்லையே', 'அஃது இல்லையே' என்று துக்கப் படுவது மடமை. மகிழ்ச்சியும் தராது. செல்வம் கிடைத்து விட்டால் மட்டும் திருப்தி ஏற்படாது. எரிகின்ற நெருப்பில் எண்ணெய் விடுவது போல் ஆசையை அதிகப்படுத்தி மனதை அலைக்கழிக்கும். ஆகவே மனதைக் கட்டுப்படுத்த வேண்டும். சங்கரர் சொல்கிறார் :

மூடஜஹீஹி தனுகம த்ரிஷ்ணும்
குரு சத் புத்திம் மனஸி வித்ரிஷ்ணும்
யல்லபஸே நிஜகர்மோ பாத்தம்
வித்தம் தேன விநோதய சித்தம் ''

பணம் வேண்டும், இன்னும் வேண்டும் என்ற தீராத தாகத்தை விட்டு விடு; ஹே மூடனே, அதை சத்துருவாக எண்ணி வெற்றி கொள்வாய்; உள்ளம் திருப்தியான நிலையில் நிற்கச்செய்வாய்; உன் சொந்த உழைப்பினுல் சம்பாதிக்கும் பொருளைக் கொண்டு அதை அனுபவித்து திருப்தி பெறுவாய்!

'' நாளென ஒன்றுபோல் காட்டி உயிர் ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின் ''

'' நமது வாழ்நாள் நிலையற்றது, அழிவுள்ளது; கணமும் அழிந்து கொண்டே இருக்கிறது. பொழுது விடிகின்றது என்று நீ நினைக்கின்ருய்; வாழ்வில் ஒரு நாள் இன்று, அதை மகிழ்ச்சியாகக் கொண்டாடலாம் என்று எண்ணுகின்ருய். ஆனுல் அது நாளா? இல்லை; வாள் என்கிருர் வள்ளுவர், ஆம், கூர்மையான தடுக்க முடியாத வாள். ஏன்? உன் ஆயுளை வாங்கும் ஒரு வாள். நாளாக வந்து விட்டுப் போகிறது. ஆனுல் உன் ஆயுளைக் கூறுபடுத்திக் குறைத்துவிட்டுப் போகிறது. இதை அறியாமல் — அறிய முடியாமல் — அறிய முயற்சிக்காமல் — பேதையாக இருக்கிருயே! இந்த உண்மையை உணர வேண்டாமா? ஒன்றை ஒன்ருகக் கூட்டி ஏமாற்றுகிறது நாள், அதை உணர்ந்தால் உய்யும் வழியுண்டு'' — என்கிருர் வள்ளுவப் பெருந்தகை. '' நாளென ஒன்றுபோல் காட்டி '' என்பதை எவ்வளவு அழகாக சமத்காரமாக சங்கரர் வர்ணிக்கிருர் என்பதைப் பார்ப்போம்:

தினமபி ரஜனீ ஸாயம் ப்ராத:
சிசிரவஸன்தௌ புன ராயாத:
கால: க்ரீடதி கச்சத்யாயு:
ததபி நமுஞ்சத் யாசா வாயு:

களிதரும் காலையும் மாலையும் இரவும் வைகறையும் பனியும் வசந்தமும் மாறி மாறிக் காட்சி தருகின்றன. நடன மேடையில் நாட்டியமாடும் மங்கையைப்போல் காலமென்னும் காரிகை நடனமாடுகிருள். அதைப் பார்த்து நாம் மனம் மகிழ்கின்ருேம். அதன் அழகில் நெஞ்சத்தைப் பறி கொடுக்கிருேம். காலை, மாலை, சந்தி, இரவுக் காட்சிகளைப் பார்த்து மனம் மயங்கி விடுகிருேம். ஒவ்வொரு நேரமும் ஒரு தனியழகு, இயற்கை காட்டும் மாயஜாலம்; பருவங்

களின் சௌந்தர்யமும் சொல்லவேண்டியதில்லே. எங்கும் அழகு, ஆனந்தம் என்று நாம் மனப்பால் குடிக்கிருேம். ஆனல் உண்மையில் இவ்வளவு அழகும் ஆடம்பரமும் கூத்தும் இடையருமல் நம் உயிரை அறுக்கும் வாளல்லவா? இன்பம் தருவதுபோல் காட்டி மயக்கி ஏமாற்றி உயிரை வாங்கும் பகைவாள் அல்லவா? காலதேவதையின் ஒவ்வோர் ஆடலிலும் ஜதியிலும் தாளத்திலும் துள்ளலிலும் நமது ஆயுள் குறைந்து போவதை நாம் அறியவில்லேயே என்று அங்கலாய்க்கிருர் ஆதிசங்கரர். நமது ஆசைகளும் அழியாமல் போட்டி போட்டுகொண்டு வளர்கின்றனவே! ஆசைகளே விடவில்லேயே! இஃது என்ன மடமை! நாள் என்பதை ஒரு கால அளவு என்று எண்ணி ஏமாந்து போகாதீர்கள். அஃது உங்கள் உயிரை உடம்பிலிருந்து பிரித்து அறுக்கும் வாள் என்று உணரவேண்டும்.

இனி துறவிகளேப் பற்றி திருக்குறளில் சொல்வதையும் அக்குறளே சங்கரர் எப்படி விரிவுபடுத்தியிருக்கிருர் என்பதையும் பார்ப்போம்;

> '' மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
> பழித்தது ஒழித்து விடின் ''

வெளிவேஷம் போட்டுத் திரியும் துறவிகளேக் கண்டிக்கிருர் குறளாசிரியர். எதற்காக வெளிவேஷம் போடுகின்றீர்கள்? இந்தப் பகல் வேஷம் வேண்டாம். மொட்டை அடித்தல், சடை வளர்த்தல் முதலிய புறக்கோலங்களால் துறவறம் வராது; வளராது. உலகம் பழிக்கும் தீயொழுக்கத்தை விட்டால்போதும், துறவு ஒருபோதும் வெளிவேஷமல்ல. அஃது உள்ளத்தில் நிகழவேண்டியது. உள்ளத்தில் எரியும் ஆசைகள் தணியாமல் வெளிவேஷங்களால் ஒரு பயனும் இல்லே.

> '' ஜடிலோ முண்டீ லுஞ்சித கேச:
> காஷா யாம்பர பஹுக்ருத வேஷ:
> பச்யன்னபி ச ந பச்யதி மூட:
> உதர நிமித்தம் பஹுக்ருத வேஷ: ''

இது சங்கரர் சுலோகம். துறவு வேஷங்கள் எல்லாம் வயிற்றுப் பாடாய் முடிந்துவிடும். உள்ளத் தூய்மைவேண்டும். காவித் துணியும் மொட்டைத்தலேயும் நீண்ட சடையும் மற்றும் பலவிதமான வேஷங்களும் வயிற்றுக்குப் போடும் தாளமாகவே முடியும். இந்த நிகழ்ச்சிகளேக் கண்டும் உணராதவன் முழு மூடன் என்கிருர் சங்கரர். மேலும் கூறுகிருர்:

" அங்கம் கலிதம் பலிதம் முண்டம்
தசன விஹீனம் ஜாதம் துண்டம்
வ்ருத்தோ யாதி க்ருஹீத்வா தண்டம்
ததபி ந முஞ்ச்சத் யாசா பிண்டம் "

இதோ வருகிறன் பாருங்கள் ஒரு கிழவன். முதுமை ஏறிய பின்னரும் ஆசை விடவில்லை. "மீசை நரைத்துப் போச்சே கிழவா, ஆசை நரைக்கலாச்சோ" என்றபடி! தேகம் தளர்ந்துவிட்டது; மயிரெல்லாம் நரைத்து விட்டது; பல்பூராவும் விழுந்து விட்டது; மணி பர்ஸ் மாதிரி வாய்; சரியாக நடக்கக்கூட முடியவில்லை. கோலூன்றியும் தள்ளாடுகிறன் கிழவன். ஆயினும் அவன் மனதில் எத்துணை ஆசைகள்! எவ்வளவு கனவுகள்! என்னென்ன எண்ணங்கள்! ஆயிரமாயிரம்! அப்பப்பா, ஆசைகளை யெல்லாம் சேர்த்து உருட்டிய பிண்டமல்லவா? எண்ணத் தொலையுமா என்கிறர் சங்கரர். வள்ளுவர் ஒரு கோடிக்கும் மேல் ஆசைகள் இருக்கும் என்கிறர் :

"ஒரு பொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல"

இந்த அறிவில்லாத கிழவன் ஒரு வேளைகூட வாழ்க்கையின் தன்மை யைப் பற்றி நினைத்துப் பார்க்கவில்லை ; ஆராய்ந்து அறியவேயில்லை. பாவம்! அவனுக்கு அதற்கு நேரம் எங்கே இருக்கிறது? அவன் மனதில் தான் இடம் எங்கே இருக்கிறது? விளைக எண்ணுபவையோ ஒரு கோடியும் அல்ல. அதற்கும் மேல் மிகப்பல எண்ணங்கள். Infinity என்று கூடச் சொல்லலாம்.

உண்மையான துறவி, உள்ளத்தில் துறந்த பெரியார் எப்படி இருப்பார்? அதையும் கூறுகிறர் வள்ளுவர் :

"வேண்டாமை அன்னவிழுச் செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்பது இல்"

அவா அற்ற நிலையே சிறந்த செல்வம். அதுபோன்ற செல்வம் வேறில்லை. அதற்கு நிகரான ஒன்று இல்லவே இல்லை.

"ஸுரமந்திர தருமூல நிவாஸ:
சய்யா பூதலமஜினம் வாஸ:
ஸர்வபரிக்ரஹ போகத்யாக:
கஸ்ய ஸுகம் நகரோதி விராக:"

போகத்தில் ஆசையை விடுவதே விழுமிய செல்வம். தியாகமே தனம். உண்மையான துறவி கோயில் வாயிலில் இருக்கும் மரத்தடியில்

வாழ்வான். மான்தோல் போன்ற ஏதாவதொரு தோலை உடுத்தியிருப்பான். படுப்பது தரையில். இப்படி நமது கண்களுக்குக் கஷ்டப்படுவதாய் தோற்றமளித்தாலும் அவன் மிகவும் இன்பத்துடன் இருக்கிறான். ஏன்? வைராக்கியம் பிறந்து விட்டது அவனுக்கு. வேண்டாமையின் இன்பத்தை அவன் அறிந்து விட்டான். போக சுக வாழ்வில் இன்பம் இல்லை, துன்பமே இருக்கின்றது என்பதை உணர்ந்து விட்டான். அந்நிலையில் உடுப்பது தோலானால் என்ன, பட்டாடையானால் என்ன? படுப்பது கல்லும் மண்ணும் மண்டிக் கிடக்கும் தரையானால் என்ன, பஞ்சணையானால் என்ன? இருப்பது மரத்தடியானால் என்ன, மச்சு வீடானால் என்ன? கவலையற்று இன்பத்துடன் விளங்குகிறான். சுகம் என்பது வெளிப்பொருளில் அல்லது சரீரத்தில் இடங்கொண்டதல்ல. உள்ளத்தில் இடம் பெறும் ஒரு நிலை. உலக விஷயங்களில் சிக்கி அலைவதைவிட வேண்டாமை என்னும் விழுச்செல்வம் அடைவதே மேல் என்கிறார் வள்ளுவர். அவரைப் பின்பற்றி சங்கரரும் வழிமொழிகின்றார்:

இனி கடைசியாக பிறவிப் பிணியைப் பற்றி வள்ளுவர் வாய் மொழிகளைப் பார்ப்போம்.

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

எப்படி ஒருவன் இரவில் தூங்கப் போகிறானே அதுபோல் இறப்பதும் நிச்சயம். நித்திரையிலிருந்து ஒருவன் விழிப்பது எவ்வளவு நிஜமோ, அவ்வளவு உண்மை அவன் திரும்பப் பிறப்பதும், ஜன்மமும் மரணமும் மாறி மாறி வரும்.

"புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு"

"உடம்பில் ஓர் ஓரத்தில் குடியிருந்து வந்த உயிருக்கு — பாவம், நிலையாகக் குடியிருக்க ஒரு வீடு இது வரையில் அமையவில்லையா?" என்று கேள்வி போடுகிறார் வள்ளுவர். வாடகை வீட்டில் குடியிருப்பவன் அடிக்கடி 'சட்டி தூக்குவது' போல் உயிரும் உடம்பு விட்டு உடம்பு மாறிக்கொண்டே இருக்கிறது. இதுதானே பிறப்பு, இறப்பு என்னும் நோய்? இது நீங்க வழி ஏதாவது உண்டா? இந்த சம்சார சாகரத்தை தாண்ட முடியுமா? இது பெரிய கடலாகத் தோன்றுகிறதே என்று மலைய வேண்டாம்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்"

இந்தக் குறளில் எல்லாருக்கும் அபயப் பிரதானம் தருகிருர் வள்ளுவர். இறைவன் தாள்களைப் பற்றிக்கொள்ளுங்கள். பிறவிப் பெருங்கடலை நீந்திவிடலாம். நீந்துவர் என்று நிச்சயமாக அறுதியிட்டு உறுதியாகச் சொல்லுகிருர்.

இதே கருத்துக்களை சங்கரர் விளக்குவதையும் பார்ப்போம்.

"புனரபி ஜனனம் புனரபி மரணம்
புனரபி ஜனனீ ஜடரே சயனம்
இஹ ஸம்ஸாரே பஹு துஸ்தாரே
க்ருபயாபாரே பாஹி முராரே"

"பிறவித் துன்பம் பொறுப்பது கஷ்டம். அதுபோல் மரண வேதனையும் துன்பமே. பிறப்பதும், இறப்பதும் இப்படியாகத் திரும்பத் திரும்பப் பிறந்து இறந்து இளைத்துவிட்டேன். தாயின் வயிற்றில் மறுபடியும் குடிபுகுவதா? ஐயோ கடவுளே! கரை காணுமல் தவிக்கிறேன். இந்தப் பிறவிக்கடல் மிகப் பெரியது; கடப்பதற்கு முடியாதது. உன் கருணை இல்லையேல் கதியில்லை. உன் திருவடிகளைப் பற்றிக்கொண்டேன் காப்பாற்று" என்று கதறுகிருர் சங்கரர்.

(வள்ளுவர்) மகோததி [Bay of Bengal], (சங்கரர்) இரத்னுகரம் [Arabian Sea] என்ற இரு பெரும் சமுத்திரக் கரைகளில் ஒதுங்கிய—ஒதுக்கப்பட்ட—சில சிப்பிகளைப் பொறுக்கி ஆக்கிய மாலையே இக்கட்டுரை. மாலை கோர்க்கும் திறனும் இல்லை. காலடியில் ஒதுங்கிய சிப்பிகளும் மிகக் குறைவே! ஆயினும் ஈராயிரம் ஆண்டு விழாவில் ஆரமிட வேண்டுமென்ற ஆசை அளவிடற்பாலது. ஆசை வெட்கம் அறியாதல்லவா? துணிந்து செய்த பிழையை அறிஞருலகம் மன்னிக்குமென்று நினைக்கிறேன்.

வாழ்க வள்ளுவம்!
வளர்க சங்கரர் நெறி!'

துன்பமே இல்லாதது

மதுரை ஆதீனகர்த்தர் அவர்கள்

இறப்பு நிகழ்வதைப்பற்றியும், பிறப்பு நிகழ்வதைப்பற்றியும், பலரும் பலவிதமாகச் சொல்லுகிறார்கள். அவற்றில் இறப்பைப் போல் வருத்தம் விளைவிக்கின்ற சம்பவம், நமக்கு வேறு எந்த நிலையிலும் உண்டாவதில்லை யென்றும், அது எண்ணாயிரம் தேள் கொட்டினதற்கு ஒப்ப, அவ்வளவு வேதனையுடையது என்றும், பெரும்பாலோர் சொல்லுகிறார்கள் ஆனால் திருவள்ளுவர், "உறங்குவதுபோலும் சாக்காடு. உறங்கி விழிப்பதுபோலும் பிறப்பு" என்று சொல்லியிருக்கிறார். இதில் சாவு நிகழ்வது உறக்கம் வருவது போலத் துன்பமே இல்லாதது; பிறப்பு நிகழ்வது உறக்கத்திலிருந்து விழிப்பதுபோலத் துன்பமே இல்லாதது என்கிறார்.

மணிமேகலை ஆசிரியர், "பிறந்தவர் சாதலும், இறந்தவர் பிறத்தலும் உறங்கலும், விழித்தலும் போன்ற துண்மையின்" என்று திருவள்ளுவர் கூறியிருப்பதையே வலியுறுத்துகிறார். ஆகவே, இறப்பு, பிறப்பு என்னும் இவ்விரு நிகழ்ச்சிகளும், தூங்குவது போலவும்; விழிப்பதுபோலவும் உடல் வருத்தம் ஒரு சிறிதும் உண்டாக்காமல் நிகழ்கின்ற காரியங்கள் என்று தெரிகிறது. ஆனால் அதே திருவள்ளுவர், மற்றொரு இடத்தில் "சாதலின் இன்னாததில்லை, இனிது அதூஉம் ஈதல் இயையாக்கடை" என்று கூறியிருக்கிறார். இதில் ஒருவனுக்கு இறத்தலைப்போல துன்பம் செய்வது வேறொன்றும் இல்லை; அப்படிப்பட்ட சாவும் வருபவர்களுக்கு உபகாரமாக எப்பொழுதும் கொடுத்துவந்த உள்ளமுடைய வள்ளலுக்கு. அவ்வாறு கொடுத்து உதவ முடியாத காலத்தில், இன்பம் செய்வதாகும்; என்கிறார்.

இது முன் சொன்ன திருக்குறளுக்கு முரணாக இருப்பதுபோல் தோன்றலாம். இவற்றில் எதுதான் உண்மை என்று நமக்குச் சந்தேக விபரீதமின்றித் தெரியவேண்டுமானால், அதைப்பற்றி நன்றாக ஆராய்தல் வேண்டும். நாம் ஒவ்வொருவரும் பிறக்கும் பொழுது துன்பம் எதுவும் அனுபவித்ததாக நமக்குத் தெரியவில்லை. பிறக்கும் பொழுது ஏதும் உணர்ச்சி இருந்ததாகத் தெரியவில்லை. பிறந்த குழந்தைக்கு, அது அழத் தொடங்கின பிறகுதான்,

உணர்ச்சியே வருகிறதாகத் தெரிகிறது. அதுவரை, தூக்கத்தில் இருக்கிற ஒரு குழந்தையை, அது கிடந்த இருட்டு அறையிலிருந்து வெளியே கொண்டுவந்து கிடத்திவிட்டால், அதற்கு எப்பொழுது வெளியே வந்தோம், எப்படி வெளியே வந்தோம் என்பன, தெரியாதல்லவா? அதே நிலைமையிலேயே, யாதொரு உடல் வருத்தமும் மன வருத்தமுமின்றி, நாமெல்லாம் பிறந்திருக்கிறோம் என்றுதானே சொல்லவேண்டும்.

இனி இறப்பு எப்படி ஏற்படுகிறது என்பதை, நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டுமானால். ஒன்று நாமே இறந்துபோன பின், அந்த அனுபவத்தை நேரில் அறிந்துகொள்வோம் என்று விட்டுவிடவேண்டும். இல்லையேல் இறந்துபோனவர்களுடன் பேசி, அவர்களுடைய அனுபவங்களை அறிந்து, நாமும் தெளிந்த சிந்தையுடன் இறப்பை எதிர்நோக்கி வாழ்வாங்கு வாழவேண்டும்; இல்லாவிட்டால், அனுபவமில்லாதவர்களின் பயங்கொள்ளித் தனத்தில் நாமும் சிக்கி, பயப்படவேண்டாத ஒன்றுக்குப் பயந்து, நடுங்கிப் பதைபதைத்த பேதையர் ஆவோமென்பதை யாரும் மறுக்க முடியாது.

இறந்தவர்களிடம், இறப்பு ஏற்படுவது எப்படி என்று கேட்டால்' அவர்கள் தூக்கம் எப்பொழுது வந்தது என்றும், எப்படி வந்தது என்றும், தினமும் தூங்கிக்கொண்டிருக்கிற உங்களுக்கு எப்படித் தெரியவில்லையோ, அதேபோல நாங்கள் எந்த விநாடியில், என்ன விதமாகத் தூல உடலை விட்டுப் பிரிந்தோம் என்பது தெரியவில்லை; ஆவி பிரியும்பொழுது உடல் வேதனையோ, அதிர்ச்சியோ, யாதொன்றும் இல்லை; நீங்கள் கனவு கண்டுகொண்டிருக்கும் பொழுது. அவ்விதமாகக் கனவு காணுகிறோம் என்ற உணர்ச்சி, ஒரு சிறிதும் இன்றி. உண்மையிலேயே இன்ப துன்பம் அனுபவிக்கிறதாகக் கருதுகிறீர்கள் அல்லவா? கனவு காணும் பொழுது, தூல உடல் எங்கே கிடக்கிறது, எப்படிக் கிடக்கிறது என்ற உணர்ச்சி, கனவில் தொழிற்படுகின்ற உடலுக்குக் கொஞ்ச மேனும் இல்லை அல்லவா?

அதேபோல, நாங்கள் இறந்து வந்த பிறகும், கனவில் அனுபவித்துக்கொண்டிருந்த அதே ஆவி உடலோடு தொடர்ந்து, இன்ப துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருப்பதால், எந்த விநாடியில் தூல உடலை விட்டு அறவே பிரிந்தோம், தூல உடல் எங்கே, எப்படிக் கிடக்கிறது என்ற உணர்ச்சி ஒரு சிறிதும் இல்லை; எங்கள் தூல உடலைப் புதைத்தார்களா, சுட்டார்களா, பத்திரப்படுத்தி வைத்தார்களா? என்ற கவனமும்; கவலையும் அறவே இல்லை,

1099

ஆவி உலகத்திலுள்ளவர்கள் எங்களைப்பார்த்து, பூலோகத்தைவிட்டு நீங்கள் இறந்து வந்திருக்கிறீர்கள் என்று சொல்லிக் காரணங்கள் காண்பித்து, நாங்கள் குடியிருந்த தூல உடலையும் காட்டி, நாங்கள் காணும் வரை, நாங்கள் இறந்துபோனேம் என்று உணர்ந்து கொள்ளவோ, ஒத்துக்கொள்ளவோ முடியவில்லை'' என்கிறார்கள். என்ன ஆச்சரியம் பாருங்கள்! முன்னர் இது சம்பந்தமாக ஆங்கிலேயர்களுடைய ஆவி உலக அனுபவங்கள் அடங்கிய அநேக புத்தகங்களைப் பார்வையிட்டோம். எல்லோருடைய அனுபவமும் ஒன்றை ஒன்று உறுதிப்படுத்துகின்றனவே தவிர, மாறுபட்டனவாக இல்லை. உதாரணமாக, இரண்டொன்று இங்கே குறிப்பிடுகிறோம்.

1874 முதல் 1918-ம் வருடம் முடிய இங்கிலாந்தில், ஆவி உலகத்தோடு பேசியவர்கள் வெளியிட்ட 19 முக்கிய புத்தகங்களிலிருந்து (Harold Bayley) ஹெரால்டு பெயிலி, என்பவர் 1918-ம் வருடத்தில் ("The undiscovered Country - A sequence of spirit messages describing Death and the after World) ''கண்டுபிடியாத பிரதேசம் - மரணத்தையும், மரணத்திற்குப் பின்னுள்ள உலகத்தையும் அறிவிக்கின்ற ஆவி உலக அறிவிப்புகளின் தொகுப்பு'' என்ற 270 பக்கங்கள் கொண்ட புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார். அது போன்று ஈ. டபிள்யூ அல்லன் (லண்டன்) 1873ல் 158 பக்கம்கொண்ட (Life beyond the grave) ''கல்லறைக்குப் பின்னுள்ள வாழ்க்கை'' என்ற புத்தகத்தையும், திரு. ஏ. எல்: பெரின் (கென்சிங்டன்) 1916–196 பக்கங்கள் கொண்ட (Not silent - if dead) ''பேசாதிருப்பதில்லை— இறந்த பின்'' என்ற புத்தகங்களில் கீழ்க்கண்ட மூன்று ஆவிகளின் அனுபவ உரைகளும், மேலே சொன்ன கருத்தை வலியுறுத்துகின்றன. அவை கீழ்வருமாறு:-

Page 28. A natural death is not a more painful process than that of being born-infact, there is no more conciousness in the one case than in the other. (Life beyond the grave).

As this World of ours is a counterpart of yours, some hardly realise any change, or that they have cast off their earthly bodies until told so, and even then in many cases it is most difficult to convince them of the fact — (Not silent - if dead)

இவற்றின் மொழிப்பெயர்ப்பு :—

'' உண்மையில் நாம் பிறக்கும்பொழுது, எவ்வித உணர்ச்சியும் இல்லாததுபோலவே நாம் இறக்கும்பொழுதும் யாதொரு உணர்ச்சியும் இல்லை. ஆதலால் சாதாரணமான மரண நிகழ்ச்சி, பிறக்கும்

பொழுது உள்ளதைவிட அதிகத் துன்பம் விளைவிக்கக்கூடியது அல்ல"

(கல்லறைக்குப் பின்னுள்ள வாழ்க்கை)

எங்களுடைய இந்த (ஆவி) உலகம், உங்களுடைய உலகத்தின் மூலப் பிரதி (அசல்). ஆதலால் சிலர் பூலோகத்திலிருந்து மறு உலகத்திற்கு மாறியிருக்கிற, தங்களுடைய மாற்றத்தையும், பூலோகத்திலுள்ள தூல உடலைக் கழற்றித் தள்ளிவிட்டு வந்திருக்கிறோம் என்பதையும், பிறர் எடுத்துச் சொல்லும்வரை உணராதிருக்கிறார்கள். அப்படிச் சொன்னாலும் கூட அநேகரை அந்த உண்மையை உணரச் செய்வது மிகவும் கஷ்டமான காரியமாக இருக்கிறது.

(பேசாதிருப்பதில்லை - இறந்தபின்)

Page 29:- Physical pain drops off you like a garment with the body which you have left behind. You wake up well and your first impression is one of delight; just the same as when you wake up from a bad dread and discover that it was only a dream. So simple, so natural does this seem, that you almost always mistake what has taken place. I did as know. And I find it is a common experience many refuse to believe they are dead. It is, ofcourse, true that they are not dead. They have all their faculties; they see, they hear, they move hither and thither. Everything seems the same to them as before. Their first realisation of the change that has taken place is a kind of shock to them. "So this is death. Then if so, there is no such thing as death." For it is so entirely different from what we imagined.

What first convinced me that something had happened was the sight of my old body. After that came the discovery that my nurse did not see me nor hear me, but wept about my body as if that were myself. This is what usually happens.

Page 30. When the newly arrived have had many friends, relatives, or those whom they have loved on this side, they find them waiting for them; Especially when they have kept thinking of or praying for them. Forgetfullness separates here as there. But all whose minds and hearts have been closely knit in love with those on this side find their loved ones waiting.

(Life beyond the grave)

இவற்றின் மொழிபெயர்ப்பு:- உடல் வருத்தம் என்பது ஒரு சட்டையைக் கழற்றினது போல, தூல உடலைவிட்டவுடன் உன்னை விட்டுக் கழன்று விடுகிறது. நீ நன்ருக விழித்தெழுகின்ருய். முதலாவதாக, ஒருவித மகிழ்ச்சியே உனது மனதில் ஏற்படுகிறது. ஒருவன் ஒரு பயங்கரமான சொப்பனம் கண்டுகொண்டிருக்கும் பொழுது, விழிப்புவந்து, இதெல்லாம் சொப்பனந்தான் என்று கண்டுகொண்டால் எப்படியிருக்குமோ, அது போலத்தான் இருக்கும். அவ்வளவு இலேசானதாகவும், அவ்வளவு இயற்கையானதாகவும், இறப்பு நிகழ்வதால், பெரும்பாலும் என்ன நடந்திருக்கிறதென்பதையே, நீ சரியாகப் புரிந்துகொள்ளமாட்டாய். எனக்கு அப்படித்தான் இருந்தது. இங்கு எல்லோருக்கும் அவ்விதம் இருந்ததாகவே அறிகிறேன்.

இறந்து வந்தவர்கள் தாங்கள் இறந்துபோனதாகவே ஒத்துக் கொள்ள மறுக்கிருர்கள். அவர்கள் இறக்கவில்லை என்பது காரியப் பாட்டில் உண்மையே. அவர்களுக்குரிய திறமைகள் அத்தனையும் அவர்களுக்கு இருக்கின்றன. அவர்கள் பார்க்கிருர்கள். அவர்கள் கேட்கிருர்கள். அவர்கள் இங்கும் அங்கும் போக வர இருக்கிருர்கள். எல்லாம் முன்பு இருந்தது போலவே அவர்களுக்கு இருக்கிறது, முன்னிருந்ததிலிருந்து ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கிறதென்ற உணர்ச்சி முதலாவதாக ஏற்படும்பொழுது, அவர்களுக்கு ஒருவிதத் திகைப்பு உண்டாகிறது. இறப்பு என்பது இதுதானு? அப்படியாஞல், இறப்பு என்ற ஒன்றே இல்லை என்று சொல்லலாமே. ஏனென்ருல், நாங்கள் முன்னமே கருதியிருந்ததற்கு அது முற்றிலும் மாருக அல்லவா இருக்கிறது.

நான் முன் குடியிருந்த சடலத்தைப் பார்த்ததின் பிறகே, ஏதோ நடந்திருக்கிறதென்ற நிச்சயம் எனக்கு முதலில் உண்டாகியது. அதன் பின்னர் எனக்கு மருந்து கொடுத்துக்கொண்டிருந்த தாதிப் பெண் என்னை (நான் ஆவி உடலில் இருந்ததால்) பார்க்கவும் முடியாமல் நான் பேசுவதைக் கேட்கவும் முடியாமல், என்னுடைய தூல உடம்பு கிடந்ததின் பக்கத்தில் அந்தச் சடலமே நான் என்று கருதி, அழுதுகொண்டிருப்பதையும் கண்டேன். இதுதான் எல்லோருக்கும் சாதாரணமாக நடக்கிற நிகழ்ச்சி.

குறிப்பு:- இறந்தவர் ஆவி உடலோடு நின்று தனக்கு மருந்து கொடுத்த தாதியைச் கூப்பிடும்பொழுது, தூல உடலோடு இருக்கிற தாதிக்கு இறந்தவர் ஆவியாக நிற்பதும் தெரியவில்லை. அவர் கூப்பிடுகிறதை அவருக்கு அறியவும் முடியவில்லை. தாதியானவள் இறந்தவருடைய தூலக் கூட்டை,

அவர் தான் என்று கருதிக் கூப்பிடுகிருள். உள்ளே இருந்தவர் வெளியேறியபின், வெற்றுக்கூடு எப்படிப் பேசும், அங்கே மூச்சுப்பேச்சு இல்லையென்றவுடன் அவள் அழுது புலம்புகிருள்.)

இறக்கும் தருவாயில் உள்ளவர்களின் சிநேகிதர்களும், உறவினர்களும் அல்லது அவர்களின் அன்பிற்குப் பாத்திரமான ஆவி உலக வாசிகளும், அவர்களின் வருகையை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருக்கிருர்கள். அவ்விதம் செய்வது, முக்கியமாக அவர்களைப் பற்றி நினைத்துக்கொண்டும், அவர்களுக்காகப் பிரார்த்தித்துக் கொண்டும், இருக்கப்பட்டவர்களே யாவார்கள். மறதி என்பது பூலோகத்திலும், மேலோகத்திலும் ஒருவரையொருவர் பிரிந்திருக்கச் செய்கிறது. அன்பினல். யார் யாருடைய மனமும் இருதயமும், இங்குள்ளவர்கள்பால் நெருக்கமாகப் பின்னியிருக்கிறதோ, அவரவர்களுடைய அன்பிற்குரியவர்களெல்லாம் அவரவருடைய வரவை எதிர்நோக்கிக் காத்துக்கொண்டிருப்பதை அறியலாம்''.

* (கல்லறைக்குப் பின்னுள்ள வாழ்க்கை)

இவைகளிலிருந்து. இறப்பு என்பது துன்பமில்லாத நிகழ்ச்சி என்பது, சந்தேகத்திற்கு இடமின்றி வலியுறுத்தப்பெறுகிறது. இந்த உண்மை அசைக்க முடியாமல் இருக்குமேயானல், ''சாதலின் இன்னுததில்லை'' என்ற குறளுக்கு உண்மையான பொருள் வேறென்று இருக்கவேண்டுமென்ற சிந்தனை ஏற்படலாம். அதிலிருந்து அக்குறளுக்குப் புதியதோர் பொருள் உண்டென்பது விளக்கமாகும். எப்பொழுதும் பிறருக்கு உபகாரமாகத் தருமம் செய்துவந்தவன், அது செய்ய முடியாத நிலை ஏற்படும்பொழுது, மனம் நொந்து, பிறருக்கு உபகாரமாக இருக்கமுடியவில்லையே என்று தயங்குவான். அது அவனுடைய உடலுக்கு யாதொரு வருத்தமும் கொடுக்காது. மனவேதனையையே கொடுக்கும்.

அதுபோலவே, சாகப்போகிருேமே, நமக்கு வேண்டிய மனைவி, மக்கள், நிலம், புலம், வீடு, மாடு இவற்றையெல்லாம் விட்டுப் பிரியப் போகிருேமே, என்ற மனவேதனை சாகும் தருவாயில் வருவதுபோல வேறு எதிலும் வருவதில்லை. அவ்வித மனவேதனையோடு பிறருக்குக் கொடுத்துதவும் வள்ளல்த் தன்மையைக் குறிக்கோளாகக் கொண்ட ஒருவனுக்கு அது முடியாதபோது ஏற்படுகின்ற மனவேதனையை ஒப்பிட்டுப்பார்க்கும்போது, அவனுக்கு உடலையும் இவ்வுலகத்தையும் விட்டுப் பிரிவதில் வருகின்ற மனவேதனை இன்பமானதாகவும்,

பிறருக்குக் கொடுத்து உதவ முடியாமையால் வருகின்ற மனவேதனை, அதிகத் துன்பமுடையதாகவும் இருக்கும், என்ற பொருள் விளக்கமாகின்றது.

எனவே "உறங்குவது போலும் சாக்காடு" என்கிற திருக்குறளும், "சாதலின் இன்னாததில்லை" என்கிற திருக்குறளும், ஒன்றுக்கொன்று முரண்பாடுடையதல்லவென்று தீர்மானிப்பதற்கு, மரண நிகழ்ச்சியை அனுபவித்தவர்களோடு பேசியும், தொடர்பு கொண்டும், நமக்குச் சாத்தியப்படுமே தவிர, வேறு எவ்விதத்தாலும் முடியாது என்பது தெளிவாகும். இதுபோலவே மரணத்தின் பின்னுள்ள வாழ்க்கையின் நிலையையும், மேலுலகங்களின் உண்மையையும், இங்கும் அங்கும் எங்கும் புகழுடன் வாழ்வதற்குக் கடைப்பிடிக்கவேண்டி ஒழுக்கங்களையும் நாம் ஐயந் திரிபறத் தெளிவதற்கு, ஆவி உலகத்தவரின் தொடர்பின்றிச் சாத்தியப்படாது என்பதை யாரும் மறுக்க முடியாது.

வள்ளுவம் ஏன் பிறந்தது ?

தவத்திரு. குன்றக்குடி அடிகளார்

தமிழினம் காலத்தால் மூத்த இனம்; நிலவுலகத்தை மூடியிருந்த நீர்ப்பரப்பு மறைந்து, கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்தகுடி. வீரத்தில் மட்டுமன்று. சிந்தனைத் திறத்திலும் சிந்தனையைச் செப்பும் மொழித்திறத்திலும், இலக்கியப் படைப்பாற்றலிலும், இலக்கியத்தின் பயனாகிய நனி நாகரிகத்திலும் சிறந்து விளங்கிய இனம், தமிழினம். செல்வச் செழிப்பும் இருந்தது. அதனால், காலப் போக்கில் மதோன்மத்தமான வாழ்க்கையை நடத்தத் தொடங்கி விட்டனர். கள்ளும், காமமும் இடம் பெற்றன. ஐந்திணை ஒழுக்கத்திற்குப் பதில் பரத்தையர் ஒழுக்கம் கால் கொண்டது. ஓரினத்திற்குள் உயர்வு தாழ்வு மனப்பான்மைகள் தலைகாட்டத் தொடங்கின. அவ்வழி பல்குழுத் தோற்றமும், பாழ்செய்யும் உட்பகையும், வேந்தலைக்கும் கொல்குறும்பும் வளரத் தொடங்கின. பொழுது விடிந்தால் பொழுது போனாற் போலப் பண்பாட்டை வளர்க்கும் சமயநெறிகளும் பலவாயினமையின் காரணமாகச் சமய நெறியாளர்களுக்குப் பதில் சமயக் கணக்கர்கள் சமுதாயத்தில் தோன்றினர். அவர்களும் சமுதாயத்தைப் பண்பியல் வழியில்-அமைதி நெறியில் 'இவர் தேவர் அவர் தேவர்' என்று இரண்டாட்டுகின்ற புன்நெறியை வளர்த்தனர். இங்ஙனம் புகழ்பூத்து வாழ்ந்த தமிழினத்தில் வீழ்ச்சி தலைகாட்டியபொழுது திருவள்ளுவர் பிறந்தார்.

இருள் கடிந்தெழுகின்ற ஞாயிறெனத் தோன்றினார் திருவள்ளுவர். திருவள்ளுவர் என்ற ஞாயிறு கனன்ற கதிரொளியே திருக்குறள். ஓரினத்தை அழிவு வராமல் பகைப்புலத்தில் காக்கும் போர் வீரனைவிட வாழ்வியல் நெறியில் நயத்தக்க நாகரிகத்தினைக் கட்டிக் காப்பாற்றிய வள்ளுவர் போற்றுதற்குரியர். ஏழேழ் பிறப்பும் போற்றுதற்குரியர்; வடபுலம் கண்டு வாகை கொண்ட ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனின் வெற்றியை விட செந்தமிழ்ப் பேராசான் திருவள்ளுவர் புகழ் போற்றுதலுக்குரியது. ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனின் வெற்றி, ஒரு பொழுதே பகை தடுத்தது. நாவலர் வள்ளுவர் வெற்றி ஊழி ஊழிக் காலத்திற்கு வெற்றி கொண்டது.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் வெற்றி பகை மட்டுமே தடுத்தது; பண்பினை வளர்க்கப் பயன்படவில்லை. திருவள்ளுவர் செய்த திருக்குறளோ நந்தமிழ் நெறியினை நஞ்சனைய நெறியின் கலப்பினின்று தடுத்துக் காப்பாற்றியது. நமது சமுதாயத்தை வாழ்வாங்கு வாழும் நெறியில் வழி நடத்தியதன் மூலம் பண்பியலையும் பேணிக் காத்து வந்திருக்கிறது.

வள்ளுவம் வையகத்து வரலாற்றின் சந்திப்பில் பிறந்தது; வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்தப் பிறந்தது; தேங்கிக் கிடந்த சமுதாயத்தில் தெளிவு காணப் பிறந்தது; நூல்கள் பல கற்பதிலும் நுண்ணிய அறிவு ஆற்றலுடையதெனக் காட்டப்பிறந்தது; கல்வி, கற்கின்ற ஆற்றலைப் பொறுத்ததல்ல, கசடு அறுத்தலிலேயே இருக்கிறது என்று உணர்த்தப் பிறந்தது; மண் வழிப்பட்ட உடைமைகளிலும் உள்ளம் உடைமையே உடைமையென உணர்த்தப் பிறந்தது; ஆனதைக் கதையாக்கிக் கவலையாக்கிச் சாகாமல் தடுக்க ஆவது காட்டப்பிறந்தது. நிலத்தில் தூய்மை, உடலில் தூய்மை, நெற்றியில் தூய்மை — இவையனைத்தும் கைகள் செய்பவை. இந்தத் தூய்மை பெருகி வளர்ந்தும் பேணும் சமுதாயம் பகையினின்றும் விடுதலை பெற்ற பாடில்லை. நன்செயலின் தோற்றமும் நஞ்சையிலில்லை. புன்செயலின் தோற்றமும் புஞ்சையிலில்லை. காழ்ப்பின் தோற்றம் காசுகளில்லை. கலகங்களின் தோற்றம் கடவுள்களிடத்திலில்லை. கொலையுணர்வின் தோற்றம் கொடுவாளிடத்திலில்லை. உருக்குலைக்கும் உட்பகையின் தோற்றம் உடலின்கண் இல்லை. ஆங்கார உணர்வின் தோற்றம் அழகிய நெற்றியின் கண் இல்லை; ஆங்கிலங்கும் நீற்றின் கண்ணும் இல்லை. பின் எங்கு? நஞ்சின் நிலைக்களம் மனமேயாம். மனத்துள் கறுப்பு வைத்து மா நிலம் முழுதும் தூய்மை செய்தாலும் பயனில்லை என்று பாங்குறக்காட்டி மனத்தின் கண் மாசறுக்கப் பிறந்தது வள்ளுவம்.

மனிதன், உருவெளித் தோற்றத்தால் தனி மனிதன்; மக்கட் கணக்கெடுப்பில் தனி மனிதன். வயிற்றால் - வாயால் தனி மனிதன். ஆயினும், அவன் படைத்திடும் வாழ்க்கை தனிமனித வாழ்க்கையன்று; சமுதாய வாழ்க்கை – கூட்டு வாழ்க்கை. அவனிடத்தில் உருவாகித் தோன்றும் உணர்வுகள் உலகம் தந்த உணர்வுகளேயாம். ஈண்டு உலகம் என்பது மனித சாதியை நினைத்தேயாம். எனவே இயற்கை உலகம், மனித சாதியைப்போல எளிதில் ஒழுக்கங்களைக் கடப்பன அல்ல; முறைகளை மீறுவன அல்ல; நீதிகளை நீப்பன அல்ல. இயற்கை உலகில் மாற்றங்கள் உண்டு; ஆனல் ஏமாற்றங்கள் இல்லை. மனித சாதியிலோ முறைகளை எளிதில் கடந்த சீலச் சிதைவினையும், ஏமாற்றங்களையும் வரலாறுகளே படம்பிடித்துக்

காட்டுகின்றன; இலக்கியங்கள் எடுத்துக் கூறுகின்றன. கீழே விழுந்து விடாமல் தம்மை அடிக்கடி தூக்கி நிறுத்திக்கொண்ட மனிதசாதி கெட்டதைப் போல செடிகள் உலகம் கெடவில்லை; கொடிகள் உலகம் கெடவில்லை; விலங்குகள் உலகமும் கெடவில்லை. ஆனால் மனிதனே, தம்பட்டம் அடித்துக் கொள்ளுகிறான். விலங்குகளுக்கு ஐந்து அறிவாம். இவனுக்கு ஆறுவது அறிவாம். ஐயகோ, மனிதர்களே! வாயும் வார்த்தைகளும் கிடைத்தமையால் ஏன் இப்படி வையகத்தை ஏமாற்றுகிறீர்கள்? எங்கே யிருக்கிறது உங்கள் ஆறும் அறிவு? நுமக்கு அறிவு இருப்பதன் அடையாளம் என்ன? அதற்கு பதில் ஆரவாரம் தானே? விலங்குகளும் துன்பம் அனுபவிக்கின்றன. ஆனால், ஓர் அதிசயம்! விலங்குகள் அனுபவிக்கும் துன்பம் பெரும்பாலும் இயற்கை வழியில் வந்த துன்பங்கள். ஒரோ வழி, அறிவின்மையின் காரணமாகச் சில அவலங்களையும் அடைகின்றன. ஆயினும் மனித சாதியைப் போல செயற்கை இன்பங்களும், செயற்கைத் துன்பங்களும் விலங்கினத்திற்குக் கிடையா. அறிவிருப்பதைக் காட்டுதற்குரிய அன்பு பிறந்திருக்கிறதா? "மேடையில் தான் பிறக்கிறது! வணிகம் தான் நடைபெறுகிறது!" என்று இடித்துக் கேட்க—"அறிவினால் ஆகுவ துண்டோ பிறிதின்நோய் தந்நோய் போல் போற்றாக் கடை" என்று-வள்ளுவம் பிறந்தது.

வாழ்க்கை யென்பது, ஒன்றரையடியில் பிறந்து ஆறடிக்கு வளர்ந்து மண்ணுக்கு உரமாகவோ? நிலத்தில் விளைந்தவைகளைத் தின்று திரிந்து கதை முடிக்கவோ? உண்ட உணவின் கொழுப்புகளால் விளைந்த உடலெரிச்சலைக் கூடித்தணித்துக் கொள்ளவோ? இல்லை, இல்லை! மனிதன்—அவனே வையகத்தின் நாயகன்! கடவுளின் சாட்சியாக விளங்க வேண்டியவன்! அவன் வாழ்வாங்கு வாழ்ந்தால் வையகம் வளரும்; வானகம் மண்ணுக்கு வரும். அங்ஙனம் வாழ்தல், வாழ்க்கை என்று காட்ட, "வையத்துள் வாழ்வாங்கு வாழ்க!" என்று வள்ளுவம் பிறந்தது.

மண்ணுக்கு இயற்கையில் உயிர்ப்பாற்றல் இருக்கிறது. அந்த உயிர்ப்பாற்றலின் வழி இழுத்தெறியப் படாமல் மேலே உயர உயர ஓங்கி வளர, இயற்கை ஆற்றலும் தந்தது. விலங்குகளுக்குக் கால்களும், மரம் செடி கொடிகளுக்கு வேர்களும் கிளைகளும் அந்த நோக்கத்துடனேயே அமைந்தனவாம். அவைகள் மண்ணிடை வேர்பாவிக் கிளைகள் விட்டு அதன் உயிர்ப் பாற்றலின் சக்தியைத் தடுத்து நிறுத்தித் தன்னை இழுத்தெறியும் ஆற்றலுடைய மண்ணையே, தான் நின்று வளரும் களமாக மாற்றித் தாம் வளர்வதோடன்றிப் பூத்துக் குலுங்கிக் காய்ப்பதோடன்றி விலங்கு

களுக்கும் மனித உலகத்துக்கும்கூட வாழ்வளிக்கின்றன. ஆனால் மனிதனோ, மண்ணின் ஆற்றலால் உடல்மட்டுமன்றி உள்ளத்தையும் பறிகொடுத்துத் தானும் வாழாமல் மற்றவர்களுக்கும் வாழ்வளிக்காமல் பயனின்றி நடமாடுகின்றான். அதனாலேயே வாழ்வாங்கு வாழ்நலைத் தெய்வமாக்கினார். வள்ளுவர் காலத்தில் மனிதர் பூசித்தது தெய்வத்தை. பூசிப்பவன் 'சாத்தான்'. ஆனால் பூசனையால் வரும் பயனென்ன? தெய்வமணம் கமழும் இன்நலம் உடையவனே தெய்வத்தைப் பூசித்தற்குரியவன். சாத்தானின் இடம் சுடுகாடு. தெய்வங்களின் இடம் மனித இனம் நடமாடும் மலர்ச்சோலை; திருக்கோயில்கள். ஆதலால், சாத்தானாக விளங்கும் மனிதனை தெய்வமாக்கவே வள்ளுவம் பிறந்தது. 'வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வம்' என்று வள்ளுவம் பேசுகிறது.

வள்ளுவம் ஏன் பிறந்தது? என்று இதயத்தில் பட்டதை எழுதியிருக்கிறோம். வள்ளுவம், பதவுரை, பொழிப்புரைக்காகப் பிறக்கவில்லை; பாராட்டுரைகளுக்காகப் பிறக்கவில்லை. மண் செழிக்க மழை பொழிவது போல, மனித குலம் செழிக்க—மனித உள்ளங்கள் செழிக்க — உலகு செழிக்க — உயர்கடவுள் சிரித்து மகிழ வள்ளுவம் பிறந்தது! முடிந்தால் — மனமிருந்தால் வள்ளுவம் பிறந்ததன் பயனையடைய வழி காணுங்கள்! வையகம் சிறக்கும்! அல்லது வழக்கம்போல வாழ்த்துரைகளில் வாழ்நாளை விணாக்குங்கள்! அஃது உங்கள் விருப்பம்! வள்ளுவரே, 'ஏவவும் செய்கலான், தான் தேரான்' என்று நொந்து கூறியுள்ள பொழுது நாம்தான் என்ன செய்ய முடியும்?

கிழவன்!

திருக்குறளார் வி. முனிசாமி

கிழவன் என்பது தற்காலத்தில் நடைமுறையில் வழங்கப்படும் பொருளில் கூறப்படுவது அல்ல. கிழவன் என்றால் உரிமையுடையவன் என்பதாகும். பொறுப்புள்ளவன் என்பதோடு நுகருதற்கு உரியவன் என்பதுமாகும். நுகர்வதற்கு அதாவது அனுபவிப்பதற்கு உரியவன் அவனே அனுபவிக்வேண்டும். இதன் விளக்கம் என்னவென்றால் தான் செய்யவேண்டியதைத் தானே செய்தல்வேண்டும் என்பதேயாகும். 'அவனே அனுபவிக்கவேண்டும்' என்பது 'சுய நலம்—பிறர்க்கு ஈயாதிருத்தல்' என்னும் பொருளில் சொல்லப்பட்டதன்று!

நிலத்திற்கு உரியவனை—அதனைப் பார்ப்பவனை—உழவனை—கிழவன், என்று ஆசிரியர், திருவள்ளுவர் குறிக்கின்றார். மிக மிக ஆழ்ந்த அர்த்தத்தில் இச்சொல் அமைக்கப்பட்டுள்ளது. நிலத்தினை உழுகின்ற உழவனுக்கு ஆசிரியர் கூறும் புத்திமதிகள் பல. அவைகள் இருக்கட்டும்! திருவள்ளுவர் கூறுவதில் ஆழ்ந்த உண்மை வெளிப்படுவது எங்கேயென்றால், அந்த உழவனை கணவனுக்கு ஒப்பிடுகின்ற இடத்தில்தான்!

நிலம் உண்ணும் உணவினைத் தருவது இவ்வாறு சுருக்கமாக நிலத்தின் சிறப்பினைக் கூறி முடித்துவிடமுடியாது!

உலக மக்கள் வாழ்வதே நிலத்தின் விளைச்சலினால்தான் என்பது மிகையாகாது. அப்படி நாம் குறிப்பிடுவது புதுமையும் ஆகிவிடாது! இந்த நிலத்தினை ஆசிரியர் மனைவிக்கு ஒப்பிட்டுக் காட்டும்போது தான், ஆழ்ந்த மறைபொருள் அங்கேயும் காணப்பட்டுவிடுகிறது!

மனைவியுடன் இன்பம் நுகர்வதை, 'போகம்' என்று கூறுவது உலகியல் மரபு. நிலம் விளைச்சல் தருவதையும் 'போகம்' என்று கூறுவது மரபு. ''இந்த நிலம்—இருபோகம் விளையும்—முப்போகம் விளையும்'' என்று பேசப்படுகின்ற நடைமுறைப் பேச்சு புதியதல்லவே!

நிலத்தினைப் பக்குவமாக—பத்திரமாகப் பார்த்துக்கொண்டு வந்தால்தான்—பயன் நன்றாக இருக்கும். நன்கு கவனிக்கும் முறைகளில், 'உரம்' போடுவதும் ஒன்று. முக்கியமானதொன்று; காலமறிந்து பயிர் செய்தல் வேண்டும்.

உழவுத் தொழில் செய்வதைப் பற்றி ஆசிரியர் பல குறட்பாக்கள் தருகின்றார். அவைகள் பற்பல உண்மைகளைத் தெளிவுபடுத்துகின்றன. அவைகளில் ஒன்று, நிலத்திற்கு உரியவன் தானே நேரில் சென்று நிலத்தினைப் பார்க்க வேண்டும் என்ற அரிய உண்மையாகும். இதனைக் குறிப்பாகவும் நுணுக்கமாகவும் குறிப்பிடுகின்றார்.

சில நேரங்களில் நிலம் நல்ல விளைச்சலினைத் தராமல் போகலாம்! அதனால் அந்த நிலம் 'இனி' விளைச்சலுக்கே பொருத்தமானது அன்று என்று முடிவு செய்தல் தகாது. கவனிப்பு குறைச்சலினால் – இயற்கையின் சோதனையினால் – அவ்வாறு, ஒரு நேரத்தில், ஆகிவிட்டது என்று சொல்லுவதுதான் உண்மையாகும்.

நிலத்திற்கு உரியவனை உழவன் நேரிலேயே சென்று நிலத்தினைப் பார்த்தல் வேண்டும். வேறு யாரையும் அனுப்பி நிலத்தினைக் கவனிக்கச் சொல்லி இருத்தல் சரியல்ல என்பது ஆசிரியரின் கருத்தாகும். நிலத்திற்குரிய கிழவன் — உரிமையாளன் — தானே நேரில் சென்று பார்க்காவிட்டால் நிலம் என்னவாகும் என்பதனையும் ஆசிரியர் தெளிவு படுத்தி விடுகின்றார். எவ்வாறு?

நிலத்தினை இல்லக் கிழத்திக்குச் சமமாகக் கூறுகின்றார். மிகவும் சிந்திக்கத்தக்க இடமாகும். நிலத்திற்குரிய கிழவன் சென்று பார்க்காதிருப்பானாயின் நிலமானது இல்லாளைப்போல 'ஊடி' விடும் என்பது ஆசிரியரின் கருத்தாகும். 'ஊடுதல்' என்பது சிறு பிணக்கு என்பதாகும். நாயகனுக்கும் நாயகிக்கும் மிடையே நடைபெறும் சிறு பிணக்கிற்கு 'ஊடல்' என்று கூறுவதுண்டு, "இல்லாளின் ஊடிவிடும்" என்பது குறட்பாவின் சொற்களாகும். அதாவது மனைவிபோல, தன்னுள்ளே வெறுத்து அவனோடு பிணங்கிவிடும். மனைவியைக் கணவன் தானே நேரில் கவனிக்க வேண்டும் என்பது உலகறிந்த உண்மையாகும். ஆதலால் ஆசிரியர் நிலத்தினை மனைவியென்று கூறினர். நாயகனை உழவன் — நிலத்திற்குரிய கிழவன் என்று குறிப்பால் உணர்த்தினர். இருவரும் போகம் துய்ப்பர் என்பதாகும்.

"நிலம்புலந்து இல்லாளின் ஊடி விடும்" என்பது குறட்பாவில் காணப்படுவதாகும். 'புலந்தல்' என்பதும் 'ஊடுதல்' என்

பதும் காதலர்களிடையே நடைபெறும் பிணக்கினைக் கூறும் சொற்களாகும். நாயகி பிணங்கிக் கொண்டாள் என்றால் அதனைத் தீர்ப்பது அரிதான காரியமன்று நாயகன் பிணக்கினைத் தீர்த்து விடுவான். அவ்வாறே உழவன் நிலத்தினைப் பண்புபடுத்தி விடுவான். நாயகன் நாயகிக்குப் பிணக்கு வராமல் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். இல்லாவிட்டால் இன்பம் இழப்பான். உழவன் நிலத்தினை நன்கு கவனித்து வருதல் வேண்டும். இல்லாவிட்டால் நிலம் கெட்டு விடும்; போகம் இழக்க நேரிடும். அதாவது விளைச்சல் இல்லாமற் போகும் என்பதேயாகும்.

இக்கருத்தினைக் கூறவந்த குறட்பா, ''செல்லான் கிழவன் இருப்பின்'' என்று தொடங்குகிறது. அதாவது — நிலத்திற்கு உரிய உழவன் (கிழவன்) தானே நேரில் சென்று நிலத்தினைப் பார்க்காதிருப்பானாகில் என்பது இதன் பொருளாகும். பிறரை ஏவி இருக்காமல் தானே சென்று கவனிக்கவேண்டும் என்பது விளங்க வேண்டியே 'கிழவன்' என்று கூறினார். மனைவி வேண்டுவன செய்தல்—கணவனின் கடமையாகும். உழவனின் கடமையும் அதுவே போன்றதாகும். தன்னுடைய நிலத்திற்கு வந்து வேண்டியன செய்யாமல் வேறிடத்தில் இருந்துகொண்டு பிறரை ஏவுவது முறையற்றதென்பதைக் குறிப்பதற்காக வேண்டியே, உழவனையும் கணவனையும் ஒன்றுபடுத்திக் கூறினர். குறட்பா எளிமையாக அமைந்துவிட்டது.

செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்,

நிலத்தினை மனைவிக்கு ஒப்பிட்டுக்காட்டிய ஆசிரியர், மேலும் இக்கருத்தினை நயம்படக் கூறுகின்றார். மனைவியினிடத்தில் நாயகன் காட்டுகின்ற பேரன்பு, காலத்தில் பெய்கின்ற மழை போன்றதென்று குறிப்பிடுகின்றார்.

வாழும் மக்களுக்கு பருவ மழை எவ்வளவு இன்றியமையாததோ அத்தகையதேயாகும் நாயகன் காலமறிந்து நாயகிக்குக் காட்டுகின்ற பேரன்புமாகும். பேரன்பினை 'தலையளி' என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார். மழை இல்லையானல் மக்கள் உயிர் வாழமுடியாது. அதுவே போன்று. நாயகன் தலையளிச் செய்யாவிட்டால் நாயகி உயிர் வாழ்ந்திருத்தல் அரிதான செயலாகும். நாயகன் காட்டும் அன்பு நாயகியை உயிர் வாழச் செய்கின்றது.

நாயகன் நாயகியை விட்டுப் பிரிந்திருக்கின்றான். பொருள் தேடும் பொருட்டும் பிற காரணங்களினாலும் நாயகன் பிரிந்திருக்க

வேண்டிய காலம் உண்டாகின்றது. நீண்டகாலம் பிரிந்திருக்காமல் தக்க நேரத்தில் நாயகன் வந்துவிடுதல் வேண்டும். பிரிந்திருக்கும் காலத்திற்கும் அளவுண்டு என்பது குறிப்பாகும்.

நீண்ட நாள் பிரிந்திருப்பதைத் தாங்கிக்கொண்டிருக்கும் தன்மை நாயகிக்கு இல்லை. அவன் நல்வரவினை மிகுந்த ஏக்கமுடன் பார்த்துக்கொண்டிருப்பாள். அவன் வந்து அவளுக்குப் பேரன்பு காட்டுதல் வேண்டும். மழையின்றி வாடும் மக்களே போல் அவள் தவித்துக்கொண்டிருப்பாள்.

மழை மக்களுக்கு இன்பம் தருவது மட்டுமன்று; உயிர் வாழச் செய்வதுமாகும். அதுவே போல நாயகன் வரவு, நாயகியின் உயிரினையே காப்பாற்றுவதாகும். அவள் நாயகன் வரவினை எவ்வளவு வேகத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றாள் என்பதனைப் புரிந்துகொள்ளுதல் வேண்டும். குறட்பா:-

வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி.

[விழ்வார்க்கு=(நாயகனை நினைத்து) வாழும் மகளிர்க்கு, விழ்வார்= (காதல் நிறைந்த) கணவர், அளிக்கும்=காலமறிந்து செய்கின்ற, அளி = பேரன்பு (தலையளி), வாழ்வார்க்கு = உலகில் வாழும் மக்களுக்கு, வானம்=மழை, பயந்தற்று=காலம் அறிந்து பெய்தது போன்றதாகும்].

நோயின்றி வாழ

அ. மு. பரமசிவானந்தம்

'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்று தம்மை மறந்து பாடினர் அப்பரடிகள். பல்வேறு துன்பங்களில் பட்டுழன்று, இறையருள் பெற்று, அவனருளாலே அவன் தாள் வணங்கியஅப்பர் அடிகளாரே 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்று பாடுவது வியப்பில்லையா! ஆம்! ஆனால் அவருடைய தெளிந்த நிலையில் கண்ட உண்மை அது. அகவாழ்விலும் புறவாழ்விலும் இம்மைப் பேற்றிலும் மறுமை வாழ்விலும் உண்மையாளர்கள் கண்ட முடிபே அது. உளத்தால் உண்மை 'பேசி'ய உயர்ந்தவர் கண்ட செம்மை நெறியே அத்தகையது. வள்ளுவர் அத்தகைய மெய்ந்நெறியாளருள் சிறந்தவர். தாம் இன்புறுவது உலகு இன்புறக்காணும் நிலையில் தம் குறளை யாத்தவர். அத்தெய்வத் திருக்குறளில் அனைவரும் 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்று பாடி வாழ வழி வகுத்துள்ளார். அவர் குறள் வழியே காண்போம்.

ஆண்டவனை 'நோயற்ற வாழ்வு நான் வாழவேண்டும்' என வேண்டுவர் வள்ளலார். நோயற்ற வாழ்வே இன்ப வாழ்வு.

ஆயினும் உயிர்கள் பல நோயுற்று வாழ்வதை காண்கிறோம். நோய் உடலைப்பற்றியதாகவும் அமையும் - உயிரைப்பற்றியதாகவும் அமையும். இரண்டுமே உணர்வினைப்பற்றிய நிலையிலேயே வளரவும் தேயவும் கூடும். இரண்டையும் நீக்க நல்ல மருத்துவர்கள் நாட்டில் வாழ்ந்துள்ளனர் - வாழ்ந்துவருகின்றனர். உடல் நோய்க்குக் காரணங்கள் பல; அப்படியே உளநோய்க்கும். இரண்டிடத்தும் நோயற்று வாழ்தலே இன்ப வாழ்வு.

வள்ளுவர் 'மருந்து' என்றே ஓர் அதிகாரம் வகுத்துள்ளார். நோய்வந்த பிறகு அதை நீக்கப் பயன்படுவதே மருந்து. எனவே அதில் மக்கள் பலர் வருமுன்னர்க்காவாது, நோயுற்று வருந்தின் அவ்வருத்தம் நீக்க வழி வகைகளை வகுத்திருப்பர் எனப்பலர் எண்ணலாம். ஓரளவு அஃது உண்மையே யாயினும், மருந்தே வேண்டாத செம்மை வாழ்வையும் வள்ளுவர் அதில் தெள்ளத் தெளியக் காட்டுகின்றார். அதில் அவர் உயிர்க்கு ஊறுபாடில்லா

வழியை விளக்கிக் காட்டுகின்றார். நோய் வாராதிருக்க வழிவகைகளை வகுக்கின்றார். அவ்வழிவகைகளைப் பின்பற்றாது நிற்பின் நோய் வாய்ப்படுவர் எனக்காட்டி, பின்னும் அந்நோய்வரின் அதை அறிந்து நீக்கும் வழித்துறைகளையும் விளக்குகிறார்.

உலகில் நோய் உண்டாவதற்கான அடிப்படை உண்மையை வள்ளுவர் எண்ணுகின்றார். உடலில் அமையவேண்டிய நிலையிலே 'வளி' முதலிய மூன்றும்—வாதம், பித்தம், சிலேத்துமம் என மருத்துவர் குறிப்பின்—அமையின், மிகாமலும் குறையாமலும் இருப்பின், நோயற்ற வாழ்வு வாழலாம் என்றும் அவ்வாறின்றி அவற்றுள் ஒன்றே மிகினும் குறையினும் நோய் உண்டாகும் என்றும் உடல் நோயின் மூல தத்துவத்தை உணர்ந்து காட்டுகின்றார் வள்ளுவர். இன்றைய மருத்துவருள் பலர் இந்த அடிப்படை உண்மையினை அறியாமையினாலேதான் பலவகை நோய்கள் நீக்க முடியா வகையில் நெடிது நின்று துன்புறுத்துவதோடு, இழப்பையும் தேடித்தருகின்றன. உடல் கூறு அறிந்து இம்மூன்றின் திறம் அறிவது எளிதன்று எனினும் நல்ல மருத்துவர் இவற்றை அறிந்தவரேயாவர். இந்த அடிப்படை உண்மையை அறிந்தவர் தான், பின் வள்ளுவர் காட்டியபடி, 'நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்' வல்லவராக வாழ முடியும். இவ்வாறு வள்ளுவர் நோயின்றி வாழும் அடிப்படையை முதற் கண் குறித்துக்காட்டிப் பின்பு அதற்குச் சற்றே விளக்கமும் தருகின்றார்.

நோயின்றி வாழ வள்ளுவர் வகுத்த அடிப்படை நெறி கட்டுப் பாடாகும். எதிலும் கட்டுப்பாடு இன்றியமையாதது. அதினும் சிறப்பாக உணவில் அது பெரிதும் வேண்டப்படுவது ஆகும். நாள்தோறும் உண்கின்றோம்; அந்த உணவின் கட்டுப்பாடே உடல் நலத்துக்கு மிகவும் இன்றியமையாது வேண்டப்படுவது. அக்கட்டுப்பாட்டுடன் உணவினை மேற்கொள்ளின் 'உடலுக்கு ஊறு இல்லை; எனவே மருந்தும் தேவையில்லை' என்பது வள்ளுவரது அசைக்க முடியாத நம்பிக்கை; அது உண்மையும் கூட. இன்றும் அவ்வாறு உணவுக் கட்டுப்பாட்டில் வாழ்பவர்கள் நோயின்றி நெடிது வாழ்வதைக் காண்கிறோம். எனவே வள்ளுவர்

'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்' (942)

என்று கூறியது எத்துணைப் பொருள் பொதிந்த உண்மை என உணர்தல் கடமையாகும்.

வள்ளுவர் இந்தக் குறளுடன் நில்லாது வேறு பல வகையிலும் அவ்வுணவுக் கட்டுப்பாட்டை உணர்த்துகிருர். முன்உண்டது சரித்து அல்லது சீரணித்து அதன் கழிவினைப் போக்கிய பின்பே மறுபடியும் உண்ண வேண்டும் என்ற வள்ளுவர், அவ்வாறு உண்பதையும் அளவோடு உண்ணவேண்டுமென்றும் அவ்வாறு அளவோடு உண்பவனே நெடிது வாழ முடியும் என்றும் காட்டுவர்.

'அற்ருல் அளவறிந்து உண்க; அஃது உடம்பு
பெற்ருன் நெடிதுய்க்கும் ஆறு' (943)

என்பது அவர் வாக்கு. 'அற்ருல்' என்பதற்குப் பரிமேலழகர் 'முன் உண்டது அற்ருல்' என உரைவகுப்பது எண்ணத்தக்கது ஆகும். அவ்வாறு உண்ணும் போதும் நம் உடல் நிலைக்கு மாறுபாடற்ற உணவினை மேற்கொள்ளக்கூடாது என வற்புறுத்துவர் வள்ளுவர்.

'அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து' (944)

என்ற குறள்வழி நன்ருக முன் உண்டது கழிய, மிக்க பசி எடுத்த பின்பே மாறுபாடு அற்ற உணவினை மேற்கொள்ள வேண்டும் என வற்புறுத்துவர். மேலும் அடுத்த குறளிலேயே விளக்கமாக

'மாறுபாடில்லாத உண்டி மறுத்து உண்ணின்
ஊறு பாடில்லை உயிர்க்கு' (945)

என விளக்குவர். எனவே இவ்வுணவு வகை உடம்பு உயிர் இரண்டையும் பிணைத்து நெடுங்காலம் வாழவைப்பதென்பதும் அவ்வுணவை மாறுபாடில்லா வகையில், முன் உண்டது நீங்க மேலும் அளவோடு பசிக்க உண்பதே வாழ்வின் சிறப்பைத் தருவது என்பதும் தேற்றம். இந்தவகையில் உடம்பையும் உயிரையும் போற்றினுல்தான் உலகில் எல்லா உயிர்களும் ஏற்று வாழும் காதல் இன்பத்தையும் அதன் வழியே பெருகும் உலக இன்பங்களையும் பிற சிறப்பியல்புகளையும் பெற முடியும் என்பதை காட்ட நினைத்த வள்ளுவர்,

'உணலினும் உண்டது அறல்இனிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது' (1326)

என்று கடைசியில் காட்டுகிருர். மருந்து அதிகாரத்திலேயும் 'இழிஉறிந்து உன்பான் கண் இன்பம் போல்' என்று உவமை முகத்தால், அற்றதறிந்து உண்பவனே உலக இன்பத்தை முற்றும் துய்க்க

வல்லவன் என விளக்குகிறர். எனவே உலக நல்வாழ்விற்கும் நோயற்ற பெரு நெறிக்கும் உணவு வகையும் அளவும் கட்டுப்பாடும் அவசியமாகின்றன. ஆயினும் அவற்றை உணராத காரணத்தினல் தான் நாட்டில் நோய்கள் வளர்ந்து, மருத்துவ மனைகள் பெருகி அவற்றிலும் இடமில்லா நிலையில் மக்கள் இடர்ப்படுவதைக் காண்கின்றோம். எனவே வள்ளுவரும் அவ்வாறு தன் சொல் கேளாது நோய்வாய்ப்பட்டவனை வேண்டாதவன் என ஒதுக்காது, அவனுக்கு மருந்துதுண்ண வேண்டிய வகைகளையும் வற்புறுத்துவார். 'மருந்து' அதிகாரத்தின் முற்பகுதியில் மருந்தே வேண்டாத உணவுக் கட்டுப் பாட்டு நெறியை வற்புறுத்தியவர், பிற்பகுதியில் நோய் பெற்றார் பெற வேண்டிய மருத்துவ முறையினைத் தொகுத்துக் காட்டுகின்றார்.

> 'நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
> வாய்நாடி வாய்ப்பச் செயல் (948)

என்ற குறளும் அடுத்துவரும் இரண்டும் பெற்ற நோயினை நீக்கும் வழிமுறைகளையும் மருத்துவன் தன்மை, நிலை மருத்துவரின் பணி முதலியவற்றையும் விளக்குகின்றன. இவ்வாறு உலக வாழ்வில் நோயற்று வாழவும் நோயுற்றால் அதை நீக்கி வாழவும் ஓரதிகாரத்தில் விளக்கமுறக் காட்டிய வள்ளுவர், இந்நோயின் பலதிறப்பட்ட நிலைகளைப் பலப் பலவிடங்களில் தம் நூலில் விளக்கிக்காட்டுகிறர்.

'நோ' என்ற சொல்லுக்கு வருத்தம் என்பது பொருள். அதற்கு 'நொந்துபோ' என விளக்கம் தருவார்கள். வெறுக்கத்தக்கது என்ற பொருளிலும் 'நோ' என்ற ஓரெழுத்தொரு சொல் வள்ளுவர் குறளில் இடம் பெறுகின்றது (805). அப்படியே நோதல் என்ற சொல்லும் வருந்துதல் என்ற பொருளில் வருவதறிவோம் (341). இவ்வாறு 'நோ' என்ற சொல் வருத்தம் என்ற அடிப்படைப் பொருளில் அமைந்து, உயிருக்கும் உடலுக்கும் வருத்தம் உண்டாக்கும் நிலையில் 'நோய், என்று அமைகின்றது. இந்த நோயினை வள்ளுவர் உடல் பற்றிய 'நோய்' என்ற அளவில் காட்டி அமையாது மேலும் பல பொருள்களில் – வருத்தத்தின் வகைகளை விளக்கிச் சொல்லுகின்றார் துன்பம், குற்றம், காமப்பிணி எனப் பல வகைகளில் 'நோய்' குறளில் எடுத்தாளப் பெறுகின்றது. இவை அற்று வாழ்தல் வாழ்க்கை என்பது சொல்லாமலே அமையும். காமப்பிணி இன்ப ஊற்றாக மாறும் நிலையினைப் பின்பு காண்போம்.

பிறர் துயர் தம் துயராக எண்ணி வாழ்தல் மனிதப் பண்பு; அதுவே அறிவுடைமை என்பதும் வள்ளுவர் கருத்து. உலகில் உள்ள அறிவு நிலையைப் பலவகையில் வள்ளுவர் விளக்குகிறர். 'கற்றனைத்தூறும் அறிவு' என்று அறிவு வளர்ச்சிக்கு வழி காட்டு

கிருர். எனினும் அறிவினுள் எல்லாம் சிறந்ததாக அவர் காட்ட நினைத்தது மற்றவருக்கு ஏதம் செய்யாமை-அவ்வாறு செய்யாதிருப்ப தற்கு வழி? பிறர் நோயைத் தம் நோயாகக் கருதின் இன்பம் விளையும் என்பது அவர் கருத்து. அறிவுடைமையும் அதுதான் என்ற உண்மையை,

"அறிவினுல் ஆகுவதுண்டோ, பிறிதின் நோய்
தன்நோய்போல் போற்ருக் கடை (315)

எனக் காட்டுகின்ருர். இந்த அடிப்படை உண்மையை உணராத சிலர், மற்றவருக்கு நோய் உண்டாக்கி மகிழ்வர். ஆயினும் அவர்கள் தாம் செய்த கொடுமைகளுக்குத் தாமே நோயெனும் துன்பத்தில் பட்டு உழல வேண்டும் என்ற நியதியை உணருவதில்லை; 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்ற உண்மையை உணருவதில்லை. எனவே நோய் பற்றி இந்த அடிப்படையை உணர்ந்த வள்ளுவர் உலகில் 'நோய் யாரைப் பற்றும்' என்ற வினுவினை எழுப்பித் தாமே அதற்கு விடையும் தந்துள்ளார்.

"நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்" (320)

"தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல் வேண்டாதான்" (206)

என்ற குறட்பாக்கள் நோயின்றி வாழ வழி வகுப்பதை அறிகிருே மல்லமோ! ஆம்! உளம் உடல் இரண்டும் நோயற்று வாழ நாம் நினைப்பின், நாம் மனத்தாலும் மற்றவருக்குத் துன்பம் விளைக்க நினைக்கக்கூடாது. உடலைப் பற்றிய நோயினையும் உயிரைப் பற்றிய துன்ப நோயினையும் இவ்வாறு விளக்கிக்காட்டிய வள்ளுவனர் அந் நோயைத் தடுக்கும் ஆற்றல் மெய் அறிவினை உடையார்க்கே உண்டு என்ற உண்மையை,

'எதிரதாக் காக்கும் அறிவினர்க் கில்லை
அதிர வருவதோர் நோய்' (429)

என்று அறிவுடைமையில் காட்டுகிருர். அதிர என்பதற்குப் பரிமே லழகர் 'நடுங்க' எனப் பொருள் எழுதுகிருர். 'காத்தல் அதன் காரணத்தை விலக்குதல்' என்பதும் அவர் விளக்கம். எனவே உள நோய்க்கும் உடல் நோய்க்கும் அடிப்படைக் காரணங்கள் உண்டு என்பதும் அவற்றை விலக்கலே நோயின்றி வாழ வழி என்பதும்

உணரவேண்டும் என்பதும் அவ்வாறு உணர்ந்து செயலாற்று பவரே உண்மை அறிவுடையார் என்பதும் தேற்றம்,

இவ்வாறு அடிப்படையினை விளக்கிய வள்ளுவர் அதற்குரிய வழியையும் சொல்லாமல் இல்லை. இன்றைய தலைவர்கள் போன்று வெறும் குற்றத்தை மட்டும் கூறி, குறை காட்டி, அவற்றைப் போக்கும் வழிகாட்டாது செல்லும் மரபு வள்ளுவருடையதன்று. எனவே அந் நோய் நீக்கத்துக்கு உரிய ஆக்க நெறியையும் அவர் காட்டுகின்றார்.

பெரும்பாலான நோய்கள் உடலின் புறத்தே தோன்றினும் தோன்றாவிடினும் மனத்தின் அடிப்படையிலே தோன்றுகின்றன. சிலர் உணர்வு வயப்பட்டுத் தம்மை மறந்து சாராதவற்றைச் சார்ந்து நோயுறுகின்றனர். இன்றைய மருத்துவர்கள் அதற்குக் காரணங்கள் 'இரத்த அழுத்தம்' போன்ற பல என்பர். ஆயினும் மனவோட்டமே அவற்றிற்கு அடிப்படை என்பதை உணர்தல் வேண்டும். மேலும் பல வகையில் மட்டுமன்றுதம் தகுதிக்கு மேல் உள்ளவற்றைப் பற்ற நினைத்து அவற்றை பெருத காரணத்தால் உள்ள நோய் பெற்று, பின் உடல் நோயுமுற்று வாடுவாரைக் காண்கின்றோம். 'பற்றின் பற்றிடம் குற்றங் கொள்கலம்' இவ்வுடம்பு என்ற சாத்தனர் கூற்றைப் பலர் வாழ்வில் மெய்ப்பிக்கின்றனர்.

இவற்றையெல்லாம் எண்ணிய வள்ளுவர் நோய் நீக்கத்துக்கு அடிப்படையாகச் 'சார்புகெட ஒழுக'வேண்டிய நெறியை வற் புறுத்துவார்.

> " சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச்
> சார்தரா சார்தரு நோய் " (359)

என்ற குறள் துறவறவியலில் மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தில் உள்ளது. 'மெய்' என்பது இவ்வுடலையும் குறிக்குமாதலின் உடலைச் சாரும் நோய்க்கும் இப்பாடல் பொருந்தும். 'மெய்' பிற உண்மை களையும் உள்ளடக்குவதாதலின் உயிர்பற்றியும் உணர்வுபற்றியும் வரும் நோய்க்கும் இக்குறள் பொருந்தும். அதனாலேதான் முன் 'துறவில்' வள்ளுவர்,

> " யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
> அதனின் அதனின் இலன் " (841)

எனக்காட்டுகிறார். உள்ளத்துறவும் உண்மை உணர்வும் அனை வருக்கும் தேவையானவைதாமே! இவ்வாறு வாழ்வைச் செம்மைப் படுத்தி வாழவும் எல்லாவற்றையும் நமதாக்கிக் கொள்ளவேண்டும் என்று எண்ணுது 'நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை' என்று செம்மையுளம் பெறவும் கற்றுக்கொண்டோமானல் யாதொரு மாறு

பாடும் உளத்திலும் உணர்விலும் உடலிலும் உண்டாகாது. உடலுக்கும் உயிருக்கும் மாறுபாட்டு உணவும் உணர்வும் இல்லாதிருக்க வேண்டும் என்பதையே வள்ளுவர்

"மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்
வேறுபாடு இல்லை உயிர்க்கு" (945)

எனக் காட்டுகிருர். ஆக, மாறுபாடுஉணவில் இல்லையாயின் நோய் உயிர்க்கு இல்லை என இக்குறளால் வள்ளுவர் காட்டுகிருர். அப்படியே வேறு நோய்களும் மாறுபாடு அல்லது 'இகல்' என்பதன் அடிப்படையிலே அமையும் எனக் காட்டுகிருர்.

"இகல்என்ப எல்லா உயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய் (851)

என்பது அவர் வாக்கு. எனவே எந்த வகையான மாறுபாடும் இல்லாத நெறியே, 'நோயற்று வாழ' அடிப்படையாகின்றது என்பது தேற்றம். இனி அந்த மாறுபாடுகள் பிறக்கும் அடிப்படையையும் வள்ளுவர் காட்டத் தவறவில்லை. 'நோய்நாடி நோய்முதல் நாடி' நிற்பவரன்ருே வள்ளுவர். எனவே உயிர்களைப் பற்றிய எல்லா நோய்களுக்கும் உள்ள அடிப்படைக் காரணங்களை ஆராய்கின்ருர். மூன்றே அவர் முன் நிற்கின்றன. அவற்றின் பெயர் கூட நாட்டில் உலவக் கூடாது என்பது அவர் உள்ளுணர்வு. உணர்வைப் பாட்டில் தருகிருர்.

'காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்' (360)

என்பது அவர் வாக்கு. 'காரணமாகிய அக்குற்றங்களைக் கெடுத்தார் காரியமாகிய இருவினைகளைச் செய்யாமையின், அவர்க்கு வரக் கடவதாகிய துன்பங்களும் இல்லை என்பது இதனுல் கூறப்பட்டது' என்பது பரிமேலழகர் விளக்கம். இவற்ருல் நோய் என்ன என்பதும் எவற்றின் அடிப்படையில் அவை உடலையும் உயிரையும் பற்றும் என்பதும், அந்நோய் எவ்வாறு வாழ்வை அவலமாக்கும் என்பதும், அந்நோய் நீக்க வேண்டுமாயின் என்ன செய்யவேண்டும் என்பதும் நீங்கினுல் உண்டாகும் நலன் எத்தகையதென்பதும் அவ்வாறு நீக்கியவரே பெரியவர் என்பதும் (442) அவர் வழி ஒழுக வேண்டும் என்பதும் ஒருவாறு அறிந்தோம். எனவே நோயின்றி வாழ வள்ளுவர் வகுத்த வழியைப் பின்பற்றுவோமாக!

இனி, வள்ளுவர் வேருெரு வகையான நோயையும் நமக்கு அறிமுகப்படுத்துகின்ருர். நோய், மருந்து இரண்டும் ஒரே இடத்தில்

இருப்பதான நிலையினை வள்ளுவர் எண்ணிப் பார்க்கின்றார். இரண்டும் ஓரிடத்து அமைகின்ற ஞான்றே இந்நோய் முன்னதின் மாறுபட்டதாகக் கொள்ளலாமன்றோ! சங்ககால இலக்கியங்கள் சீராட்டிப் பேசும் காதல் வாழ்வினை வள்ளுவர் இருநூற்று ஐம்பது குறட்பாக்களுள் மிக அழகாக விளக்குகிறார். உள்ளத்தால் ஒன்றிய காதலர் பிரியும் வழியே பெறும் நோயினை அவர் எண்ணிப் பார்க்கிறார். அவ்வாறு பார்க்கும் பொழுது அந்த நோயின் அடிப்படையும் அதற்கேற்ற மருந்தும் அவருக்குப் புலனாகிறது. காதல் வாழ்வின் சிறப்பை வள்ளுவர் போன்று நுணுகி ஆராய்ந்து உணர்த்தியவர் எவரும் இலர். அந்தத் தெய்விகக் காதல் வாழ்வைத் தெரிந்து மேற் கொள்வார் சிலராதலின்,

"மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்" (1289)

என்பர். அக்காம இன்பம் சிறக்க – காதல் வாழ்வு செம்மையாக, பிரிவு எனும் துன்பத்தைத் தரும் நோய் காட்டப்பெறுகிறது. ஆயினும் அந்த நோய்க்கு மூலகாரணமாகிய தலைவியே அந்த நோய்க்கு மருந்தாக அமைவது போற்றற்குரியது. இதை அத் தலைவியின் பார்வையில் வைத்து

'இருநோக்கு இவள் உண்கண்உளது ஒருநோக்கு
நோய்நோக் கொன்றந்நோய் மருந்து' (1091)

என்று காட்டி, அவள் காதல் குறிப்பை அறிந்து தலைமகன் மகிழும் வகையில் வள்ளுவர் விளக்கினார் ஆயினும், இதை அக்காதலர் வாழ்வு முழுவதுக்குமே ஏற்றலாம். தலைவியின் பிரிவால் துன்பமும் கூடுவதாலும் இன்பமும் பெறுதலினாலும், கண்ணுக்குச் சொல்லிய நிலை காதலிக்கே பொருந்துவதாகும். இதைத்தான் பின் ஒருகுறளில்,

'பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து' (1102)

என அவரே விளக்குகிறார். முன் அறத்துப்பாலிலும் பொருட்பாலிலும் உடல், உயிர் பற்றிய பிணிகளை விளக்கி, அவை நீங்க வேண்டிய வழி வகைகளையும் காட்டிய வள்ளுவனார் இங்கே அந்தப் பிணியையும் காதல் பிணியையும் ஒத்துநோக்கிக் காணுகின்றார். அந்த நோய் வேற்று மருந்தால் நீங்கக்கூடியதாக இருக்க, இக்காதலி தந்த நோய்க்கு அவளே மருந்தாகின்றாள் எனத் தெளிவுபடுத்துகிறார். எனவே இக்காதல் நோய், பிற நோய்களினும் வேறுபட்டதென்பதும், அந்நோய் உறுவதும் தெளிவதுமே இன்பம் என்பதும் வள்ளுவர் விளக்க நினைத்த உண்மைகளாகும் அதனாலேதான்,

'ஊடுக மன்னே ஒளியிழை யாம்இரப்ப
நீடுக மன்னோ இரா' (1329)

என இறுதியில் அந்த 'இன்ப ஆக்கம் துன்ப ஊற்று' இரண்டும் இணைந்த பெருமையைத் தம்மை மறந்து பாடுகிறார்.

"அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிறிதாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர் (1160)

கரத்தலும் ஆற்றேன் இந்நோயை நோய்செய்தார்க்கு
உரைத்தலும் நாணுத் தரும் (1 62)

பெயலாற்றா நீர்உலர்ந்த உண்கண் உயலாற்றா
உய்வில்நோய் என்கண் நிறுத்து (1174)

உரார்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்
செறாஅய் வாழிய நெஞ்சு (1200)

என்பன போன்ற குறட்பாக்களாலும் பிறவற்றிலும் வரும் காதல் பற்றிய நோயின் விளக்கமும் அந்நோய் நீக்கப் பெறும் வழியாக அமைந்த முயக்கமும் வள்ளுவர் வழியே அறிந்து இன்புறத்தக்கன. 'நீங்கின்தெறூஉம் குறுகுங்கால் தண்என்னும்' புதுவகையான நெருப்பைக் காமத்துப் பாலில் வள்ளுவர் காட்டுவது போன்றே, பிறநோய்களினின்று வேறுபட்டு நின்று, 'உள்ளக் களித்தலும் காணமகிழ்தலும்' செய்கின்ற இக்காமநோயின் தன்மையையும் காட்டுகின்றார். எனவே இந்நோய் உயிர்க்கட்கு இன்றியமையாதது. ஆயினும் இந்நோய் பெற்று அதிலும் இன்பம் கண்டு ஊடி, பின் கூடிப்பெறும் சிறந்த இன்பத்துக்கு, முன் கண்ட உடல், உணர்வு, உயிர்பற்றிய நோய்கள் நீங்கப்பெறவேண்டும் என்ற உண்மையை உணர்தல் வேண்டும். அதனாலேயே நாம் முன்னரே கண்டபடி வள்ளுவர் இரண்டையும் இணைத்து,

"உணலினும் உண்டது அறல்இனிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது" (1326)

என்று காட்டுகிறார். உலகில் உயிர்பெற்றார் பெறுவது பெற விரும்புவது துன்பமற்ற – நோயற்ற இன்பவாழ்வேயாகும். வள்ளுவர் அவ்வாழ்வைச் சொல்தோறும் காட்டுகிறார். 'நோயற்ற வாழ்வு நான் வாழவேண்டும்' என்று வள்ளலார் இறைவன் முன் பாடி அந்தநிலை வேண்டி நின்ற தன்மை அறிவோம். ஆம்! வள்ளுவர் அவ்வாழ்க்கைக்கே வழிவகுத்துச் செல்லுகின்றார். குறள்முழுதும் மக்களைமட்டுமன்றி

உயிரினம் அனைத்துமே அகநோய் புறநோய் இரண்டுமின்றி இன்ப நெறியில் செல்லவேண்டும் என்பதற்காகவே எழுதப்பெற்றது. 'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியா' நெறியே குறள் நெறி. எனவே மக்கள் தாமும் நோயின்றி வாழ்ந்து, உலக உயிர்களையும் நோய் நீங்கிவாழ ஈர்த்துச் செல்லவேண்டுமாயின் வள்ளுவர் குறள் வாயிடையன்றி வாழ்விடையில் மலரவேண்டும். அந்த நாள் – வாழ்வில் குறள் மலரும் நாள் – வளமார்ந்த நாள் – செம்மை நலம் பரப்பும் நாள் விரைவில் வரவேண்டும் என்பதே என் வேண்டுகோள். வள்ளுவர் பிறந்து இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்தும் அக்குறள் ஏட்டிலும் பலகையிலும் சுவர்களிலும் பிற இடங்களிலும் வாழ்கின்றதேயன்றி வாழ வேண்டிய மக்கள் உள்ளங்களில் - அவர் தம் வாழ்வில் வாழ வில்லை. மக்கள் வாழ்வோடு குறள்பிணைந்து வாழும் பெருநாளே 'நோயின்றி' வாழும் நல்லநாள்! அந்த நல்லநாள் விரைந்து வருவதாக!

குறிக்கோள்

ஜஸ்டிஸ் - கைலாசம்

தென்காசி திருவள்ளுவர் கழகம் 36-வது திருக்குறள் விழாவில் பங்கு கொள்ள எனக்கும். எனது மனைவிக்கும் இந்த வாய்ப்பினை அளித்ததற்கு கழகத்தார்களுக்கு எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

உலக மொழிகளிலேயே தமிழ்மொழி மிகவும் பழமையானது. பெருமை வாய்ந்தது. அத்தகைய தமிழ் மொழிக்கே பெருமை தேடிக் கொடுத்தது வள்ளுவரின் குறள். தமிழ் மணம் எங்கெங்கே உண்டோ அங்கெல்லாம் திருக்குறளின் நறுமணம் விசிக்கொண்டிருக்கும். அதை விட குறள் மணம் எங்கெங்கு இருக்கிறதோ அங்கெல்லாம் தமிழ் மணம் விசும் என்பது பொருத்தம். பிற நாட்டு அறிஞர் பலர் குறளின் பொருளை அறிந்து அதனால் தமிழின் நறுமணத்தை அனுபவிக்கிறார்கள்.

முக்கியமாக தமிழ் இலக்கியம் சங்க காலத்தில் தான் மிகவும் உன்னதநிலையில் இருந்தது. தமிழ் இலக்கியங்கள் அகம், புறம்என்று இரு பெரும் பிரிவாக பிரிக்கப்பட்டு அகம் என்பது இன்பத்தைப் பற்றியும், புறம் என்பது அறம், பொருள், விடு என்பதை தெளிவுபடுத்துவதாகவும் அமைந்திருந்தது. சங்க நூல்களில் ஒன்றாகிய திருக்குறள் மட்டும் அகம், புறம், இரண்டைப்பற்றியும் தெளிவுபடக்கூறுகிறது.

தமிழ் நூல்களில் பெரும்பாலானவை அகம், புறம் என்னும் இரண்டையும் சேர்க்கவில்லை. விடு வேண்டுமாயின் உலகு தொடர்பு கூடாது என்றும் இவ்வுலகில் நன்றாக வாழவேண்டுமாயின் விடு அடையும் எண்ணத்தை கைவிட வேண்டும் என்றும் சொல்வதாக இருந்தன. ஆனால் திருக்குறள் உலக இன்பங்களை அனுபவித்து வாழ்வதே வாழ்வின் குறிக்கோள் என்பதை வற்புறுத்துகிறது சீரும் சிறப்புமாய் வாழும் வழி வகுத்திருக்கிறது. ஆகையால் தான் இந்நூலை எல்லோரும் விரும்புகிறார்கள். திருக்குறள் தமிழ் மொழியிலே இயற்றப்பட்டிருப்பினும், தமிழனுக்காக மட்டும் ஏற்பட்ட நூலல்ல. வள்ளுவர் ஒரு மதத்தைச் சார்ந்தவராய் இருந்திருப்பினும் இந்நூல் எல்லா மதத்தினருக்கும் பொதுவானது. சங்க காலத்தில்

ஏற்பட்டிருப்பினும் எல்லாக் காலத்திற்கும் பொருத்தமாக அமைந்திருக்கிறது. ஆகவே திருக்குறள் கால வரம்புக்கு கட்டுப்படாத, எல்லா மதங்களுக்கும், மொழிகளுக்கும் பொதுவான ஒரு ஒப்பற்ற உலக நூல் என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பட்ட ஓர் உண்மை.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று பாரதியார், குறளினால் தமிழ்நாடு வான்புகழ் கொண்டது என்கிறார். உலக நூலானாலும் தமிழனால் தமிழில் இயற்றப்பட்டதால் நாம் சற்று பெருமை கொள்வது இயல்புதான். பெருமை அடையும்போது குறள் நெறியை கடைப்பிடிக்க முயல வேண்டியது நம் கடமையும் ஆகிறது.

இந்த இணையில்லாத பெருநூல் உலகில் எல்லா மொழிகளிலும் ஆக்கப்பட்டிருக்கிறது என்றால் அதில் வியப்பேதும் இல்லை. உலகத்திலேயே எல்லா மொழிகளிலும் ஆக்கப்பட்டு விமர்சனம் செய்யப்பட்ட நூல்களில் முக்கியமானதாக கீதையையும் குறளையும் சொல்லலாம். பிரான்சு மொழியில் 1767ல் குறள், மொழிபெயர்க்கப் பட்டு பாரிஸ் புத்தகசாலையில் வைக்கப்பட்டு சில பகுதிகள் M. Acrial அவர்களால் அவர் மொழி பெயர்ப்புக்கு உபயோகப்படுத்தப்பட்டது. (Constantius Beschi) என்னும் பாதிரியார் தமிழ் நாட்டில் 40 வருடங்கள் வாழ்ந்த பிறகு முதல் இரண்டு பாகங்களையும் லத்தின் மொழியில் இன்றைக்கு 150 வருடங்களுக்கு முன் மொழி பெயர்த்தார். Dr. Graul ஜெர்மானிய மொழியில் ஆக்கினார். பல ஆங்கிலேயர்கள் குறளைப்படித்து நன்குணர்ந்து ஆங்கிலத்தில் இந்நூலை செய்துள்ளார்கள். ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்களில் முக்கியமாக Drew உம் ராமானுஜ கவிராயரையும் Dr. Pope வா. வே. சு. ஐயர் அவர்களையும் குறிப்பிடலாம். குறளை எவ்வளவுதான் திறமையாக மொழி பெயர்த்தாலும் திருக்குறளைப்போல் ஒரு நூலின் கருத்தை செவ்வையாக விளக்கமுடியாது. குறளை தமிழிலேயே படிக்கவேண்டும் என்னும் ஆர்வத்துடன் பல பிறநாட்டவர் தமிழ் கற்றுக்கொண்டு தமிழில் குறளை அனுபவித்திருக்கிறார்கள். தமிழனுக்கு குறளை தமிழிலேயே படிக்கும் பெரும் பேறு கிடைத்திருக்கிறது. ஆனால் அதற்கு தமிழனானாலும் தமிழை நன்றாக கற்று உணர்தல் வேண்டும்.

குறளை அறியாத தமிழ் எழுத்தாளரே இருக்கமுடியாது என்று சொன்னாலும் மிகையாகாது. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலை யிலும் கம்பராமாயணத்திலும் பல இடங்களில் திருக்குறளின் கருத்துக்கள் கையாளப்பட்டிருக்கின்றன, 'கம்பர் கண்ட திருவள்ளுவர்' என்னும் தலைப்பில் காலம் சென்ற பேராசிரியர் ரா. பி. சேது பிள்ளை அவர்கள்

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்னும் குறளை இளங்கோவடிகளும், சித்தலைச் சாத்தனும் அப்படியே அவர்கள் நூலில் எடுத்து இருக்கிறார்கள் என்பதை தெளிவுபடுத்தி இருக்கிறார். "தெய்வந் தொழா அள் கொழுநற் றொழுவாளை தெய்வம் தொழுந்தகைமை திண்ணிதால்" என்பது சிலப்பதிகாரம். "தெய்வந் தொழா அள் கொழு நற்றொழு தெழுவாள் பெய்யெனப் பெய்யும் பெரு மழை" என்ற அப்பொய்யில் புலவன் பொருளுரை, என்பது மணிமேகலை. பல திருக்குறள் பாக்களுக்கு கம்பர் விளக்கம் தருகிறார் என்பது பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளை அவர்களின் கருத்து. பாரதியாரைப் பற்றியோ சொல்லவே வேண்டியதில்லை. அவரைப் போல் குறளைப் போற்றியவர் ஒருவரும் இல்லை. இக்காலத்திலோ எந்தக்கட்டுரையும், எந்த சொற்பொழிவும் குறள் இல்லாமல் இருக்க முடியாது. குறள் முழுமையும் தெரிந்த பள்ளிச் சிறுவர்கள் பலர் தெருவெல்லாம் குறள் முழக்கம் செய்து வருவது தமிழின் நல்ல காலத்திற்கு அறிகுறி.

திருக்குறளின் முக்கியமான பகுதி அறத்துப்பால் என்பது பலரின் கருத்து. பொருளும் இன்பமும் அறத்தின் வழிப்பட்டது. அதாவது அறத்தின் அடிப்படையிலேயேதான் பொருளையும், இன்பத்தையும் தேட வேண்டும் என்பது குறளாசிரியரின் நோக்கம். அறத்தால் வருவதே இன்பம் மற்றெல்லாம் புறத்த புகழும் இல. அறம் என்னும் வார்த்தையை ஆங்கிலத்தில் Righteousness என்றும் Virtue என்றும் மொழி பெயர்த்திருக்கிறார்கள். அறம் என்னும் வார்த்தைக்கு பொருள் சொல்வது எளிதல்ல. யான் எனது என்னும் செருக்குகு அற, — அழுக்காறு, அவா, வெகுளி, இன்னுச் சொல் ஆகிய மாசுகள் அற வாழ்வதுதான் அறவாழ்க்கை. மனிதனின் கடமை முழுமையும் அறத்துப் பாலில் விளக்கப்பட்டிருக்கிறது. குடும்ப வாழ்க்கை நடத்தும் ஒருவன் எவ்வாறு வாழ்க்கை நடத்த வேண்டும் என்பதை குறள் 5வது அதிகாரத்திலிருந்து 24வது அதிகாரம் வரை காணலாம். "வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்." வாழ்க்கைத் துணைவி எப்படி இருக்கவேண்டும் என்பது 6வது அதிகாரத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. "தற்காத்துத் தற்கொண்டாற் பேணி தகை சான்ற சொற்காத்து சோர்விலாள் பெண்". விட்டிற்கு அணிகலம் மக்கட் பேறு. "குழல் இனிது யாழ் இனிது என்பர் தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்". "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" "மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்நோற்றான் கொல் எனும் சொல்". குழந்தைகளை எப்படி வளர்க்க வேண்டும் என்பதைப் பற்றி சிறந்த கருத்துக்கள்

இந்த அதிகாரத்தில் காணைக்கிடக்கின்றன. இல் வாழ்வான் எப்படி விருந்தினரை உபசரிக்க வேண்டும் என்பது சொல்லப்படுகிறது. "செல் விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான் நல் விருந்து வானத்தவர்க்கு". மற்றும் இல் வாழ்பவனின் பல ஒழுக்கங்களையும் குறளாசிரியர் சொல்கிறார்.

பொருட்பாலில் அரசியல் மிக விரிவாகப் பேசப்படுகிறது. அரசர்களுக்கும் அமைச்சர்களுக்கும் தூதுவர்களுக்கும் ஒற்றர்களுக்கும் கூட இலக்கணம் சொல்லப்பட்டிருக்கிறது.

குடி தழுவிக் கோலோச்சும் மாநிலமன்னன் அடிதழுவி நிற்கும் உலகு – வேலன்று வென்றி தருவது; மன்னவன் கோல்! அதுவும் கோடாதெனின்! இன்றைக்கும் பொருந்தக் கூடியதாக இருக்கிறது. ஆட்சியின் வடிவம் மாறிவிட்டபோதிலும் குறளாசிரியர் அன்று சொன்ன அரசியல் கருத்துக்கள் இன்றும் பொருந்துகின்றன.

அமைச்சர்களைப்பற்றி – தெரிதலும் தேர்ந்து செயலும் ஒரு தலையாச் சொல்லலும் வல்ல தமைச்சு – என்கிறார்.

"அன்புடைமை, ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு

இது தூதனுக்குச்சொல்லப்பட்டுள்ள இலக்கணம். எல்லாவற்றையும் விட ஒற்றாடல் என்று ஓர் அதிகாரம்-ஒற்றன் என்றால் உங்களுக்குத் தெரியும். எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும் வல்லறிதல் வேந்தன் தொழில் – எப்படி அறிந்து கொள்வது நாட்டு நடப்பை – ஒற்று மூலமாக, ஒற்றனுக்குச் சொல்லப்படும் இலக்கணத்தைப் பாருங்கள். வினைசெய்வார், அதாவது தம் தொழிலைச் செய்பவர்கள், தம்சுற்றம் வேண்டாதார் என்று ஆங்கு அனைவரையும் ஆராய்வது ஒற்று அப்படி ஆராய்ந்துகொண்டு வருகின்ற ஒற்றனின் செய்திகையும் அப்படியே அரசன் அல்லது ஆட்சியாளர் ஏற்றுக்கொள்ளலாமா? கூடாது. ஒற்று ஒற்றித் தந்த பொருளையும் மற்றுமோர் ஒற்றினால் ஒற்றிக்கொளல் – அது மட்டுமா ஓர் ஒற்றனுக்கு மற்றோர் ஒற்றனை ஒற்றனென்றே தெரியக்கூடாது – ஒற்றொற்றுணராமை யாள்க" என்று கூறுகிறார் குறளாசிரியர். இவ்வளவு நன்றாக இருந்தாலும் இடித்துச் சொல்கின்றவர்கள் இல்லையென்றால் ஆட்சி நிலைகுலைந்துவிடும் என்றார். இடிப்பாரை யில்லா ஏமரா மன்னன் கெடுப்பாரிலானும் கெடும். ஆகவே ஆட்சி, செவிகைப்பச்சொல் பொறுக்கவேண்டும். செவிகைப்பச் சொல் பொறுக்கும் பண்புடை வேந்தன் கவிகைக்கீழ் – கவிகைக்கீழ் என்றால் குடை நிழலில் – செவிகைப்பச் சொல் பொறுக்கும் பண்புடை வேந்தன் கவிகைக் கீழ் தங்கும் உலகு.

யாதானும் நாடாமால்

கா. பொ. இரத்தினம்

சில ஆண்டுகளுக்கு முன்னர் பல்கலைக்கழகப் பட்டம்பெற்ற அறிஞர்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து பல தொழில் களில் ஈடுபட்டனர். படித்துப் பட்டம்பெற்ற பலர் இப்பொழுது இலங்கையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் பிற நாடுகளுக்குச் சென்று அந்நாடுகளிலே தங்கள் கல்வித் தகைமைக்கேற்பப் பல தொழில்களைச் செய்கின்றனர். இவர்கள் கனடா, இங்கிலாந்து, கயானா, நைசீரியா, மலேசியா, புரூனை முதலிய பல நாடுகளில் பெரும் ஊதியம் பெற்று மதிப்புடன் பணியாற்றுகின்றனர்.

கல்வி கற்றவர்களுக்கு – சிறப்புத் துறைகளில் நன்கு பயின்றவர் களுக்குத் – தம் நாடுகளில் மட்டுமன்றிப் பிற நாடுகளிலும் மதிப்பும் பணிபுரியும் வாய்ப்பும் உண்டு என்பதை நாம் இன்று நன்கு அறிகின்றோம். கற்றோரின் இத்தகைய தனிச் சிறப்பை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சுட்டிக்காட்டி மக்கள் எல்லோரை யும் கல்வியை நன்கு கற்குமாறு வற்புறுத்திய தனிப்பெருமை திருக்குறளுக்குரியது.

பாடசாலைகளிலோ, பல்கலைக் கழகங்களிலோ கற்று முடிந்தவுடன் கற்றலை நிறுத்திவிடக்கூடாது; இளமைப் பருவம் மட்டும்தான் கல்விக்குரிய பருவம் என்று எண்ணக்கூடாது; இறக்கும் வரையும் கற்கவேண்டும் எனும் கருத்தை வலியுறுத்தும்பொழுது வள்ளுவர் இச்சிறப்பைச் சுட்டிக்காட்டுகின்றார்.

கல்வி கற்றவனுக்கு எந்த நாடும் சொந்த நாடாக ஆகும், எந்த ஊரும் சொந்த ஊராக ஆகும். இத்தகைய பெருமையைக் கொடுப்பது கல்வி மட்டுமே. இந்தக் கல்வியை ஒருவன் இறக்கும் வரையும் ஏன் கற்கக்கூடாது என்று வள்ளுவர் வினவுகின்றார்.

> "யாதானும் நாடாமால் ஊராமால் என்ஒருவன்
> சாந்துணையும் கல்லாத வாறு"

இறக்கும் வரையும் கற்கவேண்டும் என்று முதன் முதற்கூறிய அருமை – இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கூறிய பெருமை – திருவள்ளுவருக்கே உரியது.

ஒவ்வொருவரும் "அறிவறிந்த" மக்களாகினால் மக்கள் வாழ்வு சிறப்படையும் என்ற அடிப்படைக் கொள்கையினையே திருக்குறள் அழுத்தந் திருத்தமாக உரைக்கின்றது. இதுதான் திருக்குறள் முழுவதிலும் இழையோடியுள்ள உயிர் நிலைக்கருத்து. இதனை உடன்பாட்டு முகத்தானும் – எதிர்மறை முகத்தானும், பொதுவகையானும் – சிறப்பு வகையானும் திருக்குறள் எடுத்துரைக்கின்றது.

கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை முதலிய அதிகாரங்களில் கல்வியின் சிறப்பும், கல்வி கேள்விகளாற் பெறப்படும் அறிவின் சிறப்பும் படிப்போர் கேட்போர் உள்ளங்களை ஈர்க்கும் முறையிலே தீட்டிக்காட்டப்பட்டுள.

ஒருவனைப் பார்த்து "நீ ஒரு மிருகமடா" என்று கூறினால் அவன் எவ்வளவு கோபங்கொள்வான்? எவ்வளவு துன்பம் அடைவான்? இதற்குக் காரணம் என்ன? ஒரு மனிதனை மிருகம் என்று கூறுவதால் அவனை இழிவு படுத்துகின்றோம், பழிக்கின்றோம், இழிவுக்கும் பழிப்புக்கும் எல்லையிட்டுக் காட்டுகின்றோம். எல்லோருக்கும் நன்கு விளங்கும் இழிவுரை இது. இதனாலேயே மக்களை இழித்துரைக்க விரும்புவோர் "மாடு" "கழுதை" "குரங்கு" "எருமை" என்று அவர்களை விலங்கினங்களாக்கிப் பேசுகின்ற வழக்கு உண்டாகி நிலைத்துளது.

கற்றோருக்கும் கல்லாதோருக்கும் உள்ள வேறுபாட்டை மக்கள் உள்ளத்திற் பதிக்கவிரும்பிய வள்ளுவர் எல்லோருக்கும் தெரிந்த இந்த இழிவுரையையே பயன்படுத்துகின்றார்.

கற்றவர்களுக்கும் கல்லாதவர்களுக்குமுள்ள வேறுபாடு மக்களுக்கும் மிருகங்களுக்குமுள்ள வேறுபாட்டைப் போன்றது. கற்றவர்கள் மக்களைப்போன்றவர்கள்; கல்லாதவர்கள் விலங்குகளைப்போன்றவர்கள் என்கின்றார்.

> "விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
> கற்றாரோடு ஏனை யவர்"

என்பது அவர் வாக்கு

ஒன்றின் பெருமையை நன்கு உணர்ந்தால் மட்டுமே மக்கள் அதனைப்பெற முயல்வார்கள். எனவே கல்வியின் பெருமையை எந்த எந்த வழிகளால் அழுத்திக்கூறமுடியுமோ அந்த அந்த வழிகளால் வள்ளுவர் அழுத்திக் கூறுகின்றார்.

கல்லாதவர் மனிதப்பிறப்பினர் அல்லர்; விலங்குப் பிறப்பினர் என்றார் அவர். இதைப் பொருட்படுத்தாதவர்களுக்குக் "கல்விதான்

கண்'' என்று அறிவுரை பகர்கின்றார்; இதனையும் கேளாதவர்களுக்குக் கற்றவர்களே கண்ணுடையவர்கள்; கல்லாதவர்கள் கண் இல்லாதவர், அதுமட்டுமன்றி இரண்டு கண்ணுக்கும் பதிலாக இரண்டு புண்ணுடையவர்கள் என்று இடித்துரைக்கின்றார்.

'' கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்''.

'' கல்வியிலும் செல்வமே சிறந்தது. செல்வத்தாலே மட்டுமே சிறந்த வாழ்வு இன்ப வாழ்வு வாழ முடியும். செல்வத்தைப் போலக் கல்வி, வாழ்வுக்கு வேண்டிய வாய்ப்புக்களை கொடுக்காதே. எனவே கல்வி கற்பதை விடுத்துச் செல்வத்தை தேட முயல்வதே நல்லது. இந்த வாதம் அன்றும் இருந்தது; இன்றும் இருக்கின்றது. கல்விக்கும் — செல்வத்துக்கும், அறிவுடைமைக்கும் — பொருளுடைமைக்கும் உள்ள இந்த '' மோதல் '' இன்று பெரிதாகவுள்ளது. வேலையில்லாது திண்டாடுவோர் — வாழ வழியின்றித் துடிப்போர் — பெருகும் இக்காலத்திலே கல்வியினையா பொருளினையா மக்கள் மதிப்பார்கள். ஐந்தாண்டு பல்கலைக் கழகத்திற் படித்துப் பட்டம் பெறுதலையா, ஐந்தாண்டில் ஐந்து இலட்ச ரூபா ஈட்டுதலையா இன்று மக்கள் விரும்புவர். ''பொருள் வேண்டும், பெரும் பொருள் வேண்டும், விரைவில் வேண்டும்... ... எவ்வழியிலேனும் வேண்டும்'' என்பதே இன்றைய மக்களின் இதயத் துடிப்பு. கல்விக்கு-அறிவிற்கு உரிய மதிப்புக் கொடுக்காமல் பொருளுக்குப் பெருமதிப்புக் கொடுக்கப் பட்டமையாலேதான் இன்று உலகத்திலே போட்டி - பொறாமை - பூசல்கள் தாண்டவமாடுகின்றன. சம வாய்ப்பின்றிச் சம வாழ்வின்றிச் சமுதாயம் அல்லற்படுகின்றது. தனி உடைமையும் பொது உடைமையும் போரிடுகின்றன. உழைப்பவன் ஓட்டாண்டியாகின்றான்; உழைக்காதவன் குபேரனாகின்றான். இத்தகைய சமுதாய அமைப்பு மாற்றம் பெறவேண்டுமெனின் பிறரின் நோயைத் தம் நோய் போல - பிறரின் வறுமையை தம் வறுமை போலக் கொள்ளும் அறிவுடையார் பெருக வேண்டும். இந்தப் பேருண்மையை மக்கள் மனதிற் பதியச் செய்தற்கு வள்ளுவர் பெருமான் பெரிதும் முயன்றுளர்.

அறிவு உடையவர்களே எல்லாச் செல்வமும் உடையவர்கள்; அறிவில்லாதார் எச்செல்வமுடையவர் எனினும் ஒன்றும் இல்லாதவரே என்று உரைத்து அறிவுச் செல்வத்துக்குத் தலையிடம் கொடுத்தார். அறிவோடு சேராத பொருட்செல்வத்தைச் செல்வமன்று என்றுங் கூறினர். கற்றவர்கள் அடைந்த வறுமையிலும் கல்லாதவர்கள் பெற்ற செல்வம் துன்பந்தருவது என்று தெருட்டினர். பகைவராலும் அழிக்க முடியாத பொருள் கல்வி. செல்வத்தைப் போல இந்தப் பிறப்பில் மட்டுமின்றி ஏழு பிறப்பும் உதவும் ஆற்றலுடையது

கல்வி; பெற்றபின் இழக்காத செல்வம் கல்வி, கொடுக்கக் கொடுக்க குறையாத செல்வம் கல்வி; தானும் வாழ்ந்து பிறரையும் வாழவைக்க வழிகாட்டும் செல்வம் கல்வி; எனவே கல்விதான் ஒருவனுக்கு விழுமிய செல்வம் என்று நிலைநாட்டினர்.

"கேடில் விழுச் செல்வம், கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றயவை" இத்தகைய விழுச் செல்வமாகிய கல்வியை கசடறக் கற்க வேண்டு மென்றும் வற்புறுத்தினர் அவர். அரைகுறைக்கல்வி பயன்படாது; எல்லாவற்றையும் கற்கவும் முடியாது; எனவேகற்கவேண்டியவற்றைத் தெரிந்து ஆழமாகக் கற்க வேண்டும் எனக் கற்கும் முறையையும் விளக்கினர். கற்றபடி வாழ வேண்டுமெனவும் விதித்தார். ஆழ்ந்து கற்பதோடமையாது, பரந்த கல்வியையும் பெறவேண்டும். நூல்களைக் கற்பதால் மட்டுமன்றிக் கேள்வியினாலும் கல்வி அறிவை ஈட்டல் வேண்டும் என்றும் அறிவுறுத்தினர். என்றும் எப்பொழுதுங் கற்க வேண்டும் என்று கூறி அறிவுடைய மக்கள் சமுதாயத்தை உருவாக்குதற்கு வழி வகுத்தார்.

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன் சாந்துணையும் கல்லாதவாறு"

திருவள்ளுவர் கற்ற கல்வி

கு. அழகிரிசாமி

திருவள்ளுவரின் வாழ்க்கை வரலாற்றைக்கூறும் புத்தகம் எதுவும் அந்தக் காலத்தில் எழுதப்படவில்லை. வரலாறு என்ற பெயரால் வழங்குவதெல்லாம் ஆதாரமற்ற கற்பனைக் கதையே. அதனால் அவர் எங்கே கல்வி கற்றார், யாரிடம் கற்றார் என்பவற்றைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு நமக்கு இல்லாமல் போய்விட்டது. ஆனாலும் அவர் என்ன கற்றார், எப்படிக் கற்றார் என்பவற்றை அவருடைய நூலிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது. அத்துடன், எதைக் கல்வி என்றும், யாரைக் கற்றவர்கள் என்றும் அவர் கருதினார் என்பதையும், கற்றவர்கள் செய்யவேண்டியது என்று அவர் வற்புறுத்துவது எதை என்பதையும் நாம் அறிந்து கொள்ளலாம்.

திருவள்ளுவர் பிறர் இயற்றிய நூல்களிலிருந்தும், பிற அறிஞர்களிடமிருந்தும், தமது சொந்த அனுபவத்திலிருந்தும், கல்விப் பயிற்சி பெறாத சாதாரணப் பொது மக்களிடமிருந்தும் கல்வி கற்றிருக்கிறார். குறிப்பிட்ட ஒரு நூலையோ, ஒரு சில நூல்களையோ மட்டும் கற்று நிறுத்திக் கொள்ளாமல், பல நூல்களை – பல்வேறு சாஸ்திர நூல்களையுமே – அவர் கற்றிருக்கிறார். இவ்வளவும் கற்றும் அவர் அடக்கத்தையே கடைப்பிடித்திருக்கிறார்; மற்றவர்களை மதித்திருக்கிறார்; கற்றவற்றைக் காற்றில் பறக்கவிட்டு விடாமல், வாழ்க்கையில் பயன்படுத்தி யிருக்கிறார்; தமது கல்வியால் மற்றவர்கள் பயன் அடையும்படியாகவும் செய்திருக்கிறார். இதுதான் அவர் கற்ற கல்வி. இவ்வாறு நாம் முடிவு கட்டுவதற்குத் துணைசெய்யும் ஆதாரங்களை அவருடைய நூலிலிருந்தே எடுத்துக் காட்டுவோம்.

எது கல்வி ?

திருவள்ளுவர் எதைக் கல்வி என்று கூறுகிறார் ?

இதுதான் அடிப்படையாகத் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம்.

திருக்குறள் பொருட்பாலில் "கல்வி" என்ற அதிகாரத்தில் அவர் பின்வருமாறு கூறியிருக்கிறார் ;

"கற்க கசடு(டு) அறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக."

முதலில் கற்க வேண்டும். சந்தேகங்கள் நீங்கும்படியும், தவருகப் புரிந்து கொள்ளாமல் மெய்ப்பொருளை உணர்ந்து கொள்ளக்கூடிய விதத்திலும் கற்க வேண்டும். அப்படிக் கற்கும் போது, கற்கத்தக்க வற்றையே கற்க வேண்டும். கற்கத்தக்கவை எவை? வாழ்க்கையில் கடைப்பிடிக்கக் கூடியவற்றைக் கூறும் நூல்கள். அவற்றைக் கற்க வேண்டும். இது கல்வி.

எனவே, கற்காமல் இருப்பது கூடாது; தெளிவில்லாமல், குழப்பங்களும், சந்தேகங்களும், தவருன கருத்துக்களும் கொள்ளக் கூடியவாறு அரைகுறையாகக் கற்கக்கூடாது; வாழ்க்கையில் கடைப் பிடித்தால் நற்பயன் தராதவற்றையும், தீயபயன் விளைவிக்கக்கூடிய வற்றையும் கற்கக்கூடாது. இப்படியெல்லாம் தவருன முறையில் கற்றது கல்வியல்ல.

கற்றவழி நிற்காவிட்டாலும் அவன் கற்றது கல்வியல்ல; அவனும் கல்விமான் ஆகமாட்டான்.

இந்த ஒரு குறளிலேயே கல்வியின் அடிப்படை அம்சங்கள் அனைத்தையுமே அடக்கிக் கூறியுள்ளார் திருவள்ளுவர்.

அவர் மேலும் சொல்கிருர்: "எண்ணும் எழுத்தும் கண்களுக்குச் சமானம். கற்றவன் முகத்தில் இருப்பவையே கண்கள்; மற்றவன் முகத்தில் இருப்பவை புண்களே. எவ்வளவு தோண்டுகிறேமோ அவ்வளவுக்குத்தான் மணல் கேணியில் நீர் ஊறும்; அது போல எந்த அளவுக்குக் கற்கிறேமோ, அந்த அளவுக்குத்தான் அறிவு ஊறும். எந்த இடத்திற்குப் போனலும் சரி, சாகும் வரையில் கற்றுக்கொண்டே இருக்கவேண்டும். கல்வி ஒன்றுதான் அழியாச் செல்வம்; மற்றவை செல்வங்களல்ல"

கல்வி என்னும் அதிகாரத்தில் அவர் இவ்வளவும் கூறியிருக் கிருர். எனவே,

எண்ணும் எழுத்தும் – கணித நூல்களும் இலக்கிய நூல்களும் – கற்றபின், அவற்றை மறந்துவிட்டால், அவற்றை வாழ்க்கையில் பயன்படுத்தாவிட்டால், அவன் கற்றதும் ஒன்றுதான்; கல்லாததும் ஒன்றுதான். அவனுக்கும் கல்லாத மூடனுக்கும் வித்தியாசமே இல்லை. கற்றவற்றை மறந்தவனையும், உதறித்தள்ளிவிட்டவனையும் கல்வி மான் என்று சொல்லக்கூடாது. அவன் முகத்தில் இருப்பவை புண்களே ஒழியக் கண்கள் அல்ல,

ஒரு சில நூல்களை மட்டும் கற்றவனோ, அந்த நூல்களிலும்கூட, பிறருக்குத் தன்னைக் கல்விமான் என்று காட்டிக் கொள்வதற்கு அல்லது பரீக்ஷையில் தேறுவதற்கு ஒரு சில பகுதிகளை மட்டும் படித்தவனோ அறிவாளி அல்ல. கற்ற அளவுக்குத் தானே அறிவு ஊறியிருக்கும்?

பரீக்ஷை முடிந்ததும், அல்லது தனக்குப் பேரும், புகழும் வந்ததும், 'இனிப்படித்து ஆக வேண்டியது ஒன்றுமில்லை' என்று படிப்பதையே நிறுத்தி விட்டவன் கல்விமான் ஆகமாட்டான். அவனை யும் கல்லாதவர்கள் கூட்டத்திலேதான் சேர்க்கவேண்டும். மேன் மேலும் கற்கவேண்டும் என்ற ஆவலைத் தூண்டாத கல்வி, கல்வி யல்ல. அப்படித் தூண்டாத கல்வியைக் கற்றவனும் கல்விமான் அல்லன்; கல்லாதவனே.

எதற்காகக் கற்பது?

சரி, எதற்காக ஒருவன் கற்கவேண்டும்?

மிருகங்களுக்கும் மக்களுக்கும், இடையே எவ்வளவு வித்தியாசம் இருக்கிறதோ, அவ்வளவு வித்தியாசம் கல்லாதவர்களுக்கும், கற்றவர் களுக்கும் இடையே இருக்கிறது. கற்றவன் மனிதனாக இருக்கிறான். கல்லாதவன் மிருகமாக இருக்கிறான். எதைக் கற்றவன் மனிதன்? அறிவொளி ஊட்டும் சிறந்த நூல்களை ('இலங்கு நூல்') படித்தவனே மனிதன். அறியாமையிலும், குழப்பத்திலும் ஆழ்த்துகின்ற, அணுவளவும் அறிவை அதிகப்படுத்தாத நூல்கள் இலங்கு நூல் களல்ல. அவற்றைப் படித்தவனும் கற்றவனல்ல. அவன் கல்லாதவனே; கல்லாதவர்களோடு சேர்ந்து அவனும் ஒரு மிருகமாகிறான்,

> "விலங்கொடு மக்கள் அனையர்; இலங்குநூல்
> கற்றாரோ(டு) ஏனை யவர்"

இலங்கு நூல்களைக் கல்லாதவன் ஏன் மிருகமாக இருக்கிறான்?

மிருகங்கள் ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் எவ்வாறு வாழ்ந்தனவோ அப்படியேதான் இன்றும் வாழ்கின்றன. அவற்றின் அறிவோ, குணமோ, செயலோ இந்த ஆயிரம் ஆண்டுக் காலத்தில் அணுவளவும் வளரவில்லை; மாறவும் இல்லை. அதேபோல், இலங்கு நூல் கல்லாதவனும் வளரமாட்டான்; சிறந்த மாறுதலை ஏற்க மாட்டான். எனவே அவனும் மிருகமாக இருக்கிறான். ஆயிரம் ஆண்டுகளில் ஏற்பட்ட அறிவு வளர்ச்சியைப் புறக்கணித்து, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் மனித இனம் கண்ட அறிவையே மெய்யறி

வாகக் கொண்டு, அந்த நிலைக்கே நாம் திரும்பவேண்டும் என்று சொல்பவன் மிருகத்தைவிட இழிவானவன் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

கல்லாதவர்களை விலங்குகள் என்று திருவள்ளுவர் பழிப்பானேன் என்று கேட்கலாம்.

"அ, ஆ" படிக்காதவர்களை அவர் அவ்வளவாகப் பழிக்கவில்லை. பணக்காரர்களின் முன் ஏழைகள் நிற்பது போல தாழ்ந்து நின்றும் கல்விமான்களிடம் கற்கவேண்டும். அப்படிக் கல்லாதவன் கடைப் பட்டவன் என்று சொன்னார். முயற்சி செய்தால் கற்பதற்கு வசதி கிட்டாமல் போகாது என்பதால்தான், கல்லாமலே ஒருவன் இருந்தால் அவனைக் கீழானவனாகச் சொன்னார். அப்படித்தான் சொன்னாரே ஒழிய அவனை மிருகம் என்று சொல்லவில்லை. இலங்கு நூல் இல்லாமல் குப்பைகளைப் படித்துவிட்டுத் தருக்கித் திரிகிறவனைத்தான் மிருகம் என்று கூறியிருக்கிறார்.

தக்க ஆசிரியரிடம் சென்று, ஐயம் திரிபறக் கற்க வேண்டிய வற்றைக் கற்று அவற்றின்படி நின்றதுடன், போகிற இடங்களிளெல் லாம் சாகும் வரையிலும் இலங்கு நூல்களைக் கற்றுக் கொண்டே இருந்திருக்கிறார் திருவள்ளுவர். அதனால் தான் மற்றவர்களும் அவ் வாறு செய்யவேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

சிலர் தாங்கள் படிக்காமலே, மற்றவர்களைப் படிக்கும்படி சொல்லி உபதேசம் செய்துகொண்டே இருப்பார்கள் வள்ளுவர் அப்படிப் பட்டவரல்லர். அவர் பல நூல்களையும் கற்றிருக்கிறார் என்பதற்குத் திருக்குறளில் சான்றுகள் இருக்கின்றன.

"என்ப"

'மனைவியின் நற்குண நற்செய்கைகளை ஒருவனுக்கு 'மங்கலம்' (நன்மை) என்று சொல்வார்கள்'.

"மங்கலம் என்ப மனைமாட்சி" (குறள்-60)

வள்ளுவர் இவ்வாறு "என்ப" என்று சொல்லி அதைச் சரி என்றும் ஒப்புக்கொள்வதால், அது மற்ற அறிஞர்கள் ஏற்கனவே சொன்னதும், நடைமுறையில் எல்லா அறிஞர்களும் ஒப்புக்கொள்ளக் கூடியதுமான உண்மை என்று ஆகிறது. ஆகவே "என்ப" என்ற சொல், அறிஞர்கள் தங்கள் வாய் மொழியாலும் நூல்களின் வாயி லாகவும் சொல்லியிருப்பவற்றைக் குறிப்பிடுகிறது. சில இடங்களில்

'என்ப' என்று, அறியாதார் கூற்றையும் குறிப்பிட்டு, அதை அவர் மறுக்கவும் செய்திருக்கிறார். அந்த அறியாதாரில் நூலாசிரியர்களும் அடங்குவர்.

"தம் பொருள் என்ப தம் மக்கள்" (63),
"குழல் இனிது யாழ் இனிது என்ப" (66),
"அன்போடு இயைந்த வழக்கு என்ப" (73),
"அன்புற்றமர்ந்த வழக்கென்ப" (75),
"அறத்திற்கே அன்பு சார்பு என்ப" (76),
"அறிவினுள் எல்லாம் தலை என்ப" (203),
"உயிர் உடம்பின் நீக்கியார் என்ப" (330).

இவ்வாறு "என்ப" என்று இவர் குறிப்பிடும் இடங்கள் இன்னும் எத்தனையோ உண்டு. "என்று கூறுவார்கள்" என்று மட்டும் இவர் நூலோரை குறிப்பிட்டு நிறுத்திக் கொள்ளவில்லை. சில இடங்களில் "நூலோர்" என்று பெயர் சொல்லியும், "நூல்" என்று விவரித்தும் சொல்கிறார்:

"பகுத்துண்டு பல்உயிர் ஓம்புதல், நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" (322)

"அரங்கின்றி வட்டாடி அற்றே நிரம்பிய
நூல்இன்றிக் கோட்டி கொளல்" (401)

"மதிநுட்பம் நூலோ(டு) உடையார்க்(கு)[அதிநுட்பம்
யாவுள முன்நிற்ப வை?" (636)

"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று" (941)

ஒப்பாரும் மிக்காரும் இல்லாத நூலாசிரியரான திருவள்ளுவரே, மற்றவர்களுடைய நூல்களைக் கற்றிருக்கிறார் என்பதும் கற்றதுடன் அவர்களுடைய கருத்துக்களை எடுத்தாண்டிருக்கிறார் என்பதும், ஒருவன் சாகும்வரையில் கற்கவும் நூல்கள் இருக்கின்றன என்று கருதியிருக்கிறார் என்பதும் நமக்கு அவருடைய நூலிலிருந்தே தெரியவருகின்றன. இந்த உண்மைகளை இக்காலத்தில் பலர் உணரவேண்டியது அவசியம்.

மதிநுட்பமும் நூலறிவும்

631-வது குறளில் நூலறிவைச் சொல்லும்போது, "மதிநுட்பம்" என்பதையும் சேர்த்துச் சொல்கிறார். அதனால் நூலறிவோடு சுய அறிவும் வேண்டும் என்று ஆகிறது. வெறும் நூலறிவு மட்டும் போதாது. அதேபோல் நூலறிவு பெறாமல் சுய அறிவோடு திருப்தி அடைந்துவிடவும் கூடாது.

373-வது குறளில் 'நுட்பமான நூல்கள் பல கற்றாலும் உண்மை அறிவே ஓங்கி நிற்கும்' என்கிறார்.

> " நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
> உண்மை அறிவே மிகும் "

நூலறிவு பெற்றாலும் உண்மை அறிவே ஓங்கும்; உண்மை அறிவு குறைவாக இருந்தால், அல்லது வெறும் அறியாமை மட்டுமே இருந்தால், அந்தக் குறைந்த அறிவே அல்லது அறியாமையே ஓங்கும். அதற்கு என்ன காரணம்? இது "ஊழ்" என்ற அதிகாரத்தில் வரும் குறள் ஆனதால் ஊழ்தான் காரணம் என்று ஆகிறது. ஊழ் அப்படி இருக்கும்போது, என்னதான் படித்தாலும் சுய அறிவே ஓங்கும் என்றும் இருக்கும்போது நூல்களைக் கற்று என்ன பயன், ஒரு பயனும் இல்லையே என்று கேட்கலாம்.

ஊழ் குறுக்கே நின்றால் அதைப் புறமுதுகு காட்டி ஓடச் செய்யலாம் என்று அவரே கூறுகிறார்.

> " ஊழையும் உப்பக்கம் காண்பர், உலைவின்றித்
> தாழா(து) உஞற்று பவர் " (620)

சோர்வு கொள்ளாமல் விடாமுயற்சியுடன் செயல் புரிந்தால் ஊழையும் விரட்டி விடலாம் என்கிறபோது, நூலறிவால் ஏன் அனுகூலம் பெறமுடியாது? ஊழை ஒரு சாக்காகக் காட்டி நூல்களைத் தொடாமல் இருக்கும் சோம்பேறித்தனம் கூடவே கூடாது. இதுவே திருவள்ளுவரின் கருத்தாக இருந்திருக்கவேண்டும்.

சுய அறிவு, மதிநுட்பம் என்பன ஊழின் காரணமாக ஒருவனுக்குக் குறைவாக இருந்தாலும், நூலறிவால் சுய அறிவைப் பெருக்கிக் கொள்ள முடியும்.

மதிநுட்பத்தைத் தன்னுடைய சொந்தப் பயிற்சியால் தன்னுள்ளேயே தேடிக்கொள்வதோடு வெளியிலும் தேடிக்கொள்ள வேண்டும். நூல்களை மட்டுமே படித்தவன் – இலங்கு நூல்களையே படித்தவனாக இருந்தாலும் சரி – படிப்பாளியல்ல, அறிவாளியுமல்ல என்று திருவள்ளுவரே கூறுகிறார்.

வெளியே எங்கே அறிவைத் தேடுவது?

கேள்வி ஞானம்

அறிஞர்கள் கூட்டத்திற்குச் சென்று அவர்கள் கூறும் வாய்மொழிகளில் அறிவைத் தேடிக்கொள்ளவேண்டும். கேள்வி ஞானம் என்ற அந்தச் செல்வம், கல்வியறிவு என்ற அரியாச் செல்வத்தைவிட மற்ற எந்தச் செல்வத்தையும் விடச் சிறந்தது.

“ செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்; அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை ” *(411)*

ஒருவன் கல்லாதவனாக இருந்தாலும் கேள்வியால் பயன் அடையலாம்.

“ கற்றிலன் ஆயினும் கேட்க ” *(414)*

கேள்வியால் கிட்டும் இன்பத்தை அனுபவிக்காமல், சாப்பாட்டுச் சுவையை மட்டுமே அனுபவிக்க கூடியவர்கள் செத்தால்தான் என்ன, உயிரோடு இருந்தால்தான் என்ன என்று கேட்கிறார் :

“ செவியின் சுவைஉணரா வாய்உணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என் ? ”

இதிலிருந்து கல்வி என்பது நூலறிவோடும் சுய அறிவோடும் நின்று விடுவதல்ல, கேள்வியிலும் கல்வியறிவு இருக்கிறது என்று அவர் வற்புறுத்துவதைக் காண்கிறோம். ‘மற்றவர்களிடம் நான் கேட்டுத்தெரிந்துகொள்ள என்ன இருக்கிறது ? அப்படிக் கேட்பதே என் புலமைக்கு இழுக்கு’ என்று கருதும் புல்லறிவாளர்களுக்கு — அரைகுறையாகப் படித்த போலிகளுக்கு வள்ளுவர் இங்கே சரியான சூடு கொடுக்கிறார்.

கேள்வியறிவுடன், கண்ணால் பார்த்தும் அறிய வேண்டியது, அதாவது கற்க வேண்டியது உண்டு. உலகத்தோடு இசைந்து நடந்து கொள்வது, பார்த்துக் கற்க வேண்டிய ஒரு கல்வியாகும்.

உலகத்தோடு ஒட்ட ஒழுகாதவன் எவ்வளவுதான் கற்றிருந்தாலும் அவன் அறிவில்லாதவனே.

"உலகத்தோ(டு) ஒட்ட ஒழுகல், பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்" (140)

உலகம் என்பது இங்கே உயர்ந்தோரைக் குறிக்கிறது. வள்ளுவர் "உலகம்" என்று உலகத்து உயிர்களைக்குறிப்பிடும் இடங்களில் எல்லாம் உயர்ந்தோரைத்தான் குறிப்பிடுகிறார். அவர்களைப் பின் பற்றி நடக்கவேண்டும்; அப்படி நடந்து கொள்ளக் கற்காதவன் அறிவிலியே.

இப்போது கல்வியறிவு உடையவர்கள் எல்லோருமே உயர்ந்த வர்களா என்ற ஒரு கேள்வி எழக்கூடும்.

சில அற்பர்கள் எவ்வளவோ சிறந்த நூல்களை கற்றும், கேட்டும், ஆராய்ந்தும் இருப்பார்கள். ஆனால் அவர்கள் உள்ளம் நல்ல உள்ள மாக இருப்பதில்லை என்பது உண்மையே. இதை வள்ளுவரும் பார்த்திருக்கிறார்:

"பலநல்ல கற்றக் கடைத்தும், மனம்நல்லார்
ஆகுதல் மாணார்க்(கு) அரிது" (823)

எனவே, படித்தவர்களிலும் தீய உள்ளம் படைத்தவர்கள் உண்டு. அவர்கள், கற்பவை கற்காதவர்கள்; கற்றிருந்தாலும் அதன்படி நிற்காதவர்கள். அவர்கள் உயர்ந்தவர்கள் ஆகமாட் டார்கள் என்பதோடு மூடர்களிலேயே பெரிய மூடர்களாகவும் இருப்பார்கள்.

"ஓதி உணர்ந்தும், பிறர்க்குரைத்தும், தான்அடங்காப்
பேதையின் பேதையார் இல்" (834)

படித்த முட்டாள்களை உயர்ந்தவர்களாக நினைந்துவிட வேண்டாம் என்று அவர் இங்கே எச்சரிப்பதாகவே கொள்ள வேண்டும்.

பொதுமக்களிடமும் கற்கவேண்டும்

சரி, உலகத்தோடு ஒட்ட ஒழுகவேண்டியதுதான்; உயர்ந் தோரைப் பின்பற்றி நடக்க வேண்டியதுதான். அப்படியானால் கல்வி மான்களையும் மேலோரையும் தவிர்த்து மற்றவர்களிடம் கற்க

வேண்டியது எதுவுமே இல்லையா? "உண்டு" என்றே வள்ளுவர் கூறுகிறார்.

கற்றவனோ கல்லாதவனோ, நண்பனோ பகைவனோ, உயர்ந்தவனோ தாழ்ந்தவனோ - எவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும், அவன் ஒன்றைச் சொன்னால், எடுத்த எடுப்பில் அதை ஒப்புக் கொண்டு விடவோ, புறக்கணித்துவிடவோ செய்யாமல், அவன் சொன்னதில் அடங்கியுள்ள உண்மையைக் கண்டறிய வேண்டியது அவசியம். அப்படி அறிபவன் அறிவாளி; அப்படி அறியாதவன் அறிவிலி - அவன் கற்றும், கேட்டும், பார்த்தும், சிந்தித்தும் எவ்வளவு தெரிந்து கொண்டிருந்தாலும் சரி.

"எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப(து) அறிவு" *(423)*

இதனால் கல்லாதவர்களாகவும் உயர்ந்தவர்களாகவும் இல்லாத சாதாரண மக்களின் வாய்ச் சொல்லிலிருந்தும் மெய்ப்பொருளைக் காண்பது அறிவாகவும், கற்க வேண்டிய கல்வியாகவும் ஆகிறது. திருவள்ளுவர் இவ்வாறு கற்றிருக்கிறார் என்பதற்கு எத்தனையோ சான்றுகள் உண்டு. கற்றவர்களின் கூற்றுக்கள் சிலவற்றை, அவற்றின் மெய்ப்பொருள் கண்டு அவர் மறுத்திருப்பது போல், கல்லாதவர்களின் கூற்றுக்கள் சிலவற்றை, அவற்றின் மெய்ப்பொருள் கண்டு அப்படியே மறு பேச்சுப் பேசாமல் அவர் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

திருக்குறளில் பல பழமொழிகளைக் காண்கிறோம். பழமொழி என்பது அன்றும் சரி, இன்றும் சரி, நூலாசிரியர்களோ, கல்விமான்களோ உற்பத்தி செய்தவையல்ல. அனுபவத்தில் கண்ட உண்மைகளைப் பொதுமக்களே பழமொழிகளின் உருவில் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த ஆற்றல் பொதுமக்களுக்குத்தான் உண்டு; புலவர்களுக்குக் கிடையாது. உலகில் எந்த நாட்டிலுமே ஆதி இலக்கியம் இந்தப் பழமொழிகளே. ஒவ்வொரு மொழிக்கும் வரி வடிவம் ஏற்படுவதற்கு முன்பே தோன்றியவை பழமொழிகள். ஒவ்வொரு பழமொழியிலும் ஓர் அனுபவ உண்மை, ஒரு கதைக் கூறுபோல் அமைந்திருக்கும். கதையோடு பிறந்ததுதான் இலக்கியம். சொல்லப்போனால் கதைதான் இலக்கியம். அது ஒரு கூருகப் பழமொழியில் காணப்படுகிறது; அதை விரித்து முழுமையான கதைகளையும், தனிப்பாடல்களையும், காவியங்களையும் பிற்காலத்தில் இயற்றினார்கள்.

"ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி" என்பது ஒரு பழமொழி, இதில் ஆண்டி என்ற ஒரு பாத்திரம், ஊர் என்ற ஒரு களம், இளைத்திருக்கும் ஒரு நிகழ்ச்சி ஆகிய மூன்றும் சேர்ந்து ஒரு கதைக் கருவையோ, கதைக் கூறினையோ உருவாக்கிக்கொண்டு நிற்கின்றன. இது போன்ற பழமொழிகளே உலகத்தின் ஆதி இலக்கியம். இப்படிப்பட்ட இலக்கிய வகையை இன்றும் பொதுமக்கள் படைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்களைப் பாமரமக்கள் என்று திருவள்ளுவர் அலட்சியமாக ஒதுக்கிவிடவில்லை என்பதற்குச் சான்றாக, இவர்கள் படைத்த பழமொழிகளைத் தம்முடைய நூலில் எடுத்தாண்டிருப்பதைக்காண்கிறோம்.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று" (100)

இனிய சொற்கள் இருக்கும்போது, கடுஞ்சொற்களைப் பேசுவது, மரத்தில் பழம் இருக்கும்போது காயைப் பறித்துத் தின்றது போலாகும் என்பது இந்தக் குறளின் பொருள். இதில் "கனி இருப்பக் காய் கவர்ந்தற்று" என்பது வள்ளுவரால் உண்டு பண்ணப்பட்ட சொற்றொடர் அல்ல; அவர் காலத்தில் வழங்கிய ஒரு பழமொழியே.

அப்பர் தேவாரத்திலும் இந்தப் பழமொழி எடுத்தாளப்பட்டிருக்கிறது. அவர் பழமொழிப்பதிகம் என்றே ஒரு பதிகம் இயற்றி, அதன் பத்துப் பாடல்களில் பத்துப் பழமொழிகளை இணைத்துப் பாடியுள்ளார். அவற்றுள் ஒரு பாடல்.

"மெய்யெலாம் வெண்ணீறு
சண்ணித்த மேனியான்
தாள்தொ ழாதே
உய்யலாம் என்றெண்ணி
உறிதூக்கி உழிதந்(து) என்
உள்ளம் விட்டுக்
கொய்யுலா மலர்ச்சோலைக்
குயில்கூவ, மயில்ஆலும்
ஆரூ ரரைக்
கையினல் தொழா(து) ஒழிந்து
கனிஇருக்கக் காய்கவர்ந்த
கள்வ னேனே!"

பழமொழிப் பதிகத்தில் இடம் பெற்றிருப்பதால், "கனி இருப்பக் காய்கவர்ந்தற்று" என்பது ஒரு பழமொழியே என்பது நிச்சயம்.

வள்ளுவர் உபயோகித்துள்ள மற்றொரு பழமொழியைப் பார்ப்போம் :

"உடம்பா(டு) இலாதவர் வாழ்க்கை, குடங்கருள்
பாம்போ(டு) உடன்உறைந் தற்று" (890)

இந்தக் குறளில் "குடங்கருள் பாம்போடு உடன் உறைந்தற்று" என்பது ஒரு பழமொழி; அல்லது ஒரு பழமொழியின் கருத்தைக் கொண்ட வாசகம். திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழியிலும் இந்தப் பழமொழி எடுத்தாளப்பட்டிருக்கிறது. இது போன்று இன்னும் ஆறு பழமொழிகளை—"இருதலைக்கொள்ளி எறும்பு", "இடையன் எறிந்த மரம்" என்பன போன்றவற்றை — எடுத்தாண்டுள்ள பதிகத்திலேயே, பாம்புடன் ஒரு கூரையின் கீழ் வாழ்வது பற்றிய இந்தப் பழமொழியையும் திருமங்கையாழ்வார் ஆண்டுள்ளார்

" தூங்கார் பிறவிக்க-
ளின்னம் புகப்பெய்து
வாங்காயென்று சிந்தித்து
நானதற் கஞ்சி
'பாம்போ(டு) ஒருகூ-
ரையிலே பயின்'றுல்போல்
தாங்காதுள் ளம்தள்ளும்
என்தா மரைக்கண்ணு."

இந்தப் பழமொழி,"பழமொழி நானூறு"என்ற பழைய நூலிலும் காணப்படுகிறது. திருக்குறளைப் போலவே, அதுவும் பதினெண் கீழ்க்கணக்கைச் சேர்ந்த ஒரு நூலாகும். அதில் நானூறு பழமொழிகளை இணைத்த நானூறு வெண்பாக்கள் அடங்கியிருக்கின்றன. அந் நூலில் இடம் பெற்றிருப்பதால், "...ஓர் அறையுள் பாம்போ(டு) உடன் உறையும் ஆறு" (253) என்பது சந்தேகத்திற்கு இடமின்றி ஒரு பழமொழியே என்பது உறுதியாகிறது. பொதுமக்கள் வழங்கிய வேறு சில பழமொழிகளையும் திருக்குறளில் காண்கிறோம்; அவை "பழமொழி நானூறு" என்ற நூலிலும் உள்ளன.

1. "களவினுல் ஆகிய ஆக்கம், அளவிறந்து
ஆவதே போலக் கெடும்" (குறள்-283)

''அல்லது செய்வார் அரும்பொருள் ஆக்கத்தை
நல்லது செய்வார் நயப்பவோ ? – ஒல்லொலிநீர்
பாய்வதே போலும் துறைவ ! கேள் : தீயன
ஆவதே போன்று கெடும் '' (பழமொழி நானூறு – 213)

2. ''பிறர்க்(கு)இன்னா முற்பகல் செய்யின்
தமக்(கு)இன்னா
பிற்பகல் தாமே வரும்'' (கு. 319)

''முற்பகல் கண்டான் பிறன்கேடு, தன்கேடு
பிற்பகல் கண்டு விடும்'' (பழ. 13)

(இந்தப் பழமொழி இப்போது ''முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'' என்று வழங்கப்படுகிறது.)

3. ''முதல்இல்லார்க்(கு) ஊதியம் இல்லை; மதலையாம்
சார்பிலார்க்(கு) இல்லை நிலை'' (கு. 449)

''முதல் இலார்க்(கு) ஊதியம் இல்'' (பழ. 312)

4. ''அச்சம் உடையார்க்(கு) அரண்இல்லை;
/ ஆங்கில்லை
பொச்சாப்(பு) உடையார்க்கு நன்கு'' (கு. 534)

'' அஞ்சுவார்க்(கு) இல்லை அரண் '' (பழ. 285)

5. ''வெள்ளத்தனைய மலர் நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத் தனைய(து) உயர்வு.'' (கு. 595)

'' நீர்வரைய வாம்நீர் மலர் '' (பழ. 379)

6. ''வினையால் வினை ஆக்கிக் கோடல், நனைகவுள்
யானையால் யானையாத்(து) அற்று'' (கு.678)

''யானையால் யானையாத்(து) அற்று'' (பழ 29)

7. ''அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்'' (கு.706)

''ஒளிப்பினும், படர்ந்ததே கூறும் முகம்'' (பழ. 144)

('' அகத்தின் அழகு முகத்தில் தெரியும் '' என்று இப்போது வழங்குகிறது)

8. "நோக்கினாள்; நோக்கி இறைஞ்சினாள்; அஃ(து) [அவள்
யாப்பினுள் அட்டிய நீர்" (கு.1093)

"யாப்பினுள் அட்டிய நீர்" (பழ 296)

9. "கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ, நெஞ்சே
பெட்டாங்(கு) அவர்பின் செலல்" (கு.1293)

"கெட்டார்க்கு நட்டாரோ இல்" (பழ 134)

(இந்தக் குறளுக்கு உரை எழுதும்போது, பரிமேலழகருக்கு முற்பட்ட காலத்தினரான காலிங்கர், "......'உலகில் கெட்டார்க்கு நட்டார் இல்' என்று சொல்லும் முதுவழக்கோதான்......" என்று குறிப்பிட்டுள்ளார்)

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் "முதுமொழிக் காஞ்சி" என்பதும் ஒன்று. அதை இயற்றியவர் கூடலூர் கிழார் என்ற புலவர். நூறு வரிகள் கொண்ட ஒரு நூல் அது. ஒவ்வொரு வரியும் நூற்பா எனப்படும் செய்யுள் வகையைச் சேர்ந்தது. புத்தகத்தின் பெயரைப் பார்த்தாலே அது முதுமொழிகளைக் கோத்துச் செய்யப்பட்ட நூல் என்பது தெரியவரும். முதுமொழி என்றாலும் பழமொழி என்றாலும் ஒன்றே. முதுமொழியின் இலக்கணத்தைத் தொல்காப்பியம் பின்வருமாறு விவரிக்கிறது.

"நுண்மையும், சுருக்கமும். ஒளிமை உடைமையும்,
மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றி.
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப."

இது முதுமொழியின் இலக்கணம். "முதுகாஞ்சி" என்ற ஒன்று உண்டு. அறிவில் சிறந்த முதியோர், அறிவு வளரப்பெறாத இளைஞர்க்குக் கூறுவது முதுகாஞ்சி எனப்படும். எனவே, இந்த முதுமொழிக்காஞ்சி என்பது இளைஞர்க்கு முதியோர் சொன்ன மொழிகளைக்கொண்டது; அவை பொதுமக்கள் வழங்கிய பழமொழி களின் கருத்துக்களையும் சொற்களையும் கொண்டு, நூலில் கையாளும் பாவினத்துக்கு ஏற்ப உருவாக்கப்பட்டவை. இந்த முதுமொழிக் காஞ்சியில் காணும் பழமொழி வடிவங்களால், திருக்குறளில் எடுத் தாளப்பெற்றுள்ள பல பழமொழிகளை நாம் இனம் காணமுடிகிறது, உதாரணமாக ஒரு சில:

1. "ஓதலின் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை"

(முதுமொழிக்காஞ்சி 1 : 1)

(வேதம் ஓதுவதைவிட ஒழுக்கமாக இருப்பது சிறந்தது என்று பொருள். சிறந்தன்று—சிறந்தது)

"மறப்பினும் ஓத்துக் கொளலாகும்; பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்" (134)

2. "நலன் உடைமையில் நாணுச் சிறந்தன்று" (மு. 1 : 6)

"நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும்" (கு. 960)

3. "பழியோர் செல்வம் வறுமையில் துவ்வாது" (மு. 4 : 1)

"பழிமலைந்(து) எய்திய ஆக்கத்தில் சான்றோர்
கழிநல் குரவே தலை" (கு. 657)

4. "மக்கட் பேற்றிற் பெறும்பே றில்லை" (மு. 6 : 1)

"பெறுமவற்றுள் யாம்அறிவ தில்லை, அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற" (கு. 61)

5. "நசையில் பெரியதோர் நல்குரவில்லை" (மு. 6 : 7)

"நல்குர(வு) என்னும் நசை" (கு. 143)

6. "இசையில் பெரியதோர் எச்சம் இல்லை" (மு. 6 : 8)

"இசை என்னும் எச்சம்" (கு. 238)

7. "இன்பம் வெய்யோர்க்குத் துன்பம் எளிது" (மு. 8 : 6)
"இன்பம் வேண்டுவோன் துன்பம் தண்டான்" (மு 10 : 7)

"இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்(து)ஊன்றும் தூண்" (கு.615)

பழமொழிகளைத் திருவள்ளுவர் எடுத்தாண்டிருக்கும் உண்மையை இதுவரையிலும் பார்த்தோம்.

இனி, கல்வியின் மற்றொரு அம்சமாக அவர் வற்புறுத்தும் ஒரு விஷயத்தைக் கவனிப்போம். ஒருவன் தான் கற்றதை, பிற கல்விமான்கள் ஏற்றுக் கொள்ளும்படியாகச் சபையேறிச் சொல்லத் தெரிந்தவனாக இருக்க வேண்டும். அவன்தான் படிப்பாளிகளிலேயே படிப்பாளி என்கிறார்.

" கற்றாருள் கற்றார் எனப்படுவார், கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்" (கு. 722)

அவை அஞ்சுவோன் அறிஞனல்லன்

கற்றோர் சபை ஏற்றுக் கொள்ளத்தக்கவாறு, சுவையோடும் அழுத்தத்தோடும் சொல்லத் தெரியாமல் சபைக்கு அஞ்சுகிறவன், கற்றிருந்தாலும் கல்லாதவனுக்கு ஒப்பானவனே.

" உளர்எனினும் இல்லாரொ(டு) ஒப்பர், [களன்அஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்" (கு. 730)

மற்றொரு குறளில், சபைக்கு அஞ்சி மேடை ஏறாமல் பின் வாங்கு பவன், கல்லாதவனைவிடக் கீழானவன் என்று அறிஞர்கள் சொல் வார்கள் என்கிறார்.

" கல்லா தவரின் கடைஎன்ப, கற்றறிந்து
நல்லார் அவைஅஞ்சு வார்" (729)

தான் கற்ற கல்வியைச் சபையேறிச் சொல்லவும், அதாவது பிறர்க்குப் பயன்படுமாறு செய்யவும் கற்றுக்கொள்ள வேண்டும். குடத்துள் விளக்காக இருப்பவன் கல்லாதவனைவிடக் கீழானவன் ஆகிவிடுகிறான்.

சுய அறிவு

வள்ளுவர் நூலறிவு பெற்றதுடன் உலக நடைமுறைகளையும் நன்கு கவனித்திருக்கிறார். அதனால், இன்னது செய்தால் இன்னது நடக்கும் என்று, அனுபவபூர்வமாகவோ உய்த்துணர்ந்தோ பல உண்மைகளைக் கூறியுள்ளார். இன்னது செய்து இன்னது நடந்திருக்கிறது என்றும் சில குறட்பாக்களில் கூறியிருக்கிறார். இப்படி நடப்பதற்கு இதுதான் காரணமாக இருக்கவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார். ஒருவன் பல்லக்கில் ஏறி உட்கார்ந் திருக்கிறான். மற்றொருவன் அந்தப் பல்லக்கைச் சுமக்கிறான். ஏன் இந்த ஏற்றத் தாழ்வு? அறம் செய்தவனுக்கும் அறம் செய்யாத வனுக்கும் கிட்டும் வெவ்வேறு வாழ்க்கை நிலைகள் இவை என்று அவர் சொல்லியிருக்கிறார்:

" அறத்தா(று) இதுஎன வேண்டா, சிவிகை
பொறுத்தானோ(டு) ஊர்ந்தான் இடை" (37)

அவர் கல்வியறிவோடு சுய அறிவையும் பயன்படுத்தியதற்கு ஒரு சான்று இது.

வள்ளுவர் இலக்கிய இலக்கணங்களை மட்டுமன்றி, மருத்துவம், அரசியல் கலை, காம சாஸ்திரம் போன்ற பல்வேறு துறை நூல்களையும் கற்றிருக்கிறார். ஓர் இலக்கியப் புலவனுக்குப் பிற கலைகளிலும் ஓரளவுக்குப் பரிச்சயம் இருக்க வேண்டும் என்பதை அவர் தாமே கடைப்பிடித்துக் காட்டியிருக்கிறார். அவர் காலத்தில் விவசாய நூல் (கலப்பை நூல்), வழக்கு நூல் (சத்தம்), சொல்முடிபு நூல் (மெய்ஞ்ஞானம்), தருக்க நூல், சமய நூல், விட்டு நூல், கணித நூல், யாழ் நூல் ஆகிய பல்வேறு வகை நூல்களோடு, சந்தனம் அரைப்பது பற்றிக் கூறும் நூல்களும், இலை நறுக்கி எண்ணுவது பற்றிக்கூறும் நூல்களும் தமிழ்நாட்டில் இருந்தன என்பதை, பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்றான "சிறுபஞ்சமூலம்" என்பதில் காணப் படும் 60, 93, 94 எண்ணுள்ள வெண்பாக்களின் மூலம் அறிகிறோம்.

திருவள்ளுவர் கூத்துக்களையும் (நாடகங்களையும்), பாவைக் கூத்துக்களையும் பார்த்திருக்கிறார். "கூத்தாட்டு அவைக் குழாத்து" (332) என்றும், "மரப்பாவை நாணால் உயிர் மருட்டியற்று" (1020) என்றும் அவர் கூறியுள்ளார்.

பிறமொழிச் சொற்கள்

கல்விமான்கள் தங்கள் காலத்தில் பொதுமக்கள் வழங்கிவரும் சொற்களை – அவை பிறமொழிச் சொற்களாக இருந்தாலும் – மொழி வளர்ச்சி கருதி, மொழிக்குப் புதுவேகமும் புத்துயிரும் கொடுப்பதற் காகப் பயன்படுத்த வேண்டும் என்பதே வள்ளுவர் கருத்து. மக்கள் வழங்கும் சில வேற்று மொழிச் சொற்களைக் களைந்து விட்டு, தூய தமிழ்ச் சொற்கள் என்று வழக்கில் இல்லாத – அதாவது உயிர் இயக்கம் பெறாது கிடக்கின்ற – சொற்களை எடுத்தாண்டால் மொழி நடையில் உயிரே இராது என்பது தெளிவு. இக்காலத்தில் சிலர் இந்த உண்மையை உணராமல், வழக்கில் உள்ள சில சொற்களை – நீண்ட நெடுங்காலமாக மக்களால் வழங்கப்பட்டு உயிரும், வலுவும், சுவையும் ஏறியிருக்கும் சொற்களைக் களைவது எவ்வளவு பெரிய அறியாமை என்பதை வள்ளுவரின் குறளைப் பார்த்தேனும் தெரிந்து கொள்ளவேண்டும். முதற் குறளிலேயே அவர் வடமொழிச் சொற்களை எடுத்தாண்டுள்ளார்:

"அகரம் முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு"

இந்தக் குறளில் உள்ள எட்டு வார்த்தைகளில் நான்கு அதாவது பாதிக்குப் பாதி வடமொழி வார்த்தைகள். ‘ அகரம் ’ என்பதே வடசொல் என்று ஒப்புக்கொள்ளச் சிலர் தயங்கலாம்; அல்லது மறுக்கலாம். “ லோக ” என்பதன் தமிழ்வடிவமாகிய “ உலகு ” என்பதைத் தூய தமிழ்ச்சொல்லே என்று சிலர் கூறலாம். இந்த இரண்டு சொற்களையும் தூய தமிழ்ச்சொற்கள் என்று வைத்துக் கொண்டாலும், “ ஆதி ” என்பதும் “ பகவன் ” என்பதும் நிச்சயமாக வடசொற்களே. அனைவரும் இதை ஒப்புக்கொள்கிறார்கள். அப்படியானால் எட்டில் இரண்டு சொற்கள் வடசொற்கள். முதற் குறளிலேயே அந்நிய மொழிச் சொற்களைக் கால்வாசி அளவில் வள்ளுவர் உபயோகித்திருப்பதன் காரணம் அவருக்குத் தனித் தமிழ்ச் சொற்கள் தெரியாது என்பதல்ல. “ ஆதி பகவன் ” என்றால் முழுமுதல் கடவுள். ஆனால் பொதுமக்களின் பேச்சுவழக்கில் முழு முதல் கடவுள் என்ற வார்த்தைகள் இடம்பெறுவதே இல்லை. “ஆதி” என்றும், “பகவான்” என்றும்தான் அடிக்கடி உபயோகிக்கிறார்கள். மக்கள் வழங்கும் சொற்களே உயிருள்ள சொற்கள் எந்தமொழிச் சொல்லாக இருந்தாலும் உயிருள்ள சொல்லையே உபயோகிக்கவேண்டும் என்பது அவருடைய கருத்தாக இருந்திருக்கிறது. “ வழக்கொழிந்து செத்துப்போன வார்த்தைகள், செத்துப் போன கருத்துக்களைத் தெரிவிக்கத்தான் லாயக்கு ” என்று ஓர் அமெரிக்கப் பேராசிரியர் கூறியது இங்கு நினைவில் கொள்ளத் தக்கது. திருக்குறளில் பூசனை (18), மந்திரி (639) ஆசாரம் (1075) பாக்கியம் (1075) என்பன போன்ற பல வடசொற்களைக் காண்கிறோம்.

முடிவுரை

இதுகாறும் கூறியவற்றால் திருவள்ளுவர் கற்ற கல்வி எப்படிப் பட்டது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

ஒருவன் சாகும் வரையில் இலங்கு நூல்களைக் கற்க வேண்டும்; அவற்றைக் கசடறக் கற்கவேண்டும்; கற்ற வழியில் நிற்கவேண்டும்; நூலறிவோடு கேள்வியறிவும் பெறவேண்டும்; உயர்ந்தவர்களின் வழியில் ஒழுக வேண்டும்; அறிஞர்களிடத்தில் மட்டுமன்றி, சாதாரணப் பொதுமக்களிடமும் கற்க வேண்டும்; சுய அறிவைக் கொண்டு சிந்திக்க வேண்டும்; நூலோரின் கருத்துக்களைப் போற்ற வேண்டும்; தான் கற்றதை அறிஞர்கள் ஏற்குமாறு சொல்லத் தெரிய வேண்டும்; பல்வேறு கலைகளில் பரிச்சயம் வேண்டும்; மக்கள் வழங்கும் பிறமொழிச் சொற்களையும் பயன்படுத்த வேண்டும்.

— இவை கல்வியின் இலக்கணங்கள்; கற்றவனிடம் காண வேண்டிய இயல்புகள். இவற்றுள் ஒன்றைச் செய்யத் தவறினாலும்

அவன் கற்றவன் ஆகமாட்டான்; செய்ய மறுப்பவனே, வள்ளுவரின் கருத்துக்கு விரோதியாகவும், அதன் காரணமாக மூடனாகவும் இருப்பான். தெய்வப்புலவர் திருவள்ளுவரின் திருக்குறளால் நாம் அறியும் உண்மை இது.

திருவள்ளுவர் கற்ற கல்வி முறையையும், திருவள்ளுவர் வகுத்துக் கூறும் கல்வி முறையையும் அனுசரித்து நம் நாட்டுக் கல்வி முறையை வகுக்க வேண்டும் என்ற எண்ணம், அவருக்கு 2000 ஆண்டு விழாக் கொண்டாடும் இந்தச் சமயத்திலுங்கூட நம்மில் யாருக்கும் தோன்றியிருப்பதாகத் தெரியவில்லை. அறிவைப் பொருட்படுத்தாமல், பரிக்ஷையையும், பட்டத்தையும், உத்தியோகத்தையுமே பொருட்படுத்தக் கூடிய ஒரு கல்வி முறையே இன்று அமலில் இருந்து வருகிறது. கூட்டத்தில் கூடிநின்று தமிழ் முழக்கம் செய்தாலும் அந்தரங்கத்தில் இருக்கும் ஆங்கில மோகத்தையும், ஆங்கில நாகரிக ஈடுபாட்டையும் இவ்வளவு அவ்வளவு என்று சொல்வதற்கில்லை. தமிழில் எம். ஏ., பட்டம் பெற்றிருந்தும் ஆங்கில எம். ஏ. என்று மற்றவர்கள் நினைத்துக்கொள்ளட்டும் என்று தங்கள் பெயருடன் பட்டத்தையும் குறிக்கும் "தமிழ்த் தொண்டர்கள்" பலர். நம்மை நிரந்தரமாக ஆங்கில சாம்ராஜ்யத்தின் அடிமைகளாக வைத்திருக்கவேண்டும் என்ற தீயநோக்கத்தை அமல்படுத்துவதற்கென்றே மெக்காலே வகுத்த கல்வி முறையை இன்னும் நாம் அமல் செய்து வருகிறோம். இரண்டொரு சிறு மாறுதல்களைச் செய்தபோதிலும், அடிப்படை மாறவில்லை. சுதந்திரம் பெற்ற பிறகும் கூட, நம்முடைய கல்வித்துறை நிபுணர்களுக்கு வள்ளுவர் வகுத்த கல்வி முறையில் நாட்டம் செல்லாமல், மெக்காலேயின் கல்வி முறையிலேயே மோகம் இருந்து வருகிறது. அவர்கள் கற்ற கல்வி முறை அவர்களை இந்தப் பரிதாபகரமான நிலையில் வைத்திருக்கிறது; மற்றவர்களையும் அந்தப் பரிதாபகரமான நிலைக்கு உள்ளாக்கும்படி செய்கிறது. ஆண்டுதோறும், கோடிக்கணக்கான பணத்தைச் செலவிட்டு மெக்காலேயின் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் நாம், வள்ளுவருக்கு 3000 ஆண்டு விழா கொண்டாடும் போதாவது அவரது கல்வி முறையை அமலாக்கப் போகிறோமா என்பது சந்தேகமே. இன்றைய நிலை அப்படி இருக்கிறது.

வள்ளுவர் அரசு

டாக்டர் சுப. அண்ணாமலை

ஏசுநாதர் தோன்றியருளுவதற்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்பே மேலைநாடுகளில் சிறந்து விளங்கிய கிரேக்க, உரோமப் பேரரசுகளின் காலத்தில் அவற்றை யொத்து ஒளிபெற்று விளங்கியது தமிழக அரசு. கீழை நாடுகளில் மிசிரம் எனப்பட்ட எகிப்தியமும், சீனமும், ஆரியமும் அக்காலத்தில் சிறந்து நின்ற பிற அரசுகளாகும். இந்நாடு எல்லாம் முடியாட்சியே செல்வாக்குப் பெற்று வளர, உரோம் நாட்டில் மட்டும் சிற் சில காலங்களில் நகர அரசுகள் (City States) எனப்படும் குடியரசுகளின் தொகுதிக்கு ஆட்சிக் குழுவினரும் அவர்களின் தலைவனும் தேர்ந்தெடுக்கப்பட்டு இக்காலக் குடியரசை ஒத்த ஓர் அரசு நடைபெற்று வந்தது.

தமிழகச் சேர மன்னர் கிரேக்கத்தை அடுத்த ஒரு தீவிற்குக் கலத்திற் சென்று அதனை வென்று ஆணை செலுத்தினர் என்றும், அதற்குச் சேரர் தீவு எனப் பெயரிட்டனர் என்றும் அதுவே கிரீட் தீவு என மருவியது என்றும் அருட்டிரு. விபுலானந்த அடிகள் எழுதியுள்ளார்கள். மெசபடேமியாவின் ஒருபால் உள்ள ஒரு பழம்பதி சோழர் குடியேறப் பெற்றமையால் சோழதேயம் என்று அழைக்கப்பெற்றுக் காலப்போக்கில் சால்டியா என மருவிற்று என்றும் அவர்கள் குறித்துள்ளார்கள். இதனல் பழந்தமிழர் வெளி நாட்டினருடன் வணிக உறவு கொண்டிருந்ததோடு, அங்கு அரசும் அமைத்து வாழ்ந்தனர் என்று தெரிகிறது.

தமிழகத்துப் பழைய மன்னர் செங்கோன் முறையிலும் குடிமக்கள் பால் அன்பிலும் சிறந்தவர்கள். பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், யான் பகைவரை வெல்லேனையின் "ஒன்னிழல் வாழ்நர் செல் நிழல் காணது, கொடியன் எம் இறை எனக் கண்ணீர் பரப்பிக் குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக" என வஞ்சினம் கூறினன். இச்சொற்கள் அவனது செங்கோல் முறையையும் அன்பையும் உணர்த்துகின்றன. அக்கால அரசர் குடிமக்களால் பழிக்கப்படாமையே தமது நாட்டமாகக்கொண்டு அரசோச்சினர்.

திருவள்ளுவர் கடைச்சங்க காலத்திற்கு முந்தியவர். அவரை ஈன்றெடுத்த சமுதாயம் அரசியல் அறிவிலும் சமுதாய நெறியிலும்

அறவுணர்விலும் சிறந்து நின்றது என்பதற்கு அவரே சான்று; அவரே கூறுவதுபோல 'நிலத்தில் கிடந்தமை கால் காட்டும்' அன்றோ?

கிரேக்க தேயத்திலும் பழங்காலத்தில் சிறந்த அரசியல் ஞானிகள் வாழ்ந்தனர். பிளேட்டோவையும் சாக்ரடீஸையும் அவருள் சிறந்தவராகக் குறிப்பிடலாம். பிளேட்டோவின் அரசியல் நூலான குடியரசு (The Repuplic) உலகமெல்லாம் அறிந்தது. சாக்ரடீஸின் உரையாடல்கள் கற்றோர் உள்ளங்கவர்பவை. இளைஞர் உள்ளத்திற்கு விருந்தாய் அமைபவை. திருவள்ளுவர் தந்த திருக்குறள் அறமுறை தவறாத அரசியலை வகுப்பதிலும் அதனை உரைப்பதிலும் இவற்றை விட மேம்பட்டு விளங்குகிறது. முதலாவதாக, மனிதனை நன்னெறிப் படுத்தும் அறம், மனித சமுதாயத்தின் முதிர்ச்சியில் தோன்றும் நல்லரசு, ஆடவரும் பெண்டிரும் தாழ்வற்ற அன்பில் ஒன்றி நிற்கும் இன்பம் – இந்த மூன்றையும் சேர்த்துப்பிணைத்து, இழைத்திருந்து ஒண்ணரி ஒரு நூல் செய்தவர் திருவள்ளுவரன்றி வேறு ஒருவரைக் காணமுடியாது. இம்மூன்றும் தனித் தனியே பெயரும் முறையும் பெறினும் வள்ளுவர் நூலுள் இவை தொடர்பு இல்லாத தனித்தனிப் பகுதிகள் அல்ல. நூல் முழுமையும் இழைந்தோடும் அறம் அதன் ஒவ்வொரு அதிகாரத்தையும், – ஏன் பல குறள்களையும் இணைத்து நிற்கிறது. ஆதலின் திருக்குறளின் மூன்றுபால்களைத் தனியே கற்று அமைவது பயன் அளிக்காது பால்களை இணைத்து வைத்து ஒப்புநோக்கிப் பயில வேண்டும். நூலின் முழுமையை உணர வேண்டும்.

ஏனைய நாட்டுப் 'பொருள் அறிஞர்' பொருளை நினைத்தபோது அறத்தை அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. அரசின் நிலை பேறு, அரசனின் வெற்றி, பகைவர் இல்லாப் பெரு வாழ்வு, அதிகாரம்- இவையே அவர் கண் முன் நின்றன. இன்பம் பற்றி நூல் இயற்றியவரும் இவ்வாறே இன்பமே முடிந்த பொருளாகக் கொண்டனர். அதனால் இன்பப் பேற்றிற்குப் பரகீயமும் கொள்ளத் தகுவதே என்று எழுதினர். ஆனால் தெய்வப் புலமைத் திருவள்ளுவர் உலகில் பிறந்த சான்றோருள் எல்லாம் தலை மணியான சான்றோர்: அவர் எது பற்றி நெறி வகுக்கினும் அறமே முடி பொருளாகக் (Ultimatum) கொண்டு வகுக்கும் முறையைக் காண நம் நெஞ்சு குளிர்கிறது. அறமே தலையாயது. அறமே பெரு நெறி. அறமே நிலை பேறுடையது. அதன் பொருட்டே தனி மனிதன் தன் தனிமையகற்றிச் சமுதாயம் அமைத்து வாழ்கிறான். சமுதாய நல்வாழ்விற்கே அரசு. மனிதன் மாயினும், சமுதாயம் சரியினும், அரசு அழியினும் அறம் நிலைக்கும்; நிலைக்க வேண்டும். இதுவே மனித

வாழ்வின் குறிக்கோள்கட்கெல்லாம் உயிர் நாடி. இதுவே வள்ளுவர் தாம் வகுத்த வாழ் வியலுக்குக் கொண்ட அடிப்படை. உலகம் சுழல் வதும் இந்த அடிப்படையிலேயே. இந்த அடிப்படைப் பெரு நோக்கில் எழுந்த நூலாதலின் திருக்குறள் தலைசிறந்த அரசியலைத் தன்பால் கொண்டு மிளிர்கிறது.

மேலும், திருக்குறள் தான் கூறப்புகுந்த பொருளை நோக்க மிகப் பெரியதாகவன்றோ அமையவேண்டும்? இல்லை. அதன் பெயரே குறள். ஒன்றே முக்கால் அடிக் குறட்பாக்கள் 1330 மட்டுமே அதில் இருக்கின்றன. ஓதற்கு எளியது திருக்குறள், ஆனால் உணர்தற்கரியது திருக்குறளில் அமைந்தது போன்ற மொழி இனிமையும் நடையெளிமையும் பொருள் ஆழமும் வேறு எந்த மொழியின் நூலிலும் அமையக்காணேம் என்று மேனாட்டறிஞர்கள். ஒருமிக்கப் புகழ்கின்றனர்.

இனித் திருக்குறள் விரித்துரைக்கும் அரசினுள் நுழைவோம்.

கீழைநாட்டு அரசியலில் அரசுத் தலைவன் (Head of the State) அரசனே யாதலின் திருவள்ளுவர் முதற்கண் அரசியலும், அரசியற் கடமைகளில் அரசனின் சூழ்ச்சித் துணைவனாகும் அமைச்சனின் இலக்கணம் கூறும் அமைச்சியலும், பின் நாடு, அரண் முதலிய பல்வேறு அங்கங்களின் இயல்களும், இறுதியாகக் குடிமக்களின் இயலும் நடையும் கூறும் குடியியலும் அமைக்கின்றார்.

அரசியல் பற்றிக் கூறும் இக்கால நூல்கள் மூன்று வகையாக அமைகின்றன. அவை அரசுக் கொள்கை (Political theory) பற்றி ஆராய்வன, அரசின் அமைப்பும் நடைமுறையும் பற்றிக் (Polity) கூறுவன, அரசியல் தத்துவ (Political Philosophy) நூல்கள் என்பன. இவை இன்று தனித்தனியே விரிவான முறையில் ஆராய்ச்சி அறிவு ததும்ப அமைந்து வெளிவருகின்றன.

வள்ளுவத்திலும் இம்மூன்றின் சாரமும் திகழக் காணலாம். அரசியல் வரலாற்றறிவு பரவாத பழங்காலத்தில் வள்ளுவர் இம்மூன்றையும் வகுத்துரைத்திருப்பது மிக்க வியப்பைத் தருவது மட்டும் அன்று; தமிழ்ச் சமுதாயத்தின் முதிர்ந்த அரசியலறிவையும் சித்திரித்துக் காட்டுகிறது.

வள்ளுவம் பல்வேறு அரசுக் கொள்கைகள் பற்றி ஆராயும் நூலன்று. கீழை நாட்டு அரசு முறையின் வழி நின்று அரசியலை விரித்துரைப்பதேயாகும். அரசுத் தலைவனாகிய அரசன் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவன் அல்லன். அரசோச்சும் செல்வத்தைப்

பிறப்புரிமையாற் பெற்றவன். இது வள்ளுவத்தில் வெளிப்படையாகக் கூறப்படாவிடினும் சங்க கால அரசியல் வரலாறு இதனைத் தெளிவுபடுத்துகிறது. முறைவழுவாத மன்னனை மக்கள் தெய்வமாகவே கருதினர். இதனை வள்ளுவர்,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

என்று கூறுகிறார். அரசியலில் அவர் அமைக்கும் முதல் அதிகாரம் 'இறை மாட்சி' என்பதே. அதாவது அரசனின் பண்பு நலன்கள். மேற்சொன்ன குறளுக்குப் 'பிறப்பால் மகனே யாயினும் செயலால் மக்கட்குக் கடவுள் என்று வேறு வைக்கப்படும். என்று பரிமேலழகரும் விளக்கம் தருகிறார்.

அரசன் பரம்பரை யுரிமையால் அரசைப் பெற்றவனாயினும் அதனைத் தன் சொந்த இன்பம் கருதி ஆளலாகாது; குடிமக்களை அன்பாலும் இன் சொல்லாலும் அணைத்து, கொடையும், இரக்கமும், பணிவும், எளிமையும் கொண்டு அவர்களின் சேவகனாக எண்ணிக் கொள்வான். இது எத்துணை நல்ல நிலை, எண்ணிப் பாருங்கள்! 'மக்கள் உண்ணும் உணவும் பருகும் நீரும் அவர்களை வாழ்விக்கும் மருந்தல்ல; மன்னனே அவர்களின் உயிர்' என்னும் கருத்து வள்ளுவர் காலத்தில் நிலவியமையைப் பின் வந்த மோசிகீரனார் பாடலால் அறிகிறோம்.

அரசனின் மாட்சி கூறும் முதல் அதிகாரத்தில் பின் வரும் அதிகாரங்களின் கரு அமைந்துள்ளது. எதையும் தொகுத்துச் சுட்டியே பின் வகையும் விரியும் அமைப்பது பழந்தமிழ் நூலோர் வழக்கு. அக் கருவில் திகழ்வன யாவை? முற்கூறிய அரசுக் கொள்கை, அரசின் அமைப்பு, அரசியல் தத்துவம் என்பவையே. அதனைச் சற்றுக் காட்டுவேன்.

"படை குடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு"

எனும் முதற் குறள் அரசின் அங்க அமைப்பைப் பெயரளவில் சுட்டுவது. விரிவு பின் அதிகாரங்களிற் காணலாம். ஒரு நாட்டின் ஆட்சி நாட்டாட்சி, படையாட்சி (Civil administration and Military administration) என இரு பகுதிப்படும். நாட்டாட்சியும் பொருளாட்சி (Revenue administration), முறை வழங்கல் (Judicial administration) என இரு கூறுகளாக அமைவது. இவற்றுள் பொருளாட்சியைச் சுருங்கச் சுட்டுவன

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு"

"இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு"

என்னும் குறள்கள். முறை வழங்கலைப் பற்றிக்

"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்"

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

என்னும் குறள்கள் குறிப்பிடுகின்றன.

அரசன் வலிய படையின் துணையால் தீயவை நீக்கி நாட்டைக் காக்க வேண்டும் என்னும் படையாட்சிக் கருத்தை,

"அறன்இழுக்காது அல்லவை நீக்கிமறன் இழுக்கா
மானம் உடையது அரசு"

என்னும் குறள் தாங்கி நிற்கிறது. இக்குறளிலேயே அறமுறை திறம்பாமை என்னும் அரசியல் தத்துவமும் அடங்கியிருக்கிறது.

அரசனின் தகுதிகளாக அமைய வேண்டிய கல்வி, துணிவு, தூங்காமை முதலியவற்றை இரண்டு குறள்கள் இயம்புகின்றன. பெரியாரின் துணைக் கோடல் எனப் பின்னால் வரும் அதிகாரத்தின் கருத்துச்

'செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ் தங்கும் உலகு'

என்னும் குறளில் இறைமாட்சி அதிகாரத்தில் பொலிகிறது.

அடுத்து வருவன அரசனின் தகுதிகளை விரித்துக் கூறும் அதிகாரங்கள். முதல் தகுதி கல்விதான். கல்லாத மன்னன் எழிலுடையவனாக மட்டும் இருப்பதில் பயன் இல்லை. அவனது கையில் அகப்பட்ட அரசுச் செல்வம் நல்லவரின் வறுமையை விடப் பொல்லாதது என்கிறார் வள்ளுவர்.

அரசோச்சும் கடமை பொறுப்பு மிக்கது. அதனைத் தாங்கும் மன்னனுக்குச் சான்றோரின் துணை வேண்டும். அவர் ஊதியங் கருதுபவர் அல்லர். முதிர்ந்த அறிவும் பழுத்த அறவுணர்வும் வாய்ந்தவர். அவரே மன்னனின் கண்ணாக அமைய வேண்டும்.

அவர் துணைதான் மன்னனின் வலிமையுள் சிறந்த வலிமையென்று விளக்குகிறார் வள்ளுவர்.

அரசின் அலுவலரை நியமிக்கும் ஆணை அரசனுடையதே. அவன் அதைச் செய்யும்முறை தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல் என்னும் அதிகாரங்களுள் கூறப்படுகின்றது. ஒருவனை அவன் சொல்லால், அல்லது உருவத்தால் மதிப்பிடாமல் செயலைக் கொண்டே மதித்து, அலுவலில் அமர்த்தச் சொல்கிறார் வள்ளுவர். செயல் எத்தகையது? அதற்கு வேண்டிய தகுதிகள் யாவை? அவற்றை உடையவன் யாவன்? அதை முடிக்கும் ஆற்றல் அவனுக்கு உறுதியாக உண்டா? என்பதையெல்லாம் ஆய்ந்தே ஒருவனை நியமிக்க வேண்டும். இதுவன்றி ஒருவரின் பரிந்துரைக்காகவோ வேறு எக்காரணத்திற்காகவோ ஒருவனை நியமிப்பது தீராத இடும்பை தரும் என்பது வள்ளுவர் கண்ட உண்மை.

அரசுத் தலைவனாக விளங்கும் அரசன் தனக்கு மட்டும் பொறுப்புடையவனல்லன். குடிமக்களின் நன்மை தீமை எல்லாவற்றிற்கும் அவன் பொறுப்பாளியாவன். இதையுணர்ந்த சேரன் செங்குட்டுவன்,

“மழைவளம் கரப்பின் வான்பேரச்சம்
பிழைஉயிர் எய்தின் பெரும் பேரச்சம்
குடிபுர வுண்டும் கொடுங்கோலஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழுதகவு இல்”

என்று கூறியது இங்கு நினைக்கத் தருவது. ஆதலால் அரசனின் வாழ்க்கை மாசுமறுவற்றதாக இருக்க வேண்டும். அதனை அவ்வாறு அமைக்கும் நண்பர் அவனுக்கு அமைய வேண்டும். பகைவரை அறிந்து கொள்ளும் திறம் அவனுக்கு வேண்டும், பெண்ணின் சொற்கேட்டு அரசியற் கடமைகளை ஆற்றுதல், கள் உண்ணுதல், சூதாடல் போன்ற தீய வழக்கங்கள் அவனுக்குப் பகையாகும். உணவு நட்பாவதும் உண்டு; அளவு மாறுபட்டால் பகையாவதும் உண்டு. இவையனைத்தையும் வள்ளுவர் ‘நட்பியல்’ என்னும் இயலில் 17 அதிகாரங்களிற் கூறுகிறார்.

நட்பைப் பற்றி வள்ளுவர் போல் ஆய்ந்தவர் இல்லை. நட்பு, நட்பாராய்தல், பழைமை, தீநட்பு, கூடாநட்பு என்னும் ஐந்து அதிகாரங்களை இதற்காக அவர் ஒதுக்கியுள்ளார். நட்பின் இலக்கணத்தை – சிறந்த நட்பின் பயன்களை முதல் அதிகாரம் முத்துக் குறள்களால் மொழிகிறது. வள்ளுவர் உலகப் பேரறிஞர் என்பதை இந்த ஐந்து அதிகாரங்களே உள்ளங்கை நெல்லிக்கனி யெனக் காட்டும். வாழ்க்கைச் செய்திகள், பண்புகள், கலைச் செய்திகள் பற்றிச்

சுருங்கிய அளவில் கட்டுரைகள் எழுதிய ஆங்கிலேய அறிஞன் பிரான்ஸிஸ் பேகனும் வள்ளுவரிடம் குறியெதிர்ப்பை பெற்றுக் கொண்டவன் போலும்!

"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு"

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்"

"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை 'யாளர் தொடர்பு"

என்னும் குறட் பொன்மொழிகளுக்கு ஈடாக எதைச் சொல்லலாகும்? நட்பியல் 17 அதிகாரங்களில் வள்ளுவரின் உயர் பேரறிவு சுடர்விடுகிறது. நூல் நவிலுந்தொறும் இன்பம் தருவதுபோல் பண்புடையாரிடம் பயிலுந்தோறும் இன்பம் விளையும் என்னும் உவமைபோல் சிறந்த உவமை, நினைக்குந்தோறும் இனிக்கும் உவமை – சிந்தனையைக்கிளறும் உவமை இந்த உலகெல்லாம் தேடினும் கிடைக்காது.

கூடா நட்பு அதிகாரம் வள்ளுவரின் அரசியல் தந்திர அறிவை நன்கு காட்டுகிறது,

"தொழுத கையுள்ளும் படையொடுங்கும் ஒன்னர்
அழுத கண்ணீரும் அனைத்து"

என்ற குறள் இன்றும் எவ்வளவு உண்மையாக இருக்கிறது! கோட்சேயின் தொழுத கைக்குள்தானே அண்ணல் காந்தியடிகளின் உயிரைக் குடித்த துப்பாக்கி யெமன் ஒடுங்கிக்கிடந்தது! வில் விளைவு தீமை செய்வது என்பதை எடுத்துக்காட்டிப் பகைவரின் சொல் வணக்கத்தைக் கண்டு ஏமாறவேண்டா என்று எச்சரிக்கிறார்

இனிப் பொருளாட்சி பற்றி வள்ளுவர் கூறுவனவற்றைக் காண்போம். அரசின் இரும்பிடமாய் இருக்கும் நாடே பொருள் வருவாய்க்குத் தாயகம். எனவே நாட்டைப் பற்றி முதலில் கூறுகிறார். அது முதலிய அதிகாரங்கள் ஐந்தையும் மணக்குடவரும் பரிப்பெருமாளும் 'பொருளியல்' என்றே அழைக்கின்றனர். குறையாத விளைச்சல், பண்பு குன்றாத சான்றோர், தாழ்வு இல்லாத செல்வர் – எல்லாம் பெற்றதுதான் நாடு. மிக்க பசியும், ஓயாத நோயும் அழிக்கும் நாட்டில் இருத்தலாகாது.

நாட்டிலிருந்து பெறும் வளங்களை வரி வருவாயை வைத்துக் காக்க நகரம் வேண்டும். அதுவே அரண். பொருளைக் காக்கும் படை அங்குதான் உள்ளது. நாடு வளந்தர, நகரம் அதனைச் செலவழிப்பது என்று இக்காலத்தில் நடந்து வருகிறது. வள்ளுவர்

காலத்தில் நாட்டிற்கு நகர் அரணாக நின்றது. எமனாக நிற்கவில்லை, இப்போதிருப்பது போல.

பின், பொருள் செயல் வகை அதிகாரத்துள் வரிகள் எத்தனை வகையென்றும், அவற்றை ஈட்டும் முறையும் செலவழிக்கும் வழியும் யாவை யென்றும் விளக்குகிறார். கொடுங்கோன்மை யதிகாரத்துள்ளும் மன்னன் மக்களைத் துன்புறுத்தி வரி வாங்கலாகாது; அது வழிப்பறி போன்றது. மக்கள் அரசின் கொடுமை தாங்காமல் கண்ணீர் வடித்தால் அக் கண்ணீர் கடப்பாரையாகி அரசு மாளிகையைத் தகர்த்தெறியும் என்றார். இங்கும் வரிப்பொருள் அன்போடும் அருளோடும் வரவேண்டும் என்று வற்புறுத்துகிறார். வள்ளுவர் அன்றி வேறு யார் இவ்வாறு வற்புறுத்தினார்கள்? இனி, வரிப் பொருளை மக்களின் நன்மைக்காகச் செலவழிக்க வேண்டும் என்பதை,

> "அருள்என்னும் அன்புஈன் குழவி பொருள்என்னும்
> செல்வச் செவிலியால் உண்டு"

என்னும் குறளால் குறிப்பாகக் கலைநயம் பொருந்தக் காட்டுகிறார்.

இனி நாட்டாட்சியின் மற்றொரு கடனாகிய முறை வழங்கலுக்கு வருவோம். செங்கோன்மை, கொடுங்கோன்மை, வெருவந்த செய்யாமை, கண்ணோட்டம், ஒற்றாடல் என்றும் ஐந்து அதிகாரங்களும் முறை வழங்கல் பற்றியனவே. செங்கோன்மையின் முதற் குறளில் முறை வழங்கலை வரையறுக்கிறார் வள்ளுவர்.

> "ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
> தேர்ந்து செய்வஃதே முறை"

செய்யப்பட்ட குற்றத்தை ஆராயவேண்டும் முதலில். பின், அதைச் செய்தவர் யாராயினும் உரிய தண்டனையை வழங்கவேண்டும். கண்ணோட்டம் ஆகாது - செய்தவர்க்கு ஏற்பத் தண்டனைகள் மாறுகின்றன மனுஸ்மிருதி, சுக்கிரநீதி போன்ற நூல்களில். நடுவு நிலைமையை வற்புறுத்துகிறது திருக்குறள்.

முறை வழங்கலுக்கு உறுதுணையாவது ஒற்றாடல். அரசனின் ஒற்றர்கள் எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவைகளை எஞ்ஞான்றும் வல்லறிவார்கள். மூன்று ஒற்றர்களைத் தனித் தனியே அனுப்பி ஒரு செய்தியை அறிந்துவரச்செய்து அம்மூவர் கூற்றையும் ஒப்புநோக்கி உண்மையறிய வேண்டும் என்கிறார் வள்ளுவர். ஓர் ஒற்றனைப் பிறிதோர் ஒற்றன் அறிதல்கூடாது. பலரும் அறிய ஒற்றர்க்கு அரசன் பரிசளிக்கக்கூடாது. ஒற்றர்கள் படையாட்சியில், பகைவரின் நாடுகளில் சென்று ஆபத்திற்குத் துணிந்து உளவறிந்து

வருபவர்கள் என்பதையும் வள்ளுவர் காட்டுகிறார். அவர்கள் துறவி வேடங்கூடத் தாங்கி இருப்பராம்.

'வெருவந்த செய்யாமை' அதிகாரம் குற்றங்களின் தண்டனைகளைப் பற்றிப் பொதுவாகச் சொல்வது குற்றவாளிகளைப் பெரிதும் அச்சுறுத்துவனவாகத் தண்டனைகள் அமையவேண்டும். அவர்களை அழிப்பனவாக இருக்கக்கூடாது. அவர்கள் திருந்துவதே தண்டனை வழங்கலின் நோக்கமாக இருக்கவேண்டும் என்பதை.

> "கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
> நீங்காமை வேண்டு பவர்"

என்றும் குறள் அறிவுறுத்துகிறது. முறை கடந்த தண்டனை விதிந்தலாகாது. அது வேந்தனின் வலிமையை அழிக்கும்.

அரசன், தனக்குக் குற்றம் செய்தவரையும், மன்னிப்புவேண்டும் குற்றவாளிகளையும் இரக்கத்தோடு நோக்கி மன்னிப்புக் கொடுக்க வேண்டும் என்று அறிவுறுத்துவது கண்ணோட்டம் என்னும் அதிகாரம். குற்றம் புரிவது மனித இயற்கையாதலின் அரசர்பால் கண்ணோட்டம் இல்லையாயின் இவ்வுலகம் அழிந்து போகும்.

இனிப் படையாட்சி (Military administration) பொருளியலிலேயே படைமாட்சி, படைசெருக்கு என்னும் அதிகாரங்களால் கூறப்படுகிறது. வெளிநாட்டு உறவுகள் இகல், பகைமாட்சி, பகைத்திறந்தெரிதல் என்னும் அதிகாரங்களில் கூறப்படுகின்றன. அன்பும் ஆட்சித்திறமும் இல்லாதவனாய்க் குற்றம் பல புரிபவனாய் உள்ள அரசரின் மேல் மறுநாட்டு அரசன் பகை கொள்ளவேண்டும் என்கிறார் வள்ளுவர்.

நல்லரசுக்கு அமைச்சன் மிக இன்றியமையாதவன். அரசியல் வினைகளில் நுணுகி எண்ணி அரசனுக்கு ஆலோசனை கூறவேண்டியவன் அமைச்சனே. அவனுக்கு நூலறிவோடு மதி நுட்பமும் வேண்டும். உலகியல் அறிவு நிரம்பவேண்டும். அமைச்சன் அரசனுக்கு ஆலோசனையோ அறிவுரையோ பகருங்கால் அஞ்சக் கூடாது. அரசன் அறியாதவனாக பொல்லாதவனாக இருந்தாலும் அஞ்சாமல் உறுதி பயப்பனவற்றை எடுத்துக் கூறவேண்டுவது அமைச்சனின் கடமை. அரசனுக்கு இவ்வாறு சூழ்ச்சித் துணைவனாக இருக்கும் அமைச்சன் அரசனின் ஆணையின்படி வினைகளைச் செய்விக்கும் வினை முதல்வனாகவும் (Head of the executive body) இருக்கிறான். இந்த இருபணிகட்கும் இன்றியமையாது வேண்டிய

நடுநிலை சொல்வன்மை. அமைச்சு அதிகாரத்தை அடுத்துச் சொல் வன்மையே இடம் பெறுகிறது.

" திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனினூஉங்கு இல் "

என்பதால் சூழ்ச்சி வினையில் சொல்வன்மை பயன்படுவதையும்,

" விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின் "

என்பதால் வினைசெய்வித்தலில் சொல் வன்மையின் பயனையும் வள்ளுவர் விளக்குகிறார். அமைச்சன் வினையாற்றும் போது கருத்தில் இருக்க வேண்டிய முக்கிய கருத்து,

" ஈன்றாள் பசி காண்பானாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை "

என்பதே.

வெளிநாட்டு உறவில் பயன்படும் அமைச்சர் தூதர் எனப்படுவார். அவருக்கு வேண்டற்பாலன மன்னரைச் சேர்ந்தொழுகல், அவையறிதல், அவை யஞ்சாமை முதலிய அதிகாரங்களுட் கூறப் படுகின்றன. இவை முன்னைய அமைச்சர்க்கும் வேண்டும்.

இதுவரை சொல்லிய அதிகாரங்கள் எல்லாவற்றிலும் இழைந்தோடும் அறம் திறம்பாமையே வள்ளுவரின், என் — தமிழகத்தின் அரசியல் தத்துவம் முடியரசே யாயினும் குடிதழீஇக் கோலோச்ச வழிகாட்டுகிறது இந்தத் தத்துவம்.

இனி, அரசில் வாழும் குடிமக்களின் பண்புகளையும் தொழிலையும் 13 அதிகாரங்களில் கூறுகின்றார் வள்ளுவர். பண்பிற் சிறந்த குடிமக்களே அரசை நிலை பெறுத்துபவர்கள். இதனைப் 'பண்புடையார்ப் பட்டு உண்டு உலகம்' என்கிறார். ஒழுக்கம், உண்மை, பழி நாணுதல் இந்த மூன்றுமே சிறந்த குடிமக்களின் பண்புகள். முடியரசுக் காலத்தைவிடக் குடியரசுக் காலத்தில் இப்பண்புகளின் தேவை மிக அதிகமாகி விட்டது. ஆனால் தீவினைப் பயனாக இம்மூன்றுமே இப்போது குன்றி வருகின்றன. நாகரிக போதையில் ஒழுக்கத்தை மறந்துவிட்டார்கள் மக்கள். அதிக ஆசை உண்மையைக் குற்றுயிராக்கி விட்டது. சுயநலப் பெருக்கம் பழி நாணும் நாணத்தை மறையச் செய்து விட்டது. இந்த இழிதகவான நிலையை நாட்டின் நோய் என்றே கூறலாம். இந்த நோய்க்கு மருந்து குறளில்

இருக்கிறது. இதனைத் தேடி வருவாரைத்தான் காணேம்! இந்நோய் முற்றிக் குடிமைக்கு மாருன கயமை வளர்ந்து விடக் கூடாதே என்று அறிஞர் கவலையுறுகின்றனர். கயவர் மக்களல்லர்; மக்களே போல்வர். அவர்களும் மக்களே போல இருக்கிருர்களே என்று வியப்புறுகிருர் வள்ளுவர். நாட்டின் அரசு இவர்களை அச்சுறுத்தி, வருத்தி வேலை வாங்கவேண்டும் என்கிருர் அவர்.

> "சொல்லப் பயன்படுவர் சான்ருேர் கரும்புபோல்
> கொல்லப் பயன்படும் கீழ்"

இக்காலத்துப் பள்ளிகளிற் குடிமைப் பயிற்சி பெறும் சிருர்க்கு எல்லாம் குடியியல் அதிகாரங்களைப் பயிற்றுவிக்க வேண்டும்.

வள்ளுவர் வகுத்த அரசியல் அற அடிப்படையில் அமைந்து நீதி முறையும் அன்பும் இரக்கமும் நிறைந்து மக்களின் நன்மைக்காக இயங்கும் தன்மையது என்பதை இதுகாறும் கூறியவற்ருல் ஒருவாறு அறிந்தோம்.

அறிவுக் கருவி

திரு. க. வெள்ளைவாரணன்,

துணைப் பேராசிரியர். தமிழாராய்ச்சித்துறை,

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

ஒரு பொருளை விழைதலும், அவற்றின் இயல்பினை உள்ளவாறு அறிதலும் அவ்வறிவின் துணைகொண்டு எண்ணிய செயலைச் செய்து முடித்தலும் என உயிர்களுக்கு அமைந்த ஆற்றல்கள் மூன்றாகும். இவற்றைஇச்சை, ஞானம், கிரியை என வழங்குவர் வட நூலார். உயிர்களுக்குரிய மூவகையாற்றல்களுள் நடுவணதாகிய அறிவாற்றல் உயிர்களின் விருப்பத்தையும் செயலையும் நன்முறையில் உயர்த்துதற் குரியதனிச் சிறப்புடையதாகும் உயிர்களுக்குரிய இம் மூவகையாற்றல் களும் மேன்மேல் வளர்ந்து சிறத்தற்குக் கருவியாயமைவன. உலகப் பொருள்களை நுனித்துணர்ந்த நுண்ணுணர்வுடைய சான்றோர்கள், மக்கட்குலத்தார் இவ்வுலகில் வளமுற வாழ்ந்தின்புறுதற்குரிய வகையில் தம் உணர்வின் திறத்தால் உய்த்துணர்ந்தியற்றிய அறிவு நூல்களாகும். இந்நூல்கள், உலக வாழ்க்கையில் அறிவுடைய நன்மக்களால் விரும்பத்தக்கனவும் செய்யத்தக்கனவும் ஆகிய நற் பொருள்கள் இவையெனவும், விரும்பத்தகாதனவும் வெறுத்து விலக் கத்தக்கனவும் ஆகிய தீமைகள் இவையெனவும் நன்றுந்தீதும் பகுத் துணரும் அறிவுத்தொழிலைத் தடையின்றி நிகழ்த்துதற்குத் துணை புரிவனவாகும்.

தெய்வப் புலவர் அருளிய திருக்குறள் மக்கட்குலத்தார் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து இன்புறுதற்குரிய நெறிமுறைகளை மேலும் மேலும் தெளிவாகச் சிந்தித்தறிதற்குத் துணை செய்யும் முறையில் அமைந்த தனிமுதல் நூலாகத் திகழ்தலின், இதனை எல்லா நூல் களினும் மேலாகச் சிறந்த அறிவுக்கருவி எனக் குறிப்பிடுதல் பொருத்தமுடையதாகும்.

தெய்வப் புலவர் திருவள்ளுவர் உலக வாழ்க்கையில் மக்களிடையே காணப்படும் பலதிற ஏற்றத்தாழ்வுகளையும் இன்ப துன்பங்களையும் அவற்றுக்குரிய காரணங்களையும் அவரவர் மனநிலையில் நின்று கூர்ந்துணர்ந்தார். அவ்வுணர்வின் பயனாக உயர்திணை மாந்தர்

அனைவரும் ஒழுக்கத்தால் ஒரு குலத்தாராகத் தம்மிற் பகையின்றி அன்பினால் ஒத்து வாழ்தற்குரிய நல்வாழ்க்கை நெறி இதுவெனத் தெளிந்தார். தாம்கூறும் அறமுதற் பொருள்களை உலக மக்களனை வரும் உளங்கொண்டு போற்றும் வண்ணம் உலகப் பொதுமறை யாகிய திருக்குறளை இயற்றியுள்ளார்.

எல்லா உயிர்களாலும் விரும்பி நுகரப்படுவது இன்பம் அவ்வின்பத்திற்குக் காரணமாக அறிவுடைய மக்களால் ஈட்டப் படுவது பொருள். பிறர்க்குத் தீங்கு நினையாத மாசற்ற மனத்தால் பொருள் செய்தொழுகும் முறைஅறம். நுகர்தல் வேட்கை முறைபற்றி இன்பம், பொருள், அறம் எனவும், செய்கை முறைபற்றி அறம், பொருள், இன்பம் எனவும் இம்மூன்றையும் எண்ணுதல் மரபு. 'இன்பமும் பொருளும் அறனுமென்றாங், கன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற், காமக்கூட்டம்' என நுகர்ச்சி முறையிலும், 'அந்நிலை மருங்கின் அறமுதலாகிய மும்முதற் பொருட்கும் உரிய என்ப' எனச் செய்கை முறையிலும் வைத்துத் தொல்காப்பியர் எண்ணியுள்ளார்.

அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றைத் தவிர அறிவுடைய மக்களால் விரும்பி மதித்தற்குரியன பிற இன்மையின் இம்மூன்றையும் 'மும்முதற் பொருள்' எனத் தொல்காப்பியர் சிறப்பித்துப் போற்றினர். அறத்தினாற் பொருளாக்கி அப்பொருளால் இன்பம் நுகர்தலே மக்களது நல்வாழ்க்கை முறையாகும். இவ்வாறு மூன்று பகுதி களாக நிகழும் இவ்வுலக வாழ்க்கையின் இயல்பினை 'மூன்றன் பகுதி' எனத் தொல்காப்பியர் தொகுத்து உரைத்தார். உலகியல் நூலாகிய திருக்குறளை இயற்றிய தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரும் தொல்காப்பியனார் வகுத்த முறையே அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால்களாகத் தம் நூலை வகுத்து அருளிச் செய்துள்ளார்.

உலக மக்களை நோக்கிப் பொய்யில் புலவர் கூறிய அறவுரைகள் யாவும் அறிவுரை என்ற அளவில் அமைந்து விடாமல் அவரவர் உளநிலையில் நின்று உலகியலில் நேரும் இன்பதுன்பங்களைச் சிந்திக்கத்தூண்டும் சிந்தனையுரைகளாகவும் அமைந்துள்ளன. எவ்வுயிர்க்கும் இன்னசெய்யாமையாகிய நல்லறத்தை வற்புறுத்த வந்த திருவள்ளுவர், தாம் கூறும் அவ்வறத்தின் இன்றியமை யாமையினை உணராதவர்களும் தம் அனுபவத்தால் உணர்ந்து ஏற்றுக்கொள்ளும் முறையில் எடுத்துரைக்கின்றார். பிறர் செய்யும் துன்பங்கள் தன் உயிர்க்கு இன்னவாம் தன்மையினை அனுபவித்து அறிகின்றவன் நிலைபேறுடைய பிற உயிர்களுக்குத் தான் அந்

துன்பங்களைச் செய்தல் என்ன காரணத்தாலோ? என ஆசிரியர் தமக்குத்தாமே வினவிக்கொள்ளும் முறையில் அமைந்தது,

"தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல்"

எனவரும் திருக்குறளாகும்.

உலக வாழ்க்கையில் தாம் செய்த நல்வினையின் விளைவாகிய இன்பங்களை வெறுக்காது விரும்பி அனுபவிக்கும் உள்ளமுடைய மக்கள், தாம் செய்த தீவினைப் பயனாகிய துன்பங்களை மட்டும் ஏற்று அனுபவிக்காமல் அல்லற்படுவது அறிவுடைமையாகாது என அறிவுறுத்தும் நிலையில் அமைந்தது,

"நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்" (379)

எனவரும் திருக்குறளாகும். தாம் செய்த நல்வினை தீவினையாகிய இருவினைப் பயன்களுள் இன்பத்தினை மட்டும் விரும்பியேற்று நுகர்ந்து துன்பத்தினை ஏற்று நுகராது வெறுத்து வருந்துதல் அறிவுடைமையாகாது என்னும் உண்மையினை அவ்வல்லலிற் சிக்குண்டு உளங்கலங்கியவர்களும் சிந்தித்து ஏற்றுக்கொள்ளும் வகையில் இத்திருக்குறள் அமைந்துள்ளமை காணலாம்.

இவ்வாறு மக்களது அறிவினை மேலும் மேலும் சிந்திக்கத் தூண்டி அறமுதலிய உறுதிப் பொருள்களின் இயல்பினைத் தெளிவாக அறிந்து மகிழ்தற்கேற்ற சிறந்த அறிவுக் கருவியாகத் திருக்குறள் திகழும் திறத்தினை,

"அறனறிந்தேம் ஆன்ற பொருளறிந்தேம் இன்பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தேம் — மறனெறிந்த
வாளார் நெடுமாற வள்ளுவனார் தம்வாயாற்
கேளா தனவெல்லாங் கேட்டு"

எனவரும் திருவள்ளுவமாலைச் செய்யுளில் புலவரொருவர் உணர்ந்து போற்றுகின்றார்.

வள்ளுவர் உள்ளம்

சிவநெறிச் செல்வர், கல்வெட்டாராய்ச்சிப் புலவர்,
வித்துவான். திரு. கா. ம. வேங்கடராமையா, M. A., B. O. L.
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

எடுப்பு

தெய்வப் புலமைத் திருவள்ளுவ தேவரின் திருவுள்ளம் புரியாததோ, புதிரானதே அன்று! தெளிவானது, தெளியவைப்பது. அறமுறைத்துப் பொருளுரைத்து, நல்லிசை நாட்டும் இன்பத்தை நன்னெறியுடன் எடுத்துரைத்து, எப்பாலவரும் இயைய முப்பாலுரைத்த மூதறிஞரின் நல்லுள்ளம் பரந்து விரிந்த பாற்கடலுக்கு ஒப்பானது.

சொல்லடுக்கின் முன்னர்ப் பணிந்து கிடப்பதோ, அன்றிக் கருத்தின் காலடியிலே விழுந்து கற்பனை இன்பத்தைக் காட்டாதொழியும் புலமை வறுமையோ அவன் உள்ளம் அறியாதது.

எம்மதத்தார்க்கும் உடன்பாடான பண்பாடும், உலகமெலாம் உணர்ந்து பின்பற்றவேண்டிய கருத்துக் கருவூலமும் அவன் தனக்கே உரிமையாக்கிக்கொண்டான்; உடைமையும் ஆக்கிக்கொண்டான்.

மாறும் உள்ளமா?

ஒவ்வொரு குற்றத்தை எடுத்து உரைக்கும்போதும் இதனினும் தீய குற்றம் உலகில் வேறு இல்லை என்று இயம்புவதும், ஒவ்வொரு குணத்தை உணர்த்தும் போதும் இதனினும் உயரிய குணம் உலகில் வேறு இல்லை யன்றே என்று ஆணித்தரமாக அறிவுறுப்பதும் அவனின் உள்ளப்பாங்கு ஆகும்.

"ஆன்முலை அறுத்த அறனிலோர்க்கும், மாணிழை
மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்"

கழுவாய் உண்டு என்று கூறிப் பின்னர்ச் 'செய்திகொன்றோர்க்கு உய்தி இல்' என்று கூறுவது குற்றங்களின் வன்மை மென்மைகளைப் பிரித்துக்காட்டுவதாகும்.

குற்றவாளி, சட்டத்தில் ஏதாவது ஒரு சிறுதுளி தனக்கு உதவியாகக் கிடைக்காதா என்ற ஏக்கத்துடன், நீதிசொன்ன ஒவ்வொரு வழக்கு மன்றத்தையும் வெறுத்து இறுதிவரை போராடும் இழிநிலையை இன்று உலகில் நாம் காண்கிறோம்.

'என்னைவிடப் பெரிய குற்றம் செய்தவனையெல்லாம் இந்த உலகமும் சமுதாயமும் விட்டுவைத்திருக்கிறது; நானென்ன அவ்வளவு பெரிய குற்றமா செய்துவிட்டேன்?'' என்று கேட்பவர்களும் உண்டு.

இந்த நிலையிலே குற்றங்களின் வன்மை மென்மை பிரித்தால் குற்றவாளிகளின் தொகை பெருகுவதோடு மட்டுமல்லாமல், ஒவ்வொரு குற்றவாளியும் தன்குற்றம் சிறியதுதானே என்று வாதிடும் இழிநிலை மலிந்துவிடும்.

அதனால்தான் அழுக்காறு பற்றி அறிவிக்கும்போது,

> **''அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்**
> **தீயுழி உய்த்து விடும்''**

என்று அக்குற்றக் கொடுமையின் எல்லையைக் கூறியும், புறம்பேசும் குற்றம் பற்றிக் கூறும்போது,

> **''புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்**
> **அறங்கூறும் ஆக்கம் தரும்''**

என அதன் கொடுமையைக் கூறி, அக்குற்றத்தைச் செய்யாதவாறு வன்மையாகக் கடிந்துரைத்துள்ளான்.

இவ்வாறே எல்லாக் குற்றங்களின் கொடுமையையும் வன்மை மென்மை பிரிக்காமல் உள்ளவாறு உரைத்திருப்பதை திருக்குறளில் தெளிவாக அறியலாம். அஃது அவன் உளப்பாங்கு.

கொடைக்கு ஒரு தடை

> **''ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை**
> **வைத்திழக்கும் வன்கண வர்''**

என வள்ளன்மை வேண்டுமென வாயாரச் சொன்ன வள்ளுவன்,

> **''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து**
> **கெடுக உலகியற்றி யான்''**

என இரப்பவனைப் படைத்த இறைவனையே ஏசத் துணிகிறான்.

இது கொடைக்கு விதித்த தடைபோன்று தோன்றினும் உண்மையைச் சிர்தூக்கின் உலகத்தின் வறுமைக்கு அவன் வாடி உதிர்த்த கண்ணீர்க் காவியமாகத்தான் அக்குறள் இலங்குகின்றது.

எது அறம்?

> **" அழுக்கா(று) அவாவெகுளி இன்னுச்சொல் நான்கும்**
> **இழுக்கா இயன்ற(து) அறம் "**

என்றும்,

> **" முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானும்**
> **இன்சொல் லினிதே அறம் "**

என்றும் அறம் என்ருல் இன்னதென்று இயம்பிய வள்ளுவன்,

> **" மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
> **ஆகுல நீர பிற "**

என உரைக்கின்ருன். 'இன்சொல்லினதே' என்பதில் உள்ள தேற்றேகாரத்தின் உறுதிக்கு 'அனைத்தறன்' என்ற சொல்லிலுள்ள உறுதி சற்றும் குறைந்த தன்று!

எது அறம்?

இங்கேயும் வள்ளுவன் உள்ளம் நமக்குத் தெளிவாகத் தெரிகிறது.

கட்டுக் கடங்காக் காட்டு விலங்கின் போக்கைவிட மனித உள்ளம் கடுமையானது; கொடுமையானது.

அம்மூன்று குறட்பாக்களுள் ஒன்றினென்று பின்பற்ற எளிமைப் படுத்தப் பெற்றிருப்பதை உற்றுநோக்கின் புலனுகும்.

காட்டு விலங்கை ஓடவிட்டுப் பிடிக்கும் உயர்ந்த உத்தியை ஒட்டியே வள்ளுவன் அம்மூன்று குறட்பாக்களுள் அறத்தின் இலக்கணத்தை அருமையாகச் சொல்லியுள்ளான்.

அம்மூன்றும் அறமே. ஒன்றினென்று பின்பற்ற எளிமைப் படுத்தப்பெற்றுள்ளன.

ஏட்டுக்கு நீதி எழுதிவிட்டுப் போகாமல் நாட்டுக்கு – நடைமுறைக்கு நீதியினை நவின்றவன் அவன் என்பதற்கு இதனினும் வேறு சான்ருென்று வேண்டுமோ ?

தலைமை உள்ளம்!

பாவுக்கரசராகிய நாவுக்கரசர்,

'பஞ்சுண்ட மெல்லடியாள் பாகன் தன்னைப்
பாரோடுநீர் சுடர்படர்காற் றாயி னானை
மஞ்சுண்ட வானாகி வானந் தன்னில்
மதியாகி மதிசடை மேல் வைத்தான் தன்னை
நெஞ்(சு)உண்(டு)என் நினைவாகி நின்றான் தன்னை
நெடுங்கடலைக் கடைந்தவர் போய் நீங்க ஓங்கும்
நஞ்சுண்டு தேவர்களுக் கமுதீந் தானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே'

என்று பரவசமாகப் பாடுகிறார். இதில் 'நானே' என்ற சொல்லாட்சி சிந்தனைக்குரியது. முப்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் அவர் நான், யான் என்ற சொற்களைக் கையாண்டுள்ளார்.

அஃது அவர்தம் செம்மாந்த தலைமை உள்ளத்தைக் காட்டுவதாகும்.

அரைகுறையாளர்கள் நான் யான் என்ற சொற்களைப் பயன்படுத்தினால் அஃது ஆணவம்.

முற்றறிவினர் அச்சொற்களைப் பயன்படுத்தும் போது, பயன்படுத்தியவர்தம் தலைமையுள்ளத்தை நாம் தெளிவாக உணர முடிகிறது.

'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' எனப் பாரதி பகர்ந்ததையும் ஈண்டுச் சிந்தித்தல் தகும்.

வள்ளுவப் பெருந்தகையிடம் இத்தகைய தலைமை உள்ளம் இருந்தமைக்கு மூன்று சான்றுகள் உள:

1. 'பெறுமவற்றுள் யாமறிவதில்லை; அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற'

2. 'யாம் மெய்யாக் கண்டவற்று ளில்லை; எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற'

3 'மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாம்கண்ட தில்'

முடிப்பு

வள்ளுவன், குற்றங்களை அடித்துச் சொல்லும் உளப்பாங்கு கொண்டவர் என்பதும், குணங்களைப் பாராட்டி, ஊக்குவிக்கும் பான்மை கொண்டவர் என்பதும், உலகின் துயர்க்குத் தான் வருந்தி, அந்த வருத்தத்தின் அடிப்படையில் கடவுளையே நொந்து கொள்ளவும் செய்த இரக்க உள்ளம் படைத்தவர் என்பதும், உலக மக்களின் உள்ளங்களைத் தெள்ளிதின் உணர்ந்து அவர்கள் கடைப்பிடிக்கக் கூடிய வகையில் எளிய வழிகளில் நீதி சொன்ன நல்லுளம் கொண்டவர் என்பதும், தலைமை உள்ளம் கொண்டவர் என்பதும் இக்கட்டுரையால் தெளிவாகும்.

வள்ளுவனின் உள்ளத்தில் சிறப்பை அவன்தன் திருக்குறள் ஒவ்வொன்றும் உணர்த்துகிறது என்பதும் மறுக்க முடியாததொன்று.

'நவில்தொறும் நூல்நயம் போல' என்பது வள்ளுவன் தொடர். அதேபோலத் திருக்குறளையும் — நவில்தொறும் அவன் உளம் நமக்குத் தெற்றெனத் தெரியும்.

திருவள்ளுவரும் சேக்கிழாரும்

டாக்டர் தா. வே. வீராசாமி, எம். ஏ ,பிஎச்.டி .
கேரளப் பல்கலைக் கழகம், திருவனந்தபுரம்,

முன்னுரை :

மக்கள் அறநெறியில் சென்று, அன்பை வளர்த்து இன்ப வாழ்வு வாழவேண்டுமென்று முப்பால் வகுத்தவர் திருவள்ளுவர். அவ்வழியிலே நடந்துசென்று அன்பு முடியைக் கண்டவர்கள் மிகச் சிலராவர். அத்தகைய சில பெரியோர்களில் ஒரு பிரிவினர் அன்பையும் சிவத்தையும் ஒன்றெனக் கண்டு அன்பே சிவமாய் அமர்ந்திருந்தனர். அத்திருத்தொண்டர்களைத் தொகையடியாராகவும் தனியடியாராகவும் திருத்தொண்டத் தொகையில் புகழ்ந்து பரவினர் நாவல் நகர் வந்த ஆரூரர். அவ்வழியைப் பின்பற்றிப் பெரிய புராணமாக விரித்த சேக்கிழார் வானம் (101) நிலம் (102) கடல் (103) ஆகியவற்றினும் பெரியதைக் குறள்கொண்டு விளக்கிச் சோழனிடம் அமைச்சரானர் என்ற கதையால் அவருடைய குறளறிவு நன்கு புலப்படும். எனவே அறத்தின் இலக்கணமாம் திருக்குறளுக்குப் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய திருத்தொண்டர் புராணம் ஒரு வகையில் நல்லிலக்கணமாய் அமைந்துள்ளது எனலாம்.

கொள்கை வகுப்பதும் அதைப் பிறர்க்குக் கூறுவதும் எளிது என்பதைத் தெய்வப் புலவர் 'சொல்லுதல் யார்க்கும் எளிய' (664) என்று சுட்டினர். அங்ஙனம் சொல்லியவற்றைச் செம்மையாகச் செய்து முடிப்பவர் சிலராக இருப்பதால் உலகில் இலர் பலராக உள்ளனர். 'செயற்கரிய செய்வார் பெரியர்' (26) ஆக மிளிர்கின்றனர் தமக்கென வாழா பிறர்க்குரியாளராகப் பொலிகின்றனர்; கொண்டகொள்கைக்காக வாழ்ந்து ஈர அன்பினராகவும், யாதும் குறைவிலராகவும் விளங்குகின்றனர். இத்தகைய கொள்கை வீரர்களையே சேக்கிழார் பெரிய புராணத்தில் பெருமைபடப் பேசுகின்றர். அங்ஙனம், பேசும்போது ஆங்காங்கே குறள் மணிகளின் கருத்தொளி பரவுவதையும், அதனல் வீரர் தம் வாழ்க்கை மேலும் விளக்கம் பெறுவதையும் கண்டு வியக்கின்றேம்; பண்டைக் குறட் செல்வத்தைச் சேக்கிழார் பல்லாற்றனும் பயன் படுத்தும்போது பெருமிதம் கொள்கின்றேம்.

அடியார் நிலை :

நான் என்ற நினைப்பிலேயே மனிதன், தன் முனைப்பைக் கொண்டு அழிவதற்கு அடித்தளம் அமைத்துக் கொள்வான். அதனை அழிப்பது அத்துணை எளிதுமன்று. கல்வி, செல்வம், குடிப்பிறப்பு போன்றவை யெல்லாம் ஒருமனிதனை உயர்வாக எண்ணுதற்கு இடம் தரும். அப்போது, தன்னைவிடத் தாழ்ந்தவரை எள்ளும் நகை அரும்பும். அதுவே, பின்னர் இகழ்ச்சியிற் கெட்டார் என்ற இலக்கணத்திற்கு இலக்கியம் ஆக்கிவிடும். ஆதலால் செருக்கின் வலிமையை நன்குணர்ந்த முதற் பாவலர்,

'பெருக்கத்து வேண்டும் பணிதல்' (963)

என அறுதியிட்டுரைத்தார். இத்தகைய பணிவு, பெருக்கம் உடைய ஒரு சிலர்க்கு மட்டும் போதுமா என்ற ஐயம் தோன்றியவுடன்,

'எல்லார்க்கும் நன்றாம் பணிதல்' (315)

என்றுரைத்தார். ஆதலால், பணிதல் என்பது எல்லா மக்கட்கும் பண்புச் செல்வமாக அமைதல் வேண்டும் என விரும்பினர். ஆயினும் அது செம்மாக்கும் கீழ்களிடம் இல்லாதிருப்பது வியப்பன்று.

இத்தகைய பணிவுடைமை என்ற பண்புச் செல்வத்தை நன்குணர்ந்தவர் சேக்கிழார். சிவனடியார் என்ற தொண்டர் கூட்டத்தைக் காணும் போதெல்லாம் அவர் அப்பண்பையே கண்டு மகிழ்ந்தார். அங்ஙனம், பார்த்துப் பார்த்துப் பழகிய கவிஞரின் கற்பனைக் கண்களுக்கு இயற்கையைக் காணுந்தோறும் அதுவே நிழலிட்டது. நாடெல்லாம் நலத்தால் ஓவ்வா நீர்நாட்டின் வளத்தைக் கூறவந்த கவிஞர், வயலில் நெற்கதிர்கள் அலர்ந்த நிலையைக் கண்டதும், அரனுக் கன்பர் ஆலின சிந்தைதான் புலப்பட்டது. சாலி, மேலும் விளைந்து வயலில் தலைவணங்கிக் கிடக்கும் நிலையைப் பார்த்தார் வாழ்வில் அவர் கண்ட செயல்கள் உடனே கண்முன் தோன்றின. அன்பு நெறி நிற்கும் சிவனடியார்கள் தத்தமில் கூடினல் தலைதாழ்ந்து வணங்குகின்ற செயலைப்போல நெல் தலைதாழ்ந்து நின்றது என்கிறர். அவர் காட்டும் கவிதை ஓவியம் இதோ !

பத்தியின் பால ராகிப் பரமனுக் காளாம் அன்பர்
தத்தமிற் கூடி ஞர்கள் தலையினல் வணங்கு மாபோல்
மொய்த்தநீள் பத்தி யின்பால் முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மை போல விளைந்தன சாலி யெல்லாம்

— *திருநாட்டுச் சிறப்பு 22*

விருந்தோம்பல் :

திருக்குறளின் விருந்தோம்பல் அதிகாரம் பெரியபுராணம் முழுவதும் பரவி நன்மணம் வீசுவதை எளிதில் காண இயலும். இல்லறம் இனிது நடக்க வாழ்க்கைத்துணை நலம் மலர்ந்தபின் மக்கட் பேறு நவமும். அதன் விளைவு அன்பு காய்க்கும், அன்பு தன்னைச் சார்ந்தாரிடத்து மட்டும் பரவிப் பயன் தருவது. உயிர்களிடத்து அன்பின் வளர்ச்சி அத்துடன் நில்லாது மற்ற உயிர்களிடமும் தாவிப்படர்ந்து செல்கிறது. தன்னுடன் தொடர்புடைய மக்கட்கும் மனையாளுக்கும் பசி வருவதைப்போல, எவ்வகையிலும் தன்னுடன் தொடர்பில்லா மக்கட்கும் பசி வரும் என அறிவு உணர்த்தும். அதனால் தன்வீடு நோக்கி வரும் புதியவர்க்கு வயிறார உணவிட்டு ஓம்புகிறான். அப்புதுமை ஓம்பலை – விருந்தோம்பலை – இடைவிடாது செய்யத் துணிகின்றான் இல்லறத்தில் நிற்பவன். செல்விருந்தும் வருவிருந்தும் ஓம்பி ஓம்பி வானுலகிற்கு நல் விருந்தாகின்றான். அத்தகைய விருந்தைச் 'செய்மைக் கண் கண்டுழி இன்முகமும், அதுபற்றி நண்ணிய வழி இன் சொல்லும், அவை பற்றி உடன்பட்ட வழி நன்றாற்றலும் என விருந்தோம்புவார்க்கு இன்றியமையாத மூன்று' பண்புகளைப் பரிமேலழகர் கூறுவார். அவற்றில் தலைப்பண்பாம் இன்முகத்தோடு எதிர் கொள்ளுதலையே அனிச்சப்பூவின் உவமையால் வள்ளுவர் விளக்குவார்.

இதனை நன்குணர்ந்த சேக்கிழார் தம் தொண்டை நாட்டில் பெருமை ஓங்கும் மல்லல் மூதூர்களைப் பற்றிக் குறிக்கும்போது ஊர்களெல்லாம், மக்கள் நூலாடை அணிவதைப் போன்று பச்சைப் பசேல் என்ற வயலாடை உடுத்திருந்தன என்பார். அவ்வூர்களிலிருந்த வீடுகளில் மக்கள் மட்டும் நிறைந்திருக்கவில்லை. வயலில் விளைந்த நெல்லைக் குவித்திருந்த கூடுகளும் நிறைந்திருந்தன. உயர்ந்த மாடங்கள் அம் மக்கள் தம் பெருமை பேசின. எனினும், 'ஈயாதார் வாழ்ந்தென்ன? மாடத்தில் வதிந்தென்ன?' எனப் பழிக்குமாறு அம்மக்கள் வாழவில்லை. அவர்கள் வாழும் மாடம்,

'விருந்து எதிர் கொள்ளும் பீடு தங்கிய பெருங்குடி மனையறம் பிறங்கும் மாடம்' என்று குறிப்பிடுவதால் வள்ளுவர் காட்டிய விருந்தோம்பும் பண்பில் தொண்டை நாட்டு நன்மக்களும் சிறந்திருந்தனர் என்பதை வெளிப்படச் சுட்டுகின்றார் சேக்கிழார்.

அன்புடைமை :

வாழ்கின்ற மக்கள் தம் நிலை கெடாது வாழ்தற்கு எத்தனையோ வகைப் புறக் கருவிகளையெல்லாம் நாளும் நாளும் தேடிக் கொள்கின்றனர். அவை பெருகப் பெருக மக்கள் வாழ்வு சுமை நிறைந்த

நாக மாறுவதைக் காண்கின்றோம். பல வகை வின் கவலைகள், பொறுப்புகள், கடமைகள், போன்றவை வளர்கின்றனவே ஒழிய வாழ்வின் இன்பம் பெருகும் நெறி வளர்வதைக் காண இயலவில்லை. செயற்கை வெம்மை பரவப்பரவ அதனினின்று தப்புவது எங்ஙனம் என மனித மனம் அலைகின்றது. செயல் ஆற்றலாம் பல்வகை ஆக்கப் படைப்புகளைத் தேடிச் சேர்த்தபின் அவற்றை நன்னெறியில் பயன் படுத்த இயலாத வகையில் தவிக்கும் நிலை ஏற்படுகிறது. எது இன்பம் என எண்ணித் துணிந்து அதை அடைந்த பின் அதுவே துன்பத்தின் வேராக இருப்பதைக் கண்டதும் அதை எவ்வாறு அகற்றுவது; அல்லது மாற்றுவது என அறிவின் துணை வேண்டப் படுகிறது. அறிவு நுண்ணியது; நூல் பல கற்றதின் விளைவு; அஃகி அகன்றது – அத்தகைய நுண்மாண் கருவியின் வாயிலாக வாழ்வில் இன்பம் தருவது அன்பே எனத் துணிகின்றோம். பலவுணர்ச்சிகளில் தலையாய இவ்வுணர்ச்சியைக் கொண்டே மனிதப் பயிர் காலந்தோறும் வளர்ந்து வருகிறது. மனித உடம்பில் புறத்தே காட்சியளிக்கும் பல்வகை உறுப்புகளெல்லாம் இருந்தும் இல்லா தவையே யாம். ஏனெனில், மனித உள்ளுறுப்பாக அன்பு வளர்ந் திருக்க வேண்டும் என்ற கருத்தை வள்ளுவர் தம் குறளில்

> **புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை**
> **அகத்துறுப் பன்பி லவர்க்கு** (79)

எனக் கேள்வியாகக் கேட்பார்.

அன்பு முதிருமேயானால் அதன் செயலையோ அச்செயல் செய்தற் குரிய அறிவின் அடிப்படையையோ காணுதல் எளிதன்று, காட்டிலே வேட்டையாடித் திரிந்த திண்ணன் என்பவன் நாகரிக உலகை அறியாதவன். கடவுளின் அருட்டிருவுருவத்தைக் கும்பிட நீர் சொரிந்து பூவிட்டு மந்திரம் கூறி வணங்கும் சடங்கு முறையை உணராதவன். அத்தகைய வேடன் காளத்தி மலையிலே குடுமிநாத ராம் இறைவனுருவைக் கண்டவுடன் வங்கினைப்பற்றிக்கொண்ட வல்லுடும்பைப் போலாய் விட்டான். தான் வேட்டையாடிய பன்றிக் கறியைத் தன் அன்புத் தெய்வத்திற்குப் படையலாகப் படைத்தான். கைக்கும் காலுக்கும் வேறுபாடு தெரியாத அன்பு வெள்ளத்தில் மூழ்கி மூழ்கி எழுந்தான். ஆனால் நடைமுறையுலகு என்ற வடிவத்தில் சிவகோசரியார் என்ற பூசாரி இடையே வருகின்றார். தானிட்ட மலரைக் காணாது இறைவனைச் சுற்றிலும் விலங்கின் எலும்பு முதலான தூய்மையற்ற பொருள்களைக் கண்டு மனம் நொடிந்தார். அன்பு நெறி ஆசார நெறியைக் கலக்கியது குழப்பத்தைத் தீர்க்கச் சிவகோசரியார் கனவில் சிவபெருமான் தோன்றிக் கூறியதாகச் சேக்கிழார் பாடும் பாடல்;

அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமைஅறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினியவாம் என்றும்
அவனுடைய நிலைஇவ்வா றறிநீ என்றருள் செய்வார்

கண்ணப்ப நாயனார் புராணம் - 157

என்பதாம்.

செயலும் அறிவும் அன்பில் முகிழ்த்தன என்ற இறைவன் சான்றிதழுடன் திண்ணன் வாழ்வு முடியவில்லை. அகத்துறுப்பாம் அன்பு வளர வளர இறைவன் கண்ணுக்கே தன்புறத்துறுப்பாம், கண்ணை அப்பும் கண்ணப்பனாக மாறும் மாறிலா நிலைபெற்றுச் சிவனின் வலப்பக்கம் நிற்கும் பேறு பெறுவதாகச் சேக்கிழார் அன்பின் வடிவத்தைக் குறள் வழியில் நிலை நாட்டுகின்றார்.

இல்வாழ்க்கை :

அன்புப் பயிர் வளரும் இல்வாழ்க்கையைக் குறள் நெறியில் நின்று பெரியபுராணம் விளக்கும். கைலாயத்தில் மலர்பறிக்கச் சென்ற ஆலால சுந்தரரின் மனம், அங்கு அம்மைக்கு மலர்பறிக்க வந்த கமலினி அநிந்திதை என்ற இருவர் மீதும் சென்றது. அதை உணர்ந்த இறைவன் 'இன்பந் துய்க்கத் தென்னகம் சென்று மீண்டு வருக' என ஆணையிட்டான். ஆலால சுந்தரர் ஆரூரராகப் பிறந்து புத்தூர் சிவவேதியன் மகளை மணக்க விருக்கும்போது கிழவேதியனாய் வந்த சிவனால் தடுத்தாட் கொள்ளப்பெற்றார். பின்னர் திருவாரூர் சென்றபோது அங்கு அவர்க்காகவே பிறந்திருந்த கமலினியாம் பரவையாரை இறைவனருளால் மணந்து இன்பம் துய்த்தார். பல இடங்களிலும் சென்று இறைவனை வணங்கிச் சென்ற ஆரூரர் திருவொற்றியூரில் தங்கினார். அங்கு பிறந்திருந்த அநிந்திதையாம் சங்கிலியார் கன்னிமாடத்திலிருந்து இறைவனுக்குரிய மலர்ப்பணி புரிந்து வந்தார். ஒரு நாள் மின்போல் மறையும் சங்கிலியை ஆரூரர் விதியாற் கண்ணுற்றார். தன் உள்ளந் திரிந்ததை அறிந்த ஆரூரர்

'இருவரால் இப்பிறவியை எம்பெருமான் அருளால்
எய்துவித்தார். மருவும் பரவை ஒருத்தி
இவள் மற்றை யவள்'

என உணர்ந்து இறைவனிடமே சங்கிலியைத் தருமாறு வேண்டினார்' அவர் திருவிளையாட்டின்படி மகிழ மரத்தடியில் 'பிலியேன்' என்று சங்கிலிக்குச் சபதம் செய்து மணம் கொண்டார்.

இங்ஙனம் ஆரூரர் வரலாற்றுச் செய்தியைக் காணும்போது பண்டை அகத்துறை நெறியெல்லாம் நம் கண் முன் விளங்கித் தோன்றும் வண்ணம் சேக்கிழார் பாடியுள்ளார். திருமணம் நிகழ்ந்தபின் ஆரூரர் துய்த்த காதலின்பத்தைப்,

பண்டுநிகழ் பான்மையினுற் பசுபதி தன்னருளாலே
வண்டமர்பூங் குழலாரை மணம்புணர்ந்த வன்ருெண்டர்
புண்டரிகத் தவள்வனப்பைப் புறங்கொண்ட தூநலத்தைக்
கண்டுகேட் டுண்டுயிர்த்துற் றமர்ந்திருந்தார் காதலினுல்

— ஏயர்கோன் கலிக்காம நாயனுர் புராணம் 267 —

என்று பாடுவார்.

காமத்துப் பாலின் புணர்ச்சி மகிழ்தலில் முதற் குறளாக விளங்கும்,

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள (1101)

என்று வள்ளுவர் கூறியதையும் அதன் விளக்கமாகப் பரிமேலழகர், 'வேறு வேறு காலங்களில் வேறு வேறு பொருள்களான் அனுப விக்கப்படுவன ஒருகாலத்து இவள் கண்ணே அனுபவிக்கப்பட்டன' என்று கூறியதையும் உணர்கின்ருேம்.

மேலும், ஆரூரன் தோழராம் சேரமான் பெருமான் நாயனுர் இக்குறட் பொருளிலே தோய்ந்து திளைத்ததால் தம்முடைய ஆதியுலாவில்,

மண்ணின் மேற்
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே உளவென்று பண்டையோர்
கட்டுரையை மேம்படுத்தாள்

என அங்ஙனமே பொதிந்து வைத்துள்ளார். குறளின் வடிவைச் சேக்கிழார், சேரமானின் தோழர் துய்த்த இன்பத்திற்குப் பயன் படுத்தும்போது, குறளின் வடிவமும் சேரமான் திருமுறையாம் ஆதியுலாவின் மணமும் அவர் மனத்தில் பொங்கித் ததும்பியதைக் கண்டு வியக்கின்ருேம்.

முடிவுரை

அடியார் நிலை, விருந்தோம்பல் அன்புடைமை, இல்வாழ்க்கை ஆகிய சின்னஞ் சிறு எல்லைக்குள் மட்டும் நின்று பார்த்ததின் விளைவால் வள்ளுவர்க்கும் சேக்கிழார்க்கும் உள்ள பிணைப்பைப் பெரிதும் உரை முடிந்தது. பண்டைத் தமிழ் நெறியின் சாரமாய்த் திரண்டு ஒளிர்வது வள்ளுவர் வகுத்த குறள். அக்குறளின் மணிகளை அடியார் வாழ்வு எனும் பொற்கிண்ணத்தினிடையே பதிக்கும் கவி வல்லவராம் சேக்கிழாரைக் காணும் போது பழமை புதுமை ஆகிய இரண்டும் கலந்து இனிமைத் தேன் ஒழுகும் இலக்கியம் நன்கு பொலிவதைக் கண்டு மகிழ்கின்றோம்; அற மணத்தை அன்பு மணத்துடன் நுகர்கின்றோம்; வாழ்வு இலக்கணம், வரலாற்று இலக்கியமாக மாறும் விந்தையைக் கண்டு இறும்பூது எய்துகின்றோம்.

திருக்குறளில் சமயக் கருத்துக்கள்

திருக்குறள் பீடம், குருகுலம் அழகரடிகள்,

பதமான நிலை:

'சமயம்' என்பது பதமான நிலை; காலந்தோறும் பதப்பட்டு வரும் நிலை; சமயம் ஒழுகலாறுடைய மக்கள், பொது நிலையிலிருந்து வரவர உயர்ந்து மேன் மக்களாய் விளங்குகிறார்கள்; நாடு அதனால் ஒழுங்கும் வளமும் நலமும் அடைந்து வருகிறது.

சமய உணர்ச்சி மிகாத இடங்கள், தன்னல மிகுந்து, பொது வாழ்விற் கருத்தின்றி ஒன்று, அறிவுத் திறமையோடு ஒருவரை யொருவர் வதைத்துக்கொள்கின்றனர். அறிவுத் திறனும் நாகரிகமும் ஆக்க நெறியிற் செல்லுவதில்லை. அல்லது அறிவு திருகலாகி, மக்கள் விலங்குகளாய்த் திரிந்து, நாடு காடாகிக் கொடுமையும் நாகரிகக் கேடும் மேலிட்டு விடுகின்றன.

மக்கள பண்டுவ நற்கேற்றபடி திருவள்ளுவர் தமது நூலை மறை மொழியாக வழங்கியிருக்கிறார்.

மெய்ப் பொருள்:

அவர் நூலியற்றிய முறைமை உலகியல் வகையே தவிர, நூலுள் வற்புறுத்துவது உயர்ந்த சமய நுட்பங்களே! சமயக் கணக்கர் மதிவழி கூறாது, உலகியல் கூறிப் 'பொருள் இது' என்று வற்புறுத்தினார் என்றுதான் கல்லாடர் கூறினார். மெய்ப்பொருட் கருத்துக்களை அதாவது சமய நுட்பங்களை அவர் சமயக் கணக்கர் மதிவழிக் கூற வில்லை; ஆனால் அவற்றையே அவர் உலகியல் வழியே கூறினார். உலகியல் முறையில் உண்மைப் பொருள் இதுவெனக் கூறினால், மக்கள் அதைக் கண்கண்ட உண்மையாகத் தழுவிக்கொள்வர் என்பது அவர் கருத்து. அவர் கருதியது விண் போகவும் இல்லை.

மக்கள் இயற்கை மதிநுட்பம் பெற்றால் போதாது;

> கல்லாதான் ஒட்பம் கழிய நன்றாயினும்
> கொள்ளார் அறிவுடை யார்

அப்படியானால் இயற்கை மதிநுட்பத்தோடு கல்வியறிவும் பெற்றிருந்

தால் போதுமா என்றால், திருவள்ளுவர் அதற்கும் மேலே மக்கள் உயர வேண்டுமென்று கருதிக்,

> **கற்றதனால் ஆய பயனென்கொல், வாலறிவன்**
> **நற்றாள் தொழாஅர் எனின்.**

எனக் கூறுகிறார். கல்வியறிவுக்கு மேற்பட்ட வாலறிவும் பெற வேண்டும் என்பது கருத்து.

அன்பும் அருளும்:

இனிப் பெறலரிய இத் தூய அறிவாகிய மெய்யுணர்வைப் பெற்ற பின், அது எல்லையில்லாததாதலின், ஒவ்வொருவரும் அதனில் ஒவ்வோரளவே பெற்றாலும் அந்த அறிவையே மேன்மேலும் கனிவித்துக்கொள்ளும் அன்புப் பதத்தையும் அருட் பதத்தையும் அடைய வேண்டுமென்பதும் அவர் எண்ணமாய் இருக்கிறது.

'அன்பு' என்பது பண்பு; 'அருள்' என்பது குணம்; 'பண்பு' என்பது அவரவர் நிலையறிந்து மனித இனத்துக்கு உதவியாய் நடந்துகொள்ளும் நிலை; 'குணம்' என்பது எல்லா உயிர்களிடத்தும் இரக்கங்கொள்ளும் இயல்பு!

அறச் செய்கை:

வாலறிவு இவ்வாறு அன்பும் இரக்கமுமாகக் கனிவதற்கு அவற்றின் அடிப்படையில் மன்பதைக்கும் அனைத்துயிர்க்கும் உதவியான செயல்கள் நிகழ்ந்துவர வேண்டும் செய்கைகளின் மூலமாகவே மேன்மேற் கனிவு நிலைகள் அமையும். அந்தகைய அன்புச் செய்கையும் இரக்கச் செய்கைகளும் 'அறம்' எனப்படும்; மனத்தால் நினைப்பதும், வாயாற் பேசுவதும் அறமாய் விடா. செயலாக நிகழ்வதே 'அறம்' என்று போற்றப்பட்டு வந்தது.

> " ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
> செல்லும்வா யெல்லாம் செயல் "

என்பர் திருவள்ளுவர். " அறம் செய விரும்பு " என்பர் ஔவையார். இவற்றில் 'அறவினை' என்பதும், 'செயல்' என்பதும், 'செய விரும்பு' என்பதும் அறச் செய்கையின் முதன்மை குறித்தல் தெளியலாம்.

" மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறன் " என்பதில், திருவள்ளுவர் 'மனத்தில் அழுக்கற்றிருக்கும் அவ்வளவே அறம்'

என்றுங் குறிக்கின்றுரே யெனின், செயலில் மன அழுக்குக்கூடாது என்பதற்காக அது கூறப்பட்டதேயன்றிச் செயலேயும் அதன் முதன்மையையும் மறுத்தபடியன்று; அறச் செயலில் மனத்தூய்மை முக்கியம் என்பது கருத்து, செயலற்ற மனத்தூய்மையைப் போற்றிய படியன்று! மனத்தது மாசாக மாண்டார் நீராடி மறைந்தொழுகு மாந்தராதல் கூடா தென்பதே அவர் எண்ணம்.

அன்பும் அருளும் அவ்விரண்டோடுங் கூடிய அறச் செய்கையும் வாழ்க்கையில் வேண்டும். இதனுலேயே அறத்துப்பால், திருக்குறளில் அன்புடைமை, அருளுடைமை என்னும் இரண்டையுங்கொண்டு திகழ்கின்றது. பரிபாடல் என்னும் இலக்கியத்தில், முருகக் கடவுளை நோக்கி நின்பால் வேண்டுவது,

''பொன்னும் பொருளும் போகமும் அன்று
அன்பும் அருளும் அறனும் இம்மூன்றும்''

என்று இப்பாகுபாடுகள் மிகச் சிறப்பாகக் குறிக்கப்பட்டன. நிலேயாதன வேண்டாம், அவை எவ்வளவு உயர்ந்தனவாயினும் வேண்டாம், நிலேக்கும் மனம் வேண்டும் என்பது இப் பரிபாடற் பாடலால் தேறலாம்.

வழிகாட்டி :

அன்பும் அருளுமாக உயிரறிவு கனிந்து அறச் செயல்கள் நிகழ்வதற்கு இயல்பாகவே அவ்வாறு கனிந்து அறத்தாற்றிற் செயல் நிகழ்த்தும் ஒரு முதற்பொருள் வழிகாட்டியாய் உயிர்களுக்கு விளங்கி வருகிறது. ஈண்டு அம்மெய்ப் பொருளேத் துணையாகக் கண்டவர் மற்று ஈண்டுவாரா நெறியில் தலைப்படுவர்.

திருக்குறள் என்னுந் தமிழ் மறை இங்ஙன மெல்லாம் சமயக் கருத்துக்களே உலகியல் முறையிற் கூறி மக்களே மெய்வழிப் படுத்துகிறது.

உன்னைத் திருத்து !

தமிழ்க்குடிமகன், எம். ஏ.,

தமிழ் விரிவுரையாளர், யாதவர் கல்லூரி, மதுரை.

உலக அரங்கில் ஒளிரும் மணிகளில் உருப்படியானதாய், உயர்வு மிக்கதாய், உண்மை நிலைக்க உழைத்த பெருமை உடையதாய் உள்ள ஒப்பற்ற மணியை, வள்ளுவரை உலகினுக்கே தந்து பெற்றது இந்த நாடு. இன்று அவரது உணர்வுகள், அவரது விருப்பங்கள் எந்த அளவுக்கு வேரூன்றிச் செழித்து வெற்றிக் கனிகளைத் தந்திருக்கின்றன என்று நினைத்துப் பார்க்கின்ற நேரம்.

கி. பி. 2000-ஆம். வள்ளுவன் தன் சிந்தனைகளைத் தொகுத்து முடித்து இரண்டாயிரமாண்டுகள் ஆகிவிட்டன. அவனது முதிர்ந்த பட்டறிவும், பரந்த சிந்தனையும், உயர்ந்த குறிக்கோளும் 1330இல் அடங்கி விட்டன.

அந்த அருங்குறளின் பெருமைகளைச் சிறப்பித்து வள்ளுவம் பிறந்த தமிழகத்தில் பல குறிப்பிடத்தக்க வேலைகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு பல்கலைக் கழகமும் குறள் ஆய்வுக்கென மூன்று இலக்கம் உருபாவைப் பெற்றிருக்கிறது. அது பெரும் பணி. மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு மட்டும் மாபயன் அளிக்கும் மாபெரும் பணி. கல்வி சிறப்புணரா மக்கள், கேட்டுப் புரிந்து கொள்ள நாட்டம் உடைய தாழ்நிலை மக்கள் – இவர்களோடு இலக்கியத்தேன் நாடும் தும்பிகள் ஆகிய அனைவர்க்குமே செவிச்சுவை, கருத்தின்பம், கடுமையை எளிமையாக்கித் தருவதால் ஏற்படும் புரிப்பு – இவை கிடைத்திட இன்று நாடெங்கும் கருத்தரங்குகளும் பட்டி மன்றங்களும் கணக்கிலடங்காமல் பெருகிவிட்டன.

முப்பாலில் சிறந்தது எப்பால்? – இப்படியொரு வினா. வள்ளுவர் பெரிதும் போற்றப்படுவதற்குக் காரணம் அவர் பாவலர் என்பதாலா? சிந்தனையாளர் என்பதாலா? அல்லது அறநெறியாளர் என்பதாலா? – இப்படி ஓர் நுணுகிய ஆய்வு. அருளுக்கும் பொருளுக்கும் மோதல். அறிவுக்கும் அன்பிற்கும் பூசல் ஏன்? ஆடவரும் மகளிரும் கூடத் தங்கள் சிறப்புக்கும் பெருமைக்கும் வள்ளுவரைச் சான்று காட்டிப் போரிடும் சிறப்பு. இத்தனையும்

நடைபெறுகின்றன. சூடான தருக்கங்கள்; சுவையான செய்திகள்; இன்று நாடு வள்ளுவச் சுவையைப் பல்வேறு வகையிலும் மாந்தி மாந்தித் திளைத்துக்கொண்டிருக்கிறது.

இவற்றிற்கிடையில் புதிய வினா ஒன்று புறப்படுகிறது. அந்த வினாவில் பொருள் இருக்கிறது; புரட்சி இருக்கிறது. மேலே கூறிய மோதல்களில் ஈடுபட்டிருக்கும் அனைவரும் வியந்து திரும்பிப் பார்த்துத் திகைக்கும் அளவுக்கு அதில் ஆழம் இருக்கிறது. அது சிலபேர்க்கு வரவு செலவுக் கணக்குப்போலத் தோன்றலாம். ஆனால் 'ஆகாறு' 'போகாறு' என்ற இரண்டையும் ஒரே சீராக வைத்திருப்பதே பெரிய வேலையல்லவா? 'ஆகாறு' என்பதன் கை ஓங்கிவிட்டாலும் தாவில்லை; போகாறு வேகம் பெற்று 'ஆகாற்றை' மேய்ந்துவிடும் அளவுக்கு வந்தால் விளைவு என்ன? அதையும் வள்ளுவனே கூறிச் சென்றிருக்கிறான். அதனால், எழுந்திருக்கும் புதுவினா ஏற்புடைத்தானதே.

அதிலும் இந்த ஆண்டு வள்ளுவர் இரண்டாயிரம் – காந்தியார் நூறு – அண்ணா - அறுபது இந்த மூன்றும் ஒன்று சேர்ந்த மிகச் சிறப்பான ஆண்டு. காந்தியாரின் சிறப்புக்களைப் பேசத்தொடங்கும் மேடைகள் அவரது கொள்கைகள் - அவற்றின் வெற்றி தோல்விகள் இவற்றிலே ஆழ்ந்து விடுகின்றன. அண்ணாவின் வெற்றி இன்று அரசோச்சி வருவதால் காந்தியார்க்கு நேர்ந்த சிக்கல் அண்ணாவுக்கு எழவில்லை. அதனால் எத்துறை புகுந்தாலும் தன் முத்திரையைப் பொறித்த அண்ணாவின் துறைகளில் அழுத்திய முத்திரை எதில் என்ற ஆராய்ச்சியே நடக்கிறது.

ஆனால் வள்ளுவனுக்கோ நூலின் உள்நோக்கிப் போகும் ஆய்வு வினாக்களையும் அழுத்திக்கொண்டு மேலெழுகின்றது ஒரு வினா· அதுதான் :

'வள்ளுவர் நெறி வென்றதா? தோற்றதா?' ஏன் திடீரென இந்த ஐயம்? சிலபேர் வியப்போடு இப்படிக் கேட்கிறார்கள். இந்த வினாவே வள்ளுவனை இழிவுபடுத்துவதாகும்? சிலபேர் இப்படித் தெரிவிக்கிறார்கள்.

இந்த ஐயம் திடுமென வெடித்ததன்று. நெடுங்காலமாகப் புகைந்து கொண்டிருந்தது. இன்று நெருப்பாகத் தெரிகிறது. வள்ளுவனைப் பெற்ற நாம் அவரால் பெற்ற பயன் என்ன என்று நம்மை நாமே அளந்து பார்த்துக் கொள்வதிலே எந்தத் தவறுமில்லையே! தன் குற்றம் நீக்குதல், தன்னைத் தானே அறிதல் இவை வள்ளுவர் நெறிகளல்லவா?

அதனால் இந்த இரண்டாயிரமாண்டில் வள்ளுவர் நெறியின் வெற்றியின் அளவும், தோல்வி கண்டிருந்தால் அப்படி மன்பதையில் சோரம் போய்விட்ட பகுதிகளின் அளவும் கணக்கிடப்பட்டு, ஒப்பிட்டுப் பார்க்கப்பட வேண்டியவைதான்.

இந்த நேரத்தில் இந்த வினவின் இருபகுதிகளையும் பற்றிய நுண்ணிய ஆய்வைச் சற்று ஒதுக்கி விட்டு, இப்படியொரு வினா இரண்டாயிரம் ஆண்டுகட்குப் பின்னர் எழும் என்று வள்ளுவன் எதிர்பார்த்திருப்பானா என்பதை எண்ணிப் பார்த்தால் அது நமது சிந்தனைக்குப் புதிய விருந்தளிக்கும் என்று நினைக்கிறேன்.

உண்மையைச் சொல்கிறேன்; அடித்துச் சொல்கிறேன், இந்த வினா ஒவ்வொரு கால கட்டத்திலும் கட்டாயம் எழும் என்பது வள்ளுவனுக்கே கட்டாயம் தெரியும். இந்த வினா எழும் என்பது தெரிந்துதான், அதற்கு — வெற்றிக்கும் தோல்விக்கும் — காரணமும், சான்றும் தேடிப் புறப்படுவார் திகைத்துத் திண்டாடக் கூடாது என்றுதான் வள்ளுவனே அந்த வினாவிற்குரிய விடையையும் சொல்லாமல் சொல்லிவிட்டுப் போயிருக்கிறான்.

அப்படியா! இந்த வினாவுக்கு விடையே திருக்குறளில் இருக்கிறதா? சொல்லுங்கள். வெற்றியா தோல்வியா? பூவா தலையா? இரண்டிலொன்று தெரிந்து கொள்ளத் துடிக்கிறோம். ஆனால், நம் துடிப்பைக் கொஞ்சம் அடக்கிக்கொண்டு சற்றுத் துருவிப் பார்க்க வேண்டும். ஒரே வரியில் விடை சொல்லக் கூடிய அளவுக்கு இடம் காட்டாமல், அந்த விடையை ஒளித்து வைத்து விட்டுச் சென்றிருக்கிறான் திறமை மிக்க வள்ளுவன். விடையை மூன்றாகப் பிரித்து மூன்று இடங்களில் ஒளித்து வைத்தான். ஆனாலும் அடையாளம் கண்டு கொண்டு மூன்றையும் ஒட்டவைத்து முழு விடை காணும் அளவுக்கு ஒரு குறியும் காட்டியிருக்கிறான்.

அந்த வேலையை இப்போது தொடங்குவோம். அதுவே இந்தக் கட்டுரை.

வள்ளுவன் இந்த உலகைப் பற்றி நன்கு தெரிந்தவன்; பட்டறிந்து, பட்டறிந்து உலகியலறிவு என்பதை முழுமையாகப் பெற்றவன். அவன் இந்த உலகு செப்பம் பெற, சீரிய வாழ்க்கை காண மாந்தனை விலங்காகக் காட்டும் தீய உணர்ச்சிகளை அவனிடமிருந்து போக்க வேண்டும் என்று விரும்பினான். தன் வாழ்வின் நோக்கம் உலகம் திருந்துவதற்கு உருப்படியான வழியைச் சொல்வது தான் என்று நினைத்தான். ஒருவனை முன்னிறுத்தி அவனுக்கு அறிவுரை சொல்லித் திருந்த நினைந்தால் உடனே என்ன செய்

கிறோம்? அவனது நல்லியல்புகளைப் புகழ்ந்து கொண்டே குறைகளை நயமாகச் சுட்டிக் காட்டவேண்டியுள்ளது. அப்பொழுதுதான் அவனது மனமும் குளிர்கிறது. திருந்தலாம் என்ற விருப்பமும் பிறக்கிறது. வள்ளுவன் இந்த உள நூல் அடிப்படையில்தான் தன் சீர்திருத்தப் பணியைச் செய்திருக்கிறான்.

வள்ளுவன் அறம் பாட வந்த அறிஞன்; அறநெறி என்றால் என்ன என்பதை உலகிற்குத் தெளிவாக உணர்த்திவிட வேண்டும் என்று துடித்தவன். அறத்துப்பால், மாந்தனிடம் காணும் சிறப்பியல்புகளை அவனது உச்சி குளிரப் பாராட்டுவது; தூக்கிப் பேசுவது. இல்லறம் என்பது மாந்தனுக்கு இயற்கையே அமைத்துக் கொடுத்த ஒரு துறை. அதனால் தானே ஆண், பெண் தோற்றம்! இல்லறத்தின் சிறப்புப் பற்றி நுணுகிப் பேசி, மாந்தன் காட்டும் அன்பின் சிறப்பு, விருந்து மாண்பு, இன்சொல் இனிமை, நடுவு நிலைமையில் ஏற்படும் மன அமைதி, அடக்கத்தில் தோன்றும் பெருமிதம் – இவ்வளவும் சொல்லி அவை அத்தனைக்கும் உச்சமான, ஒரு வகையில் இத்துணை பண்புகளையும் உள்ளடக்கக் கூடிய ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்று கூறிவிட்டார். பண்புகளின் பிறப்பிடமாக உள்ள மாந்தன் ஏன் சிலநேரம் கீழ்மனம் படைத்தவனாகிறான்? இதை எண்ணுகிறார். மாந்தனின் பண்புகளைப் பாராட்டி அவனைக் குளிரவைத்து விட்டு மெல்ல அவன்றன் குறைகளைச் சுட்டுகிறார். பிறனில் விழையாதே! என்கிறார். 'ஒழுக்கம்' வரை உவந்து கேட்ட மாந்தன், ஒரு குறையைச் சொன்னதும் வெகுண்டெழுகிறான். வள்ளுவன் புரிந்து கொண்டான். உடனே பொறுமையின் பெருமை பற்றிப் பேசினான். மாந்தன் வாயை மூடிக் கொண்டான். அடுத்து வள்ளுவனின் அடுத்த தாக்குதல், பொறாமை, திருட்டுத் தன்மை, புறங்கூறல், வெட்டிப் பேச்சு – ஆகிய குறைகளைச் சற்று வேகமாக அடுக்கிவிட்டு 'மறந்தும் பிறன் கேடு சூழற்க' என்று அன்போடு கேட்டுக்கொள்கிறான்.

மாந்தன் ஓரளவு பக்குவமான மனநிலையைப் பெற்றுவிட்டான் என்று தெரிந்ததுமே வள்ளுவன் அவன் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகளைச் சுருக்கத் தொடங்குகிறான். ஒப்புரவறி! ஈகை வேண்டும்! அப்பொழுதுதான் புகழ்வரும்! அருள் வேண்டும்; அது இருந்தால் புலால் மறுக்கலாம். உலகில் துறவு வாழ்வும் சரிசம இடம் பெறுவது என்பதை மறவாமல் தவமும் செய்யலாம் என்று கூறி அது தொடர்பான ஒழுகலாறுகளை உரைத்து விட்டான்.

இவ்வளவு அறநெறிகளே போதும் என்று கருதிய வள்ளுவன் மாந்தனை விட்டு அப்பால் செல்கிறான். உட்கார்ந்து எண்ணிப்

பார்க்கிறுன். அவற்றைச் சொல்லிவிட்டான்; இனி உலகில் எந்தத் தவறும் நடக்காது என்று முழு நம்பிக்கை கொள்கிறுன். சிலநாள் கழித்துப் பார்த்தால் அவன் எவையெவை கூடாவென்று அழுத்தந் திருத்தமாகக் கூறினுனே அவையெல்லாம் அந்த ' மா ந் த ன்' தலைமையிலேயே வேகமாக நடைபெறுகின்றன என்று கண்டான். வள்ளுவனுக்கு அழுகையே வந்துவிட்டது. ' அடடா! வாழ்க்கை பற்றிச் சொன்னேம். மாந்தன் மெய்யுணர்ந்திருப்பான் என்றல்லவா நினைத்தோம்! எல்லாம் விழலுக்கு நீர்பாய்ச்சியது போலாகிவிட்டதே! இனி, மாந்தன் திருந்தவே மாட்டானு?' – வியப்பும், வினவுமாக வள்ளுவன் தடுமாறினுன். பிறகுதான் அவனே மெய்யுணர்த்தான்.

'ஆம்! மாந்தன் திருந்தமாட்டான்' உலகைத் திருத்தவேண்டும் என்ற அவாவே வள்ளுவனுக்கு இல்லாமல் போய்விட்டது. அதனுல் தான் மாந்தனுக்காக அறத்துப்பாலைத் தொடங்கிக் கடைசி மூன்று அதிகாரத்தினையும் தன் மனநிலையை எதிரொலிப்பதற்காக எழுதிக் கொண்டானே என்று எண்ணத்தோன்றுகிறது. அதனுல்தான் 'மெய்யுணர்தல்' 'அவா அறுத்தல்' என்ற தலைப்புக்கள் அமை கின்றன. தன் அறவுரைகளைக் கேட்டு மாந்தன் திருந்தவில்லையே, தவறுகளை மேலும் மேலும் செய்துகொண்டு போகின்றுனே என்ற மனவருத்தம் பெரிய சோர்வாக உருவெடுக்கிறது. இனிமேல் இந்த உலகம் அப்படியே போய்விட்டுப் போகிறது, நான் இவ் வளவு பாடுபட்டுப்பக்குவமாகச் சொல்லியும் கேட்கவில்லையே இந்த உலகம் என்று வேதனையடைகிறுன். அதனுல் 'சரி இனி எதுவும் விதிப்படிதான் நடக்கும்' என்ற முடிவுக்கு வந்துவிட்டான்.

அறத்துப்பாலை முடிக்கும்பொழுது வள்ளுவன் மனச் சோர் வோடு உள்ளத்தில் கப்பிக்கொண்டிருக்கும் வேதனையோடு, தன்னுல் ஆவது எதுவுமில்லை என்ற நினைவோடு தன்னம்பிக்கையிழந்துதான்

'ஊழிற் பெருவலி யாவுள? மற்றென்று
சூழினும் தான்முந் துறும்!' என்று முடிக்கிறுன்.

மதிவலிமை, அறத்தில் பற்று தன் சொல்லைக் கேட்டே மாந்தன் திருந்துவான் என்ற நம்பிக்கை — இவை அத்தனையும் பயனில்லை; விதி வழியே உலகம் செல்வதைத் தடுக்க முடியாது என்றல்லவா வள்ளுவன் கூறியிருக்கிறுன். இதை நன்ருக எண்ணிப் பார்க்க வேண்டும்.

அறம் உரைக்க வந்த நிலையில் தன்னம்பிக்கை யிழந்து விட்ட வள்ளுவனுக்குத் திடுமென ஓர் எண்ணம் உண்டாகிறது. தனித் தனியாக மாந்தனைத் திருத்துவது நல்லது என்ருலும் அது முழு வெற்றியளிக்காது. அதனுல் பொதுவாழ்வில் அரசு அதன் ஆணை

வலிமை இவற்றோடும் பொருளாட்சியையும் செம்மைப்படுத்தி விட்டால் நாடு நலிவு நீங்கிப் பொலிவு பெற்று விளங்கும். அந்தப் பூரிப்பான நிலையில் தனி மாந்தரின் சிறு குறைகள் தென்படாமலே மறைந்துவிடும் என்று நம்பிக்கை கொண்டான். உடனே அரசியலில் இறங்கிவிட்டான். இறைமாட்சியைப் புகழ்ந்து விட்டு நாடு முழுதும் நல்ல கல்வியைப் பெற முயற்சி செய்கிறான். பல கூட்டங்கள் நடத்திப் பலரை உரையிலும் பாட்டிலும் உரைக்கச் செய்து கேள்விச் செல்வத்தைப் பரப்புகிறான். அறிவு பரவுகிறது. நாட்டில் ஏற்படும் குற்றங்களை அவ்வப்போது கடிந்து கொள்கிறான்.

இவரது இந்த முயற்சிக்குப் பெரியாரின் துணை கிடைக்கிறது. அரசியலில் ஊதிய வேட்டைக்காக ஒட்டிக்கொண்டிருந்த சிற்றினம் ஓடி ஒளிகிறது. பிறகு தெளிவான செயற்பாடுகள் மேற்கொள்ளப் படுகின்றன. நாட்டில் சிலபேர், தங்கள் ஊதிய நோக்கிற்கு இடமில்லையே என உருகிய கொள்ளையர் வள்ளுவனை, சான்றோனைக் கண்மூடி எதிர்க்கின்றனர். வள்ளுவன் இருவர்தம் வலிமையும் எந்த அளவு என்று அளந்தெடுக்கிறான். காலம் இடம் பலித்து திட்டங்களில் தெளிவும் செய்து கொண்டு வினையாற்றுகிறான். அரசியலில் வள்ளுவன் விரைவாகப் புகழோடு வளர்கிறான். செங்கோல் செலுத்துகிறான். கொடுங்கோலை மனத்தாலும் நினைக்கவில்லை, சட்டங்களை நிறைவேற்றுவதிலும் வெறி காட்டாமல் தெளிவான அமைதியே காட்டுகிறான். சில நேரங்களில் கண்ணோட்டமும் கருதுகிறான். ஒற்றர் துணையுடன், ஊக்கம் தளராமல், மடியின்றி, ஆள்வினை கொண்டு அரசியலிலே வெற்றி காண்கிறான்.

இவன் தலைமையில் சிறந்த அமைச்சரவை அமைகின்றது. அரசின் கொள்கைகளைச் செயற்படுத்தச் சொல்வன்மை பயன்படுத்தப் படுகிறது. வினையில் தூய்மை, திட்பம், செய்யும் வகை தெரிந்து, தூதுவர்களைக் கொண்டே நாட்டின் நிலையுணர்ந்து ஆட்சி செய் கிறான். இந்நிலையில் கூட இருந்தே யாரும் குழி பறித்து விடாமல் தன்னைச் சேர்ந்தொழுகுவரிடம் அளவோடு, தொடர்பு வைத்துக் கொள்கின்றான். பின் நாட்டின் வினை வலிமைப்படுத்தி வைத்துக் கொண்டு மக்களின் பொருளியல் வாழ்வைச் சரி செய்யப் புறப்படு கிறான், படைபலத்தைச் செம்மை செய்து, நட்பு, பழைமை போற்றுதல் ஆகியவற்றில் மனந்தோய்ந்த வள்ளுவனுக்கு அவனையறியாமலே எதிர்ப்புக் கிளம்புகிறது. தீநட்பும், கூடாநட்பும் ஒதுக்கியதால், அரசியல் புல்லுருவிகளான பேதையர் சிலர் ‘இகல்’ பெருக்கி வருகின்றனர். உட்பகை ஒருபுறம் வளர்கின்றது.

இவற்றைத் துச்சமெனத் தள்ளி, வள்ளுவன் குடிகாயலியல் சீர்திருத்தத்தில் இறங்குகின்றான். சில ஆடவர் பெண்வழிச் சார்ந்து

போகும் பேதைமையைக் கண்டிக்கிறான். வரைவின் மகளிரால் ஏற்படும் ஒழுக்கக் கேடுகளைப் போக்கப் பாடுபடுகிறான். கட்குடியை நிறுத்த முயற்சி மேற்கொள்கிறான். சூதாட்டத்தைத் தடை செய்கிறான். நாடெங்கும் உடல் நலத்தோடு அனைவரும் உள நலமும் பெற வேண்டுமென்று மருந்தகங்களை நிறுவுகிறான்.

வள்ளுவனுக்கே ஒரு பெரிய மனநிறைவு. தனி மாந்தனைத் திருத்தும் முயற்சியில் சோர்வு ஏற்பட்டாலும் பொதுவாழ்வில் மக்களுக்காகப் பாடுபடுவதிலே பூரிப்பு ஏற்படுவதை உணர்ந்தான். அரசியல், பொருளியல், குமுகாயவியல் சீர்திருத்தங்களில் நாடு பெரிதும் செம்மையுற்று விட்டதாக நினைத்து உளம் மகிழ்ந்தான். குடிமையின் சிறப்பு, மானத்தின் மாண்பு, சான்றாண்மையின் உயர்வு பண்பின் பாங்கு ஆகியவற்றை உரத்த குரலில் உரைக்கின்றான். எல்லாம் செய்துவிட்ட மனநிறைவோடு 'உலகத்தார்க் காணி'யாகிய உழவனைப் போய்ப் பார்க்கிறான். அவன் உழைக்கிறான். மாடாய் உழைக்கிறான்; ஓடாய்த் தேய்கிறான். ஆனால், ஊடுருவிப் பார்த்தால் வள்ளுவனுக்கு இப்போதுதான் தெரிகிறது, நாட்டில் வறுமைப் பிணி அனைவரையும் வாட்டிக் கொண்டிருப்பது அப்படியானால் தான் செய்த அரசியல், பொருளியல், குமுகாயவியல் பணிகளின் விளைவு ..? திடுக்கிட்டான். நல்குரவு நாட்டில் வேரூன்றி நிற்கிறது. இரத்தல் தொழில் எங்கும் விரிந்து நடக்கிறது வைத்துக் கொண்டே இல்லையென்றும் வன்கண்ணர்கள் கல்மனத்தோடு காட்சியளிப்பதை வள்ளுவன் பார்க்கிறான். உள்ளம் வெதும்புகிறான். இதுவரை தன் உழைப்பெல்லாம் உருப்படியான பயன் விளைக்கவில்லை. சிலபேர் நாட்டின் செல்வத்தைச் சேர்த்துக் கொண்டனர். வாழ்வை உறிஞ்சி விட்டனர். பலபேர் நடுத்தெருவில் இறங்கிப் பல்லிளித்து வாழும் நிலைக்கு வந்து விட்டனர். இந்நிலைக்கு யார் காரணம்? படைத்தவன் குற்றமோ என்று நினைத்தான் வள்ளுவன் அவன் மேல் பாய்ந்தான். அந்த உணர்ச்சி தணிந்ததும் வள்ளுவன் உண்மை உணர்ந்து விட்டான். நாட்டில் எங்கு பார்க்கிலும் மேலோங்கி நிற்பது கயமை; கொடிகட்டிப் பறப்பது கயமை.

இதற்குமேலும் அவன் பொது வாழ்வில் நீடிக்க விரும்பவில்லை; புளித்துப் போய்விட்ட, தன்னையே சாற்றைப் பிழிந்து விட்டுச் சக்கையை எறிந்தது போலத் தள்ளிவிட்ட பொதுவாழ்வை, மன்பதையைச் சீர்திருத்தும் பணியை உதறிவிட்டான். அவன் பொதுவாழ்வை விட்டு விட்டு வெளியே வரும்போது இப்படி முணு முணுத்தான்,

'ஏற்றிற் குரியர் கயவர்ஒன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து'

பொருட்பாலை ஆர்வத்தோடு தொடங்கிய வள்ளுவன், எவ்வளவோ முயற்சி செய்து விட்டு 700 பாக்களும் இயற்றிய விட்டு இறுதியில் கயமை கண்டு மனம் கைத்து எரிச்சலோடு முடிக்கிருன் என்பதை மறந்து விடக் கூடாது.

அறத்துப் பாலின் முடிவில் தன்னம்பிக்கை யிழந்து, பொருட்பாலின் இறுதியில் எரிச்சலுற்ற வள்ளுவன் ஊரை, உலகைத் திருத்த முற்படுவதை விடத் தன்னை, தன் மனைவி மக்களைச் செம்மைப் படுத்தி இல்லறத்தை இனிய அறமாக்கினுலே போதும் என்று மன நிறைவு கொண்டான். தனியொரு குடும்பம் பண்பில் மிளிர்ந்து, அறிவில் ஒளிர்ந்து, இன்பத்தில் திளைந்தாலேயே நாடு உருப்பட்டு விடும் என்று நம்பினுன். இதுகாறும் நாடு, நாடு என்று அலைந்து நலிந்த வள்ளுவன் வீட்டின் பக்கம் கவனம் செலுத்தினுன். அவன் நினைத்தபடியே அவனது இல்லறம் சிறப்பாக அமைந்தது. அற முயற்சியில் அவன் அடைந்தது சோர்வு. பொருள்முயற்சியில் அவன் எய்தியது எரிச்சல். ஆனுல் இல்லறம் சுவைத்து இன்பத்துப் பாலை முடிக்கும்போது அவன் அடைந்தது இன்பம்; ஆம்; இன்பம் எல்லை யற்ற இன்பம்.

அதனுல்தான் வள்ளுவன் காமத்துப்பாலை 'இன்பம்' கொண்ட பூரிப்போடு முடிக்கிருன்.

'ஊடுதல் காமத்திற்கு இன்பம்; அதற்குஇன்பம்
கூடி முயங்கப் பெறின்'

இதிலே 'இன்பம்' 'இன்பம்' என்றே இருதடவை உரைப்பதைக் காணலாம். தனி வாழ்வில் அவன் பெற்ற மனநிறைவில் அவனை யறியாமலே இன்பம் இரட்டிப்பாகிறது.

முடிவு :

ஊரைத் திருத்துமுன் உலகைத் திருத்துமுன்
உன்னைத் திருத்தடா தமிழா! முதலில்
உன்னைத் திருத்தடா தமிழா!

— பெருஞ்சித்திரன்

குறளின் உருக்கம்

திரு. ல. சண்முகசுந்தரம்

குறளாசிரியர் மனிதனை மிக மிக அனுபவித்தார். சிறிது சிறிதாக வளர்த்து வகுத்துக்கொண்ட அவன் வாழ்க்கையையும், வாழ்க்கையிலுள்ள பல்வேறு துறைகளையும், பார்த்துப் பார்த்து அதிசயப்பட்டார்.

மனிதனால் உண்டாக்கப்பட்ட மனித வாழ்க்கையிலுள்ள ஒழுங்கு, நியதி, கட்டுக்கோப்பு, மரியாதை, வரம்பு இவை ஒவ்வொன்றும் குறளாசிரியரை ஆனந்தப்படுத்தின.

அடடா, நெறிமுறைகளுக்குள்பட்ட மனித வாழ்க்கை, எவ்வளவு அழகாக இருக்கிறது, என எண்ணி எண்ணிப் பரவசமடைந்தார்.

மனிதனிடந்தான் எவ்வளவு அன்பு இருக்கிறது என்று மயங்கினார். மற்றவர்களை ஆதரித்தும், பாராட்டியும், உபகாரம் செய்தும் மனிதன் வாழ்க்கை நடத்துகிற விந்தையைக்கண்டு உருகினார், அதுமட்டுமா, இந்த அன்புணர்ச்சி, மனைவி என்றும், மக்களென்றும், சுற்றமென்றும், உடைமை என்றும் பந்தபாசத்தோடு பின்னிப் பிணைத்து செயல்படுகின்றதைப் பார்த்து வியந்தார். பதம்பட்ட குடும்ப வாழ்க்கையை நடத்திக்கொண்டே, எல்லாம் கடவுள் செயல், நம்முடையது என்று இங்கு ஒன்றுமில்லை என்பதை உணர்ந்து, அருளோடும், தூய்மையோடும், மனிதன் வாழ்க்கை நடத்துகிற அற்புதத்தைக் கண்டு மயங்கினார்.

மனிதனுடைய உழைப்பும் செயல் திறமையும் அளவிடமுடியாதபடி இருக்கிறதே என்று மனம் நெகிழ்ந்தார்.

பாலைவனமாக இருந்த பூ உலகை எப்படித் தோப்பும் வயலும் பூந்தோட்டமும் நிறைந்த பூ உலகமாக மனிதன் மாற்றிவிட்டான்? உற்பத்தியான பொருள்களைக் கொடுத்துவாங்குவதில், வாணிக முறையை எவ்வளவு ஒழுங்காக வளர்த்து வந்துள்ளான் என்று வியந்தார்.

வாழ்க்கையில், ஆனந்தம் பெறவேண்டும் என்கிற நோக்கத்தோடு, கலைகளை உண்டாக்கி வளர்த்து வந்திருக்கிறான். கோயில்

களை உண்டாக்கி பக்தியை வளர்த்து விழாக்களைப் பெருக்கி இருக்கிறான். பல்வேறு சடங்குகளையும், விழாக்களையும் ஏற்படுத்தி இருக்கிறான். அவ்வளவையும் ஞாபகத்தோடுவிடாமல் தொடர்ந்து செய்து வருகிறான்.

எல்லாவற்றிற்கும் மேலாக, பாஷை என்று ஒன்றைக்கண்டு பிடித்து, அதை வளர்த்து வந்திருக்கிறான். ஒரு சொல் எந்தப் பொருளை உணர்த்துகிறதோ, அந்தச் சொல், அந்தப் பொருளை, நீண்ட காலத்திற்குத் தொடர்ந்து உணர்த்த வேண்டியும் அவன் உடன்பட்டிருக்கிறான்.

தண்ணீர் என்பது திருவள்ளுவர் காலத்திலும் தண்ணீரைத் தான் உணர்த்தியது. அகத்தியர் காலத்திலும் தண்ணீரைத்தான் உணர்த்தியது. தொண்டை மண்டலமானாலும் சரி, குமரிக்கோட்டமானாலும் சரி, தண்ணீர் என்பது தண்ணீரை உணர்த்தாமல் போனதில்லை.

எந்தப் பிராணியாவது தனக்கே சொந்தமாக ஒரு மனைவியை வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்துகிறதா? கற்பு என்னும் புனித தத்துவத்தைப் பேணி வளர்க்கிறதா? திருவிழா நடத்தி மகிழ்கிறதா? தன்னுடைய ஆனந்தத்தையும், அனுபவத்தையும் வெளிப்படுத்துகிறதா?

மனைவி என்றும், தாய் என்றும், அக்காள் என்றும், மதினி என்றும் வகுத்துக்கொண்டு முறையோடு உறவாடுகிறானே மனிதன். இந்த உறவு எந்தப் பிராணிக்கும் உண்டா?

அவ்வளவும் ஒழுங்கிலிருந்தும், வரம்பிலிருந்தும் உண்டானவை.

இந்த ஒழுங்கும், முறையும் தவறுகிறதானால் தனி மனிதனும், குடும்பமும், சமுதாயமும், சீரழிந்து போகின்றன. நாசமடைகின்றன. ஒழுக்கத்தை ஒவ்வொரு மனிதனும் உயிருக்கு உயிராகப் பாதுகாக்கிறான். அதுவும் காணாதென்று அரசு என்று ஒன்றை ஏற்படுத்தி அதற்குப் பலதோரணைகளையும், அதிகாரங்களையும் வழங்கி, ஒழுக்கத்தை மனிதன் காப்பாற்றி வருகிறான்.

குறளாசிரியர் மனிதன் மனித வாழ்க்கை, ஒழுக்கம், ஒழுக்கத்தைப் பேணிப் பாதுகாக்கும் பக்தி அவ்வளவையும் கண்ணாரக்கண்டு அனுபவித்தார். அவருடைய அனுபவமும், ஆனந்தமும் தமிழோடு சேர்ந்தது குறள்களாக மலர்ந்தன.

ஒவ்வொரு குறள் மலரிலும் உள்ள அனுபவ மணத்தையும், ஆனந்தத்தேனையும் நாம் பெறவேண்டும், அல்லாத பட்சம் பதவுரையும், கருத்துரையும் இலக்கணக் குறிப்புந்தான் மிஞ்சும். குறளும் தமிழும் விலகிவிடும்.

இனி குறளாசிரியருடைய அனுபவம் என்ன என்பதைச் சிறிது பார்க்கலாம். குறளாசிரியரின் அனுபவம் தமிழொடு தமிழாகக் கலந்து நடனமாடுவதையும் சிறிது பார்க்கலாம்.

பிரபஞ்சத்திலுள்ள பொருள்களிலெல்லாம் சிறந்த பொருள் மனிதன். மனிதனிடத்தில்தான் மனம் என்கின்ற அற்புத தத்துவம் இருக்கின்றது. அனுபவம், ஆனந்தம், பகிர்ந்து கொள்ளுதல் என்பவை எல்லாம் மனிதனிடம் உள்ள காரியங்கள்.

மனிதன் கவலை யில்லாமல் வாழவேண்டுமானுல் செல்வம் இருக்க வேண்டும். செல்வம் அதிகமாக இல்லாவிட்டாலும் குற்றமில்லை. வாழ்க்கையை நடத்துவதற்கு ஏற்ற வசதிக்காகவேனும் இருக்க வேண்டும்.

செல்வம் இல்லாவிட்டால் வாழ்க்கையை முறையோடு நடத்த முடியாது. உற்ருர் உறவினர்களோடு கலந்து உறவாட முடியாது. மனத்துக்கு உகந்த செயல்களைச் செய்யவும் முடியாது.

அதனுல் ஆனந்தம் இல்லாமல் கசந்து விடுகிறது வாழ்க்கை.

வறுமை என்பது வந்துவிட்டால், மனிதன்பாடு சங்கடந்தான். அதாவது ஒவ்வொரு நாளும் அடுத்த வேளைச் சாப்பாட்டிற்கு என்ன வழி என்கிற நிலை மனிதனுக்கு வந்துவிட்டால், அவன் என்ன செய்வான் ?

அருமை மனையாளுக்குச் சேலையில்லை என்ருல் வாங்கிக்கொடுக்க முடிகிறதில்லை. அன்புக் குழந்தை நோயால் எமனேடு போராடிக் கொண்டிருக்கிறபொழுது மருந்துவம் செய்ய முடிகிறதில்லை. பெற்ற தாய்க்குத் தேவையான பண்டத்தை கடைசி வேளையில் அவள் வாய் திறந்து கேட்டும் வாங்கிக் கொடுக்க முடியவில்லை. இத்தகைய வறுமையில் உழல்கிற ஒருவன் ஏன் மனிதனுகப் பிறந்தோம், எதற்காக இந்த உயிரை வைத்துக் கொண்டிருக்கிருேம் என்று துடிப்பது இயற்கைதான்.

ஏனைய பிராணி ஒன்றுக்கும் இத்தகைய துன்பம் இல்லை. வறுமையின் காரணமாக மனிதன் மட்டும் அனுபவிக்கிற இந்த வேதனையைப்போல் உலகில் எதுவும் இல்லை என்று நிச்சயமாகச் சொல்லி விடலாம்.

வறுமைக்கு ஆளாகி மனிதன் படுகிறபாட்டைக் குறளாசிரியர் பார்த்திருக்கிருர், பார்த்துப்பார்த்து, அனுபவித்து இருக்கிருர்.

உலகத்தில் எத்தனையோ கொடுமைகள் இருக்கின்றன, ஆனல் வறுமையால் விளையும் கொடுமையைப் போல், வேறு ஒரு கொடுமையும் இல்லை என்று வியந்து விடுகிருர் குறளாசிரியர்.

அந்த வியப்பைத் தமிழ் எவ்வளவு நயமாக எடுத்துப் பரிமாறுகிறது என்று பாருங்கள்.

> "இன்மையின் இன்னது யாதெனின் இன்மையின்
> இன்மையே இன்ன தது"

பாடலைப்பாடப்பாட நாவில் நறுமணம் கமழ்ந்து கொண்டே இருக்கும். மனத்தில் ஆனந்தமானக் கிறுகிறுப்பு உண்டாக்கிக் கொண்டே இருக்கும். மனத்தையும், நாவையும் விட்டுக்குறள் அகலவே அகலாது.

சொற்களுப், சொற்களைத் தாளத்தில் வைத்துக் காட்டுகிற நடனமும் அனுபவத்திற்கு வேகந்தருகின்றன. ஒளியைக் கொடுக்கின்றன.

குறளைப் பாடப்பாட மனத்தைவிட்டு வறுமை நீங்கிவிடும். கொடுமையும் நீங்கிவிடும். ஆனல் தாளமும் நடனமும் சேர்ந்து வார்த்தைகளை தெய்வ ஒலியாக மாற்றுகின்ற அற்புதம் மனத்தில் குடிகொண்டு விற்றிருக்கும்.

இனிவேஞெரு பாடலைப்பார்க்கலாம். வறுமையின் காரணமாக ஒழுக்கம் கெட்டுவிடும். [செல்வத்தின் காரணமாகவும் ஒழுக்கம் கெடுவது உண்டு] பொய்சொல்லாதவன் பொய்ச்சாட்சி சொல்லத் தயாராக இருப்பான். களவு செய்யப்பயந்தவன் கொள்ளைக் கூட்டத்தில் சேரவேண்டுமாஞலும் சேரத்தயார்.

வஞ்சகம், சூது, கொடுமை அவ்வளவும் வெட்கமில்லாமல் வளர்ந்து வரும்.

நல்ல பண்புகள் எல்லாம் தேய்ந்து மறைந்துபோகும். பாசம் விலகிவிடும். அன்புவறண்டுபோகும். நீதிதடுமாறும்.

எல்லாவற்றிற்கும் மேலாகக் கற்பு என்பது செயலிழந்துபோய் விடும்.

இத்தகைய வறுமை சமுதாயத்தில் பெருகிவிட்டாலோ, மேலே குறிப்பிட்ட ஒழுக்கக்கேடுகள் அவ்வளவும் ஆதிக்கம் பெற்றுவிடும்.

அவ்வளவுதான், குழப்பமும், கலவரமும், ஏற்பட்டுகொண்டே இருக்கும் பலவந்தமும், தடித்தனமும் அதிகாரம் பண்ண ஆரம்பித்து விடும்.

குழப்பங்களும், கொடுமைகளும் சமுதாயத்தில் ஏற்படாமல் பாது காப்பதற்காகத்தான், அரசு என்கிற ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறது.

தப்பித் தவறி, சமுதாயத்துள் குழப்பமும், தடித்தனமும் ஏற்பட்டால், அவற்றை அடக்கி, ஒடுக்குவதற்கும், அழித்துவிடுவதற்கும் கூட, அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

நாட்டையும், மக்களையும் பாதுகாக்கவேண்டிய அரசனே முறை தவறுபவனுக வாய்த்துவிட்டால், தடியடிக்காரனுக மாறிவிட்டால், வேறு என்ன செய்யமுடியும்?

நல்லவர்களும், மனச்சாட்சியுள்ளவர்களும் ஒடுங்கிவிடவேண்டியதுதான். பொய்யர்களும், கயவர்களும் உயர்வு பெறுவார்கள்.

கொள்ளையும், கொலையும் தாராளமாக நடைபெறும். நேர்மையானவர்களும், ஒழுங்கீனத்தை வெறுப்பவர்களும் பாதிக்கப்படுவார்கள்.

அந்தக் கொடுங்காலத்தில் தரித்திரர்களுக்குப்பயம் இருக்காது. துன்பமும் நேராது. பயமும், துன்பமும் செல்வம் உடையவர்களுக்குத்தான். அதேபோல ஒழுங்கில்லாத பெண்ணுக்கு ஒரு கவலையும் இல்லை. கற்புடைய பெண்ணுக்குத்தான் கவலையும், வேதனையும், கயவர்களுக்கு மரியாதை ஏற்படும். உத்தமர்களுக்கு அவமானம் நேர்ந்தாலும் நேரலாம்.

இந்தச் சோகக் காட்சியைக் குறளாசிரியர் பார்த்திருக்கிறுர். அனுபவித்திருக்கிறுர். அனுபவம் தமிழில் எப்படி முழக்கமிட்டுக் கொண்டு வருகிறது என்பதைப் பார்க்கலாம்.

வறுமையைப் போலக் கொடுமையானது வறுமை ஒன்றேதான் என்று சொல்லிய குறளாசிரியர், வேருென்றும் இருக்கிறது என்று விளக்குகிறுர். அதுவென்ன வென்பதை,

> "வறுமையைப் போலக் கொடுமையானது
> செல்வம் ஒன்றுதான்"

எனப் பளிச்சென்று சொல்லி விடுகிறுர்.

> "இன்மையின் இன்னுது உடைமை"

நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது செல்வம் எப்படி வறுமையைப் போலக் கொடுமையானதாக இருக்க முடியும் என்று மயங்குகிறேம்.

'' அப்பனே ! செல்வம் உயர்ந்ததுதான் இல்லை என்று சொல்ல வில்லை. ஆனால் கொடுங்கோலன் ஆட்சியில் செல்வத்தோடு வாழ்வது தான் துன்பத்தை உண்டாக்கும்'' என நம் மயக்கத்தை நீக்கி விடுகிறார் குறளாசிரியர். பாடல் முழுவதையும் பார்க்கலாம்.

'' இன்மையின் இன்னா(து) உடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின் ''

(உடைமை - நிலபுலம், கால்நடை, ரொக்கம், கல்வி, செல்வாக்கு பண்பட்ட குடும்பநலம் ஆகிய எல்லாப் பேறுகளையும் குறிக்கும் சொல்)

குறளாசிரியருடைய அனுபவம் எவ்வளவு அகலமானது, எவ்வளவு ஆழமானது என்பது, பாடலைப் பாடப் பாடத் தெரிய வரும். அளவிட முடியாத அகலத்துள்ளும், ஆழத்துள்ளும் நிறைந்து தமிழ் விளையாடுவதும் தெரியவரும், தெரியத் தெரியக் குறளாசிரியரிடத்து நமக்குப் பக்தியுண்டாக்கி விடும். தமிழிடத் திலும் அப்படியே பக்தி உண்டாகிவிடும்.

* * * * * * * * * *

திருநெல்வேலிக்குத் தெற்கே இருபது மைல் தூரத்தில் உள்ள சிறிய கிராமத்து ஆசாமி ஒருவர், சென்னைப்பட்டிணத்தில் உத்தியோகம் பார்த்து வருகிறார்.

அவருடைய தாயார் அபாய நிலையில் இருப்பதாகவும் உடனே புறப்பட்டு வரவேண்டும்மென்றும் ஒருநாள் அவருக்குத் தந்தி வந்து சேர்ந்தது.

பொறுப்புக்களை உதவியாளரிடம் ஒப்படைத்தார். கையில் பணம் இல்லாத காரணத்தால் தெரிந்தவர்கள் சிலரிடம் கேட்டுப் பார்த்தார், கிடைக்கவில்லை. ஆசாமி மிகவும் கவலைப்பட்டார்.

கணவனுடைய துயரத்தைக் காணச் சகிக்கவில்லை மனைவிக்கு. தன்னுடைய ஆபரணங்களை கழற்றிக் கொடுத்தாள். அவற்றை அடகு வைத்துப் பணத்தோடு தாயாரைப் பார்க்கப் புறப்பட்டார்.

அவசரம், அவசரமாக ரயிலேறி வந்தார். திருநெல்வேலியில் இறங்கினார். மறுபடி பஸ்ஸில் ஏறி இருபது மைல் கடந்து, வந்ததும் பஸ்ஸை விட்டு இறங்கினார்.

இரவு பத்துமணி, சாலையிலிருந்து கிராமம் ஒன்றரை மைல் தூரத்தில் இருக்கிறது. ஆசாமி நடந்து வருகிறார்.

நாலாபக்கமும் பனைமரங்கள் நிறைந்த காடு. பனை ஓலையின் இரைச்சலும், மனத்தின் படபடப்பும் பயங்கரமாக இருக்கின்றது.

இருளைத் துளைத்துக் கொண்டு சீட்டிச் சத்தம் கேட்கிறது. ஆசாமியின் கால்கள் நடுங்குகின்றன. மூடி விழிப்பதற்குள் நாலா பக்கமும் வேலாயுதத்தோடு கொள்ளையர்கள் சூழ்ந்து நிற்கிறார்கள்.

வெறியோடு ஒரு அறை கொடுத்து "என்ன வைத்திருக்கிறாய் எடு" என்று அதட்டினான் ஒருவன்.

அவ்வளவுதான், இருந்த பணம் அவ்வளவையும் கொடுத்து விட்டுக் கண்ணீரும் கம்பலையுமாகத் தாயைப் பார்க்க ஓடி வருகிறார் ஆசாமி. அவருடைய மன நிலையும், துயரமும் எப்படியிருக்கும்? எவ்வளவு பரிதாபமான நிலைக்கு உள்ளாகி விடுகிறது மனித வாழ்க்கை?

அரசன் தன்னுடைய குடிமக்களிடம் வரி வசூலிப்பது இயல்பான காரியம். அரசாங்கம் நடப்பதற்கும் எதிரிகளிடமிருந்து நாட்டைக் காப்பதற்கும், தன்னுடைய காரியங்களுக்கும் குடிமக்கள் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் அரசன் மக்களைக் கொடுமைப்படுத்திக் கசக்கி பிழிந்து பணம் வசூலிப்பதும், கொடுக்கமுடியாதவர்களின் வாழ்க்கையைச் சூறையாடுவதும், பரிதாபமானசெயல்.

அப்பொழுது மனிதவாழ்க்கையை எவ்வளவு கேவலமாகப் போய் விடுகிறது. இந்தக்கொடுமையை

"வேலொடு நின்றான் இடு என் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு"

[வேலொடு நின்றான் – அதிகாரத்தோடு நிற்கும் அரசன். இரவு-வரி என்கிற பெயரால் மக்களிடம் கறந்து கறந்து, பெறுவது]

கொடுக்க முடியாதவர்களின் நிலையைக்கவனிக்க மாட்டான். அவர்களுடைய வறுமைக்கு இரக்கம் காட்டவும் மாட்டான் அதிகாரத்தின் பேரால் அவன் படுத்துகிற கொடுமை, மலைபோல் நிலைத்து நிற்கும். இதை அழகாக எடுத்துப்பிடித்துக்காட்டுகிறது

"நின்றான்" என்கிறசொல்

"இரவு" என்னும் சொல் கொடுமையை ஏளனமாக விளக்கிக் காட்டுகிறது.

அரசன் முறை தவறிப்போனுல், அவனுடைய அதிகாரிகள் புரிகிற அட்டூழியங்களுக்கு அளவே இருக்காது. தடியெடுத்தவன் எல்லாம் தண்டல் காரன் என்கிற நிலேவந்து விடும்.

லஞ்சமும், கொடுமையும் மக்களேவாட்டிவதைக்கும். பலவந்தமும், பறிமுதலும் தலே விரித்தாடும். மக்கள் எல்லோரும் செயலற்றுப் போவார்கள்.

தாங்கள் மனிதர்கள் என்கிற உணர்ச்சியே மனிதர்களிடம் இல்லாமல் போய்விடும் மனச்சாட்சி என்பது தேய்ந்து மழுங்கிப் போகும். அதனுல் நீதியும், ஆனந்தமும் என்னவென்று தெரியாமலே போய் விடும்.

கொஞ்சமாவது உணர்ச்சியும், மனசாட்சியும் உள்ளவர்கள் இந்தக் கொடுமையையும், அட்டூழியத்தையும் சகிக்கமுடியமால் வேதனேப் படுவார்கள். கண்ணீர் விடுவதைத் தவிர வேருென்றும் செய்ய முடியாத நிலேயில் அழுது கதறுவார்கள்.

வாழவும் முடியாமல், சாகவும் முடியாமல் கதறி அழுகிறவர்களின் கண்ணீர், வீண்போவதில்லே.

எத்தனேயோ கொடுங்கோலர்களேயும், அவர்களுடைய அதிகார வெறியினேயும் அழித்துவந்திருக்கிறது, அபலேகளின் கண்ணீர். இது சரித்திரம் கண்ட உண்மை

"அல்லற்பட்(டு) ஆற்ரு(து) அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை"

நொறுங்கிப்போன கொடுங்கோலாட்சியின் ஒவ்வொரு துண்டுகளே யும் காட்டி, இப்படியானது கண்ணீரால்தான், வேருென்ருலும் இல்லே, என விளக்குகிறது, "அழுத கண்ணீரன்றே" என்னும் தொடர் "அன்றே" என்பதின் அதிகாரத்தையும் உறுதியையும் உணர்ந்து அநுபவிக்க வேண்டும். மக்களேப் பாதுகாப்பது என்ருல் நீதி தவருமலிருப்பது மட்டும் போதாது, ஆட்சியில் கருணே நிறைந்திருக்க வேண்டும்.

கருணே யில்லாதநிதி அநீதியாகத்தான் முடியும்.

மழை இல்லாவிட்டால் உலகமும், உலகிலுள்ள உயிர்வர்க்கங் களும் என்ன பாடுபடுமோ, அப்படியாகிவிடும், அரசனிடம் கருணே யில்லாவிட்டால் மக்களின் நிலே.

இதைக் குறள் எவ்வளவு அழகாக வெளியிடுகிற தென்று பார்க்கலாம்.

"துளியின்மை ஞாலத்திற்(கு) எற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழும் உலகு"

[எற்றுஅற்றே - எப்படியோ அப்படித்தான் அளி - கருணை. துளி - மழை.]

கொடுங்கோலாட்சியில் மக்கள் வாழ முடியாது என்பதை அழகாய் விளக்குகிறது குறள். உண்மைதான், மழையே இல்லாமல் போனால் உயிர்வர்க்கம் வாழ முடியாதுதானே.

துளியின்மை, அளியின்மை, என்பவற்றிலுள்ள இன்மை என்கின்ற பிரயோகங்களைக் கவனிக்க வேண்டும்.

கவனித்தால், உயிரும், வாழ்வும், மழையையும், கருணையையும் வைத்தல்லவா இருக்கின்றன என்பது விளங்கிவிடும்.

குறள், விளங்க விளங்கக் குறளாசிரியர் விலகிவிடுவார். அவர் எடுத்துரைக்கும் தத்துவங்கள் கூட விலகிக் கொள்ளும், ஆனால் குறளாசிரியரின் அனுபவமும், அவர் அனுபவத்தைத் தாளத்திலும். நடனத்திலும் வைத்துக் காட்டுகிற தமிழும், நம் கண்களை விட்டு அகலா.

சாக்கரட்டீஸும் வள்ளுவரும்

சு. சாலமன் பாப்பையா
ஆமெரிக்கன் கல்லூரி, மதுரை.

வாழ்க்கை ஒரு பெருங் கடல்; மனிதர் அதில் வழி தேடும் கலங்கள். கலங்களாக அலைந்த மனிதரிற் சிலர், தங்கள் வாழ்வையும், வாழ்ந்து கண்ட உண்மைகளையும் கலங்கரை விளக்குகளாக வைத்து விட்டுச் சென்றிருக்கின்றனர்.

விளக்கின் புறத்தோற்றம் வேறுபடலாம். அவற்றின் உள்ளடக்க மான ஒளியின் ஆற்றலுக்கு ஏற்ப ஒளி வெள்ளம் பரவு எல்லையுங் குறுகி, விரிந்து இருக்கலாம், ஆனால் ஏதென்ஸ் மாநகரில் நாட்டப் பட்டிருந்தாலும் சரி, தமிழகத்தில் இருந்தாலும் சரி, இருளைக் கடியும் ஒளி உமிழ் இயல்பில் இத்தகைய விளக்குகள் அறிவு வேறுபட்ட தாகக் காண்பதற்கில்லை.

கி. மு. 469இல் ஏதென்ஸ் நகரத்து மாநகரில் தோன்றிய அறிவு விளக்கின் பெயர் சாக்ரட்டீஸ் என்பதாகும். சாக்ரட்டீஸின் வாழ் வையும், வாய்மொழியையும் தமிழகத்தில் தோன்றிய வள்ளுவர் என்ற விளக்கோடு ஒப்பிட்டுக் காண முயலும் முயற்சியில் கரு விருந்து கனிந்ததே இக் கட்டுரைக் குழவி.

வள்ளுவரின் தோற்றம் எந்தக் காலத்தில் என்பதில் வாதப் பிரதி வாதங்கள் – எதிர் மறை வழக்குகள் உண்டு. அந்தக் குழப்பங்களை இங்கே, இப்போது எடுத்துச் சொல்வதில் யாருக்கும் லாபமில்லை. எது எப்படி இருப்பினும், தமிழகம் முழுமையும் வள்ளுவர் ஈராயிரம் ஆண்டுவிழா எடுக்கும் இந்நாளில் அதையே மையமாக எடுத்துக் கொண்டு பார்த்தால் வள்ளுவரின் காலம் கி. மு. 31 என்று ஆகிறது. இக்காலத்தை ஒப்புக்கொண்டு சாக்ரட்டீஸோடு கணக்கிட்டால் வள்ளுவரைவிடச் சாக்ரட்டீஸ் 438 ஆண்டுகள் மூத்தவர் என்பது தெளிவு. எனவே, வள்ளுவருக்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்து மறைந்த சிந்தனையாளனுடன் வள்ளுவரை இணைத்துப் பார்க்க முயல்கிறோம் என்பதை முதலில் நெஞ்சில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

முரட்டுக்கல்லில் அழகு திரட்டும் கலைஞன் சாக்ரட்டீஸின் தந்தை கல்லில் உளி கொண்டு, நல்ல கலை கண்ட சிற்பியின் நற் புதல்வன், மனித இதயக் கல்லைக் கேள்வி உளி கொண்டு அடித்துச் சிந்தனைச் சிலையாக வடிக்கும் தந்திரம் கண்ட செய்தி அற்புதமே. அவனுடைய தாயோ உடலுள் வளரும் உடலை எடுத்து உலகுக் களிக்கும் 'உழைச் செல்வாள'ாக இருந்தாள். சுருங்கச் சொன்னால் அவள் ஒரு மருத்துவச்சி. இவனோ உடலால் பிறந்த மனிதனை உள்ளத்தாலும் பிறக்க வைக்கும் அருங்கலை வல்லுநனானன். இப்படி வள்ளுவரின் தாய் தந்தை பற்றி ஏதேனும் கூற முடியுமா என்றால், கதைகள் உண்டு; ஆனால் அவை எந்த அளவிற்கு உண்மையைச் சுமந்திருக் கின்றன என்பது என்றும் வினாவிற்குரிய ஒன்றே ஆகும்.

டாரியஸூம், செர்க்செஸூம் கிரேக்க மண்ணை நோக்கி எடுத்த படை எடுப்புகள் முறியடிக்கப்பட்டு, கிரேக்கம் அழிவிற்கிடையே மகிழ்ச்சிகொண்ட காலத்தில் சாக்ரட்டீஸ் பிறந்தார். நாடகம், வரலாறு, கட்டடக்கலை, சிற்பம் ஆகிய துறையில் கிரேக்கம் மிகச் சிறந்த வளர்ச்சியை அடைந்திருந்தது. (Great Dialogues of Plato Preface by W. H. D. Rouse) பெரிக்கிளீசின் ஆட்சி, வரலாற்று ஏட்டில் பொற்காலம் என்று தன்னைப் பதிவு செய்யத் தகுதி செய்து கொண்டிருந்தது. ஏழை, அடிமைகளின் உழைப்பு, வணிகர்களின் திறமை, வீரர்களின் போர் முறை, கலைஞர்களின் கலை உணர்வு, இவர்கட்கு எல்லாம் பாதுகாப்பு என்ற பெயரில் முறையாகச் செயல் பட்ட அரசு என இவை அனைத்தும், இன்றையத் தலைமைப் பஞ்சாயத்து அளவில் விரிந்து கிடந்த அன்றையப் பெரிய நகரமான ஏதென்ஸைச் 'செல்வச் செவிலி'யின் அரவணைப்பில் கிடக்கச் செய்தன. நகரில் வாழும் அனைவரையுமே ஒவ்வொருவரும் தெரிந்து வைத்துக்கொண்டிருந்த அளவில் அன்றைய மிகப் பெரிய நகரமாக விளங்கிய ஏதென்ஸின் வளர்ச்சியை சாக்ரட்டீஸ் தன் இளம் வயதில் கண்டார். பெலப்பொனேசியப் போரில் வீரர் தலைவராகப் பங் கேற்றார். சோபிஸ்டுகள் என்ற பெயரில் உலவிய தத்துவ ஞானி களின் கூட்டம் செல்வாக்குப் பெற்று விளங்கியதையுங் கண்டார். வளர்ச்சிக் குன்றில் ஏறுநடை போட்ட கிரேக்கம் இறங்கு நடை போடும் நிலையில் நகரங்கள் ஒவ்வொன்றும் தம்முள் பொருது, அழிவெனும் அனலில் தத்தம் அழகையும் பொருளையும் ஆகுதி செய்யும் காட்சியையுங் கண்டார். இவ்வாறெல்லாம் வரலாற்றறி ஞர்கள் சாக்ரட்டீஸ் வாழ்ந்த காலச் சூழ்நிலை பற்றி மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறார்கள். ஆனால் வள்ளுவர் வாழ்ந்த காலச் சூழ்நிலை பற்றி இத்தகைய தெளிவைக் காட்ட நம் அறிஞர்கள் முயன்றிருக் கின்றார்களா என்றால், இல்லை என்றுதான் கூற வேண்டும். சமுதாய வானின் உறை எனத் திகழ்ந்த மேட்டுக்குடி மக்களின் கற்பனைக்

கலப்பு மிகு பகுதியைக் காட்டுவதிலேயே காலத்தைச் செலவிடுகிறார்களே தவிர, வாளென வாழ்ந்த சராசரி மனிதனின் வாழ்வையும், வரலாற்றில் அவன் வகிக்கும் பங்கையும் காட்ட ஒரு நாளும் முனைந்தார்களில்லை ஆகவே இவர்களால் ஒரு காலச் சூழ்நிலையைத் துல்லியமாகக் காட்ட முடியவில்லை. தமிழகத்தின் தங்கக் காலமாகிய சங்க காலத்தில் வள்ளுவர் வாழ்ந்தார் என்று வேண்டுமென்றால் கூறி, நாம் மன நிறைவு கொள்ளலாம். விரிவு வேண்டும் வெளியுலகம் இதை விரும்புமா?

ஏதென்ஸ் நகரில் அறிவாற்றல் மிக்க ஒரே மனிதன் சாக்ரட்டீஸ் என்று தெல்பிக் கோவில் பூசாரிப் பெண், சேரேபோன் என்ற தன் நண்பனிடம் கூறியதாகச் சாக்ரட்டீஸே கூறுகிறார். (பார்க்க Apology G. D. of Plato p 427)

'நான்முகத்தோன், தான் மறைந்து வள்ளுவனாய்'
– உக்கிரப்பெருவழுதி

'தந்தான் உலகிற்குத் தான்வள் ளுவனாகி
அந்தா மரைமேல் அயன்' – காரிக்கண்ணனார்

எனவரும் திருவள்ளுவமாலைப் பாடல் வரிகள் நான்முகனே வள்ளுவராகத் தோன்றினார் என்று கூறுகின்றனர். எப்படியோ இரு பேரறிஞரிடமும் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட பெரிய ஆற்றலைக் கண்டு கதை கூறும் எண்ணம் ஏற்பட்டிருக்கிறது என்பது என்னவோ உண்மை ஆகும். இதில் பிடிப்பு வைப்பது அவரவர் நம்பிக்கையைப் பொறுத்தது ஆகும்.

"சீவிச் சீராக்காத தலை, பிதுங்கிய கண்கள், துளை அகன்ற மூக்கு, தடித்த உதடு, மொத்தத்தில் விகாரமான முகம், பெருத்த உடம்பு, சரிந்த தொந்தி, குட்டை வடிவம், வெயிலுக்கும் மழைக்கும் ஒரே உடை, காலணி காணக் கால்களுடன் காட்டேரித் தெய்வமாய் நகர விதியில் நடந்து திரிந்த மனிதன்" என்று சாக்ரட்டீஸைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள்.

"உருவுகண்டு எள்ளாமை வேண்டும்; உருள் பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து" குறள் (667)

என்ற குறளுக்கு இலக்கியம் தேடவேண்டும் என்றால் சாக்ரட்டீஸை அணுகலாம் போல் தெரிகிறது வள்ளுவரின் புறவடிவிற்கு ஏதேனும் சான்று உண்டா? பரிமேலழகர் பாடல் எனப்படும் ஒன்றும், மயிலைக் கோவில் சிலையும், வர்மாவின் ஓவியமும், வேறு பலரின் சிலையும், ஓவியக் கலையும் உண்மைச் சான்றுகள் ஆகமாட்டா. அவை பலர்க்கு

ஒவ்வும்; மேலும் பலர்க்கு ஒவ்வாக் கற்பனையாய், உள்ளத்தை உறுத்தும் முள்ளாய் நிற்கும்.

சாந்திப்பி, சாக்ரட்டீஸின் மனைவி. சாக்ரட்டீஸின் ஏழ்மைநிலை கண்டு அவனை ஏசி இகழ்ந்தவள் அவள் என்று ஒரு சாராரும், இல்லை, அவள் நல்லவளே; அவளை அந்நிலைக்கு ஆக்க முயன்று கெடுத்தவர் சாக்ரட்டீஸே என்று பிறிதொரு சாராரும் கூறுகின்றனர். பெரிதும் திட்டிக்குடத்து நீரைச் சாக்ரட்டீஸின் தலையில் கொட்டி அவருடைய நண்பர்கள் முன்னிலையில் அவமானப்படுத்தியவள் என்றும், இடிக்குப்பின் மழை பொழிகிறது? என்று அப்போது சாக்ரட்டீஸ் அமைதியாகக் கூறினர் என்றும் கதை உண்டு. இதை எல்லாம் இப்போது மறுக்கவும் செய்கின்றனர். வள்ளுவரின் துணைவி வாசுகி, நாகம்மை, பாப்பம்மாள் என்றெல்லாம் பெயர் பற்றிய ஆய்வுகள் நடந்திருக்கின்றன. வள்ளுவர்க்கு முன் மறைந்து விட்டார் அவர் துணைவியார் என்றும், அவரை எண்ணி

'அடிசிற் கினியளே, அன்புடை யாளே'

என்ற வெண்பாவை வள்ளுவரே பாடினர் என்றும் பல கதைகள் உண்டு.

சாக்ரட்டீஸிற்குப் பிள்ளைகள் இருந்திருக்கிறார்கள், 'தம் மக்கள் மழலைச் சொல்' பற்றி எழுதிய வள்ளுவர்க்குப் பிள்ளைக்கனி அமுது உண்டா என்பதற்கு ஆதாரம் இல்லை.

போதைப்பொருள் பயன்படுத்தும் இயல்பு உடையவர் அல்லர் சாக்ரட்டீஸ். 'உண்ணற்க கள்ளை' என்றார் வள்ளுவர். ஆனல் அவரைக் 'குடிக்கத் தெரியாதவர்; குடித்து எங்களைப்போல் நிதான நிலையில் நிற்க இயலாதவர்' என்று நண்பர்கள் கேலி செய்தபோது குடித்து, அவர்கள் எல்லாம் மயங்கிய நிலையில் சாக்ரட்டீஸ் மட்டும் இரவு முழுவதும் பல்வேறு கருத்துக்கள் பற்றி உரையாடல் நிகழ்த்தும் வலிபெற்று விளங்கினராம். இவ்வாறு 36 மணி நேரம் எத்தகைய சோர்வும் இல்லாமல் சிந்திக்கும், உரையாடும் ஆற்றல் அவரிடம் இருந்தது என்று எழுதுகிறார்கள்.

அரிஸ்டோபேனஸ் என்ற தலைசிறந்த நாடக ஆசிரியர் கி. மு 423-இல் - சாக்ரட்டீஸின் 46வது வயதில் அவரைத் தன் நாடகமொன்றில் 'கூடையில் அமர்ந்து, காற்றில் மிதந்து, பழங் கொள்கைகளை மறுப்பவர்' என்று கேலி செய்திருக்கிறார். பிற்காலத்தில் சாக்ரட்டீஸ் பேரில் வழக்கு மன்றில் சாற்றப்பட்ட இரு குற்றங்களில் ஒன்று, அவர் பழைய(தீய) சமய மரபுகளைக் கண்டிக்கிறார்

என்பதாகும். இக்குற்றச்சாட்டு வள்ளுவர்க்கும் பொருந்துமோ என்று எண்ணத் தோன்றுகிறது. நாத்திகம், சைவம், வைணவம், சமணம், பௌத்தம், வேதம் என்னுஞ் சமயங்களின் பெயர்களைக் குறிப்பிடாமை, பல்வேறு இடங்களில் சில சமயங்களின் கருத்துக் களை மறுத்துக் கூறுகின்ற தன்மை ஆகிய இவற்றைக் காணும்போது இந்த எண்ணம் மேலும் உறுதிப்படுகிறது சான்றாகக்

"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்" (2)

"கோளிற் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை" (9)

உலகத்தார் உண்டுஎன்பது இல்என்பான் வையத்து
அலகையா வைக்கப் படும் — 850

என்னுங் குறள்களில் அவர் நாத்திகத்தைக் கடிவதையும்,

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின் — 280

என்ற குறளில் அப்போதைய சில சமயங்களின் கருத்தை மறுத்து உரைப்பதையும் காண்கிறோம். வள்ளுவரின் இத்தகைய புரட்சிக் கருத்துக்களுக்கு அவர் காலத்தில் மறுப்பு இருந்திருக்குமா? இருந்த தற்கான ஆதாரங்கள் உண்டா?.... இதற்காக ஒரு கூடைச் சிப்பி எடுத்தாலும் அத்தனையுஞ் சொத்தை என்கிற நிலையே இருக்கிறது.

சாக்ரட்டீஸைப் பகடி பண்ணியது பற்றி அறிகிறோம். அவரைப் புகழ்ந்து அவர் காலத்திலேயே எழுதிய கரங்கள் இருந்திருக்கலாம் அல்லவா? அப்படி ஏதேனும் இருக்கின்றனவா என்றால் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. வள்ளுவரைப் பாராட்டி அவர் காலத்திலேயே 'திருவள்ளுவமாலை' எழுதப்பட்டது என்பர். ஆனால் தோற்றுவித்தார் பற்றியும் தோன்றிய காலம் குறித்தும் பல்வேறு முரண்பாடுகள் இருக்கின்றன அதன் உண்மையை அறிகின்ற வரை இது குறித்து எதுவுஞ் சொல்வதற்கு இயலாத நிலையிலேயே இருக்கின்றோம்.

உறுதி, நேர்மை, உண்மை தேடல் ஆகிய குணங்களால் கவரப் பட்டுச் சாக்ரட்டீஸினிடம் மக்கள் அன்பு செலுத்தினர். அவரது பண்பு அவருக்கு மக்களிடம் செல்வாக்கைத் தேடித் தந்தது. முறை யாக அவர் வழக்காடவில்லை என்ற போதும் கூடியிருந்த மக்கள் மன்றில் 501 பேரில் 220 பேர் அவர் குற்றமற்றவர் என்றே தீர்ப்பளித் தனர். ஏறத்தாழ 44 விழுக்காட்டினர் அவர் கொள்கையை ஆதரித் திருக்கின்றனர் என்று தெரிகிறது. வள்ளுவரை எத்தனை மக்கள்

அவர்காலத்தில் அறிந்து வைத்திருந்தனர்; ஏற்றுக் கொண்டனர் என்றெல்லாம் அறிவதற்கு ஆசை இருக்கிறது; அதற்கான வழிதான் இல்லே.

சாக்ரட்டீஸின் ஆன்மாவைப் பிரித்தது ஹெம்லாக் என்ற கொடிய நஞ்சு. அந்த நஞ்சையும் தன் அரசின் ஆணையைக் காப்பாற்றியே ஆகவேண்டும் என்ற பண்பாடு நோக்கி அமைதியாகக் குடித்து மடிந்தார் என்பது வரலாறு. வள்ளுவரின் மறைவு எப்படி நிகழ்ந்தது என்பதற்கும் கதை உண்டு. ஆனல்,

'பெயக்கண்டும் நஞ்சுஉண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்' — 580

என்ற குறள் சாக்ரட்டீஸிற்கு ஏதோ ஒருவகையில் பொருந்தும் நிலேயை நாம் காணுகின்ருேம். இந்தக் குறளேக் கொண்டு, சாக்ரட்டீஸின் மறைவு பற்றிய செய்தி, கிரேக்க வியாபாரிகளால் தமிழகக் கரைக்கு வந்து இறக்குமதி ஆகியிருக்கலாம் என்று எண்ணி வள்ளுவரின் காலத்தைக்கணக்கிடும் விநோத ஆராய்ச்சியும் இங்கு நடைபெற்றிருக்கின்றது.

கி.மு. 399இல் இந்த உலக வாழ்வைவிட்டுச் சாக்ரட்டீஸ் நீங்கும் போது அவருக்கு வயது எழுபது. வள்ளுவர் மடிந்தபோது அவருக்கு எத்தனே வயது இருக்கலாம்? ஊடல் உவகை என்ற இறுதி அதிகாரத்தில்,

'உணலினும் உண்டதுஅறல் இனிது காமம்
புணர்தலினும் ஊடல் இனிது' — 1326

என்று எழுதுகிருர். உணவு செரிமானம் ஆகவேண்டுவதன் இன்றியமையாமையை மனிதன் நாற்பது வயதிற்கு மேல்தான் உணரத் தலேப்படுகிருன்; ஆகவே வள்ளுவர்க்குத் திட்டமான வயது கூற முடியாவிட்டாலும் நாற்பது வயதிற்கு மேற்பட்டவராக அவர் இருந்திருக்க வேண்டும் என்று அறிஞர் அ. கி. பரந்தாமனுர் அவர்கள் கருதுகிருர்கள்.

ஜிகோன் என்பவர் சாக்ரட்டீஸ் என்ற ஒரு மனிதன் வாழ்ந்ததே இல்லே; பிற்காலத்தவரின் கற்பனேப் படைப்பே அவன் என்றெல்லாம் கூறுகிருர். இது வெறும் பைத்தியப் பிதற்றல் என்று பலர் மறுக்கவும் செய்கின்றனர். வள்ளுவரைப் பற்றியும் இப்படி ஒரு கருத்து உண்டு. அப்படி ஒரு மனிதன் வாழவே இல்லே; நாலடியாரை இயற்றிய சமண முனிவர் குழாம் போலவே சமண முனிவர் பலர் ஒவ்வொரு அதிகாரமாக எழுதிக் குறள் என்ற பெயரில் வெளியிட்டிருக்கின்றா என்பாரும் உண்டு. பைத்தியங்கள் எல்லா நாட்டிலும், எப்போதும் உண்டு என்பதற்கு இதுவும் சான்ருகும்.

சாக்ரட்டீஸின் சொந்தக் கரம் தீட்டிய நூல் எதுவும் இப்போது இல்லை. அவரது கருத்துக்கள் என்று உலவும் நூல்கள் அனைத்தும் (Apology, Charmides, Crito, Dialoques, Euthyphrou, Ion, Laches, Lysis, Meno, Phaedo, Republic, Symposium etc...) அவருடைய மாணவர்களால் எழுதப்பெற்றவை. பிளாட்டோ, செனபோன், அரிஸ்டாட்டில் (இவர் பிளாட்டோவின் மாணவர்) ஆகிய மூவரும் இவற்றை உருவாக்கியுள்ளனர். செனபோன் கருத்தே சாக்ரட்டீஸின் உண்மைக் கருத்தாகும். பிளாட்டோவின் நூல்களில் அவரது சொந்தச் சிந்தனையும் கலந்து இருக்கிறது என்பாரும், மறுப்பாரும் உண்டு. எது எப்படியாயினும் சாக்ரட்டீஸிற்குப் பின் அவருடைய சிந்தனைகளை உலகில் நிலைக்கச் செய்வதற்கு அவரைப் போற்றிய ஒரு பாரம்பரியம் தோன்றிவிட்டது என்று தெரிகிறது. வள்ளுவர்க்கு ஒரு மாணவர் பரம்பரை, கூட்டம் இருந்ததா என்றால் இருட்டில் விளக்கற்றவன் நிலையில் தான் நாம் இருக்கின்றோம். இப்படிப்பட்ட பாரம்பரியத்தை நம்மவர்கள் ஏன் தோற்றுவிக்கவில்லை என்ற வினாவிற்கு விடையும் காணவேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம்.

வள்ளுவரின் ஒவ்வொரு அதிகாரத்தையும் ஒரு நூலே என்று கொண்டால் 133 புத்தகங்களை வள்ளுவர் எழுதியிருக்கிறார் என்று கூறும் பேராசை நமக்கு ஏற்படுறது அல்லவா ?

கடலும், கங்குலும், வானமும், வையமும், மலையும், மாலையும், மரமும், மலரும், பறவையும், பண்ணும், நீரும். நெருப்பும், பீலியும், விலங்கும் வள்ளுவர்க்கும் கருத்துப் பொருளாய்க் காட்சி அளித்தது போலவே இரவும், நிலவும், நட்சத்திரங்களும் சாக்ரட்டீஸின் கண்களுக்கு அரிய பொருள்களாகவே விளங்கியிருக்கின்றன. இரவெல்லாம் நின்றும் அமர்ந்தும் விண்வெளியில் விளங்கும் பொருள்களோடு மறைவுரையை மனத்திரையில் நிகழ்த்திக் கொண்டிருப்பாராம் சாக்ரட்டீஸ்.

நான் தனிமனிதனை நோக்கியே என் கருத்துக்களைக் கூறுகிறேன் என்கிறார் சாக்ரட்டீஸ். ('I always address the individual'—Apology) வள்ளுவரின் குறள் ஆறும் தனிமனிதக் கடலை நோக்கியே ப ய்கிறது.

'பணத்தால் கிட்டுவதன்று அறம்; மாறாக அறத்திலிருந்தே செல்வமும் வேறு பல சிறப்புக்களும் மனித சமுதாயத்திற்கு அதன் தனி வாழ்விலும், பொது வாழ்விலும் கிட்டுகின்றன என்று நான் உங்களுக்குக் கூறுகிறேன் (I tell you that vertue comes not from money, but from vertue comes both money and all other good things for mankind both in private and in public) என்று சாக்ரட்டீஸ் கூறுகிறார்,

சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு —31

என்ற குறளோடு இக்கருத்தை ஒப்பிட்டுப் பாருங்கள்.

கொடுமையின் வடிவமாக, அழிக்கும் ஆற்றலாகக் கடவுளைப் பள்ளிப் பிள்ளைகளுக்குச் சொல்லித் தரக் கூடாது. தீமைக்கு அல்ல; நன்மைக்கே அவர் மூலவர் (the author of good only. not of evil) என்பது சாக்ரட்டீஸின் சித்தாந்தம். கடவுளை அழிவின் தலைவனாக மறந்தும் தன் கடவுள் வாழ்த்தில் வள்ளுவர் படைக்கவில்லை. அடிசார்ந்தார்க்கு அனைத்தும் அருளும் அருளாளனாகவே படைத்திருக்கின்றார் 'மடிதற்று முந்துறுபவனாகவே' பின்னும் காட்டுகிறார். அழிக்கும் வேலைக்கு எல்லாம் 'அறத்தை' மூலமாக வைத்து விடுகிறார்.

ஆன்மாவின் அழிவற்ற தன்மையிலே (Immortality of the Soul) சாக்ரட்டீஸிற்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு.

சிறுமையுள் நீங்கிய இன்சொல்	....	98
எழுமை எழுபிறப்பும்	...	107
ஒருமையுள் ஆமைபோல்	...	126
கற்றீண்டு மெய்ப்பொருள்	...	356
வேண்டுங்கால் வேண்டும்	...	362
ஒருமைக்கண் தான்	...	398
இம்மைப் பிறப்பிற்	...	1315

என்னுங் குறள்களில் எல்லாம் ஆன்மாவைப் பற்றிய வள்ளுவர் கருத்தும் சாக்ரட்டீஸோடு இணைவதைக் காணலாம்.

சாவு உறக்கத்தைப் போன்றதே. அது இந்த இடத்திலிருந்து பிறிதொரு இடத்திற்கு ஆன்மா செல்லும் பெயர்ச்சியே (Death is a Change and an immigration for the soul from this place here to another place And it is like a sleep) என்பது சாக்ரட்டீஸ் கருத்து

உறங்குவது போலும் சாக்காடு; உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு (330)

என்ற குறள், யாரிடமிருந்து யார் இக்கருத்தைப் பெற்றார் என்ற ஐயத்தைத் தோற்றுவிப்பதைக் கண்டு மலைத்துப் போகிறோம் அல்லவா!

மரணத்திற்குப் பின் இந்த ஆன்மா ஒரு புதிய நல்ல உலகில் நுழையப் போகிறது என்பதும் சாக்ரட்டீஸின் கொள்கை கிரிட்டோ என்ற நூலில், தான் நஞ்சு உண்பதற்கு முதல் நாள் இரவு அவர் கண்ட கனவைக் கூறுகிறார். 'கிரிட்டோ! நேற்று இரவு அங்கம்

அனைத்தாலும் அழகு பெற்று, வெண்ணுடை தரித்த பெண் ஒருத்தி என் கனவில் வந்து, சாக்ரட்டீஸ்! இன்னும் மூன்று நாளில், நீ செழிப்பு மிக்க பிதியாவில் (ஹோமர் இந்நகரைக் கூறுகிறாராம், நமது கைலாயம், வைகுண்டம், சொர்க்கம், பரமபதம் போன்றது தான் அது) இருப்பாய்' என்று கூறினாள்' என்று கூறுகிறார் சாக்ரட்டீஸ். பெண் வந்து சொல்வாளோ என்னவோ, 'அறம் பார்க்கும் ஆற்றின் நுழைந்து' என்பது அவர் வாழ்வில் நிகழ்ந்ததோ என்னவோ நாமறியோம். புத்தேள் உலகு, மேலுலகம், அவியுணவின் ஆன்றோர் உலகு, அமரர் உலகு, தாமரைக் கண்ணான் உலகு என்று வள்ளுவர் கூறுகின்ற உலகிலே சாக்ரட்டீஸிற்கும் நம்பிக்கை உண்டு என்று தெரிகிறது.

தன் குடியரசில் தத்துவம் உணர்ந்த தலைவனையே அரசனாக்க வேண்டும் என்றார் சாக்ரட்டீஸ். அப்படி அவர் கூறும்போது அவர் அருகே இருந்த அடிமோன்டொஸ் அக்காலத்தில் தத்துவங் கற்றுத் தருவதாய் நமக்கும் போலித் தத்துவ ஞானிகளின் இயல்பை எடுத்துக் கூறி இப்படிப்பட்ட நபர்களை மக்கள் புரிந்துகொண்டு விட்ட இப்போது உங்கள் தத்துவத் தலைவனை மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று கூறினான். அதைக்கேட்ட சாக்ரட்டீஸ், 'தத்துவப் போர்வையில் முட்டாள்கள், கயவர்கள் உலவுகிறார்கள் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்' என்று கூறுகிறார். புறத்தால் பெருமை காட்டியும், அகத்தால் சிறுமை தேடியும் வாழும் மனிதர்களை அவர் அறிந்தே இருந்தார் என்று தெரிகிறது. வள்ளுவருந்தான் என்ன...

'புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து' 277

'மனத்தது மாசாக மாண்டார்நீர் ஆடி
மறைந்தொழுகும் மாந்தர் பலர் 278

என்ற 'குறள்களைப் படிக்கின்ற போதெல்லாம் காலந்தோறும், நாடுதோறும் இத்தகைய வேண்டாப் பிறவிகள் சமுதாய வயலில் களைகளாய்த் தோன்றியே இருந்திருக்கிறார்கள், இருக்கிறார்கள் என்பதை, வள்ளுவர் இவர்களை நன்கு அறிந்திருக்கிறார், அவரது அன்பு ஏமாறக் கூடியதன்று, அவரது கண்ணும் அறிவும் கண்டு, எண்ணிச் சமுதாய நிலை உந்தும் பலந் தொகுத்த போக்கறு பனுவ'லே; குறள் என்பதையும் அறிகிறோம்.

தேவை என்பது கற்பனையே; பொருள் செயற்கையே; பொறுப்பு, பதவி இவை அனைத்தும் சுமையே. ஆகவே இவை அனைத்தினின்றும் விடுபடுக என்கிறார் சாக்ரட்டீஸ்.

'யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்' —341

'மற்றுந் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பு மிகை —345

என்னுங் குறள்களை ஒப்பிட்டுப் பாருங்கள்.

எந்த வகையிலும் நான் அறிவுடையன் அல்லன் என்பதை என் மனச்சான்று கூற நான் உணர்கிறேன். (I know in my conscience that I am not wise in anything) என்று சாக்ரட்டீஸ் – வீதியிலும், விண்ணிலும், எதிர் வீற்றிருப்பார் மனத்திலும் வினா எழுப்பி விடை தேடிய வித்தகர் – தன்னைத்தான் ஓர்ந்து தன் அறியாமையை ஒப்புக் கொண்ட அரிய செய்தியை அறிகிறோம்.

"அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு" (503)

என்ற குறளில், கற்றார் என்று காட்டிக்கொள்ள விழைவார்க்கு வள்ளுவர் எச்சரிக்கை செய்வதை எண்ணுக.

எனக்குத் தண்டனை வழங்கியவர் மேலோ என்மேல் குற்றஞ் சாட்டியவர் பேரிலோ நான் சினங்கொள்ளவில்லை. (I am not angry with my condemners or my accusers) என்ற வாசகத்தான் சாக்ரட்டீஸின் கடைசி வாசகமாகும். மடிகின்றபோதும் சினங் கொள்ளா மனம் பெற்ற மனிதமேருவை இவ்வாக்கியங்களில் சந்திக் கின்றோம்.

"இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று" (308)

என்ற குறளை உள்ளத்தால் உணர்ந்தார் போன்றும், ஒழுக்கத்தால் கடைப்பிடித்த சான்றோன் போன்று சாக்ரட்டீஸ் மடிந்ததை அறிகின்றபோது அந்த இலக்கியத்தைக் கண்டு இந்த இலக்கணம் தோன்றியதா அல்லது இப்படி ஒரு குறள் இலக்கணம் தோன்ற வேண்டும் என்ற அவாவில், கனவில் அங்கே ஓர் இலக்கியம் மலர்ந்ததா என்றெல்லாம் நம் மனம் குழம்பிக் குதூகலிப்பதை அறிகிறோம்.

இத்தனையையும் அறிகின்றபோது நமக்குள் எழுகின்ற கருத்துந் தான் என்ன? 'பேரறிஞர்கள் சிந்தனை ஒன்றே' (Great men think alike) என்ற கூற்றில்தான் எத்தனை உண்மை இருக்கிறது. அறிவிற்கும், ஒழுக்கத்திற்கும் மொழி, இனம், காலம், நாடு என்னும் வேற்றுமைகள் இல்லை. வேற்றுமை எல்லாம் குறுகிய மனமுடைய குறைமனிதர்க்கே. ஆகவே அறிவைப் பெறுவதற்குத் தடையாக உள்ள வெறிகளைத் துடைத்து, ஒழித்து 'எல்லாம் நம் ஊரே, எல்லாரும் நம்மவரே' என்ற சிந்தனையை வாயளவில் இன்றிச் செயலாலும் மெய்ப்பிக்க முயல்வோம் வாரீர்.

" செல்விருந்து "

திருமுருக. கிருபானந்தவாரியார்

அறம் பொருள் இன்பம் ஆகிய முப்பால் வேதம் திருக்குறள். விரிந்த கருத்துக்களை மிகச் சுருங்கிய, சில சொற்களால் கூறும் திறமுடையது திருக்குறள். இக்கட்டுரையில்,

" விருந்தோம்பல் "

எனும் அதிகாரத்தில் வரும்

" செல்விருந்தோம்பல் "

என்ற குறளுக்கு மேலான கருத்தொன்றை விளக்குவது சிந்தைக்கும் செவிக்கும் அரிய விருந்தாய் அமைந்திருக்கிறது.

குறள் :-

திருக்குறள் பொய்யில் புலவராகிய திருவள்ளுவர் பாடியருளியது. 1330 பாடல்களையுடையது. சிந்தைக்கு இனியது. செவிக்கு இனியது. வந்த வினைக்கு மருந்தாக இருந்து உதவுவது. அறம், பொருள், இன்பம் எனும் முப்பாலை உடையது.

அது முப்பால் வேதம் :-

சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் என்ற அழகுகளை உடையது திருக்குறள். மிக விரிந்த கருத்துக்களை மிகச்சுருங்கிய சில சொற்களால் கூறும் திறமுடையது திருக்குறள்.

" ஒரு முறைக்குப் பத்து முறை கூறு "

என்று ஆன்றோர்கள் கூறுவார்கள். திருக்குறளும் ஒவ்வொரு பொருளைப் பற்றிப் பத்துப் பத்துப் பாடல்களாகக் கூறுகின்றது. கோயில்களில் பெருவிழாவும், கொடியேற்றிப் பத்து நாள் கொண்டாடுகின்றார்கள். திருமாலும் உலகம் உய்யுமாறு பத்து முறை அவதாரஞ் செய்தார்.

அரிய நீதி நூல் :-

இனி, தமிழ் எழுத்துக்களில் முதல் எழுத்து "அ". இறுதி எழுத்து 'ன்'. திருக்குறளில் முதற்குறள் அகரத்திலேயே தொடங்குகிறது.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

இறுதிக் குறள் 'ன்' என்ற எழுத்தில் முடிவுபெறுகின்றது.

"ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்"

இதனால் தமிழ் எழுத்துக்களில் முதல் எழுத்தில் தொடங்கி, முடிவு எழுத்தில் முடிகின்ற நூல், இந்த நூல் ஒன்றுதான். தன்னிலையில் அணுத்துணையும் சிதையாததும், பாட பேதம் இல்லாததும் ஆகிய நூல். இது இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் தமிழகம் செய்த தவப்பயனாய் எழுந்த அரிய நீதி நூல். இதில் அடங்காத நீதி ஒன்றுமில்லை.

விருந்தோம்பற் பொருட்டே :-

'கணவனும் மனைவியும் கூடி வாழ்வது எதன் பொருட்டு?' என்ற வினாவை எழுப்பிக் கொண்டு, அந்த வினாவுக்கு அருமையாக விடை கூறுகின்றது திருக்குறள்.

'நாயகனும் நாயகியும்' வீட்டில் இருந்து, செல்வத்தை ஓம்பி வாழ்கின்ற காரணம், விருந்தினரை ஓம்பி உதவி செய்யும் பொருட்டே என்று கூறுகின்றது திருக்குறள்.

'இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

விருந்தோம்புவதே மேலான கடமை.

'விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று

இனி, அரிய திருக்குறள் ஒன்றைச் சிந்திப்போம்.

'செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

பரிமேலழகர், இதற்கு "தன்கட் சென்ற விருந்தைப் பேணிப் பின் செல்லக் கடவ விருந்தைப் பார்த்துத்தான் அதனோடு உண்ணவிருப்பான்" என்று உரை யெழுதி யிருக்கின்றார்.

செல்விருந்து :-

செல்விருந்து என்றதற்கு 'தன்னை நாடிச் சென்ற விருந்து' என அது பொருள் தருகின்றது,

இதனினும் மேலான பொருள் ஒன்றை இங்குக் கூறுகின்றேன்:-

நமது நாட்டில் இருந்த சில ஞானிகள் ஆகார விஷயத்தில், 'அஜகரம்' என்ற விருத்தியை மேற்கொண்டார்கள். "அஜகர விருத்தி" என்றால் "மலைப்பாம்பு போன்று உண்பது" என்று பொருள். மலைப்பாம்பு உணவை நாடி எங்கும் செல்வதில்லை. அது இருக்குமிடத்திற்கு எதேச்சையாக ஒரு பிராணி வருமானால் அதனைப் பிடித்து உண்ணும்.

வந்தால் அருந்தும் ஞானிகள்:-

அதுபோல அந்த ஞானிகள், எங்கும் உணவை நாடித் தேடிச் செல்லமாட்டார்கள். அவர்கள் தன்னிச்சை போல் சென்று கொண்டிருப்பார்கள். அவர்களைத் தேடிக் கொண்டுபோய் உணவு தர வேண்டும். இந்த வகையில் சேர்ந்தவர் பட்டினத்து சுவாமிகள்.

> **இருக்குமிடந் தேடி என்பசிக்கே யன்னம்**
> **உருக்கமுடன் கொண்டு வந்தால் உண்பேன்**
> **— பெருக்க**
> **அழைத்தாலும் போகேன் அரனே — என்தேகம்**
> **இளைத்தாலும் போகேன் இனி,**

என்று, கூறுவதிலிருந்து அவர் அஜகர விருத்தியை மேற்கொண்டவர் என்று தெரிகின்றது.

எனவே 'செல்விருந்து' என்றால், விடு தேடி வராது தன் விருப்பம் போல் செல்லுகின்ற சிவ ஞானிகளைத் தேடி உணவு தந்து ஓம்புதல் வேண்டும் என்று பொருள் கொள்ளவேண்டும்.

இவ்வாறு செல்விருந்தை ஓம்பியும், வருவிருந்தை எதிர்பார்த்து ஆதரித்தும் உதவுகின்ற தரும குணசீலனை, தேவர்கள் தமக்கு நல் விருந்து என எதிர் பார்த்து உபசரித்து சிறப்புச் செய்வார்கள் என்று பொதுமறை கூறுகின்றது.

இவ்வாறு அரிய பெரிய கருத்துக்களை விளக்கி நமக்கு நலம் செய்கின்றது, அமுதந் தமிழ் திருக்குறள்.

ஓதுக குறளை :

இதனைப் படிக்கக்கூடாது. படிப்பது என்பதுஅழகும் அருமையும் இன்றிப் படிப்பது ஆகும்.

ஓதுவது என்பது காதலாகிக், கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவதாகும். எனவே திருக்குறளை ஓதுதல் வேண்டும். திருக்குறள் உண்மை மொழியாகும்.

"திருவள்ளுவ தேவர் வாய்மை"

என்கிற,

"பழமொழியை ஓதியே உணர்"

என்கிறார் அருணகிரிநாதர்.

ஆகவே வானோரும் போற்றும் திருக்குறளை ஏனோரும் ஓதி உணர்ந்து நலத்தைப் பெற்று உய்வார்களாக.

காந்தியடிகளும் திருவள்ளுவரும்

வி. ஜனார்த்தனன்

"எவ்வெப் பொழுது தர்மத்திற்கு நலிவும் அதர்மத்திற்கு எழுச்சியும் தோன்றுகிறதோ, அவ்வப்பொழுது நான் என்னையே படைத்துக் கொள்கிறேன் நன் மக்களைக் காப்பதற்கும் தீயவர்களை அழிப்பதற்கும் தர்மத்தை நிலை நாட்டுவதற்கும் வேண்டி நான் யுகந்தோறும் வந்துதிப்பேன்" (கீதை)

இப் பிரபஞ்ச நிலையினை உணர்ந்து தெளிந்து பின் அதனை ஏனையோர்க்கு உணர்த்துபவன் யாரோ அவனே மாமனிதன். மனிதனைப் பண்படுத்துவதற்கென அமைந்த இலட்சியங்கள், ஆக்க சக்திகள் நிறுவனங்கள் போன்ற அனைத்திற்கும் மூலமாக நிற்ப தெதுவோ அதுவே தர்மம். இந்த தர்மம் குலையும்போது மனித வாழ்வும் நிலை குலைகிறது. மீண்டும் இத்தகைய தர்மத்தை நிலை நிறுத்தவே இவ்வுலகில் ஒரு மாமனிதன் தோன்றுகிறான்.

மனித வரலாற்றில் ஆங்காங்கே தோன்றும் இந்தகைய மாமனிதர்கள் தாம் திசை தடுமாறித் தவிக்கும் மனித குலத்தின் உண்மையான வழிகாட்டிகள். காந்தியடிகளும் திருவள்ளுவரும் இத்தகைய வழிகாட்டிகளாவர்.

வள்ளுவம் சந்தித்த கடைசி மாமனிதரே காந்திஜி. வள்ளுவரின் கருத்தும் காந்திஜியின் வாழ்வும் சிந்திக்கத் தக்கவை. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் தோன்றிய ஒரு கருத்து நூறு ஆண்டுகட்கு முன் தோன்றிய ஒரு வாழ்வோடு பொருந்தும் விந்தையை நாம் இங்கு காண்கிறோம்.

மனித வாழ்வில் இரண்டு நிலை. ஒன்று அறிவு வாழ்வு. மற்றொன்று உணர்வு வாழ்வு. உணர்வு வாழ்வில் இரக்கம் அழியும் போது அறிவும் தானாகவே நீங்கி விடுகிறது. இவ்வாறு அறிவும் உணர்வும் நீங்கும்போது மனிதன் அரக்கனாகிறான்.

"இரக்கம் என்று ஒருபொருள்
இலாத நெஞ்சினர் அரக்கர்
அவர் அறிவின் நீங்கினர்" என்பது கம்பன் வாக்கு.

எப்பொழுது அறத்திற்கு நலிவு ஏற்படுகிறதோ அப்பொழுது நான்

என்னையே பிறப்பித்துக் கொள்கிறேன் என்பது இறைவன் வாக்கு. நம் சமயக் கருத்தின்படி அன்புதான் கடவுள். அவ்விதமாயின் அன்பு தன்னைத்தானே பிறப்பித்துக் கொள்கிறது என்றாகிறது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் இப்படி வந்தவர் வள்ளுவர். நூறு ஆண்டுகட்கு முன் இப்படி வந்தவர் காந்திஜி.

"உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

இது வள்ளுவர் கருத்து. ஒருவன் தன் உள்ளம் அறியப் பொய் யில்லாமல் நடப்பானாகில் அத்தகையவன் உலகத்தாரின் உள்ளங் களில் எல்லாம் இருப்பவன் ஆவான் என்பது இதன் பொருள். காந்திஜியின் நீண்ட வாழ்க்கைப் பயணத்தைத் துருவி ஆராயும் போது தான் இக்குறளின் பொருள் நமக்குத் தெற்றென விளங்கு கிறது. இந்த ஒரு குறளின் விளக்கந்தான் காந்திஜியின் புனித வாழ்க்கை.

அன்பிலார் மண்வெட்டி போன்றவர்கள். அன்புடையார் கலப்பை போன்றவர்கள். மண்வெட்டி குப்பையைத் தன்னை நோக்கியே இழுக்கும். வள்ளுவர் இதனை "தமக்குரியர்" என்பார். கலப்பை மண்ணை இருபுறமும் தள்ளும். வெளியே எடுக்கும்போது அதில் ஒன்றுமே ஒட்டியிராது. வள்ளுவர் இதனை "பிறர்க்குரியர்" என்பார். இந்நாட்டில் கலப்பை போன்று பயன்பட்டவர்கள் காந்திஜியும் – வள்ளுவரும்.

வாய்ச் சொல்லால் மட்டும் பொய்யா தொழுகுவதால் பயனில்லை. அது உள்ளமெனும் ஊற்றிலிருந்து ஊறி வரவேண்டுமென்கிறார் வள்ளுவர். சொல், எண்ணத்திலிருந்து பிறப்பது. எண்ணம் உள்ளத்தோடு தொடர்புடையது. எனவே அவ்வுள்ளம் பொய்மை யற்று, பொலிவுற்று விளங்கவேண்டுமென்று வள்ளுவர்விரும்புகிறார். அவ்வாறு வாழ்பவன் உலக மக்களின் உள்ளங்களிளெல்லாம் என்றும் வாழ்வான் என அவர் நம்புகிறார். இந்த நம்பிக்கையை தம் வாழ்வின் மூலம் உறுதிப்படுத்தினார் காந்திஜி.

செக்கச் சிவந்த நிறம். தளர்ந்த உடல். தளராத நெஞ்சம் ஒற்றை ஆடை. ஓய்வில்லா உழைப்பு. உலக அரங்கில் இந்தியா விற்கு சுதந்திரத்தையும் உலக மக்களிடையே இந்தியருக்குத் தனிப் பெருமையையும் பெற்றுக்கொடுத்தவர் இவர். இத்தகைய மனித ருக்கு அவருடைய பெற்றோர் இட்ட பெயர் மோகனதாஸ் கரம் சந்த் காந்தி. தென்னாப்பிரிக்கா அரசாங்கம் அளித்த பெயர் கூலி பாரிஸ்டர். உலக மக்கள் கொடுத்த பெயர் மகாத்மா,

தென்னுப்பிரிக்காவிலுள்ள ஜோஹான்பர்க் மண்ணில் வைத்து காந்திஜியின் மேல் விழுந்த அடி ஒரு சராசரி இந்தியனின் மேல் விழுந்த சாதாரண அடி அல்ல. அது ஆங்கிலேய ஏகாதிபத்தி யத்தின் மீது விழுந்த மரண அடி! ஒரு புறத்தில் ஸ்மட்ஸின் இராணுவபலம் மறுபுறத்தில் உள்ளத்தால் பொய்யாது சத்திய விளக்கினை ஏந்தி நின்ற காந்திஜியின் ஆத்மபலம் இவ்விரண்டிற்கும் இடையே நடந்த போராட்டத்தில் சத்தியம் வென்றது.

திலகரின் சங்க நாதமும், இலஜபதிராயின் சிங்கநாதமும், விந்திய இமயமலைகளில் மோதி எதிரொலித்தன. ராஷ்பிகாரி கோஷின் ஆவேசப் பேச்சுக்களில் வெந்து பிதுங்கியது அந்நிய ஆட்சி. இந்த வேளையில் இந்திய அரசியல் வானில் ஒரு விடிவெள்ளி எனத் தோன்றினர் காந்திஜி.

காசி பல்கலைக்கழகத்தின் கால்கோள்விழா, வைசிராய் ஹார்டிஞ்சு பிரபுவும் சுதேச மன்னர்களும் குழுமியுள்ள பேரவை அதில் காந்திஜி பேசினர்.

“நேற்றைய தினம் இங்கு தலைமை வகித்த மகராஜா இந்தியா வின் ஏழ்மை நிலையைப்பற்றிக் கூறினர். ஆனல் நாம் இங்கே காண்பது என்ன? பாரிசிலிருந்து ஒரு நகை வியாபாரி இங்கு வந்தால் அவனே திகைத்துப்போகும்படி சிறந்த நகைகளை அணிந்து வந்துள்ளீர்கள். உங்களோடு இந்தியாவின் இலட்சக் கணக்கான ஏழைகளை ஒப்பிட்டுப்பார்க்க நான் விரும்புகிறேன். மகராஜக்களே! உங்களுக்கு இந்த நாட்டில் பட்டினி கிடக்கும் ஏழை களைத் தெரியுமா? இலட்சக்கணக்கான மக்கள் இங்கு பட்டினி கிடக்கும்போது வைரங்களை அணிவதில் நீங்கள் வெட்கப்பட வில்லையா?

காந்திஜியின் இந்தப் புதிய குரலை, புதிய பாணியை, புதிய செய்தியை இந்தியா வியப்புடன் கவனித்தது.

காந்தியுகம் ஆரம்பமாயிற்று. அவரது ஆத்மபலத்தால், உள்ளத்துணர்வால் இமயப்பரப்பும், குமரிக்கடலும் ஒன்ருயின.

அவர் எதை நினைத்தாரோ அதைக் கூறினர். எதைக்கூறினரோ அதைச் செய்தார். எதைச் செய்தாரோ அதற்குரிய வெற்றி தோல்வி களை அகமும் முகமும் மலர ஏற்ருர்.

“யங் இந்தியா”வில் வெளியான மூன்று கட்டுரைகளுக்காக இராஜ துரோகக் குற்றம் சாட்டப்பெற்ற காந்திஜி 1922 மார்ச் மாதம்

10ம் தேதி கைதானர். அதனை யொட்டி ஐஸ்டிஸ் புரூம்பீல்டின் முன் அவர் கொடுத்த வாக்கு மூலம் "உள்ளத்தால் பொய்யா தொழுகுதல்" என்றுலென்ன என்பதற்குரிய சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கு கிறது. அவர் கூறினர்.

"மதிப்பிற்குரிய நீதிபதி அவர்களே! நான் நெருப்புடன் விளையாடிக்கொண்டிருக்கிறேன் என்பதை அறிவேன். ஆனல் ஒன்றை மட்டும் கூறவேண்டியது என் கடமை. என்னுட்டு மக்களிடம் அவர்கள் மொழியில் பேசச் சொன்னேன். இந்த மண்ணில் விளையும் உணவை உண்ணச் சொன்னேன். இந்த நாட்டு உடையினை உடுத்தச் சொன்னேன். என்னுட்டின் செல்வம் என்னுட்டு மக்களுக்கே உரியது என்று சொன்னேன். இது தவரு? இது இராஜ துரோகமா? இது இராஜ துரோக மென்றல் உங்கள் சட்டம் விதிக்கும் மிகப் பெரிய தண்டனையை எனக்குக் கொடுங்கள். இல்லை; நான் செய்வதில் எவ்விதத் தவறுமில்லை யென உங்கள் நெஞ்சம் நினைக்குமானல் தயவு செய்து உங்கள் பதவியை இராஜிநாமாச் செய்து விட்டு என்னுடன் வாருங்கள்"

இதன் பெயர்தான் ஆத்ம சக்தி. இதன் முன் வெள்ளை நீதிபதியின் மனச்சாட்சியும் வெள்ளை ஏகாதிபத்தியத்தின் சட்டமும் ஒருங்கே தலை வணங்கின.

இங்கிலாந்தில் லங்காஷயர் மில் முதலாளிகளின் சார்பில் நடைபெற்ற வரவேற்பில் கலந்துகொண்டு காந்திஜி ஆற்றிய உரை அவரது நோக்கங்களை, உள்ளுணர்வுகளைத் தெற்றென விளக்கியது. அங்கு வந்த முதலாளிகளைப் பார்த்து அவர் கூறினர்.

"என் நாட்டில் வேலை இல்லாமல் பட்டினி கிடக்கும் மக்கள் ஏராளம். அங்கு எலும்புக் கூடுகளும், நடைப் பிணங்களும் உண்டு. சோறு தான் அவர்கள் சொர்க்கம். அவர்களுக்குச் சோறு போட வேண்டித்தான் உங்கள் லங்காஷயர் மார்க்கெட்டிற்கு எதிராக நான் சுதேசித்துணி இயக்கத்தை ஆரம்பித்தேன். இது தவரு? நீங்கள் கடவுளைப் பற்றிப் பேசுகிறீர்கள். காலை உணவை உண்டபின் மதிய உணவிற்காகக் காத்திருக்கும் நீங்கள் கடவுளைப் பற்றிப் பேசலாம். ஆனல் பட்டினி கிடக்கும் என் நாட்டு மக்களிடத்தில் உங்கள் கடவுளின் செய்தியைக் கொண்டு போகும் அளவிற்கு எனக்குத் துணிச்சலில்லை. அவர்களுக்குச் சோற்றின் உருவத்தில்தான் கடவுள் தோன்ற முடியும்.

இந்தியாவின் முப்பது கோடி மக்களையும் சாகடித்துவிட்டு நீங்கள் மட்டும் வாழ விரும்புகிறீர்களா? என் உணவிற்கும்,

உடைக்கும் நான் உங்களிடம் கையேந்தி நிற்கவேண்டுமா? மனித இனத்தின் ஐந்தில் ஒரு பகுதியினர் தம் சுய மதிப்பையுமிழந்து இன்று பட்டினி கிடக்கிருர்கள். தெரியுமா உங்களுக்கு? இவர்களுக்கு நான் என்ன செய்யவேண்டும் என்று எனக்குச் சொல்லுங்கள். எனவே என் நாட்டின் வறுமையைப் போக்காதவரை உங்கள் லங்காஷயர் மில்களுக்கெதிராக என் இராட்டை சுழன்றுகொண்டு தானிருக்கும்.''

இது அவர் உள்ளம் திறந்து பேசிய பேச்சு. இதனைக் கேட்ட லங்காஷயர் மில் முதலாளி ஒருவர் காந்திஜியைக் கட்டிப் பிடித்து விம்மி விம்மி அழுதார்.

'' தீண்டாதார் என ஓரினத்தை வைத்திருக்க நீங்கள் விரும் பினல் முதலில் என்னைப் பிய்த்தெறியுங்கள். அந்தச் சாவை நான் வரவேற்கிறேன். தீண்டாமை எனும் களங்கம் உள்ள வரை இந்து மதத்திற்கு விமோசனமில்லை. என் நாட்டிற்குச் சுதந்திரம் வேண்டு மென்று கேட்க எந்த இந்தியனுக்கும் உரிமையில்லை ''

பிறப்பால் நான் உயர்ந்தவன் என யாராவது கூறினல் அவன் மனிதனென அழைப்பதற்குரிய உரிமையையே இழந்து விடுகிருன் ''

29—9——1927ல் ஹரிஜனில் காந்திஜி நெஞ்சங்கனிய எழுதிய எழுத்து இது.

அந்தப் பேச்சும் இந்த எழுத்தும் ஒரு பேரரசையே தூக்கி எறிந்ததென்ருல் அதற்குக் காரணம் அவை சொல்லால், மனத்தால் செயலால் பொய்யா தொழுகிய ஒரு பெருந்தகையின் தெளிந்த உள்ளத்தில் தோன்றியதே.

'' நான் செய்தவை நிலைக்கும். நான் சொன்னதையும், எழுதி யதையும் என்னுடன் சேர்த்து எரித்து விடுங்கள் என்னை மறந்து விடுங்கள் '' என்பதே அவர் உலகிற்கு விடுத்த இறுதிச் செய்தி.

மக்களினத்திற்கு நன்மை செய்ய முற்பட்ட எந்த மகானையும் இவ்வுலகம் மனமுவந்து பாராட்டியதில்லை. அறிவைப் பயன் படுத்தச் சொன்ன சாக்ரடீசுக்கு அன்று பரிசாகக்கிடைத்தது ஒரு கோப்பை நஞ்சு! உண்மையையும் அகிம்சையையும் கருவிகளாகக் கொண்டு ஒரு மாபெரும் சாம்ராஜ்யத்தையே எதிர்த்துப் போராடிய காந்திஜிக்குக் கிடைத்ததோ மூன்று துப்பாக்கிக்குண்டுகள்.

"யார் ஏழைகளுடைய துன்பத்தைத் தன் துன்பமாகக் கருதுகிறாரோ, யாரொருவருடைய இதயத்திலிருந்து ஏழைகளுக்கென இரத்தம் வடிகிறதோ அவரே மகாத்மா".

எவ்வளவு பெரிய உண்மை!

ஒரு ஜோடித்துணி ஒரு மூக்குக்கண்ணாடி, ஒரு கைக்கடிகாரம்—இவையே அவரது உடமைகள்.

சத்தியம், அகிம்சை, ஒழுக்கம் – இவையே அவரது ஆயுதங்கள்.

ஏழைகள், விவசாயிகள், தொழிலாளிகள் – இவர்களே அவரது படைகள்.

இவற்றை வைத்துக்கொண்டு அவர் ஒரு புதிய வரலாற்றைத் தோற்றுவித்தார். ஒரு புதிய யுகத்தைப் படைத்தார்.

"சத்தியத்தைத் தவிரவேறு கடவுளில்லை. அதனைத் தரிசிப்பதற்குரிய ஒரேவழி அகிம்சையே. தன்னைத்தானே தூய்மைசெய்து கொள்ளாதவன் எல்லா உயிர்களிடத்தும் தன்னை ஒன்றுபடுத்திக் கொள்ள இயலாது. மனத்தூய்மை இல்லாதவன் கடவுளைக்காண முடியாது. எனவே முதலில் தன்னைத்தானே தூய்மைப்படுத்துங்கள். கடவுளையும், சத்தியத்தையும், அகிம்சையையும் நேருக்குநேர் சந்திக்க இதுவே வழி"

இவ்வாறு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் தமிழகத்தில் வாழ்ந்த பேராசான் ஒருவர் உருவாக்கித் தந்த ஒரு தத்துவத்திற்கேற்ப நூறாண்டுகட்குமுன் இத்துணைக் கண்டத்தில் பிறந்து வளர்ந்த புனிதரொருவர் வாழ்ந்துகாட்டிய விந்தையை இந்தத் தலைமுறை சந்தித்தது.

காந்திஜி! அவர் சரித்திரம் தவிர்க்க முடியாத ஓர் அற்புதப் படைப்பு. அவர் பேசியது எதுவோ அதுவே வேதம். அவர் அமர்ந்த இடம் எதுவோ அதுவே ஆலயம். அவர் செய்தது எதுவோ அதுவே வரலாறு.

இந்த உலகம் சந்தித்த மேதைகளுள் தலைசிறந்தவர் திருவள்ளுவர். இந்த நூற்றாண்டு சந்தித்த மேதைகளுள் தலைசிறந்தவர் காந்திஜி. இருளில் தடுமாறும் இவ்வுலகிற்கு அவர்களிருவரும் வழி காட்டும் ஒளி விளக்குகள் ஆவர்.

வள்ளுவர் பிறந்த நாட்டில் நாம் பிறந்துள்ளோம். காந்திஜி வாழ்ந்த நூற்றாண்டில் நாம் வாழ்கிறோம். இந்தத் தலைமுறைக்கு இதைவிடவேறென்ன சிறப்புவேண்டும்?

''உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்''

என காலவெள்ளத்திற்குமப்பால் நின்றுகொண்டு, நனிசிறந்த தமிழக நாகரிகத்தின் தலைவாசலில் நின்றுகொண்டு பேசும் வள்ளுவரின் குரல் நம் காதில் மீண்டும் ஒலிக்கிறது. வள்ளுவர் காந்திஜிக்கெனவே எழுதிய குறளிது. வள்ளுவரின் உயிரோட்டம் மிகுந்த கருத்தோட்டமும் காந்திஜியின் உணர்வோட்டம் மிகுந்த அனுபவச் செழுமையும் இந்த மண்ணை மீண்டும் புனிதமாக்கட்டும்

வள்ளுவர் செய்த புரட்சி

பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி,
செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

தமிழர் செய்த நற்றவத்தால் ஏன், தமிழ் செய்த நற்றவத்தால் தோன்றிய புலவர் பெருந்தகை திருவள்ளுவர் ஆவர். அவர் அருளிய திருக்குறளே பின் வந்த பேரறிஞர்களுக்கெல்லாம் தாய்மை நூலாக, தலைமை நூலாக விளங்கும் சிறப்பினைப் பெற்றிருக்கின்றது. இத்தகைய தலைமையும் தாய்மையும் தவழ்ந்து இலங்கும் நூலை, திங்குறள் நூலை, திருக்குறள் நூலை நாம் பெற்றதே பெரும் பேறாகும்.

அவர் காலத்தோடொத்தும், பின் வந்தும் தோன்றிய புலவர்கள் எல்லாம் எத்துணையோ அறநூல்களை யாத்துள்ளனர். எனினும், அவையெல்லாம் இத்தகைய தலையாய பெருமைக்கும், நிலையாய பெருமைக்கும் உரியதாக நிற்கவில்லை. காரணம், பிறரெல்லாம் தாம் தாம் கண்ட உண்மைகளையும், அறங்களையும் கண்டவாறே உரைக்கும் ஒன்மையையே பெற்றிருந்தனர். ஆனால் திருவள்ளுவரோ தாம் கண்டதை உள்ளவாறு உரைக்குமுன், மனித சமுதாயம் எப்படியுள்ளது? எத்தகைய அடிப்படையில் இயங்கிக் கொண்டிருக்கிறது? அதில் ஏற்றத் தாழ்வுகள், மேடு பள்ளங்கள் ஆகியன எப்படியுள்ளன? என்பனவற்றை ஓர்ந்து, உணர்ந்து, அவ்வந்நிலைமைக்கு ஏற்பவும், நீர்மைக்கு ஏற்பவும் மொழிந்துள்ளனர். ஆதலினாற்றான்,

> "எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்
> முப்பால் மொழிந்த மொழி"

என்ற பாராட்டுதலை அவர் பெற முடிந்தது.

அவர் செய்திருக்கும் புரட்சி மிகமிக உயர்ந்ததாகும். எண்ணத்தில், எழுச்சியில், எழுத்தில், சொல்லில், பொருளில் அனைத்திலும் புரட்சி செய்தவர் திருவள்ளுவர். ஆனால் அப்புரட்சி உணர்ச்சி வசப்பட்டோ, அன்றித் தாமொரு 'புதுமையைச் சொன்னவர்' 'புரட்சியைச் சொன்னவர்' என்று பிறர் மதிக்க வேண்டுமென்றோ கூறியதன்று. அவர் கருத்துக்கள் மேடையிலோ, அன்றி

மலையிலோ இருந்து ஆற்றிய சொற்பொழிவன்று. மனித சமுதாயத்திற்குத் தாம் இறங்கி வந்து, அவர்தம் உள்ளப்பாங்கினை மிகமிக நன்ருக உணர்ந்து அவரவர் உள்ளத்திலும் இருக்கும் சிக்கல்களைத் தீர்த்துவைக்கும் பாங்கில் கூறியிருப்பதே அவர் அருளிய குறளாகும். அந்நிலையில் ஏனையோரினும் அவர் செய்த புதுமை நிலையைச் சிறிது காண்போம்.

'அறம்' என்ற சொல்லிற்கு விளக்கம் தருதலிலேயே அவர் தம் புதுமை விளங்கும். பிறர் எல்லாம் அறம் என்று சொன்னல் பிறருக்கு ஏதேனும் ஒன்றைக் கொடுப்பதுதான் என்று நினைத்தார்கள். ஔவையாரும் 'ஈதல் அறம்' என்றனர். ஆனல் திருவள்ளுவரோ இவ்விளக்கத்தைத் தரவில்லை. ஈதல்தான் அறமெனில் எத்துணை பேர்கள் அதனையாற்ற முடியும்? வாழ்க்கையில் அன்ருடம் தத்தம் வாழ்க்கைச் செலவிற்குப் பொருள் இன்றி அலமருவோர் பலர். இன்னும் அடுத்த வேளையுணவிற்கு என் செய்வதென்று அலமருவோர் பலர். இவர்களைவிடுத்துப் பணம் உடையவர்களை நினைத்தால், அவர்களுக்கு மனம் இருப்பது ஐயமே. இந்நிலையில் இத்துணை பேர்களும் ஈதல்தான் அறம் எனில் அதனைச் செய்தலின்றி அதனை விட்டுவிடும் நிலையினராய் ஆகிவிடுவர். திருவள்ளுவர் இதனையெல்லாம் நினைத்தனர். மனித சமுதாயம் அனைத்திற்கும் ஒப்பதாய்ப் பொருள் இருப்போரும் இல்லாதோரும் வருத்தமின்றிச் செய்யத்தக்கதாய், அறத்திற்கு விளக்கம் தருகின்ருர்.

மனித இனம் அனைத்தையும் அழைத்தார். அருமைத்தம்பியர்களே! தங்கையர்களே! வாருங்கள்; ஒன்று சொல்கின்றேன் அதைச் செய்யுங்கள் என முன்னுரை மொழிந்துகொண்டு சொல்கின்ருர். உங்கள் அனைவரிடத்திலும் எஞ்ஞான்றும் நிலைத்திருப்பதும், உங்களைவிட்டுப் பிரியாதிருப்பதும் ஒன்று உண்டு; அதுவே மனம் ஆகும். அம்மனம், நன்மையையும் நினையும், தீமையையும் நினையும், ஆனல் நீங்கள் எண்ணுவது நன்மையாக இருக்கட்டும்; உயிரினம் அனைத்தும் வாழத்தகுந்ததாய் இருக்கட்டும்; அதனையே எண்ணுங்கள்; அதுவே அறமாகும் என்றனர். அங்ஙனம் அருளிய குறளே

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற"

என்பதாகும். அறம் என்ருல் மிகப் பளுவான தொன்று என்றும், அது பணமுடையார்க்கே ஒல்லுவதென்றும் நினைக்கின்ற நினைவை மாற்றிப் பணமுடையோரும், பணமில்லாதோரும், அறிவுடையோரும், அறிவற்ருேரும், பதவியுடையோரும், அஃதில்லாதோரும், ஆடவரும், பெண்டிரும், இளையவரும், முதியவரும், யாவரும் நழுவுத

வின்றிச் செய்யவல்லது அறம் என்ற நிலைக்குக் கொண்டுவந்தவர் திருவள்ளுவர் ஒருவரேயாவர். அனைத்தறன் என்பது (மனத்துக்கண் மாசிலன் ஆதலாகிய) அவ்வளவே அறம் என்னும் பொருளது, அறம் இவ்வளவுதானு எனின்? அவ்வளவுதான் என மொழிந்தனர் திருவள்ளுவர். அறமெனில் ஏதேதோ பிறபிற சொல்லுகிருர்களே எனில் அவை எல்லாம் ஆகுல நீர; அவற்றைப் பற்றி அஞ்சவும் வேண்டாம், அலமரவும் வேண்டாம் என அனைவரையும் தாம் கட்டியிருக்கும் அறமாளிகையுள் அழைத்துப் போகிருர் திருவள்ளுவர்.

அடுத்தபடியாக அம்மனித சமுதாயத்தைப் படிப்படியாக அழைத்துச் சொல்ல நினைத்த திருவள்ளுவர், மீண்டும் அத்தம்பி அத்தங்கையர்களை நோக்கித் தம்பியர்களே! தங்கையர்களே! இனிதாக எண்ணுகிறீர்கள்; அது பேரறம் அதைப் போலவே இன்னுமொரு பேரறமும் கூறுகின்றேன்; அதனையும் கேளுங்கள் எனக் கூறுகின்ருர்.

காலை எழுந்தது முதல் இரவு படுக்கும் வரையிலும் ஒவ்வொரு நாளும் உற்ருரோடும் பழகுகிறீர்கள், மற்ருரோடும் பழகுகிறீர்கள்; தாழ்ந்தோர்மாட்டும் பழகுகிறீர்கள்; ஒத்தோர்மாட்டும் பழகுகிறீர்கள்; உயர்ந்தோர்மாட்டும் பழகுகிறீர்கள்; அவ்வனைவரிடமும் பழகுகின்ற பொழுதும், பார்க்கின்றபொழுதும் முகமலர்ந்து இனிமையாகப் பாருங்கள்; இதயம் கலந்த இன்சொல்லையே பேசுங்கள்; இது அறம் என்ருர் திருவள்ளுவர். இங்ஙனம் ஒருவர் ஒருவரைப் பார்க்குங்கால் இனிமையாய்ப் பார்ப்பது அறம், இனிமையாகப் பேசுவது அறம் என்று சொன்னவரும் திருவள்ளுவர் ஒருவரே யாவர். அவ்வருமைத் திருக்குறள்,

> " முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானும்
> இன்சொ லினதே அறம் "

என்பதாகும்.

இதனை அடுத்து மூன்ருவது படியாக அம்மனித இனத்தை அழைத்துச் சொல்லுவதுதான் ஒல்லும் வகையால் அறவினை செய்க என்பதாம். நீங்கள் இனிமையாக எண்ணத் தெரிந்தவர்கள்; இனிமை யாகப் பார்க்கத் தெரிந்தவர்கள்; இனிமையாகப் பேசத் தெரிந்த வர்கள்; ஆகையால் அவற்ருேடு நின்றுவிடாது இயன்ற வரையில் பிறர்க்கு உதவவும் வேண்டும் என்று கூறுகின்ருர் திருவள்ளுவர். அங்ஙனம் கூறுகின்றவர் விழிப்போடும், மிகக் கவனத்தோடும் சொல் கிருர். இயலுமாறு அறம் செய்தல் போதுமானது; ஆனல் அதனை ஒரு சில ஆண்டுகள் கடைப்பிடித்துப் பின்னர் விட்டுவிட வேண்டாம்.

ஓவாது (இடைவிடாது) செய்யுங்கள்; செல்லும் வாய் எல்லாம் (மன தால் இயன்ற பொழுது மனத்தாலும், மொழியால் இயன்றபொழுது மொழியாலும் உடலால் இயன்றபொழுது உடலாலும், அன்றிப் பொருளால் இயன்றபொழுது பொருளாலும், இன்னும் எத்தனை விதங்களால் எவ்வெவ்வாறெல்லாம் இயன்றதோ அவ்வவ்வாறெல் லாம்) செய்யுங்கள் என்றும் கூறுகின்றார். இவ்வடிப்படைச் சூழ்நிலை தான் மனித இனம் முழுமைக்கும் இன்றியமையாது வேண்டப்படுவ தாகும்; அதுவே அறமுமாகும் என்றனர் திருவள்ளுவர். இங்ஙனம் மனித இனம் முழுவதையும் அழைத்தும், அவர் வேண்டுமாறும், விரும்புமாறும், அறங்களை இழைத்தும், கூறியவர் திருவள்ளுவராவர். இந்நிலை பிற இலக்கிய ஆசிரியர்களிடம் காணப்படாத புதுமையாகும்.

இன்னும் எத்தனையோ அறங்களைப் புதுமையும், பொலிவும் தவழத் திருவள்ளுவர் கூறியுள்ளார். வேள்வியில் கொலை செய்தலை வடவர்களும், ஒரோவழித் தமிழர்களும் கூடக் கடைப் பிடித்திருக்க, அது செய்தல் தக்கது என நூல்களில் ஒரோவழி சொல்லியிருக்கத் திருவள்ளுவர் மட்டும் அதை வன்மையாக மறுத்து,

"நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை"

எனக் கூறினர். அது அக்காலச் சூழலில் பெரிதும் புதுமை தரத்தக்க தாகும். உள்ளதைச் சொல்லுவதுதான் உண்மையென்றும், இல்லதைச் சொல்லுவதுதான் பொய்மை என்றும் அறநூலார் அனைவரும் கூறியிருக்க, உள்ளதோ, இல்லதோ சமுதாயத்திற்கு நன்மை பயக்குமேல் அது வாய்மையாம் என்றும், அன்றித்தீமை பயக்குமேல் அவ்விரு திறனும் பொய்மையாம் என்றும் கூறினர் திருவள்ளுவர்.

இங்ஙனமே அக்கால மனித சமுதாயத்தில் 'பரத்தையர் பிரிவு' என்ற ஒன்றும் பரந்தும் விரிந்தும் பேசுதற்குரியதாயும், இலக்கண நூல்களில்கூட அதனை விரிவாக எடுத்தியம்புதற்கு உரியதாயும் வரவும், திருவள்ளுவர் மட்டுமே அது முற்றக் கடிதற்குரிய வழக்கம் என்றும்

"வரைவிலா மாணிழையார் மென்தோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு"

"இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு"

என்றும் கூறி வன்மையாக மறுத்துச் சென்றார்.

இன்னும் அவர் மருந்து என்ற அதிகாரத்தில், மருந்தாவது யாது? என விளக்கு முகமாக நான்கு பொருள்களை மருந்து எனக் கூறுகின்றார். அவையாவன;- 1) நோயாளி, 2) அதனைத் தீர்க்கும் மருத்துவன், 3) அவனால் தரப்படும் மருந்து, 4) அந்நோயாளிக்கு அருகிலிருந்து அவனுக்கு வேண்டியவற்றைச் செய்பவன். பொதுவாக உலகினர் அனைவரும் மருந்து என்றால் மருத்துவரால் கொடுக்கப்படும் மாத்திரையோ, கூட்டு மருந்தோ, அன்றிப் பொடியோ என்றுதான் கருதுவார்கள். ஆனால் திருவள்ளுவரோ, ஒருவன் மாட்டுள்ள நோய் நீங்கவேண்டுமென்றால் அந்நோயாளியும், மருத்துவனும், அந்நோயாளிக்கு அண்மையில் இருப்பவனும் ஆகிய மூவரின் ஒத்துழைப்புமின்றி மருந்து மட்டும் நோய் நீக்குதற்கு உரியதாகாது எனக் கூறுகின்றார். இது செயலளவில் பழமையும் உண்மையும் உடையதாயினும், கருத்தளவில் முற்படக் கூறியவர் திருவள்ளுவரேயாவர்.

காமத்துப் பாலிலும் அவர் தரும் புதுமை போற்றுவதற்குரியதாகும். தலைவன் தலைவியர்க்குள் ஊடல் வருங்கால் தலைவனைத் தலைவி ஒருமை வாசகம்பட (நீ, அவன் எனப்) பேசுதலே எல்லா இலக்கியங்களிலும் இயல்பாக உள்ளது. ஆனால் திருவள்ளுவரோ தன்னால் கூறப்படும் தலைவிக்குத் தலைவன் எத்துணைத் துன்பம் தரினும், அவனை நீ என்றோ, அவன் என்றோ தலைவி கூறியதாக யாண்டும் கூறினாரிலர். தலைவனது பிரிவை ஆற்றாது வருந்துகின்ற பொழுதும், அவளது உறுப்பு நலன் அழிந்த பொழுதும் கூட, 'கொடியார்', 'நல்கார்', 'பொருள் மாலையாளர்', 'சேட் சென்றார்', 'துறந்தார்', 'செற்றார்' எனக் கூறுவதன்றிக் கொடியான், நல்கான் எனக் கூறுதல் இல்லை. இவை ஏனைய இலக்கியங்கள் எவற்றிலும் காணாத புதுமையாகும்.

துறவற இயலிலும் அவர் செய்கின்ற புதுமை போற்றுதற்குரியதாகும். சமயவாதிகள் அனைவரும் பற்றுக்கள் அனைத்தையும் விட வேண்டுமென்று சொல்வதில் ஒத்த கருத்து உடையவராவர். திருவள்ளுவரும் அக்கருத்தினரே எனினும் அதனைச் சொல்லும் வகையில் ஒரு புதுமையைக் காட்டுகிறார் உலகில் வாழ்வோர் அனைவரும் தத்தம் உடலிலும், பொருளிலும், புகழிலும், பதவியிலும், வாழ்க்கை இன்பத்திலும் பற்றுக்கொண்டவர்களாக இருப்பவர்களேயாவர். அவர்களை நோக்கி நீங்கள் வைத்திருக்கின்ற பற்றை ஒருங்கு விட்டுவிட வேண்டுமென்றாலோ, அவற்றின் மீது பற்று வைப்பது பெருந் தவறு என்றாலோ அவர்கள் எளிதில் கேட்கமாட்டார்கள். அவர்களை நோக்கித் திருவள்ளுவர் உங்களுக்கு எவ்வெப் பொருள்கள் மீதெல்லாம் பற்று உண்டோ அவற்றையெல்லாம்

அப்படியே வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் யான் ஒன்று கூறுவேன். அதனையும் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று கூறுவாராகப் 'பற்றற்றான் பற்றினைப் பற்றுக' என்றனர். அப்பற்றே நாளடைவில் ஏனைய பற்றுக்களையெல்லாம் நெகிழவிட்டுவிடுமென்று அவருக்கு நன்றாகத் தெரியும். ஆதலினால்தான் எத்தனையோ பற்றுக்களைக் கொண்டிருப்பவர்களுக்குப் 'பற்றறுக' எனின் ஏற்காதெனத் தெரிந்து 'பற்றுக' என்றனர். அடுத்துப் பற்றுக்களை ஒருங்கு விடுதல் உலகியலில் நிற்பார்க்கு இயலாதெனத் தெரிந்த அவர் சிறிது சிறிதாகவும் படிப்படியாகவும் பற்றுக்களைவிட நினையுங்கள்; அவ்வப்பொழுது அவ்வப்பற்றை நீக்குதலினால் இன்பம் கிடைக்குமென்றும் கூறுகின்றார்.

இங்ஙனம் மனித சமுதாயம் அனைத்தும் உய்ய வேண்டுமென்ற நல்லெண்ணம் படைத்த திருவள்ளுவர் உள்ளத்தின் திறனறிந்து புதுமை தவழத்தாம் கூறும் அறங்களை ஏற்குமாறு இனிது கூறிச் செல்கின்றார். இப்போக்கு திருக்குறள் அனைத்தையும் ஒருங்கு கற்பார்க்கு இனிது விளங்கும்.

வாழ்க திருவள்ளுவர்! வளர்க அவர் தம் புதுமை அறம்!



கடைப்பால் தரும் சுவை

ரு. ந. சோதிபாய்

எண்ணங்களைத் தொடர்ந்து தோற்றுவிக்கும் உள்ளத்தைப் போல் அலைகளை நிரல்பட ஆக்கித் தருவது கடல். அக் கடலில் செல்லும் கலன்களை கரை நோக்கி அழைப்பது கலங்கரை விளக்கம். வாழ்க்கைக் கடலில் செல்லும் பொழுது ஏற்படும் சூறுவளித் துன்பங் களைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றலைத் தருவது, அறக் கருத்துக்களை அள்ளித்தரும் கலங்கரை விளக்கமாம் திருக்குறள். உலகப் பொது மறையாகத் திகழ்வதற்குரிய கருத்துக் குவியலைத் தன்பால் கொண் டுள்ளது இது. எக்காலத்தவரும், எச்சமயத்தவரும், எவ்விடத்தவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்துக்களால் இந்நூல் அறநூல் எனப் பெயர் எய்தியுள்ளது. இதை ஒருயர் இலக்கியமாக, சுவை தரும் பனுவலாக ஆக்கித் தருவது அறத்தும்பாலையும் பொருட்பாலையும் அடுத்துக் கடைப்பாலாக உள்ள காமத்துப் பாலெனின் மிகையாகா. காமத்துப்பாலைத் தொடுவதே பாவம் என்ற மேனுட்டுத் தமிழ்த் தொண்டரும், ஏன் தமிழறிஞரும் தாம் ஒரு காலத்தில் இருந்தனர். வடநாட்டு வாத்சியாயனரின் காமசூத்திரத்தைப் போல் பகுத்தறிவை மங்க வைக்கும் பாலுணர்ச்சியைத் தூண்டி விடாமல் பண்பட்ட உணர்ச்சியைத் தருவது காமத்துப்பால் என்பதைத் தமிழுக்குப் பல்லாற்றுனும் தொண்டாற்றுனும் தொண்டாற்றித் தமிழ் மாணவ ராகவே இறந்த டாக்டர் ஜி. யூ போப் அவர்கள் கூறியுள்ளார். இல்லறத்தை நல்லறமாய் நடத்துதற்குரிய அடிச்சுவராய் அமைந்த காதலின் திறத்தைக் கவினுறக் காட்டுகின்றது. விளக்கவும், விளங்கிக் கொள்ளவும் கடினமாக இருக்கும் இக்காதலுணர்வை மக்களறிந்த உவமைகளால் விளக்குகிருர் வள்ளுவர். படிப்போர்க்கும் விளங்க வைக்கின்றர். காமத்துப்பாலில் உள்ள முப்பத்தைந்திற்கும் குறைவு படாத உவமைகள் தரும் இன்பத்தைச் சுவைக்கலாம்.

காதல் விருந்து

தெய்வக் காதலின் இயல்புரைக்க, அதன் சிறப்புரைக்க வருகின்ருர் தெய்வப் புலவர். காதலன் காதலியை ஒன்றுபடுத்திய காதல், பிரிக்க முடியாக் காதல், அவர்களிடையே எப்படித்

தோன்றியது? தலைவனும் தலைவியும் எங்கோ பிறந்தனர். எங்கோ வளர்ந்தனர். 'யாயும் ஞாயும் யாராகியரோ, எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர், யானும் நீயும் எவ்வழி அறிதும்' என்ற குறுந் தொகைக் காதலர்களின் வியக்கும் உள்ளப் போராட்டம் போன்றது இவர்கள் வாழ்வு. ஆயினும் இருவரையும் இணைத்து வைத்து விட்டான் இறைவன். அவ்விணைப்பு எப்படி ஏற்பட்டது? அத் தொடர்பை எப்படி எடுத்தியம்புவது? எடுத்தியம்ப இயலாத ஒரு பிணைப்பாகவல்லவா அக்காதல் இருக்கின்றது! இந்நிலையில் நாம் ஒன்றை நினைத்துப் பார்ப்போம். உடம்பினைப் பற்றி நாம் எல்லோரும் அறிவோம். அவ்வுடம்பினை இயக்குவது உயிர் என்பதையும் நாம் அறிவோம். உடம்பு என்று நாம் எதைச் சொல்கின்றோம்? எலும்பும் தோலுமாக இருக்கின்ற இச்சதையினையா? நம் கண் முன்னால் தோன்றுகின்ற இவ்வுருவமே உடம்பென்றால், நாம் படுத்திருக்கும் நேரத்திலேயே கனவில் மற்றொரு உடம்பு நடமாடிக் கொண்டிருக்கின்றதே, அது எப்படி வந்தது? எனவே இவ்விரு உடம்பிற்குள் மற்றொரு நுட்பமான உடம்பு இருப்பது நமக்குப் புலனாகின்றது. தத்துவ அடிப்படையில் இப்படிப் பார்த்துக் கொண்டே சென்றால், உடம்பானது உருவுடம்பு (தூல உடம்பு), அருவுடம்பு (சூக்கும உடம்பு) கருவுடம்பு (பரியட்டக உடம்பு), நுண்ணுடம்பு (கஞ்சுக உடம்பு), காரண உடம்பு என்று ஐந்தாகப் பகுக்கப்படும். இவ்வுடம்பினுள் உயிர் தங்குகின்ற நிலைகளாகப் புருவநடு, கழுத்து, இதயம், உந்தி, மூலாதாரம் எனக் கூறுவர் அறிஞர். இவ்வாறு உடம்பினுள் உயிர் தங்கியிருந்து அதை இயக்குகின்றது. உயிர் தனித்து இயங்க முடியாது. அப்படி இயங்கினால் அதை ஆவி, பேய் என்று பெயர் சூட்டி விடுவோம். அதே போல் உயிரற்ற உடம்பையும் பிணமென்று ஒதுக்கி விடுவோம். அன்புடையோரையும் உடனடியாக வீட்டை விட்டு அப்புறப்படுத்தி விடுவர். ஆதலால் உயிரும் உடம்பும் இணைந்தால் தான் இரண்டிற்குமே சிறப்பு. தமிழ் இலக்கணத்தில் உள்ள எழுத்துக்களின் உயிர், மெய், உயிர்மெய் என்ற பெயர்களை நோக்கினாலே பழந்தமிழர்களின் உயரிய வாழ்வியல் நமக்குப் புலனாகும். எதற்கு இப்புரிந்தும் புரியாத் தத்துவம் என்கின்றீர்களா? புரிந்தும் புரியா நிலையை விளக்க வேண்டாமா? அதற்காகத்தான்.

ஈண்டு மடந்தை உடலாக இருக்கின்றாள். தலைவன் உயிராக இருக்கின்றான். அசைவற்ற உடம்பு உயிரை நாடிச்செல்வதில்லை. அலைந்து கொண்டிருக்கும் உயிர்தான் உடம்பை நோக்கி வருகின்றது. அதேபோல் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பொடு விளங்கும் தலைவியை நாடி, ஆடவற்குரியாம் வினைமேற்கொண்ட தலைவன் வருகின்றான். உடம்பும் உயிரும் இணைகின்றது.

எப்படி இணைந்தது என்பதை நம்மால் சொல்ல இயலவில்லை. உயிரால் உடம்பு சிறப்பிடம் பெறுகின்றது. உடம்பால் உயிர் உயர்விடம் எய்துகின்றது. தலைவன் தலைவிக்கிடையே ஏற்பட்ட நட்பும் இப்படித்தான் புரியும் வகையில் ஆனால் சொல்ல இயலா நிலையில் இருக்கின்றது என்கிறார் வள்ளுவர். 'காதற் சிறப்புரைத்தல், என்ற அதிகாரத்தில் வரும் குறளை நோக்குங்கள். தலைவன் கூற்றாக உள்ள அக்குறள் இதுதான்.

' உடம்பொ டுயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு'' (காதற் சிறப்புரைத்தல்)

இக்குறள் வாயிலாகப் பழந்தமிழர்களின் உள்ள நிலையைப் படம் பிடித்துக் காட்டிவிட்டார் வள்ளுவர்.

மற்றோரிடத்திலும் வள்ளுவர் காதலன் காதலியரிடையே உள்ள அன்பினை விளக்குவதற்கு நிலத்தையும் நீரையும் இணைத்துக் காட்டுகிறார். 'ஊடலுவகை'யில்

''புலத்தலிற் புத்தேணா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து''

எனவரும் குறளைப் படிக்கும் போது

''செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே''

என்ற குறுந்தொகை அடிகள் நினைவிற்கு வராமல் போகாது. சிற்றினம் சேராமையை வலியுறுத்துகின்றபோது 'நிலத்தியல்பால் நீர்திரிந்து அற்றாகும்' என்று நிலத்தையும் நீரையும் உவமைப் பொருளாக்கியுள்ளார். காதலின் இயல்பை இவ்வாறு கண்டுணரும் திறத்தால் விளக்கியுள்ளது பாராட்டத்தக்கதன்றோ!

ஊர் வாய்

தலைவன் தலைவிக்கிடையே ஏற்பட்ட தொடர்பை ஊரவர் அறிகின்றனர். அவர் தூற்றத் தொடங்குகின்றனர். திங்கள் எல்லோருடைய பார்வைக்கும்படுவது. அத் திங்களை இராகுவெனும் பாம்பு பிடித்துக் கொண்டது. அதைப் பார்க்கின்ற அனைவரும் இதனால் அதை நன்றாக அறிந்து கொண்டனர். அந்நிகழ்வைப் பார்க்காதவரும், பார்த்தவர்கள் வந்து உரைப்பதனால், வெளிப் போந்து பார்த்து உண்மையை உணர்ந்து கொள்கின்றனர். அதே போல் தலைவன் தலைவிக்கிடையே ஏற்பட்ட காதலை ஊரே அறிந்து

கொண்டதாம். ஊர் வாயை மூட முடியுமா? இவர்கள் காதல் ஊர் மக்களால் மிக விரைவில் அலர் தூற்றுதற்கிடனுகி விட்டதாம்.

"கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று" (அலரறிவுறுத்தல்)

ஊரார் கூறும் வம்பு உரைகளை வைத்துக்கொண்டே தமக்கிடையே உள்ள காதலை மறைத்துவிட நினைக்கின்றனர் காதலர்கள். சில நாட்கள் இதைப் பற்றிப் பேசுவார்கள். பின் அது தன்னுலே மறையும் என நினைக்கிருன் தலைவன். ஆனுல் அது மறையக் கூடியதன்று! தலைவனின் சிறப்பை ஊரவர் சொல்வதை மறைமுகமாகக் கேட்கக் கேட்க அவளுடைய காதல் வளர்ந்து கொண்டல்லவா செல்கின்றது! தலைவனுக்கும் இதே நிலைதான். இந்நிலையில் அலரால் காதலை மறைப்போம் என நினைப்பது எண்ணெயை ஊற்றியே நெருப்பை அணைத்து விடுகின்ற ஒன்றிற்கு நிகராகும். 'எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்த்தது போல' என்ற பழமொழியை நம் தலைவன் மறந்துவிட்டாரே என்று வருந்துகிருர் தலைவி. தோழியுடன் ஊரவர் கௌவை எருவாக, அன்னை சொல் நீராக அமைய நீண்டு வளரும் இந்நோயைப் பற்றிய குறள் இதுதான்.

"நெய்யால் எரிநுதுப்பே மென்றற்ருல் கௌவையால்
காமம் நுதுப்பே மெனல்" (அலரறிவுறுத்தல்)

மறைக்க முடியுமா?

திருமணமான ஒரு மங்கை பொருளுக்காகத் தன்னைப் பிரிந்த கணவனை நினைத்து வருந்திக்கொண்டிருக்கிருள். எத்துணையோ முறைகளைக் கையாண்டு தம் பிரிவுத் துன்பத்தைப் பிறரறியா வண்ணம் மறைக்கின்ருள். மறக்க முடியா ஒன்றை மறைக்கவாவது பார்க்கின்ருள். முடியவில்லை. அவள் உடல் வாடுவதாலும், ஏக்கப் பெருமூச்சாலும், கூட்டத்தில் அமர்ந்திருக்கும் போதே கற்பனை உலகில் பறப்பதாலும் அப்பிரிவுத் துன்பம் வெளிப்பட்டு விடுகின்றன. ஊற்றிலுள்ள நீர் எடுக்க எடுக்கக் குறையாமல் மேன்மேலும் ஊறிக்கொண்டிருப்பது வள்ளுவர் நினைவில் தோன்ற அதையே இங்கு உவமையாக்குகிருர். 'தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்தூறும் அறிவு' என்பதை உணர்ந்த வள்ளுவர் உரைத்த குறள் 'படர்மெலிந்திரங்கல்' என்ற அதிகாரத்தில் காணப்படுகிறது.

"மறைப்பேன்மன் யானிஃதோ நோயை இறைப்பவர்க்
கூற்றுநீர் போல மிகும்"

ஒளியும் இருளும்

விளக்கேற்றி வைப்பது பெண்டிர் கடமை. வேண்டிய அளவு எண்ணெயும், தகுந்த திரியும் இருந்தால் தான் விளக்கு நன்ருக எரியும். பாண்டியன் அரண்மனையில் உள்ள பாவை விளக்கில் எண்ணெயை ஊற்றித் திரியைச் சரி செய்வதாக நெடுநல்வாடை நவில்கின்றது. ஒளியும் இருளும் மாறுபாடு கொண்ட இரு பண்பாம். ஒளி குறைகின்ற நேரத்திற்காக இருள் காத்துக் கொண்டிருக்கும். ஒளியில் களங்கம் அல்லது குறை ஏற்பட்டால் இருளுக்கு ஒரே கொண்டாட்டம். எரிகின்ற விளக்கில் ஏற்படும் குறைபாட்டை எதிர்பார்த்திருக்கும் இருளேபோல் தலைவனுடைய பிரிவை எதிர்நோக்கி இருக்கின்றதாம்பசலை நோய். என்ன அழகான உவமை.

"விளக்கற்றம் பார்க்கும் இருளேபோற் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு"

என்ற குறள் "பசப்புறுபருவரல்" என்ற அதிகாரத்தில் காணப் படுகிறது.

நினைவும் தும்மலும்

தும்மல் வந்தால் யாரோ நம்மை நினைப்பதாகக் கூறுவது உலக இயல்பு. சில நேரங்களில் தும்மல் வருவது போல் இருக்கும். வாயை "ஆ"வென்று திறந்து வைத்திருப்போம். ஆனல் அது வராது. அப்படியே நின்று அடங்கி விடும். இதையும் நாம் பார்த் திருக்கிறோம். தலைவன் தன்னை நினைக்கத் தொடங்கியிருக்கலாம். ஆனல் கடமை காரணமாக அந்நினைவினின்று மீண்டிருக்கலாம். அதனல் தானே என்னவோ தும்மல் வருவது போல் வராமல் இருந்து விட்டது என்கிறள் ஒரு மங்கை. 'நினைத்தவர் புலம்பல்' என்ற அதிகாரத்தில்

"நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும்"

என்ற இக்குறள் காணப்படுகின்றது.

ஒரு பெண் தன் காமத்தை மறைக்கப் பார்க்கின்ருள். ஆயினும் அது அவள் நினைத்துப் பார்க்காத நேரத்தில் திடீரென்று தும்மல் போல் தோன்றி விடுகின்றதாம். தும்மல் 'யானைவரும் பின்னே மணியோசை வரும் முன்னே' என்பது போல் 'வருகிறேன் பராக், பராக்' என்று பறைசாற்றிக் கொண்டு வாராது. இதைத்தான் வள்ளுவர்,

"மறைப்பேன்மன் காமத்தை யானே குறிப்பின்றித்
தும்மல்போல் தோன்றி விடும்" (நிறையழிதல்)

என்ற குறளால் விளக்குகிறர்.

காதற் குறிப்பு :

குறிப்பாற்றலில் தான் காதல் அரும்புகின்றது. அரும்பிய காதல் மலர்ந்து மலராகி மணக்கின்றது. இக்குறிப்பைக் காதலுள்ளம் வெளிப்படுத்துகின்றது. பெண்ணின் இவ்வெளிப்பாட்டை உணர்ந்து கொண்ட நெஞ்சுறுதி கொண்ட ஆண்மகன் காதற் கடலில் குதிக்கின்றான். இன்பக்கரை சேரத் துடிக்கின்றான். பொதுவாகப் பெண்கள் இக்காதல் உணர்வில், பார்க்கின்றவர்கள் எல்லோருமே புரிந்துகொள்ளும் வண்ணம் வெளிப்படுத்த மாட்டார்கள். ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குகின்ற ஆற்றல் காதலர்க்கல்லவா இருக்கின்றது! எனவே இவள் குறிப்பாக உணர்த்துகின்றாள். அதனைத் தலைவன் தன் ஆற்றலினால் உணர்ந்து கொள்கிறான். பெண் வாய் விட்டுப் பல் தெரியச் சிரித்தால்தான் அவள் தன்னைக் காதலிக்கிறாள் என்று சிலர் நினைக்கலாம். ஆனால் வள்ளுவர் காட்டும் தலைமகனோ குறிப்பாற்றல் மிக்கவன். இதழ்களை இறுக்கமாக மூடிக்கொண்டிருக்கும் அப்பெண்ணிடமும் காதல் குறிப்பைக் கண்டு விடுகின்றான். மலர் விரிந்த நேரத்தில் வரும் நறுமணத்தை மட்டும் வைத்துக்கொண்டு மலருக்கு மலர்ந்த பின்னால் தான் மணம் உண்டு என்று பொது விதி வகுப்பது பொருந்துமா? மொட்டாக இருக்கும்போது அதனிடம் மணம் இருப்பதில்லையா? அறியாதார்தாம் எதிர்மறையில் விடையிறுப்பர். புரிந்தோர்க்குப் புலனாவது உடன்பாடே. வாழத்தெரிந்த தலைவன் தலைவியின் நகை மொட்டில் குறிப்பினை உணர்ந்து விட்டான். காதலன் காதலிக்கு இடையே மட்டுமல்ல கணவன் மனைவிக்கு இடையேயும் இக்குறிப்பாற்றல் உண்டென்று வள்ளுவர் மிக அழகாக

> **"முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போல் பேதை**
> **நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு (குறிப்பறிவுறுத்தல்)**

என்ற இக்குறளில் அறிவுறுத்தி விடுகிறார்.

வள்ளுவர் இவ்வொரே உவமையோடு இக்கருத்தை விட்டு விடாமல், தலைவியை ஒட்டி உறவாடும் மணிகள் கோர்க்கப்பட்ட மாலையை வைத்துக்கொண்டே மற்றொரு விளக்கம் தருகிறார். கழுத்தில் விளங்கும் மணி மாலையில் மணிகள் நெருக்கமாகக் கோர்க்கப்பட்டிருக்கின்றன. அதை நோக்குகின்றவன் கண்களுக்கு வெறும் மணிகள்தான் தெரிகின்றன. நூல் தெரிவதில்லை. இறைவன் நம் கண்ணுக்குத் தெரியாததால் இறைவனே இல்லை என்று நாம் சொல்லிவிடுவதில்லையே! அதேபோல் வெறும் மணிகள் தாம் நூலின்றி மங்கையின் கழுத்தில் மாயத்தன்மையான் வரிசையாக மிளிர்கின்றன என்று எவரும் சொல்லார். அப்படிச் சொல்பவரை

ஆற்றலர் என்று எவரும் கொள்ளார். மங்கையின் கழுத்தில் அது அசையும் பொழுதே நூலின் உண்மை கண்டு கொள்வர். ஒரு தலைவன் இதை நன்கு உணர்கிறான். தலைவியின் அணியிலும் (புணர்ச்சியால் வந்த அழகிலும்) ஒரு குறிப்பாற்றலைக் காண்கின்றான்.

"மணியில் திகழ்தரும் நூல்போல் மடந்தை
அணியிற் றிகழ்வதொன் றுண்டு"

என்று குறிப்பறிவுறுத்தலில் அக்கருத்தை விளக்குகிறார் வள்ளுவர்.

பழி காணேன்

இல்லத்தில் தலைமகன் இல்லாதநேரத்தில் தான் அவனுடைய குற்றங்களெல்லாம் தலைவியின் கண்களுக்கு முன் நிழலிடுகின்றன. 'வரட்டும், வரட்டும் இன்று அவரை ஒரு கை பார்க்காமல் வீட்டிற்குள் விடுவதில்லை. முகங்கொடுத்துப் பேசுவதில்லை. அவர் சொல்லுவதெதற்கும் உடன்படுவதில்லை' என்று மனத்தில் கறுவிக் கொள்கிறாள். தலைவன்பால் உள்ள பழிகள் அத்தனையும் நன்றாக நினைவு கூர்ந்து கொள்கிறாள். இல்லத்தின் கதவு தட்டப்படும் ஓசை கேட்கிறது. 'ஓகோ! இன்று ஒரே போர்க்களம் தான்' என்று நாம் நினைக்கின்றோம். ஆனால் நடப்பதோ! தலைவன் முகத்தைப் பார்த்த தலைவிக்கு எல்லாமே மறந்து விடுகின்றது. பழிவாங்கும் படலம் தடைப்படுகிறது. ஒரு கை பார்க்க நினைத்தவள், பாவம், இருகைகளாலும் அவனை அளந்து பார்த்து விடுகின்றாள். இவ்வழகான நிலையை விளக்க வந்த வள்ளுவர் நினைவில், பெண்ணோடு அவள் கண்ணோடு தொடர்புடைய கையினில் ஏந்தும் மை தீட்டும் கோல் தோன்றி விடுகின்றது. மைதீட்டும் சிறு கோலை நாம் கையில் வைத்திருந்தால் அதை நன்றாகப் பார்க்க முடியும். நன்றாகப் பார்த்த அக்கோலை கண்ணுக்கு மையிடுகின்ற நேரத்தில் பார்க்க முடிவதில்லை. அப்படி வலிந்து பார்த்தால் அது நம் கண்ணைச் சுவை பார்க்காமல் விட்டு விடாது. இவ்விடத்தில் தலைவிக்கு மையிடும் பெண் உவமையாக அமைகிறாள்; தலைவி தலைவன் பால் காணுகின்ற குற்றம் (பழி) மையிடும் கோலாக அமைகிறது. தலைவி கண்ணுகின்றாள். தலைவனைக் கண்டது தலைவி அப்பழியை மறப்பதற்கு, மையிடும்போது, கண் கோல் காணாத்தன்மைக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

'எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து" (புணர்ச்சி விதும்பல்)

என்று பெண்ணை வைத்தே, தலைவியின் நிலையை விளக்குவது சிறப்புடை ஒன்றாகும்.

உப்பு :

தீம்புளிக்குழம்பை மேம்பட அட்டு அதைக் கணவனுக்கு ஊற்றி அதனல் ஒண்ணுதல் முகம் நுண்ணிதின் மகிழ்ந்த மனைவிக்குச் சமையல் திறம் தெரியாமலா இருக்கும்? உப்புப் போடுகின்ற முறையிலல்லவா உணவில் சுவை வருகின்றது. சுவைத்துப் பழகிய பழந்தமிழர்கள் 'உப்பில்லாப்பண்டம் குப்பையிலே' என நினைத்தனர். உணவில் உப்பு குறைந்தால் இந்நிலை, அதிகமாகி விட்டாலோ, உண்பவர்கள் முகம் நாடகமேடையாகிவிடும். எதிரே நிற்பவர்கள் எவ்வளவுதான் அன்பிற்கு உரியவராக இருப் பினும் வசை பாடத் தொடங்கி விடுவர். பெண்ணுக்கு வாழும் வகை காட்ட நினைத்த வள்ளுவர் தலைவன் தலைவியருக் கிடையே தோன்றும் செல்லக் கோபத்தை (புலவியை) இவ்வுப்பினை வைத்துக்கொண்டு விளக்குகிறுர். உப்புமிகினும் குறையினும் உணவு சுவை யில்லாமல் போவதைப் போல் இப்புலவி வாழ்க்கையில் மிக அதிகமானலும் மிக மிகக் குறைந்தாலும் ஆபத்துதான் என்கிறுர் வள்ளுவர். கண்ணகி யிடம் ஊடல் காணப்படாமைதான் கோவலன் இவனைப் பிரிவதற்குக் காரணமாயிற்று என்பர் சில அறிஞர்கள். மாதவியின் மிகுந்த ஊடல்தான் கோவலனை அவளிடமிருந்து பிரித்தது என்றும் கூறுவர். எனவே உப்பினைப் போல் அளவாக இப்புலவி இருந்தால் தான் வாழ்க்கை நன் முறையில் இலங்கும் என்பதில் எவ்வித ஐயமுண்டோ? 'புலவி' என்ற அதிகாரத்தில் இக்கருத்தமைந்த குறள் காணப்படுகின்றது.

> "உப்பமைந் தற்றல் புலவி அதுசிறிது
> மிக்கற்றல் நீள விடல்"

பாத்துண்

'பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை' என்பதைப் பழந்தமிழர் நன்கு புரிந்து கொண்டனர். சிறிதளவு கள்ளோ, பேரளவு கள்ளோ, எதை எந்த அளவு பெற்றுலும் அதிகமான் ஒளவைக்குக் கொடுத்தேதான் உண்டான். அதனலன்றே அவனை 'இல்லோர் ஒக்கல் தலைவனை' ஒளவையார் பாராட்டுகின்றுர். பகுத்துண்ணும் ஒருயர் பண்பால் நல்லறத்தைக் காணுகின்றவர் புகும் ஒன்றுதான் இல்லறம். தமது இல்லத்திலேயே இருந்து தம்மிடம் இருப்பதை வருகின்றவரோடு பகுத்துண்ணும் பண்பை இல்லறத்தோர் நன்கு பேணுகின்றனர். 'பகுத்துண்ணல்' என்ற சொல் 'பாத்துண்ணல்' என்று இலக்கியங்களில் குறிக்கப் படுகின்றது. அக்காலத்தில் யாராவது வருகின்றுர்களா என்று பார்த்து, வந்தவர்களுக்குக் கொடுத்தது போக எஞ்சியதைத் தாம்

பகுத்து உண்டனர். இக்காலத்திலும் பார்த்துத் தான் உண்கின்றனர்! உண்கின்ற நேரமாம் பூசை வேளையில் விருந்தினரென்னும் கரடி நுழைந்து விடக் கூடாதே என்று பாத்து (பார்த்து) உண்ணுகின்றனர். காலம் செய்யும் கோலத்தைப் பாருங்கள்! காலத்தின் கோலத்தில் தான் ஏலமாகாமல், விலை போகாமல் நின்று நிலைப்பவரும் இல்லை என்றுசொல்லிவிடமுடியாது. 'பண்புடையார்ப் பட்டுண்டுலகம்' என்று இத்தகையோரைப் பார்த்தல்லவா வள்ளுவர் உரைத்தார். கொடுத்துக் கொடுத்து, பகுத்து உண்டு பழகியவர்க்குத்தான் அதனால் ஏற்படும் இன்பம் புலனாகும். அவ்வின்பம் இப்படிப்பட்டது என்று சொல்ல இயலாத் தன்மையில் அன்றிலிருந்து இன்றுவரை இருக்கின்றது. இத்தகு சொல்லொணா இன்பத்தைத்தான் தலைவன் தலைவியர் இணைந்து பெறும் இன்பத்திற்கு உவமையாக்குகிறார் வான்புகழ் வள்ளுவர்.

> "பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
> வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்' — இல்வாழ்க்கை.

> "செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
> நல்விருந்து வானத் தவர்க்கு' — விருந்தோம்பல்.

என்று பல்லாற்றானும் போற்றிப் புகழப்பட்ட பாத்துண்ணலை வைத்து

> "தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்
> அம்மா அரிவை முயக்கு" (புணர்ச்சி மகிழ்தல்)

என்ற குறளால் விளக்கியுள்ளார். காமத்துப்பாலை விளக்க இல்லறத்தைக் கொணரும் இவர் நுண்மாண் நுழைபுலத்தைப் போற்றாமல் இருக்க முடியாது

முடிவுரை

தலைவன் தலைவியருக்கிடையே ஒத்த அன்பு இருக்க வேண்டும் என்பதை, ஒத்த பாரத்தைத் தாங்கியுள்ள காவிற்கு உவமையாகக் கூறியுள்ளார். அன்புடையவற்கு அன்பு கெழுமியோர் காட்டும் தண்ணளி, வாழ்ந்து வரும் மக்களுக்கு வானம் பொய்யாமல் பயன் தந்ததை உவமையாக்கித் 'தனிப்படர் மிகுதி'யில் கூறியுள்ளது நவில்தொறும் நூல்நயம் வெளிப்படுத்தும் தன்மையில் உள்ளதெனலாம்.

மாலை நேரத்தை மங்கையாக்கி, அவளை நோக்கி, 'என் தலைவனைப் போலவே உன்துணைவனும் கொடுமையாளனா? உனக்கும் என் இப்பசலை நோய் வந்தது?' என வினவுகிறாள் ஒரு

தலைவி காதலர் இல்லாத நேரத்தில் இம்மாலை கொலைக்களத்து ஏதிலர் போல் அல்லவா வருகின்றது! இத்தகு மாலையை

"அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை" (பொழுதுகண்டிரங்கல்)

என்று கூறி வருந்துகிறார் வள்ளுவர்.

எவ்வளவுதான் தலைவன் தனக்கு இன்னல் செய்தாலும் அவன் மார்பு இவளைக் கள்ளாட்டம் ஆடவைத்து விடுகின்றதாம்.

"இளித்தக்க இன்னா செயினுங் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு" (புணர்ச்சி விதும்பல்)

தலைவன் தலைவியரிடை ஏற்படும் சிறுபிணக்காம் துனியும் புலவியும் இல்லையென்றால் அவர்களின் காமம் கனியும் கருக்காயுமாக மாறி விடுமாம்.

"நீரும் நிழல தினிதே புலவியும்
வீழுநர் கண்ணே இனிது" (புலவி)

என்ற குறளில் எடுத்துக் காட்டு உவமையணி அமைந்துள்ளது நோக்கத்தக்கது. இவையேயன்றி தகையணங் குறுத்தல் (3 உவமைகள்), குறிப்பறிதல் (2) நலம் புனைந்துரைத்தல் (4) காதற் சிறப்புரைத்தல் (1) அலரறிவுறுத்தல் போன்ற அதிகாரங்களில் உள்ள உவமைகளும் சிறப்புடையன. வாழ்க்கையை விளக்கவரும் உவமைகளை வைத்துக்கொண்டே காதலின் இயல்பை, இல்லறத்தின் ஏற்றத்தை இயம்பியிருக்கும் வள்ளுவரின் குறட்பா ஒவ்வொன்றும் தெவிட்டாத் தேனாகும். உவமைகள் தரும் சுவை படிப்போர்க்குத் தெவிட்டாது என்பது முற்றிலும் உண்மை.



திருவள்ளுவர் மரண தண்டனை

செ. இலக்குமிநாராயணன், எம். ஏ.

தவற்றுக்கும், குற்றத்திற்கும் வேறுபாடு உண்டு. தவறு என்பது அறியாமல் செய்வது. கேடு உண்டாகும் என்று அறிந்தும் வேண்டுமென்றே தீமையைச் செய்வது குற்றம். தவற்றுக்கு மன்னிப்பு உண்டு. குற்றத்திற்குத் தண்டனை உண்டு.

குற்றம் பலவகைப்படுகிறது. தன்னைக் காப்பாற்றிக் கொள்ளச் செய்யப்படும் சிறிய குற்றங்களுக்குச் சாதாரண தண்டனை தரப்படும். பிற உயிருக்கு அழிவுசெய்து குற்றம் செய்தால் அதற்காகக் கொடுக்கப்படுவது மரண தண்டனை. ஆனால், சமுதாயத்திற்கு ஒருவனால், பெருந்தீமை ஏற்படுவதாயின், அது 'தேசத் துரோகம்' என்று கருதப்படும். அதற்கு வழங்கப்படுவது பயங்கரமான பெரிய தண்டனை.

நம் வள்ளுவப் பெருந்தகையார் வழங்கும் மரண தண்டனை சிறப்புப் பொருந்தியது. தனிமனிதன் திருந்தினால் சமுதாயம் தானே திருந்திவிடும் என்ற நம்பிக்கை கொண்டவர் திருவள்ளுவ நாயனார். அதற்கான வழி முறைகளைத் தம் நூலில் விதந்தோதுகிறார். சமுதாயத்தை உருவாக்குகின்ற இல்லறத்தானும், துறவியும், சமுதாயத்தைக் கட்டிக் காக்கின்ற நாட்டின் தலைவனும் மேற்கொள்ள வேண்டிய கருத்துக்களையும், தள்ள வேண்டிய கருத்துக்களையும் தம்முடைய முப்பாலில் கூறுகிறார்.

தனி மனிதன் தள்ளவேண்டிய கொள்கைகளை அறியாமல் மேற் கொண்டிருந்தானேயானால் அவற்றை நீக்க வழி கூறுகிறார். அவ்வாறு கண்டும், கேட்டும், அறிந்தும், தேவையற்ற, — ஆனால் — அவனைப் பாழ்படுத்தும் கொள்கைகளை உறுதியாகப் பிடித்திருந்தானேயானால் அவன் இருந்தென்ன, போயென்ன என்ற கருத்திற்கு வள்ளுவப் பெருந்தகையார் வந்து விடுகிறார்.

முப்பாலார் கருத்துப்படி இருந்தும், செத்த பிணத்திற்குச் சமமானோர் இல்லறத்தாரில் பலரும், துறவறத்தாரில் சிலரும், நாட்டுத் தலைவர்களில் அருகியோரும் காணப்படுகின்றனர். இவர்களைப் பற்றிக் கவலைப்படுவானேன் என்று வினவக்கூடும். இவர்கள் எடுத்

துக்காட்டுப் பெருமக்களாய் இருந்து, உள்ளிருந்து கொல்லும் நோயைப் போல விளங்கிச் சமுதாயத்தைக் கெடுத்து விடுவர். எனவே, மாதானுபங்கி இவர்களை நோக்கி இருந்தும் இல்லாதவராய் இருப்பீர் எனத் தண்டனை வழங்குகிறார். இனி, அவர்களை முறையாகச் சந்திப்போம்.

உலக வாழ்வில் கடைப்பிடிக்கத் தகுந்த சுவைமிக்க வாழ்க்கை முறைகளில் இல்லறமே சிறந்ததென்பது ஆன்றோர் கருத்து. எனவேதான், தெய்வப் புலவர் அறத்துப்பாலில் இல்லறத்தையே முதலில் ஓதினார். இல்லின் கண்ணிருந்து கடைப் பிடிக்கின்ற அற வழிகளே சமுதாயத்தைச் செம்மையான வழிகளில் அழைத்துச் செல்கின்றன. இல்லத்தின் தலைவன் அன்பு, பொறுமை, சகிப்புத் தன்மை முதலியவைகளுடன் நம்பிக்கையான நபராகவும் விளங்க வேண்டும். பொய், புரட்டு, மோசடி முதலிய தீய குணங்களின் குன்றாக விளங்குபவன் சமுதாயத்திலிருந்து களை யெடுக்கப்பட்டு அழிக்கப்படத் தகுந்தவன் ஆவன். இக்குற்றம் எல்லாம் வெளியே தெரியும் குற்றம் ஆகும். ஆனால், நம்பிக்கை மோசம் செய்பவன் இவர்களை விடத் தீயவன். அவனைத் தெரிந்து கொள்வது மிகவும் கடினம். தன்னையே நம்பி இருப்பவர்களுக்கு, அவர்களை அறியாமல் மோசம் செய்பவன் செத்த பிணத்தை யொத்தவன். அவன் சமுதாயத்திற்குப் பயன்படாமல் அதை அழித்துக்கொண்டிருப்பவன். அவனைப் 'பிறனில் விழையாமை' என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் அறிமுகப்படுத்துகிறார்.

"விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்
தீமை புரிந்து ஒழுகுவார்" (திருக்குறள் 143)

சந்தேகமின்றி நம்பியவருடைய மனையாளை விரும்பித் தீமை செய்யும் அக்கொடியார் நிச்சயமாகச் செத்த பிண வாழ்க்கை உடையவரே யன்றி உயிர் வாழ்க்கை உடையாரல்லர். ஆகையால் அன்பும், நம்பிக்கையும் உடைய நட்பினரின் மனையாளை விரும்புபவர் அன்பும் அறிவு மற்ற பிண வாழ்க்கை யுடையவர் எனக் கூறினார். என்றாவது ஒரு நாள் இவர்களின் மனசாட்சி விழித்துக்கொள்ளும். இவர்கள் நெஞ்சே இவர்களைச் சுடும். அப்பொழுதாவது இப்பிணங்கள் சிறிதாவது அசையாதா? மாதவர் தவவொழுக்கமும், மாதரார் கற்பும் ஆட்சியாளரால் காக்கப்பட்டாலும், மறைபொருளாகத் தீமை ஏற்படுமாயின் எவ்வாறு காண்பது? இவ்வாறு மறைவாகத் தீமை செய்பவர் நம்மால் மறைக்கப்பட வேண்டியவரே.

புகழுக்குப் பனியாக உருகும் மனிதன் தன் மீது தவறான பழி ஏற்படுமாயின் இரும்பாக மாறி விடுவான். புகழ் ஒருவனைத் தேவனாக்கும்; வீண் பழி அவனை அரக்கன் ஆக்கும். புகழ்கின்ற வாய்க்குச்

சர்க்கரை போடும் அதே கைகள், அதே வாய் புறங்கூறினல் அவ்வாய் ஒட்டிய கழுத்தை நெறிக்கும். புறப்பழி கூறுவாரைக் கண்டு நாம் வேதனையடைகிறோம். நம்மோடு நகச்சொல்லி நட்புப் பாராட்டி, புறஞ்சென்று நம்மைத் தூற்றும் நண்பர்களை எண்ணியெண்ணி நம் நெஞ்சம் வேதனையடைகிறது. புறப்பழி நம் காதை அடைந்தவுடன் தொடக்கத்தில் கொலையே செய்து விடலாமா என்ற வெறியுணர்ச்சி தோன்றுகிறது நம் மன வேதனையை நண்பர்களிடம் கூறுகிறோம். அவர்கள் நமக்கு ஆறுதல் கூறுகிறார்கள். அவர்கள் அந்தப் புறப்பழியை மறந்துவிடச் சொல்கிறார்கள். ஆனல், வள்ளுவப் பெருந்தகை அந்தப் பழி கூறுவானையே மறந்துவிடச் சொல்கிறார். அவன் புறங்கூறுந் தொழிலைவிட்டு இறந்து படுவானேயானல் அறம் செய்தால் வரும் நன்மைகளைக் கூறும் நூல்களில் உள்ள நன்மைகள் யாவும் கிட்டும் என்று கூறுகிறார்.

> " புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
> அறங்கூறும் ஆக்கம் தரும் " (திருக்குறள் — 183)

புறங்கூறுதலைத் திருவள்ளுவர் ஏன் இவ்விதம் கடுமையான கண்ணேட்டத்தோடு ஆராய்கிறார்? ஏனென்றால் அவன் இருந்தும் இறந்தவனே. தொடக்க காலத்தில் அவனுக்குக் கிடைக்கும் சில சிறிய வெற்றிகள் பனித்துளி போல விரைவில் மறைந்துவிடும். விரைவில் அவன் அகப்பட்டுக் கொள்கிறான். அவன் கூறுவது அனைத்தும் பொய்யென்றும், வலிந்து பிறன்மேல் பழி தூற்றுகின்றான் என்றும் அனைவரும் அறிந்து கொண்டால் அவன் சமுதாயத்திலிருந்து ஒதுக்கப்படுகிறான். பிற்காலத்தில் அவன் எவ்வளவு உண்மை சொன்னாலும் அது ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. இவ்வாறு ஒதுக்கப்பட்டு வாழ்வதைவிடச் சாவதே மேல் என்று அவனும் கருதவேண்டிய நிலைவரும். அப்பொழுது தன்னுடைய மனசாட்சிக்கு அவன் தரும் மதிப்பை உணர்வர். இதைக்கருதியே அவனையும் செத்தவர்களில் ஒருவனக வள்ளுவப் பெருமான் கருதுகிறார்.

காலத்திற்கும், இடத்திற்கும் ஏற்ப இயன்ற அளவு அறச் செயல்களைச் செய்யவேண்டும். கோடானுகோடி கொடுத்து வளம் பல இயற்றுவது மட்டும் அறச்செயலன்று தத்தம் தகுதிக்கேற்பச் செய்யப்படுவதும் அறச் செயல்தான். இதற்கு அடிப்படையானது காலத்தையும், இடத்தையும், தேவையையும் உணர்தல்தான். அன்னசத்திரம் ஆயிரங் கட்டுதலும், ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தலும் ஒன்றுதான். அதை உணர்ந்து உடனடியாகச் செயல்பட வேண்டும். சிறிய கடமையோ, பெருங் கடமையோ எதுவாயிருந்தாலும் அது தொடர்ந்து வளர்ந்து வரும் சமுதாயத்தின் கட்டுக்

கோப்பிற்கு இன்றியமையாதது. இதை இல்லறத் தலைவர்கள் அல்லது இல்லத்தின் தலைமையை ஏற்றுக் கொள்ளப்போகிறவர்கள் உணர்ந்து செயலாற்றவேண்டும். அவர்கள் அவ்வாறு உணர்ந்து செயலாற்றுவிட்டால், அவர்கள் தங்கள் உணவுக்கும், உடைக்கும், உலகத்திற்கும் பெருஞ் சுமையே தவிர அவர்களால் சமுதாயத்திற்கு எந்தவிதமான நன்மையும் இல்லை.

''ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான்; மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்'' (திருக்குறள் 214)

இல்லறம் படிப்படியாக அன்பு வளர்ச்சியை உண்டாக்கி, அன்பைப் பெருக்கி அருள் உள்ளத்தில் ஈடுபடுத்துவது என்பது வள்ளுவனர் கருத்தாதலால், அன்பு வளர்ச்சிக்குத் துணையான ஒப்புரவு இல்லா தான் வாழ்க்கை உயிர் வாழ்க்கை யாகாது; மாருகச் செத்த வாழ்க்கை யாகும் என்ருர்.

காலத்தை யறிந்து, இடத்தை யறிந்து, தகுதி யறிந்து செய்யப் படும் அறம் பொதுவான அறம்; அது சமுதாயத்திற்கென கூட்டு மொத்தமாகச் செய்யப்படும் அறம். அது 'ஒப்புரவு' எனப்படும். ஈகை என்பது மாறுபட்டது. தன்னிடம் இருக்கும் பொருளைப் பிறர் துன்பங் கண்டபோது இரக்கமுற்றுக் கொடுப்பது ஈகையாகும். இல்லறத்தின் முடிந்த பயனே ஈகை. முதலில் அன்பு குடும்பத் திற்கும், பிறகு சமுதாயத்திற்கும் விரிவடைந்து அருள் என்ற தன்மையைப் பெறுகின்றது. அவ்வருட்டன்மை கைவரப்பெறும் பொழுது கருணை மலர்ந்து, பிறர் துன்பங்கண்டு உருகி, உடனடி யாக உதவி செய்யும் தன்மை உண்டாகின்றது. கருணை மலர்ந்தால் எவ்வாறேனும் உதவி செய்ய வழி பிறந்து விடும்.

பிறரிடம் சென்று யாசிப்பதே இழிவானது. அதை விட இழிவானது வந்து இரப்பவரிடம் ஒன்றும் கொடுக்க இயலாத நிலை. இந்நிலை இரண்டு வகைப்படும்; கையில் பொருள் இல்லாத நிலையில் பிறர் வந்து கேட்கின்ற நிலை; கையில் பொருள் இருந்தும் கொடுக்க மறுக்கும் மனநிலை. எந்த நிலையில் இருந்தாலும் பிறருக்குக் கொடுக்க இயலாத நிலை செத்த நிலை என்பது ஆசிரியர் கருத்து. கையில் பொருள் இல்லாத நிலையும், அதே நேரத்தில் இரப்பவர் வந்து கேட்கும் நிலையும் கண்டு, இவ்வித நிலையில் சாவதே மேல் என்று கருணை யுள்ளம் நினைக்கும். பிறருக்குக் கொடுக்க முடியாத வறுமை மிகவும் துன்பத்தைத் தரும். அந்நிலையில் சாதல் அதை விட இனிமையாக இருக்கும். இதை,

'' சாதலின் இன்னாதது இல்லை; இனிது அதூஉம்
ஈதல் இயையாக் கடை' (திருக்குறள் 230)

என்ற குறளில் தெரிவிக்கிருர். ஒருவன் எப்போதும் பிறர்

நலனையே பங்கிட்டு வாழ்வதை விடத் தானும் பிறருக்குப் பயன்படும் நாளை எதிர் நோக்கி வாழ வேண்டும். அவ்வாறு பிறர்க்குப் பயன்படாது வாழ்வதைவிட இறத்தலே இனியசெயல் என்ற கருத்து உட்பொதிந்து இருத்தலை அறியலாம்.

பற்று இல்லாமல் வாழ்வது துறவாகும். இல்லின்கண் இருந்து, இல்லறக் கடமைகளைச் செவ்வனே ஆற்றிய பிறகு, பற்று இல்லாமல் உலக நலத்தையெண்ணிப் பொதுச்செயலில் ஈடுபடுவதையே துறவு என்று ஆணையிட்டுக் கூறுகிறார், ஒல்காப்பெரும் புகழ் தொல்காப்பி யனார். அவ்வாறு பொது நலனிற்கு உழைக்கின்ற நிலையிலும், இல்லறத்திலிருந்து வாழ்கின்ற நிலையிலும் பொறுமை மிக வேண்டும். சமுதாயத்தோடு ஒட்டி வாழும்போது மனத்திற்கேற்ற நிகழ்ச்சிகளும், ஏற்காத நிகழ்ச்சிகளும் இருக்கும். மனத்திற்குப் பொருந்தாத நிகழ்ச்சிகள் ஏதேனுமிருப்பின் அதனால் வெகுளி கொண்டு. அதற்கேற்பக் காரியங்களை நடத்தினால் பலருடைய வருத்தத்திற்கும், கோபத்திற்கும் ஆளாக நேரிடும். கோபித் தொருவன் செய்யும் காரியங்களால் பாதிக்கப் பட்டோர் அவனை ஒறுப்பர்; மற்றின் அழிக்கவும் செய்வர். கோபம் உச்சநிலை போகும்போது, தன்னையே அழித்துக்கொள்ளவும் தூண்டும். இந்த நிலைகளையும் தாண்டி, அளவுக்கு மீறிய கோபத்துடன் ஒருவன் இருப்பானேயானால் அவன் உயிரோடு வாழினும் இறந்தார்க்கு ஒப்பாவான். ஒருவரும் அவனிடம் அணுகமாட்டார்கள். தங்கள் செயல்களுக்கு அழைத்துச் சேர்த்துக்கொள்ளமாட்டார்கள். சினத்தை ஒழித்தவன் முனிவருக்கும் ஒப்பாவான். இதை முப்பாலார்,

"இறந்தார் இறந்தார் அனையர்; சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை" (திருக்குறள் 310)

என்ற குறட்பாவினுல் தெளிவாக்கினர்.

இன்றும் கல்வி கற்பிக்கும் முறை பெரும்பாலும் கேட்டல் முறை என்ற நிலைமையிலேயே கற்பிக்கப்படுகிறது. கல்வியின் ஒவ்வொரு துறையும் விரிவுரை மூலமே விளக்கப்படுகிறது. ஆயிரக்கணக்கான பக்கங்களை உடைய பெரிய நூலினை ஒருவன் மிகுந்த முயற்சியின் பேரில் பல நாட்கள் தானே படித்துக்கொள்ளும் முன், அந்நூலைப் பிழையறக் கற்ற வல்லார் ஒருவரிடம் அந்நூலின் கருத்துக்களைச் சில மணி நேரம் கேட்பானாயின், அந்நூலைக் கற்பது எளிதாகும். ஒரு பாடத்தின் பல்வேறு நிலைகளைப் பற்றிய கருத்துக்களைப் பல நூல் களில் கற்றுத் தெளிவதைவிட, அந்நூல் வல்லார்களின் வாய் மூலம் செவியில் கேட்டுத் தெளிதல் மிகவும் எளிமையாகும். கற்றவர் களுக்குக் கேட்பதன் மூலம் அறிவு தெளிவு பெறுகிறது. ஐயந்திரிபற

எண்ணங்களை உருவகப்படுத்தவும், தெளிவு காணவும் வாய்ப்பு உண்டாகிறது. கல்லாதவர்களுக்குக் கேட்பதன் மூலம் பொருள் களைத் தெரிந்துகொள்ள முடிகிறது. எல்லாப் பொருள்களையும், நூல் அறிவினல் மட்டும் கற்றுத் தெளிய முடியாது. அனுபவ உணர்ச்சியோடு கூறும் மொழிகளால் பல பொருள்களைத் தெரிந்து, தெளிந்து கொள்ள முடியும். அதனல் அனுபவத்தைச் சொல்லிக் கேட்டுத் தெரிந்து கொள்வதும் கல்வியாகும்; நல்ல சொற்களைக் கேட்டு, நிறைந்த அறிவை ஈட்டும் நல்ல பண்பற்றவர்கள், அறிவு கைவரப் பெருமையால் தங்களைத் தாங்களே வியந்து, தருக்கும் செருக்கும் கொண்டு பேசியலைவர். பிறர் அறிந்து கூறும் நற் கருத் துக்களைச் செவி கொடுத்துக் கேட்கமாட்டார்கள். அதனல் அவர்கள் பெரியவர்களின் நன்மதிப்பை இழந்து விடுகிருர்கள். எனவேதான், திருவள்ளுவர்,

> "செவியிற் சுவையுணரா வாய்உணர்வின் மாக்கள்
> அவியினும் வாழினும் என்?' (திருக்குறள் 420)

என்று வெறுத்துக் கூறினர். பேரின்பப்பேற்றை விரும்பும் பெரு மக்கள் செவிச்சுவையை இன்றியமையாததாகக் கருதுவர். செவிச் சுவை அறிவுக்கு மேலும், மேலும் இன்பத்தைப் பயக்கும் வாய்ச் சுவையோ, அளவில் மிகுமானல் இன்பத்திற்குப் பதிலாக நோயை யும், துன்பத்தையும் பயக்கும். நாச்சுவை விலங்குகட்கும் உண்டு. செவிச்சுவை மக்கட்கே உண்டு ஆகையால், செவிச்சுவையாகிய அறிவின்பம் பெறமுடியாமையால் அவன் மாக்களைச் சேர்ந்தவன் என்ருர். அவன் வாழ்ந்தாலும் அவனல் யாருக்கும் பயனில்லை. அவனல் அறிவற்ற ஒரு பகுதி வளர்ந்து கொண்டிருக்கும். அவன் இறந்து விடுவதால் உலகத்திற்கு எவ்வித இழப்பும் இல்லை.

மேலும் நாணமில்லாதவர்களையும் செத்தாருள் ஒருவராகவே (திருக்குறள் 1020) திருவள்ளுவர் கருதுகிருர்.

இவ்விதமாகச் சமுதாயத்தின் குணக்கேடர்களை வள்ளுவப் பெருந்தகையார் அறிமுகப்படுத்துகிருர். மனத்தால் அவர்களுக்கு மரணதண்டனை வழங்குகிருர். அது போல சமுதாயம் வளர இம்மாதிரியான கயவர்கள் அழியவேண்டும். அவர்களை அழிப்பதற்கு நமக்கு எவ்விதமான உரிமையும் இல்லை; ஆனல் அவர்களை ஒதுக்குவதன் மூலம் சமுதாயத்தைக் காக்க நமக்குக் கடமையும், உரிமையும் இருக்கின்றன.

திருக்குறளும் சோஷலிசமும்

ஜீவபந்து ஸ்ரீபால்

நம் பாரத நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் மகாத்மா காந்தியடிகளும் மற்ற அரசியல் தலைவர்களும் மக்கள் சமுதாய நலத்திலும் பொருளாதார வளர்ச்சியிலும் அக்கரை கொண்டு பல திட்டங்களை வகுத்து ஆட்சி செலுத்தி வருகின்றனர். அவர்கள் வகுத்த திட்டங்களில் சோஷலிசம் என்ற பொருளாதார சமத்துவமும் ஒன்று. மக்கள் பலரும் இன்புற்று வாழ சோஷலிசம் ஒன்றே வழி என்பதைப் பல்வேறு நாட்டு அரசியல் வாதிகளும் ஒப்புக்கொண்ட உயரிய கொள்கையாகும்.

இக்கொள்கையை வலியுறுத்தி முதன் முதல் உலகுக்கு உரைத்தருளியது நமது பாரத நாடேயாகும். இவ்வுண்மையைத் திருக்குறள் ஆசிரியர் திருவள்ளுவர் ஒரு அதிகாரத்தின் வாயிலாகவும் பல்வேறு பகுதிகளிலும் விளக்கிக்கூறும் பொதுவுடைமைத் தத்துவம் அல்லது சோஷலிசக் கொள்கையை அப்பெருந்தகையாரின் ஈராயிரம் ஆண்டு நினைவு விழா நினைவாக வெளியிட்டு மகிழ்வோம்.

மிகுபொருள் வெஃகாமை :

நமது தமிழ் மறையாகிய திருக்குறளில் வெஃகாமை என்னும் அதிகாரத்தை ஆராயின், ஒவ்வொருவரும் தங்கள் நிலங்கள் அல்லது பொருள் வருவாய்களுக்கு வரம்பு கோல வேண்டும் என்னும் அறநெறியைக் காணலாம். ''வெஃகாமை'' என்னும் அதிகாரம் ''மிகுபொருள் வெஃகாமை'' என்ற தலைப்பில்தான் இருக்கவேண்டும். ஆனால் முதலாளித்துவ மனப்பான்மைப் படைத்தவர்கள் அக்கொள்கையை உலகம் அறியாவண்ணம் செய்ய வேண்டி வெஃகாமை என்று மாற்றியதோடு அதனடியாக விளங்கும் குறள்களுக்கும் போலி உரை கூறி மறைத்து வைத்துள்ளார்கள்.

> ''நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
> குற்றமும் ஆங்கே தரும்''

என்னும் குறளில், நன்பொருள் என்பதற்குப் பரிமேலழகர் போன்றவர்கள் பிறருடைய நல்ல பொருள் என உரை கூறியுள்ளார்கள். இவ்வுரைப்படி நோக்கின் திருக்குறளாசிரியரின் பொருளாதாரக்

கொள்கையும், அக்காலத்தில் நிலவியிருந்த மிகுபொருள் விரும்பாத மேலான அறநெறியும் மாய்ந்து, மக்களிடையே சுயநலக் கொள்கைகள் வளர்ந்து விடுகின்றன. எனவே குறளாசிரியர் கொள்கை எதுவென ஆராய்வோம்.

நன்பொருள் என்பதற்கு நல்ல பொருள் அல்லது மிகுபொருள் என்பது பொருள். நல்ல என்பதற்கு மிகுதி என்னும் பொருள் உண்டென்பதை, "நல்ல மழை பெய்தது" "நன்றாக அடித்துவிட்டான்" என்ற உலகியல் வழக்கிலே காணலாம். தொல்காப்பியத்திலும் "நன்றுபெரிதாகும்" என்பது சூத்திரம். எனவே நடுவின்றி நன்பொருள் என்பதனால் இங்கே நடுநிலைமையின்றித் தேவைக்கு மேலான பொருளைப் பதுக்கி வைத்தல் என்பது கருத்தாகும் பரிமேலழகர் கூற்றுப்படி பிறர் பொருள் எனக்கொண்டால், பிறருடைய நன்பொருளை வெஃகாமல் தீய பொருள்களை விரும்பலாம் என்றாகிறது. ஆகவே தேவைக்கு மேலான பொருள்களை மேலும் மேலும் சேர்த்துப் பதுக்கி வைத்தல் நேர்மையன்று என்பதுதான் குறளாசிரியர் கொள்கை.

பொருளீட்டுவோர் பேராசையால் பொருளை வரம்பின்றிக் குவிக்கின்றனர். இச்செல்வர்களில் பெரும்பாலோர் தங்கள் கௌரவத்திற்கும் ஆடம்பர வாழ்க்கைக்கும் ஆசைப்பட்டுத் தங்கள் வியாபாரம் முதலிய பொருள் சேர்க்கும் துறைகளில் கொள்ளை லாபம் அடித்து, பொருளைக் குவிக்கின்றனர். நிலம் பெற்றவர்களும் பொருளாசையால் விளை பொருள்களைப் பதுக்கிவைக்கும் இரக்கமற்ற முறையைக் கையாளுகின்றனர். இவை யாவும் பொருளாதார உரிமையின் பெயரால் நடைபெறுகின்றன. உரிமை பெற்றிருந்தாலும் அம்மிகுதிப் பொருள் பிறருடையதே என்பது தேவர் கருத்து. மக்கள் நலமேம்பாட்டிற்குரிய ஐம்பெரும் அறங்களில் மிகுபொருள் வெஃகாமை ஒன்று என்பதையும், அவ்வறத்தை மேற்கொண்டு வாழ்வோரே அறிவுடையார் என்பதையும் விளக்கவே திருக்குறளாசிரியர் தேவர், "அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்" எனப் பாராட்டியுள்ளார்.

மக்கள் சமுதாயம் சமாதானத்துடனும் சகோதர உணர்ச்சியுடனும் வாழ, 'கொல்லா நெறி' எத்துணை இன்றியமையாததோ அத்துணை இன்றியாமையாதது மிகுபொருள் விரும்பாமை என்னும் கொள்கை. தன் தேவைக்கு மேலான பெரும் பொருளை ஒருவர் பதுக்கி வைத்திருந்தால் அது பிறருடைய வாழ்க்கையைப் பாதிக்கும். ஆகவே அவ்விழி செயல் மனித சமூகத்திற்குத் துரோகம் செய்த குற்றமும் பாவமும் ஆகும். ஏன்? அது களவை விட எவ்விதத்திலும்

குறைந்ததன்று. ஆகவே திருக்குறளாசிரியர் கொல்லா விரதமும், மிகு பொருள் விரும்பா நோன்பும் மக்கள் சமுதாயத்திற்கு இன்றியமையாத இருபேரறங்கள் என்பதை,

> "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
> தொகுத்தவற்று ளெல்லாந் தலை"

என அழகாக அறிவுறுத்துகின்றார். இக் குறட்பாவிலே "பகுத்துண்ணலையும், பல்லுயிரோம்புதலையும்" அறங்களாக முதன் முதல் தொகுத்தளித்த நூலோராகிய வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவனையும் நமக்கு அறிமுகப்படுத்தியுள்ளார். இதனால் பகுத்துண்டு பல்லுயிரோம்பும் பண்பு பண்டைக் காலத்திருந்தே நமது நாட்டில் நிலவியிருந்த தென்பதையும் அறிகின்றோம். பகுத்துண்ணலெனில் தாம் ஈட்டும் பொருள்களில் மிகுதியாயுள்ள பொருள்களைப் பதுக்கிவைக்காமல் பலருக்கும் பயன்படுமாறு சமுதாய நலத்திற்கு உதவ வேண்டும் என்பதாகும். அது மட்டுமன்று. தமது பொருளிட்டலுக்கு வரம்பு வைத்துக்கொள்ளுதலு மாகும். இதனால் பிறருக்கும் பொருளிட்டும் வாய்ப்பு ஏற்படுகின்றது. பலரும் இன்புற்று வாழ்வர். நாட்டில் வறுமையும் பசியும் தலைகாட்டா. இவ்வின்பக் காட்சியைக் காண்டற்கு ஒவ்வொரு மனிதனும் மேற் கூறிய "பகுத்துண்ணலும்" "பல்லுயிரோம்பலும்" ஆகிய இரு பேரறங்களையும் மேற்கொள்ள வேண்டுமென வற்புறுத்துகின்றார் நம் குறளாசிரியர்.

அஹிம்ஸையை அரசியலிலே புகுத்தி அஹிம்ஸையின் பெருமையை உலகறியச் செய்த மகாத்மா காந்தியடிகள் தாம் எழுதிய இந்திய சுயராஜ்யா என்ற நூலில்,

"மனிதன் தனக்குத் தேவைக்கு வேண்டிய பொருளைத் தேடிக் கொண்டு தனது ஆசைக்கு அணைகட்டி விடவேண்டும்" என எழுதி யுள்ளதினின்றும் மகாத்மா காந்தியடிகளும் அஹிம்ஸையையும் மிகு பொருள் விரும்பாமையையுமே மக்கள் சமுதாய வாழ்வுக்கு இன்றி யமையாதவை என்பதை மேற்கொண்டவர் என அறிகின்றோம்.

பசியும், பிணியும், வறுமையும் இல்லாத ஒரு சமுதாயத்தை நமது உள்ளத்தில் கற்பனையாகப் படைத்துக்காணின், நமதுள்ளத்தே நம்மையுறியாமல் ஓர் இன்ப உணர்ச்சி உண்டாகிற தல்லவா? இக்கற்பனை இன்பத்தை உண்மையிலேயே நடை முறையில் மக்களிடையே காணின், நமதுள்ளம் எவ்வாறு விளங்கும்! மகிழ்ச்சிக் கடலில் மூழ்கித் திளைக்குமே! இப்பெருங்களிப்பு எத்தகையதென்பதையும் தேவர் நமக்குக் கூறத்தவறவில்லை.

"தம்மில் இருந்து தமது பாத்துண்டாற்றுல்
அம்மா அரிவை முயக்கு"

என்னும் குறளில் அரிவை முயக்கும் பகுத்துண்ணலால் உண்டாகும் இன்பத்தைப் போன்றதென உவமையாகக் கூறி உவமையைப் பொருளாக்கி உணருமாறு செய்துள்ளார்.

தமிழ் இலக்கியங்களும், பகுத்துண்டு வாழ்தலும் :

இனி திருக்குறள் கூறும் மிகுபொருள் வெஃகாமை, பகுத்துண்டு வாழ்தல் என்னும் சீரிய கொள்கைகளை வற்புறுத்தும் தமிழ் இலக்கியங்களைக்காண்போம்.

பாரத நாட்டு ஜைன அறவோர்கள் அறநெறிகளையும் பொருளாதாரக் கொள்கையையும் பிணைத்தே மக்கள் வாழ்க்கை நலத்திற்கு வழிவகுத்துள்ளார்கள். இல்லறத்தாருக்குரிய அறங்களாகக் கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பிறர்மனை நயவாமை, மிகுபொருள் விரும்பாமை ஆகிய பஞ்ச சீலங்களையும் அன்னார் வகுத்துள்ளனர். இதனைத் திருக்கலம்பக ஆசிரியர்,

"விரையார் மலர்மிசை வருவார் திருவறம் விழைவார்
கொலையினை விழையார் பொய்
யுரையார் களவினை யொழுகார் பிறர்மனையுவவார்
மிகுபொருள் உவவார்"

என அழகாக விளக்கியுள்ளார். அருங்கலச்செப்பு ஆசிரியர்

"பொருள் வரைந்தாசை சுருக்கியேவாமை
யிருள் தீர்ந்தார்க் கைந்தாம் வதம்"

என விளக்கியுள்ளார். இவை போன்றே பகுத்துண்டு வாழ்தலைப் பற்றித் திருத்தக்க தேவர் தமது நரிவிருத்தத்தில்,

"பாங்கமை செல்வராகிப் பகுத்துண்டு வாழ்தல் ஒன்றே
தாங்கிய தவத்தின் மிக்க தவநிலை நிற்றல் ஒன்றே"

என்றும் சீவகசிந்தாமணியில்,

"அட்டுநீர் அருவிக் குன்றத் தல்லது வயிரந்தோன்ரு
குட்டநீர் குளத்தினல்லால் குப்பைமேற் குவளை பூவா
விட்டுநீர் வினவிக் கேண்மோ விழுத்தகையவர்கட்கல்லால்
பட்டது பகுத்துண் பாரிப் பார்மிசை இல்லைகண்டாய்"

என்றும் வலியுறுத்தியுள்ளார். இவ்வாறே திருக்குறள் நெறியைப் பின்பற்றும் பல இலக்கியங்களில் பொருள் வருவாயை வரையறுத்துக் கொள்ளும் அறநெறியை வற்புறுத்துவதைக் காணலாம். இதனல்

பகுத்துண்டு வாழும் பண்பு இயல்பாகவே அமையும். பொருளாதார சமத்துவம் பொலிவுடன் மக்களிடையே தோற்றமளிக்கும்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு"

என்னும் தமிழ் மறையின் ஆட்சி காட்சியளிக்கும். உறுபசியும் ஓவாப்பிணியும், செறுபகையும் சேராத இன்ப நாடாகத் திகழும். இத்தகைய நாட்டையும் நமது தமிழ் இலக்கியம் அறிமுகப்படுத்து கின்றது. மேருமந்தரபுராணம் என்னும் பேரிலக்கியத்தில் விதேக நாட்டின் சிறப்பைப் பற்றி அதன் அசிரியர்,

"பாரிலுள்ளவர்க் கெலாம் படுபயன் பொதுவுமாய்
ஏர்மலிந்திடங்க ளெங்கும் இன்பமே பயந்துநல்
வேரிசாந்த முடுபோகி மேவியாடல் பாடலொடும்
வாரமாதர் போன்றமாட ஷூர்கடோறும் மாடெலாம்"

என்றார். விதேக நாட்டுச் செல்வங்களும் விளை பொருள்களும் பொதுவுடைமையாக்கப்பட்டுப் பலருக்கும் பயன்படுமாறு பகுத்தளிக்கப்பட்டன. அதனால் அந்நாடு ஆடல் பாடல்களிலே மிகுந்து, மக்கள் இன்பமாக வாழ்ந்தனர் என்றார். பொதுஉடைமை நாட்டையே படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது இக்கவியிலே! எனவே ஒவ்வொருவரும் தங்கள் பொருள் வருவாயை வரையறுத்துக் கொண்டு, பிறருடைய வாழ்க்கை வளர்ச்சிக்கு வழிதிறக்கும் இவ்வரிய 'மிகு பொருள் வெஃகாமை' என்னும் பொதுவுடைமைத் தத்துவத்தை மேற்கொண்டு சோஷலிசக் கொள்கையை நிலைநாட்டுவோமாக!

திருக்குறள் திருமொழி வளர்க!! சோஷலிச சமுதாயம் மலர்க!!

வழி காட்டும் வள்ளுவம்

இரா. சித்ரா, எம். ஏ.,
விரிவுரையாளர், பராசக்தி கல்லூரி, குற்றாலம்

வாழ்வு என்பது கரை காண முடியாக் கடல். அக் கடலில் நல்வழி என்னும் படகு கொண்டு, அலைக்கழிக்கும் புயல், கடும் சூருவளி போன்ற பல துன்பங்களைத் தாண்ட வேண்டும்.

வாழ்வில் எப்படியும் வாழலாம் என்ற கொள்கையுடன் வாழ்பவர் சிலர்; இப்படித்தான் வாழவேண்டும் என்று தனக்கெனத் தனிக் கொள்கை கொண்டு வாழ்பவர் சிலர். எப்படியும் வாழலாம் என்ற கொள்கையை விடுத்து, வாழப் பிறந்த மக்களுக்கு இப்படித்தான் வாழவேண்டும் என்று வழி காட்டுவனவே நீதி நூல்களாகும். அறங்களில் சிறந்த அறங்களை சுட்டிக்காட்டி, குறிக்கோள் வாழ்க்கையை அடையும் வழியைக் காட்டும் நீதி நூல்கள் சில. அவற்றுள் தலை மணியாய், கலை மணியாய், தமிழர்களின் கண்மணியாய், மணி மணியான கருத்துக்களைக் காட்டி மக்கள் வாழ வழி காட்டும் சிறந்த நூல் திருக்குறளாகும்.

வாழ்வியலில் சிறந்த அறங்களை அறத்துப் பாலிலும், அரசியலில் சிறந்த அறங்களைப் பொருட் பாலிலும், இன்பத்தில் இனிது விளங்கும் அறங்களைக் காமத்துப் பாலிலும் கவினுறக் காட்டுகிறார் வள்ளுவர். விண் உயர மேன்மையுடன் மனிதன் வாழ விரும்பு கின்றான்; விரும்பினாலும் அவன் மண்ணில்தான் வாழ வேண்டும். விண்ணுலக வாழ்வினை இம் மண்ணுலகில் பெறலாம். அத்தகு வாழ்வினை அவன் அடைவதற்கு அவன் மேற்கொள்ள வேண்டிய அறங்களை அழகாகவும், ஆழமாகவும், அழுத்தமாகவும் ஆணித்தர மாகக் கூறுகின்றார்.

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று ஔவை மூதாட்டி அன்று கூறினர். ஏன்? மனிதன் ஆறறிவு படைத்தவனா னாலும் அவன் ஐந்தறிவு கொண்ட குரங்கிற்கு ஒப்பாகின்றான். ஆம்! அவன் மனம் குரங்கைப் போன்றது. மனம் மாறி தீ வழியின் கண் செல்லவும் வழியுண்டு—அம் மனிதனுக்குத் தன்னையே தானறிதல்—தன்னையே தான் ஆறுதல்—தன்னையே உணர்ந்து நல்வழி செல்லல் என்ற கூறுகள்—சமய உணர்வால்தான் ஏற்படுகின்றன என்றியம்பின்

அது" பொய்யன்று உண்மையே! மனிதன் அறத்துடனும் பொருளுடனும் இன்பத்துடனும் வாழ்ந்து வீடு பேற்றை அடைதல் வேண்டும். அதற்குத் துணை புரிவது சமய உணர்வுதான். இந் நான்கினையும் பெறும் மனிதன் பிறவி எனும் பெருங்கடலை நீந்தி விடுகின்றான்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்"

என்று தமிழ் மறை இதனை எடுத்தோதுகின்றது. ஒருவன் கசடறக் கற்றுத் தேறுவது இறைவனடியை வணங்கவேயாகும். மனிதன் எவ்வளவுதான் ஆற்றல் பெற்றவனாய் விளங்கினாலும் அவன் இறுதியில் இறைவனைத் தான் அடைய வேண்டும். மனதிற்கு அமைதியையும், மகிழ்ச்சியையும் அளிக்கக் கூடிய இடம் இறைவனின் தாமரைத் தாளின்றி வேறு எது இருக்கக்கூடும்? இவ்வாறு மனிதன் அமைதி அடையக் கூடிய வழியையும் காட்டுகிறது வள்ளுவம்.

வாழ்வாங்கு வாழ்கின்ற ஒவ்வொருவரிடமும் அருள் உணர்வு பொருந்தியிருத்தல் வேண்டும். அருள் உணர்வே உயர்வைத்தரும் சிறந்த பண்பு. அருள் அறத்தின் தலையாய சிறப்பைக் கொண்டுள்ளது. அருளற்றவராய் இருப்பின் அறமற்ற செயல்களைச் செய்ய தூண்டும். ஆகவே அது உறுதிப் பொருளாகிய அறத்தி னின்று நீங்கித் தம் வாழ்க்கையின் குறிக்கோளை மறந்த நிலைக்குக் கொண்டு வரும். இத்தகைய அருட் செல்வம்தான் செல்வத்துட் செல்வம் என்று வள்ளுவர் கூறுகிறார். நிலையற்ற பொருட் செல்வத்தை விட நிலையான அருட் செல்வத்தை நாடினால் அழியாத நிலை தரும். மறந்தும் அருள் உணர்வைக் கைவிடக் கூடாது என்று

"பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார்"

இவ்வாறு இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் பொருள் நிறைந்த வாழ்வைக் கொண்டிருப்பினும் அருள் நிறைந்தவனாக வாழ்ந்தால்தான் அவன் வாழ்வு முழுமையடையும் என மனிதன் முழு வாழ்வு வாழ வழி காட்டுகின்றார்.

அடுத்து வாழ்க்கைக்கு இன்றியமையாச் சில அறங்களையும் வள்ளுவர் வலியுறுத்திக் கூறுகிறார். அன்பு வழியை விட சிறந்த ஒன்று உலகில் இல்லை என்பதை வலியுறுத்தி, இத்தகு அன்பு வாழ்விற்கு இன்றியமையா இல்லறத் தலைவியின் மாண்பினையும், அவள் மேற்கொள்ள வேண்டிய வாழ்வின் முறைகளையும் அமைப்புற

விதந்தோதுகின்றார். வரும் விருந்தினர்களை, புதியவர்களை, வறுமையுடையவர்களை வரவேற்று இன்முகம் காட்டி, சாவா மருந்தாயினும் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் நெறியில் விருந்து போற்றினால் இம்மையில் இன்ப வாழ்வு அடைதற்குரிய வழியையும், மறுமையில் மட்டிலா மகிழ்ச்சி அடைதற்குரிய வழியையும் புலப்படுத்துகின்றது பொது மறையாம் வள்ளுவம்.

வாழ்வோடு இணைந்த நீதிகளை எடுத்துரைப்பதால் குறள் காட்டும் வழி இன்றும் மனிதன் செல்லத் தக்கதாக உள்ளது.

பொருட்பாலில் அரசன், அமைச்சன் என்று முடியரசுக்குரிய இயல்புகளைக் கூறும் வள்ளுவர் சுட்டிக் காட்டும் தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல், வினை செயல்வகை, பொருள் செயல்வகை, இரவு, இரவச்சம் என்ற அதிகாரங்கள் முடியரசிற்கு மட்டுமல்ல இக்கால குடியரசிற்கும் ஏற்புடைத்தாகி, கரைகாணாக் கடலாகக் காணப்படும் வாழ்க்கைக் கடலில் வாழத் துடிக்கும் மனிதனுக்குக் கலங்கரை விளக்கங்களாகக் காணப்படுகின்றன.

வாழ்வில் முன்னேற தன் முயற்சி வேண்டும். பஞ்சணையில் துஞ்சும் அரசன் முதல் கஞ்சிக்குக் கெஞ்சி, அஞ்சி வாழும் ஆண்டி வரைக்கும் அவரவர் உழைப்பே ஆக்கம் தரும். உயர்வு அடைதற்காக. பழியோடு வரும் செயல்களை மேற்கொள்ளக்கூடாது என்று வாழ்வு தாழ்வு அடையும் வழியையும் காட்டுகின்றார். ஆகவே,

> "பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
> கழி நல்குரவே தலை"

என்கிறது குறள்.

பரம்பரைச் சொத்தை ஆள்வதைவிட தன் முயற்சியால் பொருள் பெறுவதே சிறப்பு என்பதே பழந்தமிழர் பண்பாடு.

> "வினையே ஆடவர்க்கு உயிரே"

> "உள்ளது சிதைப்போர் உளர் எனப்படார்"

என்ற கொள்கைகளில் ஊறித் திளைத்தவர் சங்கத் தமிழர். எனவே வள்ளுவரும் இதனை வலியுறுத்த,

> "தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்தது
> உண்ணலி னூங்கினியது இல்"

என்று 'தன் உழைப்பின்' சிறப்பை எடுத்துரைக்க ஒரு அழகிய குறளைக் காட்டுகின்றார். ஆள்வினையோடு, நிறைந்த அறிவோடு தொழில் செய்கின்றவர்களுக்குத் தெய்வம் மடியை வரிந்து கட்டிக்

கொண்டு உதவி செய்யும், என்பதை வள்ளுவம் போல் மக்களுக்கு எடுத்துக்காட்ட வேறு எந்நூலுக்கும் இயலாது என்பது மறைக்க முடியாத மறுக்க முடியா உண்மையாகும்.

உழவின் உயர்வைப் பற்றிப் பேசும் வள்ளுவர் சோம்பித்திரி வாரைக் காணின் நிலம் என்னும் நல்லாள் சிரிப்பாள் என்று இடித் துரைக்கின்ருர். ஆகவே சோம்பலின்றி உழைத்து கடமையை நிறை வேற்றினல் உரிமைகளை இயல்பாக அனுபவிக்கலாம். இவ்வாறு உழைத்து முன்னேறுபவர் நாநலம் உடையாராய், கண்ணேட் டத்தில் கருத்து மிக்காராய், சொல் வன்மையில் சிறப்புடையாராய் இருத்தல் வேண்டும். இத்தகு பண்புகள் கொண்டு வாழ்பவர் ஊழையும் உப்பக்கம் காண்பர்.

உலகில் பிறந்த அனைத்தும் அழியலாம். ஆனல் ஒருவனது புகழ் எது அழியினும் அழியாது.

> ''ஒன்ரு உலகத்து உயர்ந்த புகழல்லால்
> பொன்ருது நிற்பதொன்று இல்''

என்ற வள்ளுவரது வாக்கிற் கிணங்க புகழொடு கூடி வாழ்வதே சிறந்தது. புகழ் ''வலவ னேவா வான ஊர்தி'' என்று புறத்தில் பேசப்படுவதால் அது தேவருலகிற்குச் செல்ல ஊர்தியாகி மறுமைப் பயனையும் விளைவிக்கும். அதனல் ''புத்தேள் உலகும் போற்றும்''. ஆகவே இவ்வுலகில் வாழும் போதே அழுக்காறின்றி வாழ்தல் வேண்டும். ஏனெனில் அழிவிற் கெல்லாம் காரணம் அழுக்காறுதான் என்று அதன் தீமையைச் சுட்டிக்காட்டி அமைதியாக வாழ்வினை நடாத்த வழி காட்டுகின்றது வள்ளுவம்.

இங்ஙனம் பலர் புகழ வாழும் வாழ்க்கைக்கு மட்டும் வழி காட்டுவ தோடு மட்டுமல்லாது நில்லா உலகத்தின் நிலையை உணர்த்தி, இல்லறத்தை இனிது முடித்து துறவறத்தில், நுழையும் துறவி களுக்கும் அவ் வாழ்விற்கான வழிகளை வகுத்துக் காட்டுகின்ருர். துறவி என்ருல் அவன் மழித்து நீட்டி, நாடு விட்டு காடு சென்று பாடுபட்டு தவத்தை மேற்கொள்ள வேண்டும் என்று காட்டவில்லை. இல்லறத்தை இனிதே நடாத்தி முடித்த பின்னர் அவன் இல்லறத்தின் கண் நின்று கொண்டே துறவறத்தை மேற்கொள்ளலாம் என்று உண்மையான துறவினை விதந்தோதுகின்ருர். துறவின் உண்மை யான இலக்கணத்தை வள்ளுவத்தைப் போல் வேறு எந்நூலும் எடுத்துக் காட்ட இயலாது.

> ''அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
> வேண்டிய எல்லாம் ஒருங்கு''

என; துறவிகளுக்கு வேண்டியதை மிக அழகாக் கூறுகின்றது.

ஐம்புலன்களை அடக்கியவனை விட சிறந்த துறவி வேறு எவரும் இருக்க முடியாது. வாழ்வின் முடிவு இன்பமயமாக இருக்க இதை விட வேண்டியது யாதுளது?

இவ்வாறு கண்ணோடு கண் இணை நோக்கொக்கி, கருத் தொருமித்து காதல் வாழ்வு வாழும் கட்டழகனும், கவின்பெறு காரிகையும் காதல் வாழ்வு நடாத்துதற்குரிய வழி இல்லறத்தை நல்லறமாக்கும் வழி, குடும்பத் தலைவன், நாட்டின் தலைவன், அவர்கள் தொண்டிற்குத் துணை புரியும் தொண்டர்கள் வாழ்வில் மேற்கொள்ள வேண்டிய வழி, காமம் சான்ற கடைக் கோட் காலை செல்ல வேண்டிய வழி முதலிய செம்மையான வாழ்விற்குரிய செம்மாந்த வழியைப் பல்வகையானும் பண்புற எடுத்துக்காட்டி வழி காட்டும் வள்ளுவமாக விளங்குகிறது. ஆகவேதான் இது உலக மக்களின் போற்றுதலுக்குரியதாய், வணங்குதற்குரியதாய், வாழ்த்து தற்குரியதாய், காவியமாய், கருத்தைக் கவரும் ஓவியமாய், தங்கத் தட்டில் வைத்த வெள்ளிக் கனி போல அனைவரது உள்ளங்களிலும் ஒளி வீசித் திகழ்கின்றது. வாய்மை வழி வாழ விரும்புபவர் வள்ளுவத்தைக் கற்க வேண்டும். வளமாக வாழ விரும்புவர் வள்ளுவம் காட்டும் வழிகளைப் பின்பற்ற வேண்டும்.

வாழ்க வள்ளுவம்!! வளர்க அதன் புகழ்!!



உள்ளம் கவர்ந்தவர்

(பெரு. லலிதா)

உலகம் ஓரறிவு உயிர்கள் முதல் ஆறறிவு உயிர்கள் வரை தன்னகத்தே உடையது. ஆறுவது அறிவாகிய பகுத்தறிவைப் பெற்ற மனிதன் மட்டுமே உள்ளத்தைப் பற்றிப் பலபடப் பேசுகிறான்; எழுதுகிறான். மற்றைய உயிரினங்கட்கும் உள்ளமிருக்கின்றது. அவற்றின் வாழ்விலும் அன்பு, கோபம், பற்று, வீரம் போன்ற உணர்வுகள் இடம்பெறுகின்றன. ஆயின் அந்த அன்பும், பற்றும் தன்னலத்தின் அடிப்படையில் மட்டும் எழும். அதைப் பிறர் நலத்துக்காகப் பயன்படுத்தும் பகுத்தறிவை அவை பெறவில்லை. இன்ன செயல் செய்தால் பிறர் உள்ளம் புண்படும்; இன்ன செயல் செய்தால் தன் உள்ளம் பண்படும் என அறிய வியலாது. பகுத்தறிவு இறைவனால் மனிதனுக்கு அளிக்கப்பட்ட அருட்கொடை. இதிலிருந்து உள்ளம் என்பது அறிவின் செயல் என்பது தெரிகிறது. "ஹ்ருதய" என்ற வடசொல் தமிழில் "இருதயம்" என வழங்கப்படுகிறது. இருதயம் வேறு இதயம் வேறு. இருதயம் நமது மார்புக் கூட்டின் நடுவேயுள்ள ஓர் உறுப்பு. உன் இதயத்தை எனக்கு தா என்று நம்மிடம் ஒருவர் கேட்பாராயின் கொடுத்து விடலாம். ஆனால் இருதயத்தைத் தருக எனக் கேட்டால் நம் உயிருக்கே ஊறு ஏற்படும். மாற்று இருதயம் வேண்டுமானால் அறுவை மருத்துவம் செய்யலாம். மாற்று இதயத்தை — நல்ல உள்ளத்தை எந்த மருத்துவரும் தர இயலாது. உருவமற்ற அதனை—அறிவின் செயற் பயனான அதனை மனிதன் தனக்குத்தானே அறிவின் துணையால் மாற்றிக் கொண்டால் தான் மாற்ற இயலும். இத்தகைய மனித உள்ளத்தை முழுவதுங் கண்டறிதல் எல்லோராலும் இயலாது. கடலின் ஆழத்தைக் கூடக் காணலாம்; மனிதனின் மன ஆழத்தைக் காண இயலாது என்பர் பட்டறிவுடைய பெரியோர்.

வள்ளுவரின் உள்ளத்தைக் காண முயல்வதே இக் கட்டுரையின் நோக்கம். ஒருவரின் உள்ளத்தை அவர்தம் சொல்லாலும், சிறப்பாகச் செயலாலும் தான் அறிதல் இயலும். அதுவே முறையுமாகும். வள்ளுவர் தம் உள்ளத்தை அறிய அவரோடு பழகும் வாய்ப்பு நமக்குக் கிட்டவில்லை. அவரது வரலாறு பற்றியும் நமக்கு உண்மை உறுதியாகத் தெரியவில்லை. அவரைப் பற்றி நாமறிவதெல்லாம் திருக்குறள் மூலம் தான். மூலக் குறளே உண்மை உள்ளத்தைக்

காட்டுமேயன்றி உரைகள் காட்டவியலா. குறள் வழியே தான் வள்ளுவரது சொல்லும் செயலும் வெளிப்படுகிறது. குறள் தான் வள்ளுவர் உள்ளத்தைக் காட்டும் கண்ணுடி.

திருக்குறள் முழுவதையும் படித்தறிய பிற உரையாசிரியர்கள் துணையைத் தேடக்கூடாது. குறளுக்கு உரை குறளிலேயே இருக்கின்றது. அப்போதுதான் வள்ளுவர் உள்ளத்தை உள்ளபடி அறியலாம். உள்ளத்தின் தொழில் உள்ளுவது. அதுவும் உயர்விஜேயே உள்ள வேண்டும். வள்ளுவப் பெருமானும்

> ' உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
> தள்ளினும் தள்ளாமை நீர்த்து''

என்று கூறுகிருர். கூறியவாறே மிக உயர்ந்த ஒன்றை எண்ணி அதற்குக் குறள் என்ற வடிவு தந்தார். வள்ளுவர் சொல்லியபடியே செய்பவர் என்பது இதனுல் உறுதிப்படுகிறதன்றே !

வள்ளுவர் உள்ளம் மிகப் பரந்த உள்ளம். உலகம் முழுவதையும் ஒரே நோக்காகப் பொது நோக்காகக் காணும் பரந்துபட்ட ஒருமைப் பாட்டுள்ளம். சாதி, சமயம், இனம், மொழி, நாடு, காலம் ஆகிய எந்த வேறுபாடும் காணுத உள்ளம். அதனுற்ருன் குறள் உலகப் பொதுமறையாக, என்றென்றும் போற்றக்கூடிய ஒரே நூலாக - ஒப்பற்ற நூலாகப் போற்றப்படுகிறது. பாரதியும் ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்தது'' என்று தமிழ்நாட்டைப் பாராட்டுகிருர். உலகில் மனிதன் மனிதனுக வாழ அறவுரை கூறிய - அறிவுரை வழங்கிய அறஉள்ளம் அவர் உள்ளம். எல்லா உயிரிடத்தும் பற்றுக் கொண்ட அன்பு உள்ளம். அனைத்துயிரும் நன்னெறிச் செல்ல விரும்பும் அருள் உள்ளம் - அந்நெறியை உயிரினும் மேலாய்க் கொள்ள விரும்பும் ஒழுக்க உள்ளம். இறுதியாகச் சொல்லப்போனுல் மனித உள்ளம். மனிதர்களாய்ப் பிறந்த அனைவரும் பெற்றிருக்க முடியாத - பெறவேண்டிய உயர்ந்த உள்ளம். மனிதனைத் தெய்வமாகக் காண விரும்பிய கருணை உள்ளம். உலகோர் உய்ய நல்வழி காட்டிய பலரிலும் வள்ளுவர் தனிச் சிறப்பு பெறக் காரணம் அவர் நாடு, இனம், மொழி என்ற எந்தக் குறுகிய எல்லைக்கும் உட்பட மாட்டார். ''எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி, ஒத்துரிமை யுடையோராய்'' வாழ்ந்த அருள் உள்ளம். ஒரு இனிப்புப் பண்டத்தின் எந்தப் பகுதியைச் சுவைத்தாலும் இனிமைச் சுவை தென்படுவதுபோல வள்ளுவர் நூலில் எந்தக் குறளை ஆராய்ந்தாலும் அவரது அருள் உள்ளம் வெளிப்படுகிறது.

மண்ணுலகில் எங்கணும் இணக்கம் நீங்கிப் பிணக்கமே தோன்றுதற்கான அடிப்படைக் காரணங்களை யுணர்ந்து அதனைக்

களைய முற்பட்டார். பல்லாண்டு காலமாகப் பற்றிப் பரந்து கிடக்கும் சமய வேறுபாட்டால் மக்கள் அடைந்த இன்னல்களைக் கண்டு கசிந்தது அவர் கருணை உள்ளம். எனவே "ஒன்றே குலம் ஒருவனே இறைவன்" என்ற கருத்தைக் கடவுள் வாழ்த்துப் பகுதியிலேயே நிலை நாட்டுகிறார். கடவுளின் உண்மையைக் கூறப் புகுந்த வள்ளுவர்

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" என்று கூறுகிறார்.

எழுத்துக்களுக் கெல்லாம் அகரம் முதன்மையாக இருப்பது போல் என்ற உவமையில் எழுத்துக்கள் என்பது தமிழ்மொழி எழுத்துக்களை மட்டும் குறிப்பிடவில்லை வாயைத் திறந்த மாத்திரத்தில் உண்டாகும் எழுத்து "அகரம்" வாய் திறவாமல் பேசக்கூடிய மொழி எது இருக்கிறது? இன்றைய பிரிவினைகளுக்குக் காரணமான மொழி வேறுபாட்டைக் கடந்து விட்டார். முதற் குறளிலேயே தமது நூல் உலகத்திற்குப் பயன்பட வேண்டும் என்ற எண்ணத்துடன் "உலகு" என்ற சொல்லையும் பெய்து வைத்தார். இறைவனுக்குத் தனிப்பட்ட ஒரு பெயரைச் சூட்டாது அவருடைய குணநலன் களாலேயே அவரைச் சுட்டுகிறார். இதனால் ஒவ்வொரு சமயத்தினரும் தத்தம் கடவுள் என்று போற்றவும் வழி ஏற்படுகிறது. அதே சமயம் பொதுவான ஒரு கடவுள் என்று உரைரவும் இயலுகிறது. கற்றதன் பயன் கடவுளின் நற்றாள் தொழலே என்ற கருத்துடைய வள்ளுவர் மக்களையெல்லாம் அந்த இறைமை நிலைக்குக் கொணர்ந்து தேவர் களாகக் காண விரும்புகிறார். அதன் பயனாக எழுந்ததே திருக்குறள். வள்ளுவர் உலகை நோக்குகிறார். உலகில் நடமாடும் மக்களிடையே அசலையும், போலியையும் காண்கிறார்.

வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து தேவர் நிலை எய்தும் உண்மை மனிதர் மிகச் சிலர். வழிதவறி வாழ்ந்து பிறர் பழிக்காளாகித் தம் வாழ்வையும் கெடுத்துக் கொள்ளும் போலிகள் மிகப் பலர். இப் போலிகளே கயவர் என அழைக்கப்படுகின்றனர். கயவரிடத்துக் கருணை கொள்கிறது அந்த அருளாளர் உள்ளம். மனித இனந்தவிர பிற இனங்களில் போலி கிடையாது. அத்தனையும் உண்மையே சான்றாக ஒரு புலியை எடுத்துக் கொண்டால் அது எப்போதும் கொடுமையோடு தான் காணப்படும். நன்மையுடையது போல நடிப்பதில்லை. இந்தத் திறமை மனிதனிடம் மட்டுமே உண்டு. அப்படிப்பட்ட மனிதர்களையே "மக்களே போல்வர் கயவர்" என்கிறார். மனித உருவமாகயிருந்தாலும் உள்ளம் கயமை உள்ளம். இப்படியே தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வந்தால் இவர்கள் எதற்கு உரியர்? வாழ்ந்ததெல்லாம் வீணன்றோ! இவர்கள்

பயன்படுவது எப்போது? கரும்பு போல் கொன்ருலல்லவோ பயன் படுவர்! என்று மனம் வருந்துகிருர். அருளாளர் செயலே அது தானே! "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று பாடவில்லையா வடலூர் வள்ளலார்! கரும்பை அழிப்பது போல் கயவரை அழிக்க வேண்டும் என்பது வள்ளுவர் கருத்தல்ல. இன்ன செய்தார்க்கும் இனிய செய்யவேண்டும் என்று கூறுபவராயிற்றே. கயவர் மீது கொண்ட கருணையினுல் அவர்களுக்குக் கூறும் அறி வுரையே அறம், பொருள், இன்பமாகும். தானுகக் கனிவதுதான் கனி; தடியாலடித்துக் கனிதல் சிறப்பில்லை என்பதைத் தெரிவிக்க ஒப்புரவு பற்றிக் கூறுகிருர் கயவர்களே! உங்கட்குத் துன்பம் வந்துற்ற காலத்தில் உங்களை விற்க முன் வருகிறீர்கள். மாருக ஒப்புரவு செய்து அதனுல் துன்பம் வருமாயின் அத்துன்பத்தை உங்களை விற்றுப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று கூறுகிருர். கயவர்களை மீண்டும் மனிதராக்கும் முயற்சி அவர் தம் முயற்சி.

அதனுல் மனிதன் மனிதனுக வாழவேண்டிய வழிமுறைகளைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிருர். எல்லோரும் எளிதில் கைக் கொள்ளக்கூடிய இல்லறத்தையே சிறந்ததாகக் கூறுகிருர். அறம் என்ருல் பிறருக்கு வாரி வழங்க நேருமோ என்று அஞ்சுகிருேம். அவ்வளவிற்கு நம்மிடம் பொருள் இல்லையே எனத் திகைக்கிருேம். அப்படியாயின் அறம் எல்லோராலும் இயலாத ஒன்ரு என்ற ஐயமும் கூடவே தோன்றுகிறது. ஏழை எளியவரிடம் கருணைகொண்ட வள்ளல் எவ்வளவு எளிதாக நம் அச்சத்தையும், ஐயத்தையும் தீர்க்கிருர்.

'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற"

மன மாசறுத்தலே அறம், மன மாசுகளாவன அழுக்காறு, அவா, வெகுளி, இன்னுச்சொல் என விளக்கமும் தருகிருர். இந்த அறம் செய்ய எந்தப் பொருளும் தேவையில்லை. இத்தகைய அறந்தான் வருவதே இன்பம். பிறவாற்ருல் வரும் இன்பம் பின்னர் துன்பம் தரும். இத்தகைய இன்பந்தரும் அறத்தைவிட ஆக்கமும் இல்லை; அதனை மறத்தலைப் போன்ற கேடும் வேறில்லை என்று அறத்தை வலியுறுத்துகிருர். இத்தகைய அறவாழ்வுக்குத் துணை செய்யும் பெண்ணின் கற்பை மட்டுமே வள்ளுவர்க்கு முன்னோர் வற் புறுத்தினர். ஆணின் வலிமைக்கு முன்னே பெண்ணின் மென்மை என்ன செய்ய இயலும்?

"ஆணெல்லாம் கற்பை விட்டுத் தவறு செய்தால்
அப்போது பெண்மையும் கற்பழிந்திடாதோ? —பாரதி

பெண்ணிடத்துக் கருணை கொண்டு ஆணின் கற்பையும்

வலியுறுத்தி கற்புநிலையை இருபாலார்க்கும் பொதுவுடைமை யாக்கினர். அதன் பயன் பிறனில் விழையாமை, வரைவின்மகளிர் போன்ற அறங்களாகும்.

துயர்ப்படுவோரைக் காணும்போதெல்லாம் அவர் உள்ளம் அலைவிட்ட மெழுகாகுகிறது. இறைவா! என்னைக் காத்த இன்னருள் இவர்களையும் காக்கலாகாதா? என வேண்டுகிறார். அதிலும் பிறரிடம் யாசித்து உண்ணும் நிலை காணும்போது அந்த அருள் உள்ளத்தில் சினமும் வந்துவிடுகிறது. 'இரந்துதான் உயிர் வாழவேண்டும் என்ற நியதியை உண்டாக்கியவர் பரந்து கெடுக' என வைகிறார். அவர்கள் கண்ணீர் 'செல்வம் தேய்க்கும் படை 'எனப் பயமுறுத்துகிறார். அதற்காக

'ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு''

''ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்''

உடனிருந்தவன் துன்பத்தை அறிந்து தவிர்க்க முயலாதவன் முயற்சி செய்ய இயலாப் பிணம் என்று பழித்துக் கூறுகிறார். அப்படியாவது மனிதனின் உள்ளுணர்ச்சியைத் தூண்டிவிட்டுப் பிறர் துயர் துடைக்க வேண்டும் என்று விரும்புகிறார். மெலியார் மேல் கொண்ட கருணையால்.

''வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து''

என்று ''அருளுடைமையில்'' கூறுகிறார். புலால் மறுத்தல் என்ற அதிகாரம் வாயில்லாச் சீவன்களிடத்துக் கொண்ட கருணையால் தோன்றியதாகும். தவம் என்பது எந்த உயிர்க்கும் உறுகண் செய்யாமை என்று புதிய விளக்கம் தருகிறார். வாய்மை என்பது கூட யாதொன்றும் தீமை இலாத சொல்லேயாம் என எண்ணுகிறார். சொல்வது மட்டுமென்ன? செயலும் அப்படியே இருக்க வேண்டும். என்பதை வலியுறுத்த.

''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்''

என்று கூறியுள்ளார் அருளறத்தின் பாற்பட்ட கொல்லாமையையும், பொய்யாமையையும் இணையற்ற இரு அறங்களாகச் சொல்கிறார். காலம் அறியாது வரக்கூடியவன் காலன். அவன் வரும் முன்பு மனிதர்கள் நற்கதி அடைய வேண்டுமென்ற நல்லெண்ணத்தால்

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை செய்யுங்கள் என்று நயமாகச் சொல்கிறார். 'காலம் பொன்னிலும் உயர்ந்தது' என்பதற்கிணங்க மக்களின் காலத்தைத் தாமும் வீணாக்கக் கருதாது இரண்டடிகளில் தம் கருத்தை வெளியிட்டாரெனில் என்னே அவர் தம் அருள்!

மெலியார் வலியாரால் வாட்டப்படாது வாழவேண்டுமெனில் இயற்றலும், ஈட்டலும், காத்தலும் வல்ல அரசு தேவை என்பதை உணர்ந்து பொருட்பாலில் அரசினைப் பற்றி விரிவாகக் கூறுகிறார். அதில் கொடுங்கோன்மையைக் கண்டித்து கண்ணோட்டத்தை வலியுறுத்துகிறார். செல்வம் ஓரிடத்தில் குவிந்திருப்பது குட்டையில் தேங்கிய நீருக்குச் சமம். தேங்கிய நீரானது பல்வேறு நோய்களைச் சுற்றுப்புறங்களில் பரப்பும். அதே போல் தேங்கிய செல்வமும் வறுமை, திருட்டு, கொலை போன்ற பல நோய்களைப் பரப்பும். அரசியல் சட்டத்தால் இந்நிலையை மாற்றினால் செல்வர் வருந்துவர். எவர் மனமும் நோகாதவாறு வள்ளுவர் அறச்சட்டம் வகுக்கிறார். நாடு முன்னேற நல்ல திட்டங்களைக் கூறுகிறார்..

இன்பத்துப் பாலும் அவரது கருணை உள்ளத்தால் தோன்றியது தான். ஒருவனும் ஒருத்தியும் அன்பின் அடிப்படையில் இணைவதே இல்லறம். அன்பு இருந்தால்தான் அறம் தோன்றும். ஒருவருக் கொருவர் அன்பு இல்லாத நிலையில் — வெறுக்கும் நிலையில் இல்லறத்தில் கட்டாயமாகப் புகுத்தினால் அது அறமாகாது. அவர்கள் வாழ்வில் முழு இன்பம் காணவியலாகாது. அப்படிப்பட்டவர்க்கு இரங்கிய வள்ளுவர் களவு, கற்பு நிறைந்த வாழ்க்கையை வலியுறுத்து கிறார். நாகரிக முதிர்ச்சியுற்றதாகப் பேசும் இக்காலத்திலும் தாம் விரும்பிய மணவாழ்வு பெறாமல் எத்தனை பேர் தற்கொலை செய் கின்றனர். இவர்களுக்காக இரங்குகிறது வள்ளுவர் உள்ளம்.

வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் வாழ்கின்றவர்க்கும் அவர் கருத்துரைகளை வழங்குகிறார். வாணிபராயினும், மருத்துவராயினும், மாணவராயினும், ஆசிரியராயினும் அன்றி வேறு எத்துறையில் இருப்போராயினும் குறளின் வழி வாழ்ந்தால் அவர் அமரராய் வாழ லாம். அவர் கூறிய வழியில் நமக்கு வாழ்ந்து காட்டினார் ஒரு மகாத்மா. எனவே வள்ளுவர் கருத்து நடைமுறைக்கு ஒவ்வாதது என்பது தவறு. வள்ளுவரின் இலக்கியத்திற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் மகாத்மா காந்தி. வள்ளுவரின் ஈராயிரம் ஆண்டு விழாவும் காந்தி அடிகளின் நூற்றாண்டு விழாவும் ஒன்றாகக் கூடும் இந்நாளில் வள்ளுவரின் தூய உள்ளத்தை — வளமான உள்ளத்தை ஒரு சிறிதேனும் ஒவ்வொருவரும் பெற முயல்வதே விழாக் கொண் டாடும் வகையாகும். அதுவே அவர்க்கு நாம் செய்யும் கைம்மாறாகும்.

வளர்க வள்ளுவர் உள்ளம்!

வள்ளுவர் பேசப்படுகிறார்

திரு. நா. பார்த்தசாரதி,
ஆசிரியர், 'தீபம்', சென்னை-1.

நூற்பயன் :

திருக்குறளும் அதை இயற்றிய திருவள்ளுவரும் இப்போது, முன்பு எப்போதும் இல்லாதபடி அதிகம் பேசப்படுகிறார்கள். குறள் எதற்காக எழுந்த நூல்? பேசப்படுவதற்கு எழுந்த நூலா? பாடி இசைத்து மகிழ்வதற்கு எழுந்த நூலா? விவாதித்துப் பட்டி மன்றம் நிகழ்த்துவதற்கு எழுந்த நூலா? பின் எதற்காக எழுந்த நூல்? கடைப்பிடிக்கவும், அதன்படி ஒழுகவும் உண்டாக்கப்பட்ட நூலை இந்த நூற்றாண்டில் வெறும் மேடைப் பேச்சுப் புத்தகமாக ஆக்கி, அதனாலேயே மகிழ்ந்து கொண்டு இருக்கிறோம். அற நூலுக்கும் காவியத்திற்கும் அடிப்படையான வேறுபாடுகள் உண்டு. 'விதித்த வற்றைச் செய்' என்றும், விலக்கியவற்றைத் தவிர்' என்றும் சமூகத்துக்கு உபதேசிக்கும் கடமையையும், மேன்மையையும் உடையது அந்நூல். நுகர்ச்சிக்கும் இலக்கிய இன்பம் துய்த்தற்கும், நயங்கள் காணுதற்கும் நெருக்கமும் உரிமையும் கொண்டாடு வதற்கும் உரியவை காவியங்களே. இந்த அனுபவ வரையறையை மீறி அறநூல்களை இலக்கிய நுகர்ச்சி நூல்களைப் போல் பயன் படுத்துவோர் தற்காலத்தில் அதிகமாகி வருகின்றனர். அறநூல் கருத்துக்களுள் (Ethics) காவியத்திற்கு (Epic) விதை நெல் போன்றவை. காவியப் பொருளான பாவிகம் (Central idea) அறநூற் கருத்துக்களுள் ஒன்றாக அமையுமாறு 'காவியம் செய்வதே நம் நாட்டுப் பண்பு. பாவிகத்தைத் தரும் அறநூல் விதை நெல்லைப் போன்றதாகும் என்றால் விளைவு போன்றது காவியம். விதை நெல்லைக் கொண்டு நல்ல விளைவுகள் ஆக்க வேண்டும். விதை நெல்லை விளையாட்டாக விறைக்கவோ, சிந்தவோ, சிதறவோ கூடாது. திருக்குறளும் எதிர்காலத்தை நன்றாகப் பயிர் செய்ய முன்னோர்கள் சேமித்திருக்கும் விதை நெல்லைப் போன்றதாகும். அதிக வெயிலில் காற்றுப்பட வைத்தாலும் விதை நெல் சத்தழிந்து கெட்டுப் போகும். அதிக மழையிலோ, அதிக ஈரத்திலோ, கண்ட இடத்தில் போட்டாலும் விதை நெல் அழுகிப் போகும், அல்லது முளையிலேயே சிரழியும்.

திருக்குறள் விதை நெல் போன்றது. அதிலிருந்து நீண்ட காலத்துக்குப் பயன்படும் பல நற்பயிர்களைச் செய்துகொள்ள வேண்டும். கடைப்பிடித்து ஒழுகி மரியாதை செய்யவேண்டிய நூல்களைப் பேசியும், பொழுதுபோக்கப் பயன்படுத்தியும் அயரச் செய்வதைத் தவிர்க்க வேண்டும். ஒவ்வொரு நூலுக்கும் ஒரு பயன் உண்டு. நூற்பயன் உணர்தலில் பிறழ்ச்சியும், திரிபும் உடையவர்கள் நூல் கற்பதே முடியாது என்று தடுக்கும் துணிவு பழைய தமிழ் இலக்கணப் பெரியார்களுக்கு உண்டு இன்ருே எதையும் யாராலும் தடுக்க முடியாது, இது குடியரசுக் காலம். நூற்பயனைப் பிறழ உணர்வோரும் இன்று நூலைப் படிக்க முடியும். நூற்பயனைத் திரித்துப் பேசுவோரும் இன்று நூலைப் படிக்கத் தடையில்லை' திருக்குறள் என்பது பன்னூற்ருண்டுக் காலத்து விதை நெல்.

அதை நன்கு பயன்படுத்தத் தக்க நல்லுழவன் கையில் கிடைக்க வேண்டும். நூற்பயன் உணர்வோன் எவனே, அவனே நல்லுழவன். கடைப்பிடித்து ஒழுக வேண்டிய நூலைப் பேசிப் பேசித் திரிவதும் இசை விழாக்களில் இசைத்து மட்டும் மகிழ்வதும் அறம் பெரிதா ? அன்பு பெரிதா ? என்று கட்சிகட்டி விவாதிப்பது மாக நடைபெறும் நிகழ்ச்சிகளை இன்று காண்கிருேம்; உணர்கிருேம்.

நூல் நோக்கம் :

திருக்குறளில் சொல்லப்படுவது போன்ற இதே நீதிகளும் அறங்களும் உலகின் பல்வேறு அறநூல்களில் கூறப்பட்டிருந்தாலும் திருவள்ளுவரின் ஒரே சிறப்பு அதைப் பட்டுக் கத்தரித்தாற் போலச் சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறியிருப்பதேயாகும். தமிழிலேயே திருக்குறள் கூறும் அறங்களையே கூறுகிற வேறு சிறியதும் பெரியதுமான அற நூல்கள் பல உள்ளன. அவற்றுக்கில்லாத சிறப்பு திருக்குறளுக்கும் திருவள்ளுவருக்கும் எப்படிக் கிடைத்தது என்பதை சிறிது சிந்திக்க வேண்டும். அறநூற் கருத்துக்களைக் கூறுவதில் வள்ளுவர் மேற்கொண்ட இங்கிதமும், உலகியலறிவும் இணையற்றவை என்பது மிகமிக முக்கியமான அம்சம். எதை அழுத்திச் சொல்லவேண்டும், எதை அணைத்துச் சொல்லவேண்டும், எதை எதோடு இணைத்து எப்படிச் சொல்லவேண்டும் என்பதில் எல்லாம் வள்ளுவர் தமக்கு ஈடு இணை இல்லாமல் உயர்ந்திருக்கிறுர் விதித்தன செய்தலும், விலக்கியவற்றைத் தவிர்த்தலுமாக மக்களை நல்வழிப் படுத்துவதே ஆசிரியர் திருவள்ளுவரின் நோக்கம் என்பதைப் பரிமேலழகர் உரைத் தொடக்கத்தில் கூறியிருக்கிறுர். திருக்குறளில் கூறிய நல்லவற்றைக் கடைப்பிடித்தலும், அல்லாதன வற்றைத் தவிர்த்தலுமே திருக்குறளைப் படிக்கிறவர்கள் திருவள்ளு

வருக்குச் செய்யும் நன்றி. ஆனால், இன்று நாடெங்கும் திருவள்ளுவர் பேசப்படுகிறார். ஆனால், கடைப்பிடிக்கப் படுவதில்லை. அப்படியே கடைப்பிடித்தாலும் கடைப் பிடிக்கிறவர்களின் தொகையோ மிகக் குறைவு. பேசுகிறவர்கள் கடைப்பிடிப்பதில்லை. கடைப்பிடிக்கிறவர்கள் பேசுவதில்லை. காந்தியையும், வள்ளுவரையும் புகழுவது ஒரு பாஷனாகி வருகிறது. நோக்கம் புரிந்து கொள்ளாப்படாமல் வெறும் வார்த்தையால் புகழப்படுவதும் பேசப்படுவதும் 'நாகரிகம்' ஆகி வருகின்றன. கொல்லாமை, புலால் மறுத்தல், பொய்யாமை, இன்னா செய்யாமை, இனியவை கூறல் ஆகியவற்றைக் கடைப் பிடிக்க முயல்வது புகழ்ந்து பேசுவதை விடச் சிறந்த காரியம். இவற்றைப் பற்றிய சிந்தனைகளில் ஊறாமல், கவிநயம் அனுபவிப்பதற்காக மட்டும் குறளைப் படிக்கிறேன் என்று ஒருவன் சொல்லிவிட முடியாது' அனுபவத்துக்குரிய நூல்கள் வேறு போற்றி மேற்கொள்ளற்குரிய நூல்கள் வேறு என்று தரம் பிரித்துப் படிக்கவும், கடைப்பிடிக்கவும் கற்றுக்கொள்ளவும் வேண்டும். அப்போதுதான் நூலின் நோக்கத்தைப் பற்றிய தெளிவு ஏற்படும்.

நம்பிக்கையும், விகிதாசாரமும் :

அறநூல்களைப் பொறுத்த மட்டில் நூறு சதவிகித நம்பிக்கை தான் பயனளிக்குமே ஒழிய, விகிதாசார நம்பிக்கை நிச்சயமாகப் பயன் அளிக்காது. இன்று நாடு முழுவதும் எல்லா காரியங்களிலுமே விகிதாசார நம்பிக்கைதான் வைக்கிறார்களே ஒழிய, நூறு சதவிகித நம்பிக்கை என்பது பலருக்குச் சாத்தியமாயிருப்பதில்லை.

'எனக்கு அகிம்சையில் நம்பிக்கையில்லை. ஆனாலும் காந்தியைப் போற்றுகிறேன்'.

'எனக்கு மதுவிலக்கில் நம்பிக்கையில்லை. ஆனாலும் காந்தீயத்தில் நம்பிக்கை உண்டு'

'திருவள்ளுவரைப் பிடிக்கும். ஆனால் அவர் கூறுகின்ற பலவற்றை கடைப்பிடிக்க முடியவில்லை.'

திருவள்ளுவரைப் பொறுத்த புகழிலும், பேச்சிலுங்கூட விகிதாசார நம்பிக்கை உள்ளவர்களே அதிகமாக ஈடுபட்டிருக்கிறார்கள். விகிதாசார நம்பிக்கைகளும், அரைகுறைக் கொள்கைகளுமே மாபெரும் சாதனைகளாகப் போற்றப்படுவதைக் காண்கிறோம். திருக்குறளை வள்ளுவர் எழுதினார் என்பதைவிடத் திருக்குறளாய் வாழ்ந்தபின் அப்படி எழுதினார் என்பதே பெரிய காரியம். அதனால் தான் திருக்குறளின் பெயர்களில் ஒன்று 'திருவள்ளுவர்' என்றே

நூலை எழுதிய கருத்தாவின் பெயராக வாய்த்தது. இப்படி வாழ்ந்தவர் இன்னார் என்று சொல்வதுபோல், கருத்தாவின் பெயரை நூலுக்கு இடும் வழக்கம் இன்று நமக்கு வியப்பை அளிக்கலாம். ஆனால் அந்தப் பழம்பண்பில் நூல் எழுதும் தகுதியே சிறப்பிக்கப் படுகிறது.

''யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற''

என்பது போல் தாம் உணர்ந்தவற்றையே கூறுபவராகத் தம்மை எல்லையாக நிறுத்திக்கொண்டு குறள்களிலேயே திருக்குறள் அப்படி வாழ்ந்தவர் கூறும் அறிவுரையாகுமெனத் தெரிகிறது. விகிதாசார நம்பிக்கை — ஒரு நம்பிக்கையாகவே கருதப்படாத அல்லது கணக்கிடப்படாத காலத்தில் வாழ்ந்தவர் வள்ளுவர். எனவே குறளில் விகிதாசார வாழ்க்கையே சிறந்த வாழ்க்கையாக எங்கும் கூறப் படவில்லை. முழு நம்பிக்கையோடு குறளைக் கடைப் பிடிக்காமல் விகிதாசார நம்பிக்கையோடு 'குறள் வாழ்க! குறள் நெறி வாழ்க!' என்று மேடைகளிலோ பிறயிடங்களிலோ பேசப் புகுவதை இன்று நிறையக் காண்கிறோம். பேசுவதால் குறளின் சிறப்பை நிரூபிக்க முடியாது. வாழ்வதால் தான் நிரூபிக்க முடியும்.

குறளும் சகிப்புத்தன்மையும்:

குறள், சகிப்புத் தன்மையைக் கொண்டாடுகிற நூல். ஆனால், குறள் அதிகம் பேசப்படுகின்ற இன்றோ வாழ்க்கையின் எந்த மூலையிலும் சகிப்புத் தன்மையே காணப்படவில்லை. எந்த அரசியல் வாதிகள் வள்ளுவரைப் பேசுகிறார்களோ அந்த அரசியல் வாதிகளே தங்களுக்கு மாறான கொள்கைகள் உடையவர்களைத் தாக்கவும், துன்புறுத்தவும், கடுஞ்சொல் கூறிக் கண்டிக்கவும் தங்களைச் சேர்ந்தவர்களைத் தூண்டிவிடவும் தயங்குவதில்லை.

''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்''

என்ற குறள் சமூக லட்சியங்களிலெல்லாம் தலைசிறந்த லட்சியமாக மேடைகளில் பேசப்படுகின்றது. ஆனால் நடைமுறையிலோ 'இந்தக் கட்சியார் அந்தக் கட்சியாரைத் தாக்கிக் கொடிக் கம்பத்தை வீழ்த்தினார்கள்' ''ஊர்வலத்தில் கல்லெறி' 'மானேஜரைச் சாப்பிட விடாமல் நாற்பது மணி நேரம் கேராவ் செய்தனர்' என்றெல்லாம் செய்திகள் வருகின்றன. 'திருக்குறளைப் பேசுவது குறைந்து அதன்படி வாழ்வது பெருகவேண்டும்'-என்று இப்படிச் செய்திகளைப் படிக்கும் ஒவ்

வொரு முறையும் மனம் நொந்தபடி நினைக்கிறோம் நாம். 'அதெல்லாம் அந்தக் காலத்துக்கு ஏற்றாற்போல வள்ளுவர் ஏதோ எழுதினர். எல்லாவற்றையுமே நாம் அப்படியே கடைப்பிடிக்க முடியாது. நமக்கு முடிந்ததை மட்டுமே நாம் கடைப்பிடிப்போமே?'' என்று லௌகீகமாக ஒரு சமாதானமும் அங்கங்கே அவ்வப்போது கூறப்படுகிறது. திருக்குறளில் சொல்லப்பட்டிருக்கிற ஒவ்வொன்றிலும் இப்படி ஒரு விகிதம் போட்டுக் கழித்துத் தள்ளிவிட்டால் கடைசியில் கடைப்பிடிக்க எதுவுமே மிதம் இருக்காது. பொய்யாமை, திருடாமை போன்ற குற்றங்களைச் சொல்லும்போது விகிதாசார நம்பிக்கையைக் கண்டிக்கும் வள்ளுவர் கொள்கையைப் பரிமேலழகர் விளக்கி இருக்கிறார்.

''நினைத்தலும் செய்தலோடு ஒக்குமாகலின் பொய் சொல்ல நினைப்பதும் திருட நினைப்பதுமே குற்றமாகும்'' என்ற கருத்து உரையிலிருந்து நமக்குக் கிடைக்கிறது. ஆகவே, பொய்யாமை, கள்ளாமை, கொல்லாமை ஆகிய தலையாய அறங்களை விகிதாசாரமாகப் பேசுவதில் பயனில்லை. பிறருடைய தீமைகளைச் சொற்களால் கூறுவதைக் கூடக் கொலை என்கிறார் வள்ளுவர். ஒரு மாற்றுக் கருத்தைக் கூறினால் கூறிய பிறரைச் சூழ்ந்து அடிக்கவும், உதைக்கவும் துணிகிற அளவு இன்று நிலைமை கெட்டிருக்கிறது. பிறருக்குத் தீமையோ, கெடுதலோ செய்யவேண்டுமென்று பேசுவது கூடச் சான்றாண்மைக்கு இழுக்கு என்று கூறும் வள்ளுவரை அதில் விகிதாசார நம்பிக்கைகூட இல்லாத நாம் பேசுவதும் வெகப்பட வேண்டிய காரியம்.

'கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்து சால்பு''

என்கிறது குறள். புண்படுத்திப் பேசுவது கூடக் கொலைக்கு ஒப்பானது என்று கூறும் மிக உயர்ந்த நாகரிகம் எங்கே? 'எனக்குப் பிடிக்காததைப் பேசினால் உதைக்காமல் விடமாட்டேன்' என வேலொடு நின்றான் மிரட்டுவது போல் மிரட்டும் இன்றைய அநாகரிகம் எங்கே? இரண்டையும் சேர்த்து நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

குறளும் தெய்வ நம்பிக்கையும் :

தெய்வ நம்பிக்கை இல்லாதவர்கள் கூடக் குறளைப் படிக்கமுடியும் என்று கூறப்படுகிறது. வள்ளுவர் எந்த மதத்தினர், எச்சமயத்தினர் என்பதுதான் ஆராயப்பட்டுக் கொண்டிருக்கிறதே ஒழிய, அவர் 'தெய்வ நம்பிக்கை உள்ளவர்' என்பது எல்லோரும் ஒப்ப முடிந்த கருத்தாகும். அதில் இரண்டாவது கருத்துக்கு இடமே

கிடையாது. தெய்வ நம்பிக்கை இல்லாத கல்விக்குப் பயனே கிடையாது ' என்று திடமாகக் கூறுகிறவர் திருவள்ளுவர்.

'' கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் ''

என்கிறது அவர் குறள். இன்றோ தெய்வம், சமயம், ஒழுக்கம் கற்பிக்கும் ஆசிரியர், ஆள்கிற ஆட்சி, பெற்றோர், பெரியவர்கள், பெண்கள், எதன்மேலும், யார் மேலும் நம்பிக்கையூட்டாத கல்வியைப் பார்த்து மேதைகள் மனங்குன்றிப் போய் வருந்துகிறார்கள். தெய்வ நம்பிக்கை இல்லாமலும் வள்ளுவரைப் போற்றிப் பேசலாம். ஒழுக்க மில்லாமலும் வள்ளுவரைப் போற்றிப் பேசலாம். கள்ளுண்ணாமையில் நம்பிக்கையின்றியும் வள்ளுவரைப் போற்றிப் பேசலாம் என்பதை எல்லாம் காண்கிறோம். எந்த நல்ல கொள்கையையும் முழுமையாக நம்ப வேண்டியதில்லை. ஒரு விகிதாசாரத்துக்கு மட்டும் நம்பினால் போதுமென்ற மனப்பான்மை எல்லாத் துறையிலுமே எப்படியோ புகுந்துவிட்டது. ' நம்புவது வேறு, செய்வது வேறு '—என்ற நிலை பெரும் பிழையாகக் கருதப்படாத காலத்தில் நாம் வாழ்கிறோமோ என்று கூடப்பயமாயிருக்கிறது. சொக்கத் தங்கமே தங்கமா, பதினான்கு காரட் தங்கமே தங்கமா என்ற கேள்வியைப் போன்றது இது. ஒழுக்கத்திலும் பதினாறு காரட் ஒழுக்கமே போதும் என்று நினைக்கிறவர்கள் இருக்கிறார்கள். ஆனால் திருவள்ளுவர் அப்படி நினைத்த வகையைச் சேர்ந்தவர் இல்லை. விகிதாசார நம்பிக்கையோடு மட்டும் அவர் நூல் எழுதவில்லை, ஒழுக்கக் கேட்டையோ, தவறு செய்வதையோ ஒரு சத விகிதம் கூட அவர் அனுமதிக்கத் தயாராயில்லை என்பது நன்றாகத் தெரிகிறது.

'' தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை ''

என்று நிலை தவறுவதைக் கடுமையாகவும், கேவலமாகவும் உவமித்துக் கூறியிருக்கிறார் அவர். ஒழுக்கத்தில் விகிதாசார நம்பிக்கை உள்ளவர்கள் திருவள்ளுவரைப் போற்றுவதிலோ திருவள்ளுவரின் அபிமானத்துக்கு உரியவர்கள் போல் தோன்றுவதோ முடியாத காரியம் என்பதை மேற்படி குறளில் அவரே கடுமையாக வற்புறுத்திச் சொல்லுகிற இடங்கள் இரண்டு மூன்றுதான். அதில் மிக மிக முக்கியமான இடம் ஒழுக்கத்தைப் பற்றியது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

சிந்தனை, சொல், செயல் மூன்றிலுமே நாகரிகம் வேண்டியவர் வள்ளுவர், மூன்றிலுமே பண்பாடு வேண்டியவர் வள்ளுவர்,

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்பது இழுக்கு"

என்று சிந்தனை நாகரிகத்தையும்

"பயனில் சொல் பாராட்டுவானை மகனெனல்
மக்கட் பதடி எனல்"

என்று சொல் நாகரிகத்தையும்

"நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு அவரவர்
பண்பறித் து) ஆற்றாக் கடை"

என்று செயல் நாகரிகத்தையுங் மிக நயமாகக் கூறியிருக்கிறார் வள்ளுவர். இந்த நாகரிகங்களைப் பேணி போற்றாமல் வள்ளுவருடைய பெயரை மட்டும் போற்றிப் பேசுவதில் பயனென்ன இருக்க முடியும்?

பெரியவர்களுடைய உபதேசங்களை மதிக்காமல் அவர்களுடைய பெயர்களை மட்டும் மதிப்பதில் அர்த்தமே யில்லை. அறநூல்களில் விகிதாசார நம்பிக்கை என்பது பாதிக் கிணறு தாண்டுவதைப் போன்றது. பாதிக்கிணறு தாண்டுவது பயனில்லை; அபாயகரமான தாகும்.

சிறிது காலத்துக்கு வள்ளுவரைப் பேசுவதை மறந்து அப்படி வாழ ஆசைப்படுவோம். வள்ளுவர் பேசப்படுவதில் வள்ளுவருக்கும் பெருமையில்லை; நமக்கும் பெமையில்லை. வள்ளுவர் சொல்படி வாழ்வதே பெருமை. பேசுவதால் வள்ளுவருக்குச் செய்வதைக் காட்டிலும் வாழ்வதால்தான் அதிக மரியாதையை வள்ளுவருக்குச் செய்ய முடியும் என்பது நிச்சயமானது.

"வள்ளுவர் கண்ட கற்பு"

(அரிகை, சாமி குமாரன்)

சுற்றிச் சுழலும் இப்பூமி சூரியனிடமிருந்து சிந்திச் சிதறிய சிறு துளியென்பது இக்கால அறிஞர்களின் துணிபு. "இப்பரந்த உலகம் தோன்றிப் பல வருடங்கள் கழிந்த பின் தான் மனித இனம் இவ்வுலகின் கண் உண்டாயிற்று" என்பது அவர்கள் கூற்று. அவ்வாறு தோன்றிய மனிதன் நல்லவற்றையெல்லாம் நாடி, தீமை பயப்பனவற்றைக் களைந்து, நாகரீகம் அடைந்தான் என்று கூறப் படுகின்றது. அவ்வாறு உலகில் நாகரீகம் அடைந்த முதல் மனித இனம் "தமிழன் இனம்" என்று கூறப்படும் பொழுது, நம் மகிழ்ச்சி யெல்லைக்குக்கடங்காததாகிறது. உலகம் இருண்ட நாட்களிடையே வாழ்க்கை நடத்திய காலத்தில், நம்மிடையே பல அறிஞர்கள் தோன்றி நம் இனத்தை முன்னேறச் செய்தனர். அவர்கள் அறத்தை யெல்லாம் வடித்தெடுத்து அற நூல்களாக்கி பின் வரும் சந்ததியார்க்கு அளித்துச் சென்றனர். அவர்களில் தலை சிறந்தவர் "வள்ளுவப் பெருமான்" என்ருல் மிகையாகாது.

இல்லறம்

"கூடி வாழ்தல் மனித இயல்பு" என்று அரிஸ்டாடில் என்ற மேல்நாட்டு அறிஞரொருவர் கூறுகிருர். அவ்வாறு வாழ்தலில் சிறப் பெய்திய தமிழர், கூடி வாழ்பவரை இரு வகையினராகப் பிரித்தனர். துறவறத்தின் கண் செயலாற்றுபவர் "துறவிகள்" என்றும், இல்லறத்தின் கண் நின்று செயலாற்றுபவர் "இல் வாழ்வார்" என்றும் பிரிக்கப்பட்டனர். வட நூல்களில் "பிரமச்சாரி" என்று குறிப்பிடப்படுபவர்களும் "இல் வாழ்வார்" என்ற தலைப்பின் கீழ் அடக்கி வள்ளுவர் குறிப்பிட்டாரென்ப. இரு அறங்களிலும் "இல்லறமே" சிறந்தது என்று வள்ளுவர் போன்ற பெரியோர் களின் துணிபு. அதுபற்றியே வள்ளுவப் பெருந்தகையாரும் தம் குறளின் கண்,

> "அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றின்
> போஒய்ப் பெறுவ தெவன்"

என்று இல்லறத்தின் மேன்மையை எடுத்து இயம்புகின்ருர். இத்த கைய மேம்பட்ட இல்வாழ்க்கை நடத்துவதற்கு ஒவ்வொரு ஆணிற்கும்

ஒரு பெண்ணின் தொடர்பும், ஒவ்வொரு பெண்டிர்க்கு ஒரு ஆணின் தொடர்பும் தேவைப்படுகிறது. இதுபற்றியே குறளிலும் ''இல் வாழ்க்கை'' என்ற அதிகாரத்திற்குப் பின் ''வாழ்க்கைத் துணை'' என்ற அதிகாரம் வைக்கப்பட்டுள்ளது.

''வினையே ஆடவர்க் குயிரே! வாணுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்''

எனக் கூறப்படுதலான், ஆடவரின் உடலும், இல்லறத்திற்கு இன்றியமையாத வருமாகிய ''வாழ்க்கைத் துணை'' எவ்வாறு இருக்க வேண்டுமென இனி நோக்குவோம்.

''தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்''

என்பதிலிருந்து, வாழ்க்கைத்துணை பொறிற்பிற் கணியாய், புகழ் மணஞ்செய் பூங்கொடியாய், கற்பிற்கரசாய், கமைக்கிடனாய், அன்றில் போல் பிரியாதுறைபவளாய், துன்பம் நேர்ந்துழி அத்துன்பம் துடைப்பவளாய், அமைய வேண்டும் என்பது பெறப்படுகின்றது.

கற்பு

இனி இல்லறத்திற்கு இன்றியமையாத கற்பு யாதென நோக்கு வோம். கல் என்ற வினைச் சொல்லிற்கு தோண்டுதல், பண்படுத்தல், என்று பொருள் கூறுவர். அவ்வாறாயின் கற்பு என்பதற்கு மனத்தைச் செம்மைப் படுத்தல் அல்லது பண்படுத்தல் என்பது பெறப்படும். கல்வியும், ஒழுக்கமும், மனத்தை செம்மையுறச் செய்தலான், கற்பிற்கு கல்வியும், ஒழுக்கமும் இன்றியமையாதவை யாகும். இவ்வாறு ஏற்படும் செம்மையானது மனத்தை, சுழன் றடிக்கும் சூறவளிக் காற்றில் ஆடும் காற்றாடி யென்ன அலையவிடாது ஒரு நிலையின்கண் நிறுத்துகின்றது. இக்கற்பு எல்லா மாந்தர்க்கும் ஆடவர், பெண்டிர் இருபாலர்க்கும் இன்றியமையாததாகும். எனினும் இல்லின்கண் இருந்து செயலாற்றுபவர் பெண்டிராதலால் பெண்டிர்க்கு இன்றியமையாதவற்றுள் ஒன்று.

இது பற்றியே வள்ளுவரும்

''பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை யுண்டாகப் பெறின்''

என்று கூறிப் போந்தார்.

மடவார் கற்பு

மடந்தையார்க்குக் கற்பு வேண்டுவதி லொன்றுகளின் இளங்கோ வடிகளும் கண்ணகியை குறிப்பிடும் இடத்தில்

"தீதிலா வடமீனின் திறமிவள் திறமென"

என்று கூறுகிறுர். இத்தகைய மாதர் கற்பு

"மாரிக்கு வித்தாகும் மடமாதர் கற்போங்கி நல்கும்"

என்று கலித்தொகை கூறுவதாலும்,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

எனக் குறளாசிரியர் நவில்வதாலும்,

"பீடுசாண் மழை பெய்யெனப் பெய்தலும்
பாடுசாண் மிகுபத்தினிக் காவத"

என வளையாபதி சாற்றுவதாலும் கற்பின் பெருமை தெரியக் கிடக்கிறது.

"பெண்டிராயின் பிறர் நெஞ்சு புகார்"

என்பது பெண் கற்பிற்கு இலக்கணம் என்ப.

எனினுங் கற்பு என்பதற்கு மறைபிற ரறியாமை என்று நல்லுந் துவனுரும், ஐம்பொறிகளை அடக்குதல் என்று பேராசிரியரும், காப்பனகாத்து கடிவன கடிதல் என மணக்குடவர் கூறுவதாலும், தாய்மை, அன்பு, அருள், சோர்வின்மை, ஈகை, இரக்கம் இவையும் கற்பின் பாற்படும் என்றும் அறிகிறோம்.

இத்தகைய கற்பிற் சிறந்த இல்லாளின் தேவையைப் பற்றி

"இல்லதெ னில்லவன் மாண்பானு லுள்ளதென
னில்லவன் மாணுக் கடை"

என்ற குறட்பாவால் அறிகிறோம்.

ஆடவர் கற்பு:

சிலர் கற்பு பெண்டிர்க்கவசியமேயொழிய ஆடவர்க்கு வேண்டற் பாற்றன்று எனக் கருதுகின்றனர். அவர்கள் எண்ணம் சரியாயின், வாழ்க்கை வண்டியின் ஒரு சக்கரத்தை மட்டும் செப்பனிட்டு, மற்ஞெரு சக்கரத்தைப் பழுதடைந்த நிலையிலேயே வண்டியைச் செலுத்துவதை யொக்கும். மேலும் "மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்" என்ற கூற்றுப்படி, பெண்டிர் உடலாகின்றனர்" ஆதலால் இல்வாழ்க்கையில் உடல் போன்ற மகளிர்க்கு மட்டும் கற்பைப் பற்றிச்

சட்டம் இயற்றிவிட்டு, ஆடவர்க்கு விதிவிலக்கு அளித்தல் நன்றன்று. அஃது உடலை மட்டும் நன்னிலையில் வைத்துக்கொண்டு, அங்கே யுறையும் உயிரை தீய நிலையில் வைத்திருப்பதையொக்கும். மேலும் ஆண்களும் தங்கள் கற்பை காப்பாற்ருதுவிடில், பெண்களின் கற்பு நிலைப்பது எங்ஙனம் இயலும். ஆதலான் வள்ளுவர் ஆடவர்க்கும் கற்பின் விதியை கற்பித்திருக்கவேண்டும். ஆகையால் தான் வள்ளுவர் ''வாழ்க்கைத் துணை'' என்ற அதிகாரத்தில் கற்பின் அவசியத்தைப் பற்றிக் கூறிய பின்பு, ஆடவர்க்கும் கற்பு அவசியம் என்ற எண்ணத்தில் ''ஒழுக்கமுடைமை'' என்ற அதிகாரத்திற்குப் பின் ''பிறனில் விழையாமை'' என்ற அதிகாரத்தை வைத்துச் சென்ருர் எனலாம்.

ஆண்களின் கற்பு பிறனில் விழைதல், வரைவின் மகளிரை நாடல் என்ற இருவிதங்களில் கெடும் என வள்ளுவர் எண்ணியதால் அவ்விரு அதிகாரங்களை, பின்னல் சேர்த்துள்ளார்.

இதற்குச் சிலர் ''அதிகாரங்கள்'' வகுத்தது வள்ளுவரன்று, ''ஆதலால் ஆடவர்க்குக் கற்பு அவசியம்'' என்பது அவர் எண்ண மாய் இருக்கமுடியாது எனக் கூறலாம்.

ஆனல் குறள்கள் யாவும் வள்ளுவர் யாத்துச் சென்றதே. இதில் யாருக்கும் ஐயம் எழ வழியில்லை. அவருடைய குறள்களில் அவருடைய எண்ணம் பிரதிபலிப்பதைக் காணலாம்.

> " அறன்வரை யல்ல செயினும் பிறன்வரையாள்
> பெண்மை நயவாமை நன்று "

''பிறன் வரையாள் பெண்மை'' என்பதிலிருந்து ஆடவர்க்கும் கற்பு அவசியம் என்பது பெறப்பட்டது.

மேலும் '' பிறனில் விழையாமை '' என்ற அதிகாரம் முழுமை யும் ஆணையே குறித்துக் கூறியிருப்பதாலும்,

> " பகைபாவ மச்சம் பழியென நான்கும்
> மிகவாவா மில்லிறப்பான் கண் "

என்று குறித்திருப்பதாலும் " பிறன் மனை நோக்காத பேராண்மை " என்று பிறர் மனை நோக்காமையை பேராண்மை யென்றும், மற்றவை யெல்லாம் ஆண்மையன்று என்றும், ஆணிற்கு ஆண்மை தேவை, அதிலும் பேராண்மை தேவை, அந்தப் பேராண்மை " பிறர் மனை நோக்காமை " எனக் கூறப்படுதலான், வள்ளுவர் ஆண்களுக்கும் கற்பு அவசியம் எனக் கருதினரென்க.

மேலும் ஆடவர் கற்பு " வரைவின் மகளிரை " நாடுதலால் கெடுமாதலால், " வரைவின் மகளிர் " என்ற அதிகாரமும் சேர்க்கப் பட்டிருக்கிறது.

" இருமனப் பெண்டிரும், கள்ளுங் கவறுங்
திருநீக்கப் பட்டார் தொடர்பு "

இங்கு திரு என்ற அடைமொழி அழகு, பொருள், உயர்வு எனப் பொருள் தருமாயினும், இங்கு கள்ளையும், இருமனப் பெண்டிரையும், விழையாதவரின் உயர்வைக் குறிக்கவும், விழைபவரின் இழிவைக் குறிக்கவும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மேலும் ஆடவர் கற்பைப் பற்றி விளக்க புறநானூற்றிலும், திருச் சிற்றம்பலக் கோவையிலும் பாடல்கள் உள்ளன.

சோழன் நலங்கிள்ளி வஞ்சினம் கூறுமிடத்து

": தீதி னெஞ்சத்து காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தல் மகளி
ரெல்லா முயக்கிடை குழைக என்தாரே "

என்று கூறுகிருன். இதிலிருந்து பிற மகளிரை நாடுதல் எவ்வளவு இழிவுடையது என்பது தெரிகிறது.

திருச்சிற்றம்பலக் கோவையில், செவிலித் தாய்க்கு, தலைவன் விடையிறுப்பதாகவுள்ள,

.... புலியூர் எனை நின்று
ஆண்டான் அருவரை ஆளியன்னுனைக் கண்டேன் அயலே
தூண்டா விளக்கனையாய்! என்னையோ ?

அன்னை சொல்லியதே என்பதிலிருந்து ஆடவர் கற்பின் இலக்கணம் பெறப்படுகிறது.

ஆகையால்தான் வள்ளுவரும்,

" பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனன்றோ வான்ற வொழுக்கு " எனப் பாடியுள்ளார்.

முடிவு

மேற்கண்டவைகளிலிருந்து "பிறர் நெஞ்சு புகாமை" பெண்டிர் கற்பென்றும், "பிற மாதரை நோக்காமை" ஆடவர் கற்பென்றும் பெறப்படுகின்றது. எனினும் பிற மாதரை தாய்போல நினைத்தல் சாலச் சிறந்தது என்பதும் பெறப்படுகின்றது. ஆகையால்தான் காந்தியாரும் "பிரமச்சாரியர் என்ருல், எந்தவிதமான சந்தர்ப்பத் திலும், எந்தப் பெண்ணையும் தொடக்கூடா தென்று அர்த்த மல்ல, காகிதத்தை தொடும் பொழுது உள்ளம் எவ்வாறு இருக்கிறதோ, அவ்வாறே ஒரு பெண்ணைத் தொடும் போதும் இருக்க வேண்டும் இதுவே பிரமச்சாரியம்" என்று கூறுகிருர். ஆகையால் "இரு பாலர்க்கும் கற்பு அவசியம்" என எல்லா அறிஞர்களும் கருது கின்றனர் எனக் கூறிக்கொண்டு இக்கட்டுரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. வி. க.

தெ. கணபதியப்பன்

தமிழ் நாட்டின் தவச்செல்வராகிய திரு. வி. கலியாண சுந்தர முதலியார், அறிவுத் தோன்றலாய், தொண்டே உருவெடுத்த தூயராய், இளமைக்கு விருந்தளித்த ஏந்தலாய் தமிழ் முனிவராய் விளங்கினர்.

அப்புண்ணியரை, அவரிடம் நான் பெற்ற இன்பத்தை நினைவு படுத்த முற்படுகின்றேன்.

கலியாணசுந்தரனர் தமிழ் மக்களின் மனதிற்படிந்து, அறிவிற் கலந்து, உணர்வில் ஒன்றி நின்ற பெருந்தகை யென்ருல் அது மிகை யல்ல. அவர் வரலாறும், புகழும் கடலென விரிந்து நிற்கின்றது மலையென உயர்ந்து காணப்படுகின்றது.

1917ல் நாட்டில் அரசியல் கொந்தளிப்புத் தொடங்கிய போது இவர் அமைதியான தமிழாசிரியர் பதவியைத் துறந்து, புரட்சிகர மான பொதுநலப் பொறுப்பை மேற்கொண்டு "தேச பக்தன்" என்னும் தினப் பத்திரிகைக்கு தலைமை ஆசிரியரானர். பின்பு "நவசக்தி" என்று மற்ரெரு செய்தித்தாளைத் தொடங்கி அதன்மூலம் தேசியக் கொள்கைகளை நாடெங்கும் பரப்பினர்.

நாற்பது ஆண்டுகட்கு முன் தமிழ்நாட்டின் நிலை வேறுவிதமாக, ஆங்கில மோகம் அதிகரித்திருந்தது. தமிழ் ஒன்றுக்கும் உதவாத மொழி யென்று மக்கள் கருதத் தொடங்கினர்கள். அந்த அவல நிலையை அகற்றி தமிழ் உணர்ச்சியை ஊட்டியவர் திரு. வி. க. தமது சொல்லாலும் எழுத்தாலும் நாட்டிலே ஒரு புத்துணர்ச்சியை உண்டு பண்ணினர். தமிழர்களுக்குத் தனி வாழ்வு உண்டு என்பதை உணர்த்தினர். திலகரின் சங்கநாதத்திற்குத் தமிழ்நாட்டில் எதிரொலி கொடுத்தார். காந்தியடிகள் அஹிம்சா இயக்கத்திற்குத் தமிழ்நாட்டில் உரமிட்டார். 1925-ல் காஞ்சிபுரத்தில் கூடிய தமிழ்நாட்டுக் காங்கிரஸ் மகாசபைக்கு இவரே தலைமையும் தாங்கினர். திரு. வி. க. செல்வம் நிறைந்தவரல்லர். ஆனல் செல்வாக்கு நிறைந்தவர். செல்வராவ தற்கு அநேக வாய்ப்புக்கள் ஏற்பட்டன. ஆனல் அவற்றை யெல்லாம் அவர் உதறித்தள்ளி விட்டார்.

முதலியார் ஏழை பங்காளன். இந்தியாவிலேயே தொழிலாளர் இயக்கத்துக்கு அடிகோலியவர். தொழிலாளர்களோடு நெருங்கிப் பழகி, அவர்களை ஒற்றுமைப்படுத்தி அவர்களுக்குத் துணைபுரிந்தார்.

சைவ சித்தாந்தத்தில் இவர் கரை கண்டவர். சர்வ சமய ஞானப் பாலைப் பருகியவர். சமய உலகில் முதலில் சித்தாந்த சைவராய்த் தோன்றினார். பின்பு வாதமும் - சமய பேதமும் கடந்த சமரசச் சைவராய் எம்மதமும், சம்மதம் என்ற பரந்த நோக்குடையவராய் விளங்கினார். எல்லா மதங்களும் ஒரே உண்மையைப் பல குரல்களால் வெளியிடுகின்றன என்பது இவர் கருத்து.

"சத்தியம் சைவம் என்னும் சால்புறு மரபில் வந்தேன்
நித்திய சமய மெல்லாம் சமரசமாகக் கண்டேன்."

என்று திரு. வி. க. தெரிவிக்கிறார்.

"சைவத்தின் சமரசம்" "முருகன் அல்லது அழகு"
"இமயமலை அல்லது தியானம்"

முதலிய நூல்களில் சைவ சமயத்தின் பெருமைகளையும் உட் கிடக்கை களையும் பொதிந்து வைத்திருப்பதைக் காணலாம்

திருக்குற்றால மலையில் செண்பகாதேவிக்குச் சிறிது கீழே, தண்ணீர் மென்மையாக விழுகின்ற ஒரு அழகிய அருவி. அதன் தோற்றமே உள்ளத்தைக் கவர்ந்து விடுமென்றால் அதில் நீராடு வோர் பெறுகின்ற இன்பத்தை விரித்துக் கூற வேண்டியதில்லை. திரு. வி. க. நீராடுவதற்கு இந்த அருவியைப் பயன்படுத்தினோம்.

ஒரு நாள் திரு. வி க.வும் நாங்கள் சில நண்பர்களும் நீராடினோம். உணவும் உட்கொண்டோம். பக்கத்தில் ஒரு தூய்மையான பாறையில் உட்கார்ந்து உரையாட ஆரம்பித்தோம். திரு. வி. க. வாய்ந்த மலையையும், கைபுனைந்தியற்றுக் கவின் பெரு வனப்பையும் வளைத்து - வளைத்துப் பார்த்துக்கொண்டேயிருந்தார். இயற்கை இன்பக் காட்சியில் மூழ்கிவிட்டார். உணர்ச்சியின் பெருக்கால் நாராயணா! நாராயணா! என்று அவர் அப்பொழுது கூறிய வார்த்தைகள் இப்பொழுதும் காதில் ஒலிப்பது போலிருக் கின்றன. இந்த வார்த்தையைக் கேட்டதும், எங்களுடன் வந்திருந்த ஆசிரியர் நாராயணன் என்பவர் ஓடிவந்து முன்னால் நின்றார். நான் உம்மைக் கூப்பிடவில்லை. "பச்சைமா மலைபோல் மேனியனை" பவளவாய் கமலச் செங் கண்ணனையன்றோ கூப்பிட்டேன். நீர் அவர்தானோ? என்று திரு. வி. க. கூறியபோது எங்களுக்கு ஆச்சரியமும், வியப்பும் ஏற்பட்டன.

இயற்கையைத் தெய்வமாகவே கருதி மனமுருகி நின்ற பசுமை உள்ளத்தை திரு. வி. க. விடம்தான் காணமுடிகின்றது. லெனின், காரல்மார்க்ஸ், டால்ஸ்டாய் முதலியோர் கருத்துக்களையும் திரு. வி. க. துருவி ஆராய்ந்தார். தாமுணர்ந்த பிறநாட்டுப் பேரறிஞர்களின் சீரியகொள்கைகளைப் பண்டைத் தமிழ்ப் பண்பாட்டுடன் ஒற்றுமைப் படுத்திக் காட்டினர். திருவாசகமும், கிறிஸ்துவின் சுவிசேஷமும், தம் உடம்பையும் உயிரையும் வளர்த்த நூல்கள் என்று அவரே குறித்துள்ளார். பொருட்செறிவும், சொல்லழகும், வீர உணர்ச்சியும் ததும்பும் கட்டுரைகளும் கேட்டவர்கள் உள்ளத்தைப் பிணிக்கும் பேச்சுக்களும் இவரிடம் பெருக்கெடுத்தன.

தமிழில் ஒரு புதிய நடையைத் தோற்றுவித்தார். அது அழகிய செஞ்சொற்களாலாகிய சிறு சிறு வாக்கியங்களைக் கொண்ட எளிய நடை. அது அவர் உணர்ச்சி வேகத்தை பிறர் உள்ளத்திலும் புகுத்தும் ஆற்றல் படைத்தது. அதனை அனைவரும் போற்றி வரவேற்றனர். பலர் அவரைப் போல் பேசவும் எழுதவும் பழகினர். தமது 18-வது வயது முதல் பலவகைக் கூட்டங்களில் திரு. வி. க. செய்த சொற்பொழிவுகளில் பல, தமிழன்னைக்குப் புதிய அணிகளாய் விளங்கின. தமிழ்ச்சோலை, தமிழ்த் தென்றல், இளமை விருந்து என்னும் நூற்களில் இவற்றைக் காணலாம்.

இவர் இளமை தொட்டே பிறப்பால் உயர்வு தாழ்வு காட்டும் பேதைமையையும், கொடுமையையும் கண்டித்து வந்துள்ளார். தமது நண்பர்களுடன் சேரிகட்குச் சென்று ஒழுக்கத்தையும் தெய்வ பக்தியையும் பற்றி, ஆர்வத்துடன் பேசி வந்தார்.

மதுரை மாநகரில் 1943-ல் நடைபெற்ற சைவசித்தாந்த மகா நாட்டில் இவர் தலைமை வகித்த பெருமை கண்கொள்ளாக்காட்சி யாகும். இவர் தலைமைப் பேருரை, மாநாட்டில் கூடியிருந்த மக்களை மங்கயர்கரசியாயும் - ஞானசம்பந்தராயும் மாற்றி விட்டது.

இந்த மாநாட்டின் போது மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் வைத்து திரு. வி. க. வுடன் தென்காசித் திருவள்ளுவர் கழக அன்பர்கள் சூழ்ந்து கொண்டு பேசிக்கொண்டிருந்தோம். மாநாட்டின் தலைமைப் பொறுப்பின் அலுப்பினல் திரு வி.க. படுத்துக் கொண்டே எங்களுடன் பல விஷயங்களைப் பற்றி பேசிக்கொண் டிருந்தார். பேச்சின் நடுவே வேறொரு ஆழ்ந்த சிந்தனையில் அவர் மனம் சென்றது. முகத்தில் ஒரு இன்ப உணர்ச்சியும் தோன்றியது. ஆனல் அது சமயம் எதைச் சிந்தித்து இன்புற்ருர் என்று நாங்கள் தெரிந்து கொள்ள முடியவில்லை. திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள் என்னும் பெருநூல் வெளியான போதுதான் அதற்கு விடை

கண்டோம். அதில் 'குற்ருலக் காட்சி' என்ற தலைப்பில் எழுதி யிருக்கிருர்:-

"மதுரைக் கழகம் எனக்குத் தென்காசிக் கழகமாகவே தோன்றியது. படுத்துக்கொண்டே நினைவு உலகில் குற்ருலப் பாதையில் நடந்தேன். மலையேறினேன். அருவியில் மூழ்கினேன் இயற்கை வெளியிலே சோறுண்டேன். இயற்கை இன்பம் நுகர்ந்தேன் மதுரைக் கழகம் குற்ருலக் காட்சி வழங்கியது.

திரு. வி. க. இயற்றிய நூல்கள் அளவிறந்தன. இவர் பெரிய புராணத்திற்குக் குறிப்புரையும் விளக்க உரையும் எழுதிய அன்பு உள்ளம் படைத்தவர். அருளாளர். 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் என்று மாண்புறு நூலை வழங்கிய மகான்''

இவர் பெண்ணுரிமை வழங்கிய பெருந்தகை. பெண்ணின் பெருமை என்றே ஒரு நூல் செய்தார். அதில் கூறுகின்ருர். "ஆண் மக்களே உங்கள் பெருமை பெண்ணுடன் பொருந்தி நிற்பது. உங்களைப் பெற்றவள் பெண், உங்களை வளர்ப்பவள் பெண். உங்களோடு வாழ்பவள் பெண். பெண்ணலன் உங்கள் நலன், உங்கள் நாட்டு நலன். ஒரு பெண்ணுக்கு இராமபிரான் எவ்வளவு முயன்ருர். ஒரு பெண்ணின் பொருட்டுப் பாரதப் பெரும் போர் நடந்ததே. பெண்ணின் துயர் தீர்ப்பது ஆண் மகன் கடமையன்ருே? பெண் பெருமை காக்கவே ஆண் மகன் பிறந்திருக்கிருன். பெண்ணில்லையேல் உலகேது. உயிரேது, அன்பேது, கடவுளேது? எல்லாம் பெண்ணில், எல்லாம் பெண்ணல் அத்தகைய பெண்ணை, தாயை, தெய்வத்தைப் போற்றுங்கள், போற்றுங்கள்''

இப்படிக் கலியாண சுந்தரனுர் களிநடம் புரிந்தார். ஒருமுறை மதுரையில் வைத்து திரு. வி. க.வைச் சந்தித்த போது இந்தக் கொள்கையை வற்புறுத்தினுர். தென்காசித் திருக்குறள் விழாவில் இதுவரை ஆண்பாலரே தலைமை தாங்குகின்ருர்கள். அதை மாற்ற வெண்டும். இம்முறை ஒரு பெண்பாலரைத் தலைமை தாங்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். நாங்கள் அவர் அன்பிற்குக் கட்டுப்பட்டு, இசைந்தோம். சென்னை ஈ. த. இராஜேஸ்வரி அம்மையார் 17-வது திருக்குறள் விழாவில் தலைமை தாங்கினுர்கள். திரு. வி. க. இந்தக் காட்சியைக் கண்குளிரக் கண்டு மகிழ்ந்ததோடு, அந்த அம்மையார் தலைமையில் தான் ஒரு பேச்சாளராகவும் நின்று சொற்பொழிவு செய்தார்களென்ருல், அவர்கள் சொல்லும்-செயலும், எவ்வளவு ஒன்றுபட்டிருந்ததென்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். திரு. வி. க. இயற்றிய நூல்களில் சமயம், சீர்திருத்தம்,

சமரசம், தேசியம், அரசியல், தொழிலியக்கம் முதலிய பலநிறக் கருத்துக்கள் அமைந்தன.

தமிழிலே உரை நடை என்ற பகுதிக்கு அவர் தந்தையாக விளங்கினர். மிகப் படித்தவர்களேயன்றி, பாமரர்களும் எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய வகையில், அவருடைய உரை நடையில் இலக்கணப் பிழை என்பது ஒன்று கூடக் கிடையாது. கூடிய மட்டிலும் தூய்மையான தனித் தமிழிலேயே எழுதுவார். வெகு நீண்ட வாக்கியங்களை எடுத்து ஆளமாட்டார். சிறிய வாக்கியங்களே கொண்டது அவர் உரைநடை. அப்படிப்பட்ட பண்பாடுதான் அவர் நடைக்கு அழகு என்று சொல்லலாம். அவர் எழுதிய "நாயன்மார் வரலாறு", உரை நடைகளுக்கு ஒரு சிறந்த நூல் என்று போற்ற வேண்டும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நாவன்மையிற் சிறத்தவர் "கிளாட்ஸ்டனும்", 'சுரேந்திர நாதரும்" என்று சொல்லப்பட்டனர். ஆனால் அவ்விருவரும் திரு. வி. க. நாவன்மையைக் கண்டதில்லை. கேட்டதில்லை. கண்டிருப்பின், அல்லது கேட்டிருப்பின் இவரைப் புகழ்ந்திருப்பார்கள்.

திரு வி. க. அஞ்சா நெஞ்சத்துடன் தாம் கொண்ட கொள்கைகளை வெளியிடுவார். இவ்வாறு வெளியிடுவதில் அரசியல் கொள்கைகளுக்கு மாறுபட்ட போதிலும் கூசாமல் வற்புறுத்துவார். அவர் நன்றி மறவாத நலமுடையார். சிறு உதவியையும் பெரிதென மதித்துப் பாராட்டும் பண்பு, அவர் உள்ளத்தில் ஒளி பெற்று நின்றது.

அரசியல், இலக்கியம், சமயம் முதலிய பல துறைகளிலும் அவருக்குக் கணக்கற்ற பேர் நண்பரானர்கள். நெருங்கிப் பழகிய நண்பர்களைப் பற்றி எல்லாம் தமது பெரு நூலாகிய "வாழ்க்கைக் குறிப்புகளிலே" எழுதியிருக்கிறர். 1947-ல் திரு. வி. க. சென்னையிலிருந்து எக்ஸ்பிரஸ் ரயிலில் திருவனந்தபுரம் சென்றார். அவ்விதம் செல்வதைப் பற்றியும், 'புகைவண்டி நிலையத்தில் சில நிமிடம் உரையாடலாம் என்பது எனது வேட்கை" என்றும் கடிதம் வரைந்திருந்தார். சந்திப்பு மத்தியான வேளையில் அமைவதால் அவர் உடல் நிலை தெரிந்த நாங்கள், அவருக்குரிய தனி முறையில் கீரை முதலிய உணவு வகைகள் தயார் செய்து, ஒரு கூஜாவில் நல்ல சூடான வெந்நீரும் எடுத்துக்கொண்டு போனேம். ரயிலிலேயே அவருடன் சிறிது பிரயாணம் செய்தோம். உணவு அருந்தினர்கள். ஞாபகமாய் நல்ல சூட்டில் வெந்நீரும் கொண்டு வந்திருந்தது திரு. வி. கவிற்கு எல்லையற்ற மகிழ்ச்சியைக் கொடுத்து விட்டது.

அதை அவர் சொல்லிச் சொல்லி இன்புற்ருர். பின்பு பலமுறை சந்திந்த போதும்கூட அந்த வெண்ணிரை ஞாபக மூட்டிப் பாராட்டுவார்.

திரு. வி. க. வேற்றுமையில் ஒற்றுமையைக் கண்டார். பன்மையில் ஒருமையைக் கண்டார். அவர் கவிதைகளும் நிரம்ப எழுதியிருக்கின்ருர்.

"ஏசு மொழியும், இனிய திருவாசகமும்,
நேச அருட் பாவும் என் நெஞ்சு"

இத்தகைய பண்பாட்டை திரு. வி. க.விடம் சிறப்பாகக் காணமுடியும்.

அவர் கவிதைகள் மிகத் தெளிவாயும், உள்ளத்தில் உணர்ச்சியை எழுப்புவதாயுமிருக்கின்றன. அவை எளிய சொற்களாலே ஆக்கப் பட்டவை. கருத்தை வழுவாமல் கூறுவன. "பொதுமை வேட்டல்" போன்ற நூல்களில் அவரின் உணர்ச்சி ததும்பிய எண்ணங்கள் மலர்ந்து கிடக்கும்.

திரு. வி. க. இயற்கை அழகில் ஈடுபட்டவர். இயற்கை யோடிசைந்த இன்பத்தையும் இன்பத்தோடிசைந்த இயற்கையையும் பற்றி இடைவிடாது சிந்தித்தும், பேசியும், எழுதியும் வந்த ஞானி. நகர வாழ்வு அவருக்கு அமைதியைக் கொடுக்கவில்லை.

வான்புகழ் கொண்ட வள்ளுவர் பெருமானிடத்தில் இவர் மிகுந்த அன்புடையவர். திருக்குறளின் வழி வாழ்வு நடத்த வேண்டு மென்பது இவர் ஆசை—தென்காசித் திருவள்ளுவர் கழகத்தில் நிரம்பிய பற்றும் தொடர்பும் கொண்டிருந்தார். தென்காசித் திருக்குறள் விழாக்களில் நான்கு முறை தலைமை பூண்டிருக்கிருர். தென்காசியை நினைக்கின்ற போது அவர் உள்ளம் குளிர்ந்தது. திருக்குற்ருலத்தின் இன்பக்காட்சி அவர் கருத்தைக் கவர்ந்தது. அந்த இன்ப நிலையில் அவர் உள்ளத்தில் நாங்கள் விதைத்த வித்து இன்று விருட்சமாகக் காட்சி கொடுத்து நிற்கின்றது. அஃது, திருக்குறளுக்கு அவர் எழுதிய விரிவுரையாகும்.

திரு. வி. கலியாணசுந்தரனரிடம் எல்லாக் கட்சியினரும் மதிப்பு வைத்திருந்தனர். இதற்குக் காரணம்

"குணம் நாடிக் குற்றமும் நாடி, அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்"

என்ற தெய்வப் புலவரின் திருவாக்கின்படி அவர் யாவர் பாலும் குணங்களையே, நன்மைகளையே எடுத்துப் போற்றி உற்சாகப்

படுத்தும் பண்புடையவர். இவரிடம் இயற்கையான மதிநுட்பமும், நூற்புலமையும், கருணையும், வீரமும், எளிமையும், மூவாசையும் வென்ற முனிவர் இயல்பும், பக்தியும் ஆகிய குணங்கள் ஒருங்கே அமைந்திருந்ததால் இவரைச் சமரச சன்மார்க்கப் பெரியவராக, உலகமுய்ய வழிகாட்ட வந்த உத்தமராக மதித்துப் போற்றினர். ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற அப்பர் பெருமானின் திருவாக்கை வாழ்க்கையில் கடைப்பிடித்து நடந்தார். தமக்கென வாழாப் பிறர்க் குரியாளராக வாழ்ந்தார், வாழ்கின்றார்.

குறிப்பு :- **திருச்சி வானொலி நிலையத்தில் 2—8—1955 இரவு ''இலக்கிய நினைவுகள்'' என்ற தொடரில் பேசியது.**



ஒரு குறள் எடுத்த விசுவரூபம்!

தாமரைக்கண்ணி

குமாரக் கடவுள் பேருருவம் கொண்டதைக் கந்தபுராணத்தில் கண்டோம். அனுமன் விசும்பு கொள்ளாமல் நெடிதுயர்ந்த செய்தியினை இராமகாதையில் படித்தோம். கண்ணபிரான் விசுவரூபம் எடுத்ததை மாபாரதத்தில் அறிந்தோம். சிவபெருமான் விண்ணும் மண்ணும் பாதலமும் பற்றுமல் அனல் பிழம்பாகி நின்றதனை அருணசல புராணத்தில் காண்கின்ரேம். ஆனல், திருவள்ளுவதேவர் இயற்றிய தெய்வத்திரு நூலில் காணப்படும் எந்த ஒரு குறட்பாவும் விசுவரூபம் எடுத்த வரலாற்றினை யாண்டும் கண்டிலம். அஃதங்ஙனமாயின், மேற்சொன்ன தலைப்பு பொருந்துமாறு யாங்ஙனமென நேயர்கள் வினவுவது எனக்குக் கேட்கிறது.

ஒரு குறள் வெண்பா நெடிதுயர்ந்த வடிவம் எடுத்ததாக வரலாறு ஒன்றும் இல்லையாயினும், தற்கால விஞ்ஞானிகள் அணுவின் ராட்சச வடிவத்தைத் தரிசனம் செய்து, அதன் அளவிலா ஆற்றலை அழிவிற்கும் ஆக்கத்திற்கும் பயன்படுத்துமாறு போல, வள்ளுவப் பெருந்தகையின் ஒவ்வொரு குறளும் அத்தகைய பேருருவம் எடுப்பது சாத்தியமே எனப் பண்டைப் புலவர்களில் இருவர் கருதலாயினர். இவர்களில் ஒருவர் பெண்பாலார், மற்றவர் ஆண்பாலார்.

"அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்,"

என்னும் அவ்வையார் புகழுரையினையும்,

"மாலும் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞால முழுது நயந்தளந்தான் – வாலறிவின்
வள்ளுவரும் தம்குறள் வெண்பாவடியால் வையத்தார்
உள்ளுவ எல்லாம் அளந்தார் ஓர்ந்து"

என்னும் பரணரது திருவள்ளுவமாலைப் பாடலையும் காண்க.

தான் தோன்றிய காலத்தே தன்னோடு ஒரு புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்துக் கொண்டே எழுந்த திருக்குறளைப் பிற் காலத்துப் புலவர்கள் எப்படி எப்படி யெல்லாமோ போற்றிப் பாராட்டினார்கள். அவற்றில் ஒரு விதம், ஒரு குறளின் கருத்தை அமைத்து ஒரு காவியமே புனைந்திட்டமையாகும். சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம் ஆகிய இந்த மாபெருங் காவியங்கள் ஒவ்வொன்றிற்கும் அடிப்படையாக ஒவ்வொரு குறட்பா அமைந் திருக்கும் பெற்றியை யான் காட்ட இயலும். ஆனால், இவை விரிவான கட்டுரைகளுக்குப் பொருள்களாய் இருத்தலின், அச்செயலை மேற் கொள்ளாது விடுக்கின்றேன்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் 'தெய்வ' என்னும் அடைமொழியைப் பெற்ற முதற் புலவர் வள்ளுவர் ஆவார். 'தெய்வப் புலவர்' என்பது அவரது பத்துப் பெயர்களில் ஒன்று. வள்ளுவருக்குப் பின் இந்த அடைமொழியைப் பெற்ற ஒரே புலவர் 'தெய்வச் சேக்கிழார்' ஆவார். அத்தகு சேக்கிழார் பெருமான் மேற்காட்டிய காவியப் புலவர்களில் ஒருவர் ஆவார். அவர் திருக்குறளில் நன்கு தோய்ந்து அதைக் கற்றிருந்தார் என்பதை அவர் வரலாறு ஒன்றே விளக்கி விடும். அவர் சோழ மன்னனின் அரசவை ஏறியதற்குக் காரணம் அவர் தம் திருக்குறள் கல்வியே யன்றோ? யான் மேலெடுத்துக் காட்டிய அவ்வையார், பரணர் போன்றோரது பாடல்கள், சேக்கிழாரின் கருத்தைப் பெரிதும் கவர்ந்தன. அப்பாடல்களின் நோக்கத்தை நிருபிக்கத் தாம் ஒரு காவியம் புனைய வேண்டுமெனத் துடித்துக் கொண்டிருந்தார். அவருக்கு இத்துடிப்பு ஏற்பட்ட காலமும், சிவகதை பாடும்படி அனபாயகுலோத்துங்க சோழன் அவரை வேண்டிக்கொண்ட காலமும் கங்கை யமுனைச் சங்கமம் போல் ஒன்றுபடவே, தமிழும் சைவமும் செய்த நற்றவத்தின் பயனாகத் திருத்தொண்டர் புராணம் தோன்றியது.

இனி, இன் தமிழ்ச் செய்யுளால் எடுக்குமாக்கதை இயற்று வதற்கு அடிப்படையாகச் சேக்கிழார் எந்தக் குறட்பாவைத் தேர்ந் தெடுத்தார் என்பது, நாம் அடுத்து ஆராயத்தக்கதாகும். இவ்வாராய்ச்சியில் நாம் அதிகம் இடர்ப்படாமலேயே, நுண்ணிய இலக்கிய நோக்குடையவர்களின் கண்ணெதிரே அக்குறள் தானே வந்து நிற்கிறது. பாயிரத்துள் மூன்றும் அதிகாரமாகிய நீத்தார் பெருமையில் ஆறுவது பாட்டாகிய,

''செயற்கரிய செய்வார் பெரியர், சிறியர்
செயற்கரிய செய்கலாதார்''

என்பதே அக்குறள் ஆகும்.

ஆயின். இக்குறளைத்தான் சேக்கிழார் தம் காவியத்துக்கு மூலப் பொருளாகக்கொண்டார் என்பதற்குச் சான்று யாது? பெரிய புராணத்தில் கூறப்பெற்றுள்ள திருத்தொண்டர்கள் செயற்கரிய செய்தவர்களா? என்னும் வினாக்கள் அடுத்தடுத்து எழுகின்றன. இவ்விரண்டாம் வினாவிற்கு யான் விடையிறுக்க வேண்டாதபடி, சிவராஜயோகியாராகிய பட்டினத்துப் பிள்ளையார் பதில் சொல்கிறார். யாருமே செய்தற்கரிய காரியத்தைப் பட்டினத்தார் செய்தாரெனத் தாயுமானவர் கூறுகின்றார்.

"பார் அனைத்தும் பொய் எனவே பட்டினத்துப்பிள்ளையைப் போல்
ஆரும் துறத்தல் அரிதரிது"

என்பது தாயுமானார் திருவாக்கு. அவ்வாறு பாராட்டப் பெற்ற பட்டினத்தாரோவெனில், தாமே செய்தற்கரிய சில செயல்களை வேறு சிலர் செய்ததாகப் பரவசத்துடன் பாடுகிறார்.

"வாளால் மகவரிந்து ஊட்ட வெல்லேன் அல்லன்; மாதுசொன்ன
சூளால் இளமை துறக்க வல்லேன் அல்லன்; தொண்டுசெய்து
நாள் ஆறில் கண் இடந்து அப்பவல்லேன் அல்லன்; நான் இனிச்சென்று
ஆளாவது எப்படியோ? திருக்காளத்தி அப்பனுக்கே"

என்பது பட்டினத்தார் பாடல். இதில் குறிக்கப்படுகின்ற சிறுத்தொண்டர், திருநீலகண்டர், திருக்கண்ணப்பர் ஆகிய மூன்று பெரியார்களும் பெரிய புராணத்தில் பேசப்படுகின்ற திருத்தொண்டர்கள் ஆவார்கள். பானைச் சோற்றுக்கு – ஒரு சோறு அன்று – மூன்று சோறு பதங்காட்டிவிட்டார் பட்டினத்தார். ஆகவே, எஞ்சிய அறுபது அடியார்களும் செய்தற்கரிய செய்தவர்தாம் எனக்கொள்வதற்குத் தடை யாது?

அதுமட்டுமன்று, செயற்கரிய செய்வார் பெரியர் அல்லரோ? தாம் அத்தகைய பெரியார்களைப் பற்றிய வரலாறுகளையே சொல்கிறார் என்னும் கருத்துப்பட, பல இடங்களில் நாயன்மார்களைப் பெரியார் என்றே சேக்கிழார் குறிப்பிடுகிறார். இப்படிப்பட்ட இடங்கள் எண்ணிறந்தன ஆகும். எடுத்துக்காட்டாக மூன்று இடங்களை மட்டும் குறிப்பிடுவேன்;

(1) தடுத்தாட்கொண்டபுராணம் - செய்யுள் 105 - செய்தவப் பெரியோன்;

(2) இளையான்குடி மாறநாயனார் புராணம் – செய்யுள் 27 – அப்பெரியவர்;

(3) எறிபத்த நாயனர் புராணம் - செய்யுள் - 46 பெரியோர் செய்கை.

இவற்றையெல்லாம் நோக்கும்போது, திருதொண்டர் புராணத்திற்குப் 'பெரியர் புராணம்' எனவும் ஒரு வழக்காலுண்டு என்னும் சிலருடைய கொள்கைக்கு ஏது இருக்கிறதென்றே எண்ணத்தோன்றுகிறது.

இவ்வாறெல்லாம் ஐயம்திரிவு மயக்கங்களால் நாம் அவதிப்படலாகாது என்னும் பெருங்கருணையால், சேக்கிழார் பெருமான் ஓரிடத்திலே திருத்தொண்டர் ஒருவரை "செயற்கரும் செய்கை செய்த தீரன்" எனக் குறிப்பிட்டுள்ளார். (இயற்பகைநாயனர் புராணம், 29). சேக்கிழார் வழக்கமாகக் கையாளும் உத்தியின்படி, இச்சொற்றொடர் மற்ற அடியவர்களுக்கும் பொருந்தும். மேலெடுத்துக் காட்டிய திருக்குறள் சொற்றொடரை அப்படியே எடுத்து அமைத்துக் கொண்டதன் மூலம், தாம் அக்குறளை அடிப்படையாகக் கொண்டுதான் காவியம் புனைந்திருப்பதாகக் குறிப்பாய் ஆனல் உறுதியாய்-விளக்கி விட்டார். மேற்காட்டிய புராணத்தின் 28-வது பாட்டில், சேக்கிழார் நாயனரை 'செய்வதற்கரிய செய்கை செய்தநற்றொண்டர்" எனக் கவிக்கூற்ருக வருணிக்கிருர். அது போதாதென்று, "வசிஷ்டர் வாயால் பிரம ரிஷி" என்னும் முதுமொழிக்கிணங்க, சிவபெருமானே இயற்பகை நாயனரை "செயற்கரும் செய்கை செய்த தீரனே" என்று ஓலமிட்டு அழைப்பது போல் அமைத்திருக்கும் நயம் அறிந்து சுவைத்தற்குரியதாகும்.


இதுகாறும் கூறியவாற்ருல், "செயற்கரிய செய்பவர் பெரியர்" என்னும் திருக்குறள் சொற்றொடரை அடிப்படையாக வைத்தே பெரிய புராணக் காவியம் எழுந்ததென்பது சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபிக்கப்பட்டாகிவிட்டது.

மேலே 'ஒரு குறள் எடுத்த விசுவரூபம்' எனத் தலைப்புக் கொடுத்தேனல்லவா? 'அரைக்குறள் எடுத்த விசுவரூபம்' என அதை மாற்றி அமைத்துக் கொள்ளுமாறு நேயர்களை வேண்டிக் கொள்கிறேன். ஏனெனில், செயற்கரிய செய்த பெரியார்களைப் பற்றிப் பெரிய புராணம் பேசுகிறதேயன்றி, செயற்கரிய செய்கலாகாத சிறியார்களைப் பற்றி அஃது யாண்டும் எதுவும் கூருமையான் என்க.

இறுதியாக, நேயர்களுக்கு ஒரு தோராயக் கணக்கு கொடுக்கப் போகிறேன். பெரிய புராணத்தில் மொத்தம் 4286 செய்யுள்கள்

இருக்கின்றன. ஒவ்வொரு செய்யுளிலும் சராசரி * முப்பது சொற்கள் இருக்கின்றன என வைத்துக் கொள்வோம். ஆக மொத்தம், 4,286 × 30 = 1,28,580 சொற்கள் இருக்கின்றன. மூன்று சொற்களே உடைய அரைக்குறள், சுமார் ஒரு லட்சத்து இருபத்தெட்டாயிரத்து ஐநூற்று எண்பது சொற்கள் கொண்ட பெரிய புராணமாக வளர்ந்த தென்றால், பின்னது முன்னதன் விசுவரூபம் எனக்கொள்வதற்குத் தடை யாது ?

* முப்பது என்னும் எண், மாதிரிக்காக காரைக்கால் அம்மையார் புராணத்தில் மிகப்பெரிதாகவும் மிகச் சிறிதாகவும் இராத 'மானமிகு தருமத்தின்' எனத் தொடங்கும் முதல் பாட்டிலிருக்கின்ற சொற்களை எண்ணிப் பெறப்பட்டது.



செல்வத்துள் செல்வம்

வேங்கடரங்கநாதன், பி. ஏ., பி. டி.,

வள்ளுவர் அருளிச் செய்த திருக்குறள் உலகப் பொது மறை. அது உலகிலுள்ள ஒரு அரிய நூலாகும். காலம், இடம் கடந்து நிலைத்து நிற்கும் தன் சக்தியால் அது வாழும் இலக்கியமாகத் திகழ்கிறது. ஈராயிரங் ஆண்டுகளாய் அது வாடாது மணம் பரப்பி வந்துள்ளது. அது என்றும் வாழும் தன்மையுடைய சிறந்த நூல். வள்ளுவப் பெருந்தகையாரின் ஆழ்ந்த சிந்தனைகள் அடங்கிய வியத்தகு பேழை இந்த நூல். இதில் வள்ளுவர் பற்பல பொருட்கள் பற்றித் தம் கருத்துக்களை பலப்படக் கூறியுள்ளார். கல்வியைப் பற்றியும் சில அதிகாரங்களில் பேசியுள்ளார். கல்வி, கல்லாமை என இரு அதிகாரங்கள் அமைத்த பின்னர் கல்வியின் இன்றியமையாத பகுதியான 'கேள்வி'யைப் பற்றிப் பத்துக் குறட் பாக்கள் கொண்ட ஒரு அதிகாரம் எழுதியுள்ளார். இந்த அதிகாரத்தின் தலைப்பு 'கேள்வி' என்றிருந்த போதிலும் அவர் முதல் குறளிலேயே கேள்வியை "செல்வத்துள் செல்வம்" என்றும் "செல்வத்து ளெல்லாந் தலை" என்றும் சிறப்பிக்கிறார். 'கேள்வி' பற்றிய குறட் பாக்கள் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கன. வள்ளுவர் அப்பாக்களை அமைத்துள்ள முறையும், அவர் தம் கருத்துக்களைச் சொல்லும் நயமும் எண்ணி வியப்பதற்குரியன.

'கேள்வி' கல்வியின் ஒரு முக்கியப் பகுதியாகும். ஏடுகளும், எழுதுதாளும் அச்சுப் பொறிகளும் இல்லாத பண்டைய நாட்களில் கேள்வியே கல்வியாக அமைந்தது. அறிவெல்லாம் ஒருவர் பிறர்க்குச் சொல்வதன் மூலமும், அதைக் கேட்டவர் நினைவில் வைத்திருத்தல் மூலமுமே காக்கப்பட்டது. வேத காலத்தில் எழுந்த நான்கு மறைகளும் கேள்வியால் காக்கப்பட்டவைகளே! பிற்காலத்தில் எழுதப்பட்ட எல்லா நூல்களும், குறிப்பாக வரலாறுகளும் கேள்வி அறிவின் உதவியால் எழுதப்பட்டவைகள் ஆகும். நம் தமிழ் மரபு, கலைகள், பௌத்த, சமண மதம் முதலியன பற்றிய அரிய செய்திகள் பலவற்றைத் தாம் கேட்டு அறிந்ததாய் தமிழ் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதய்யரவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். குருகுல முறைக் கல்வியில் கேள்வி அறிவிற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப் பட்டது. தமிழில் வெண்பாக்களை இருமுறை சொல்லக் கேட்டு

அதனை மாணவன் மனதில் நிலை நிறுத்த வேண்டும் என்று பண்டை நாளில் எண்ணப்பட்டது. இச் சேதிகள் எல்லாம் கல்வியில் 'கேள்வி'யறிவின் பெரும் பங்கை நன்கு விளக்கும்.

ஓசை பதிவு செய்யும் நாடா (Tape Recorder), இசைத்தட்டு வானொலி, திரைக்காட்சி, தொலைக்காட்சி முதலிய பல சாதனங்கள் இன்றையக் கல்வியில் பயன்படுகின்றன. எனினும் இவை அனைத்தாலும் கூட 'கேள்வி' அறிவு தரும் ஒரு நல்லாசிரியனுக்கு ஈடாகவோ அன்றி மாற்றாகவோ அமைய இயலவில்லை. இப்பொறிகள் மாற்றம் இல்லாமல் ஒரு நிலையில் பணியாற்ற வல்லவை. அவைகளால், உரையைக் கேட்போரின் முகக் குறிப்பும், ஐயமும் உணர்ந்து அவற்றை நீக்க இயலாது. தவிரவும் ஒருவர் பேசும் போது அவர் ஒலிக்கும் முறை; வெளிப்படுத்தும் உணர்ச்சி, அங்க அசைவு, தோற்றம் முதலியன அவர் தம் உரையோடு இணைந்து அவர் தம் கூற்றுக்கு மெருகும் ஆற்றலும் தருகின்றன. அதன் விளைவாய் அவர் சொற்கள் கேட்போர் மனதில் ஆழப் பதிகின்றன. இப்பயன்கள் எல்லாம் பொறிகள் மூலம் பெறும் 'கேள்வி'யறிவில் இல்லை. மனிதருக்கு மாற்றாய் பொறிகள் மட்டும் அமைய முடியுமானால் அவைகளே கல்வியை முற்றிலுமாய் கற்பித்து விடும். நாமாகவே நூல்கள் மூலம் கல்வியைக் கற்கலாம். அதற்கு அதிக உழைப்பும் காலமும் தேவை; மேலும் கேட்டுணர்வது போன்ற 'அறிவுத் தெளிவு' அதன் மூலம் கிட்டுவதில்லை. 'கேள்வி'யறிவு முறையில், குறைந்த காலத்தில், குறைந்த உழைப்பால் நிறைந்த அறிவு பெற வாய்ப்புகள் உண்டு. மேலும் கருத்துக்களைச் சொல்பவரின் ஆற்றலால் கருத்துக்கள் கேட்போர் மனதில் பசுமரத் தாணியாய் பதியவும், அங்கை நெல்லிக்கனி போல் தெளிவுறவும் வசதியுண்டு. இதை விளக்குவது போலவே அமைந்த முதுமொழி "கற்றலிற் கேட்டல் நன்றே" என்பது. எனவே அன்றும், இன்றும் கல்வியில் கேள்வியின் பங்கு இன்றியமையாதது என்பது புலனாகும். இதனை நன்குணர்ந்தே வள்ளுவரும் கேள்விக்கு ஒரு அதிகாரமே வகுத்துள்ளார்.

'கேள்வி' யறிவைச் செவியின் மூலமே பெறலாம். எனவே வள்ளுவர் இவ்வதிகாரத்தில் செவி பற்றியும் பேசுகிறார். மக்களைப் போலவே மாக்களும் செவியுடையன. அவை ஒலியைக் கேட்க மட்டுமே மாக்களுக்குப் பயன் படுகின்றன. இதுவன்றி அவைகளால் பொருட்களை அறியவும், அவற்றின் சுவையுணரவும் இயலாது. ஆனால் 'அறறிவு' படைத்த மனிதச் செவி 'கேள்வி' யறிவு பெறவும், பொருளும் சுவையும் உணரவும் திறமை பெற்றது. இதுவே மனிதச் செவியின் சிறப்பு. இக்'கேள்வி' யறிவு பெறுவிடில் மனிதச் செவியும்

மாக்கள் செவியை ஒத்ததேயாகும். அத்தகைய செவியுடைய மாந்தரும் விலங்கனையராவர் என்பது வள்ளுவர் கருத்து.

வள்ளுவர் ஆழ்ந்த அகன்ற அறிவுடையவர்; அவர் மனித மனத்தின் ஓட்டங்கள், பலம், குறைபாடு முதலியன அறிந்தவர்; மனித உணர்ச்சிகள் பற்றிய அறிவு அவருக்கு நிரம்ப உண்டு; இவற்றோடு அமையாது அவர் சோர்வின்றிச் சொல்வதில் வல்லவர்; தம் தெளிந்த சிந்தனையைத் தேர்ந்த சொற்களில் தரும் வல்லமையுடையவர் வள்ளுவர்; கேட்போர் மனங்கொள்ளுமாறு சொல்வதில் அவர் திறமை மிக்கவர்; அதற்கு அவர் கைக்கொள்ளும் உத்திகளும் பலப்பல. அன்புடன் அறிவுரையாய் வழங்குவார்; அழுத்தமாய் சொல்வார்; எதிர் மறையாய் சொல்வார்; கேலி செய்து சொல்வார்; வெகுண்டெழுந்து உரைப்பார்; இகழ்ச்சி தோன்றவும் பேசுவார். இவ்வாறு பலமுறைகளில் சொல்லும் திறன் அவருக்குக் கைவந்த கலையாகும். வள்ளுவர் 'கேள்வி'யறிவு பற்றி வழங்கியுள்ள பத்துக் குறட்பாக்களும் வள்ளுவரின் மனித மனம் பற்றிய அறிவுக்கும் அவரது சொல் திறனுக்கும் சான்றாய் விளங்கும்.

முந்தைய நாட்கள் முதல் இன்று வரை மனிதனைக் கவரும் அற்புதக் காந்தமாயிருப்பது 'செல்வம்'. அதனைத் தேடுவது, திரட்டுவது, துய்ப்பது, காப்பது இவையே மனிதர்களின் இடையறாத தொழில்களாய் அமைந்துள்ளன. மனித வாழ்க்கைக்கும் செல்வம் தேவையானதாய் உள்ளது. எனவே 'செல்வம்' என்னும் அச் சொல் மனிதனின் கவனத்தை ஈர்க்கும் வியத்தகு சக்தி படைத்ததாய் உள்ளது. வள்ளுவர் இதனை நன்குணர்ந்துள்ளார். கேள்வி பற்றிய தம் கருத்துக்களுக்கு மக்கள் கவனத்தை ஈர்க்க இச் சொல்லைப் பயன்படுத்துகிறார். முதல் குறளிலேயே 'கேள்வி' என்று குறிப்பிடாமல் "செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்" எனப் பேசுகிறார். 'செல்வம்' என்ற சொல் அத்துடன் இணைந்த மாடு, மனை, விடு, வயல், பணம், தங்கம் போன்ற பருப் பொருட்களின் நினைவையே பெரும்பாலும் நமக்குத் தரும். செல்வம் என்னும் போது கல்வி, கேள்வி போன்ற பொருட்களை பெரும்பாலும் நாம் எண்ணுவதே இல்லையெனலாம். எனவே தான் வள்ளுவரின் செவிச் செல்வம் என்ற சொற்றொடர் சற்றுப் புதுமையானதாயும், புரட்சியானதாயும் கூட நமக்குத் தோன்றுகிறது. கேள்வியும் செல்வங்களுள் ஒன்று என்ற கருத்தை தம் வாதத்திற்கு அடித்தளமாய் அமைக்கிறார். பின்னர் இந்த அடிப்படையில் பிறிதொரு கருத்தைக் கூறுகிறார். இக் கேள்விச் செல்வம் பிற செல்வங்கள் போன்றதல்ல. இது செல்வங்களுள் தலையான செல்வம் என்கிறார். "அச் செல்வம் செல்வத்து ளெல்லாந்தலை" என்பது வள்ளுவர் மொழியாகும். இச் செல்வம்

பிற செல்வங்கள் போலத் துன்பம் தருதல் இல்லை ; இது அழியாதது; குறையாதது ; இதனைக் கவரவும் இயலாது ; இது கொடுப்பதால் குறைவு படுவதும் இல்லை. எனவே இதனைத் தலையான செல்வம் என வள்ளுவர் வழங்கியதில் பிழையுமுண்டோ ? இவ்வாறாக வள்ளுவர் முதல் குறளிலேயே நம் கவனத்தை ஈர்த்து ஆர்வத்தைத் தூண்டி கருத்துக்களை நாம் மனங்கொள்ள வைக்கிறார். இதோ அவர் குறள்.

"செல்வத்துள் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை"

வள்ளுவர் தம் சாதனையைக் "கேட்டார் பிணிக்கும் தகையவாய்" அமைந்த தம் தேர்ந்த சொற்கள் கொண்டு நிகழ்த்துகிறார். "நன்கு துவங்கப்பட்ட செயல் பாதி முடிந்தாற்போல" என்பது முதுமொழி. வள்ளுவரின் 'கேள்வி' அதிகாரம் நன்கு துவங்கப்பட்டுள்ளது. எனவே பிறரைக் கேட்க வைத்தல் என்ற வள்ளுவரின் செயலுக்கு இந்த நல்ல துவக்கமே பாதி வெற்றியைத் தேடித் தந்து விட்டது எனலாம்.

அடுத்த குறளிலேயே வள்ளுவர் கேள்வி செல்வமாயினும், அது உணவு போல இன்றியமையாதது என்பதனை வலியுறுத்துகிறார். 'உணவு' என்னும்போது அதன் இன்றியமையாமை சுவை, பயன் முதலிய எண்ணங்கள் தொடர்ந்து எழுவது இயல்பு. இக்குறிப்புகள் எல்லாம் தோன்றும் வகையில் கேள்வியறிவைச் 'செவியுணவு' என்று பேசுகிறார். இதனால் கேள்வியறிவாம் செவியுணவு இன்றியமையாதது, சுவையுடையது, பயன் மிக்கது என்பதனைத்தும் பெறப்படுகிறது. மேலும் இச் 'செவியுணவு' வயிற்றுணவை விடச் சிறந்தது என்ற குறிப்புத் தோன்றப் பேசுகிறார். உடலுணவு மிகுந்தால் துன்பம் தரும். அது வயிறு பசித்து வேண்டும் போது மட்டும் சிறிதளவு ஈயப்படுவது. ஆனால் செவியுணவோ சுவை மிகுந்தது; அது பிற் பயக்கும் தன்மையது; அதை மிகுதியும் உண்பதால் துன்பம் இல்லை; மாறாக இன்பம் மிகுதியாகிறது. தவிர அச் செவியுணவு இருக்கும் போது வயிற்றுணவு கூடத் தேவைப்படாது. செவிக்குணவு இல்லாத நிலையிலேதான் பசிகூடத் தலைதூக்கும் என்ற கருத்துக்களை அமைத்து

"செவிக்குணவில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்"

என்றார் வள்ளுவர்.

இதனையடுத்த குறளிலேயே கேள்வியின் சிறப்பை மற்றொரு கருத்தால் வள்ளுவர் விளக்குகிறார். மனிதனுக்குத் தன் நிலையை

உயர்த்தும் அவா என்றும் உண்டு. தன்னினும் மேலான தேவர்களைப் போலத் தானும் வாழ மனிதன் ஆசையுறுவதுண்டு. இதனையுணர்ந்த வள்ளுவர், கேள்வி யறிவானது மனிதர்க்கு ஆன்ற பெருமையைத் தரும் என்றும் அதன் மூலம் அவர்களை நிலத்திலேயே அவியுணவு கொள்ளும் தேவர் போல வாழ வழி செய்யும் என்றும் கூறுகிறார்.

கேள்வியின் சிறப்பும், இன்றியமையாமையையும் பேசிய பின்னர் நான்கு குறட்பாக்களில் வள்ளுவர் 'கேள்வி'யின் பயன்களைத் தொகுத்துரைக்கிறார். கிரேக்க நாட்டுச் சிந்தனையாளர் அரிஸ்டாடிலும் அறிவின் திறம், அவ்வறிவு நல்கும் பயன்கொண்டு கணக்கிடப்பட வேண்டும் என்றார். கேள்வியின் பயன்கள் இவை என வள்ளுவர் வகுத்துரைப்பதினின்று 'கேள்வி' யறிவின் திறம் எத்தன்மையது என்பது புலப்படும். வாழ்க்கையில் தளர்ச்சிகள் உண்டு. அவை நேரிடும் காலை நாம் நெறி பிறழாது நம் நிலையில் நிற்கப் பற்றுக்கோடுகள் தேவை. அவை இன்றேல் நாம் வீழ்ச்சியுற நேரிடும். கேள்வியறிவு இத்தகைய பற்றுக்கோடாய் பயனளிக்கிறது. அது சேற்று நிலத்தில் செல்வார்க்கு ஊன்றுகோல் போல உதவும் தன்மையது. ஊன்றுகோல் இல்லையென்றால் சேற்று நிலத்தில் செல்வார் உயிர் பிழைப்பதே அருமையாயும் அரிதாயும் ஆகிவிடும். எனவே அது இன்றியமையாததாய் விடுகிறது. அது போல வாழ்க்கையில் கேள்வியறிவு 'இழுக்கல் உடையுழி' 'ஊற்றுக் கோல்' போலும் தளர்ச்சி வந்துற்ற போது 'ஊற்றாந் துணை'யாயும் இருக்கும் என்கிறார் வள்ளுவர்.

ஊன்று கோல் தக்க காலத்தில் நமக்கு நன்மை பயக்கிறது. காலத்தினால் அது செய்த பேருதவி ஞாலத்தின் மாணப் பெரிது. 'ஊற்றுக்கோல்' எந்தப் பயனும் கருதாமல் உதவுவதால் அதன் நன்றி கடலினும் பெரிதாகும். கேள்வியறிவாம் ஊன்று கோல் நம்மை நெறியில் நிறுத்திப் பழி, பிழை இவற்றிலிருந்து காத்தளிக்கிறது. அதன் மதிப்பு இவ்வளவு என நம்மால் அறுதியிட்டுச் சொல்ல இயலாது. சில சமயம் சிறிய செடிகூட நமக்கு ஊன்று கோலாய் நின்று உதவலாம். அதன் பயனைப்பெற்ற ஒருவரே அதன் பெருமையை அறிய வல்லார். அவருக்கு அது செய்த நன்றியால் அதனுடன் ஒரு இணைப்பு ஏற்பட்டு விடுகிறது. ஆனால் மற்றவர்களுக்கோ எத்தனையோ பிற செடிகளைப் போல அதுவும் ஒரு செடி தான். அதன் மதிப்பும் பிற செடிகளைப் போல மிகச் சாதாரணமானதுதான். அது போலவே சிறிதளவு கேள்வியறிவுகூட நமக்கு வாழ்க்கையில் தளர்ச்சியுற்ற காலை ஊன்று கோலாயும், பற்றுக் கோடாயும் உதவும். அப்போதுதான் நாம் அந்தச் சிறிதளவு

'கேள்வி' யறிவின் இன்றியமையாமையையும் அதன் பெரும் பயனையும் உணர்வோம். அதன் பெரு மதிப்பும் அப்போதுதான் நமக்குப் புலப்படும். எனவே சிறிதளவு கேள்வியறிவு பெரும் பயன் விளைவிக்குமா என நாம் ஐயுறவு கொள்ளத் தேவையில்லை. சிறிதளவான கேள்வியறிவு கூட அதன் அளவுக்கு நமக்கு நிறைந்த பயனைத் தரத்தான் செய்யும் எனும் கருத்தை வள்ளுவர்

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"

என்ற குறள் மூலம் சொல்கிறார். எனவேதான் மக்கள் கல்லாதவர்களாய் இருந்தாலும் 'கேள்வி' யறிவுடையவர்களாகவாவது இருந்து ஊன்றுகோல் போல அது நல்கும் பயனைத் துய்க்க வேண்டும் என்ற எண்ணத்தை வலியுறுத்துவது போல இக்குறட்பாக்களை அமைத்துள்ளார்.

"இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்"

"கற்றில னாயினும் கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாந் துணை"

கேள்வியின் பயன்கள் இம்மட்டோ? வள்ளுவர் மேலும் தொடர்ந்து பேசுகிறார். ஒருவர் அறிவு, அவர் பேசும் மொழியால் புலனாகும். பேதைமையுடைய சொற்களைப் பேசுவோர் "ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோ"ராய் கருதப்படுவது இல்லை. அரசியல், அறிவியல் துறைகளில் கற்றுத்துறை போகிய சிலர்கூட சில சிக்கலான நேரங்களில் கூறும் கருத்துகள் 'பேதைமை' எனக் கண்டிக்கப் படுகின்றன; கண்டனமும் செய்யப்படுகின்றன. அவர்களது நிலைத்த பெருமையும், கல்வியும்கூட அவர்களைப் 'பேதைமை'ப் பழியினின்று காப்பது இல்லை. இதனை எண்ணும் போது மிக்க கல்வியறிவில்லாத மக்களுக்குத் தம் கருத்தை வெளியிடவே அச்சம் மிகுகிறது. தாம் பிழையாக உணர்ந்திருப்போமோ, பேதைமையாய் மொழிவோமோ என அவர்கள் அஞ்சுகிறார்கள். இதை வள்ளுவர் உணர்ந்து, இதற்குப் பதில் கூறுவது போல கேள்வியறிவுடையார் பிழையாக உணர்ந்தாலும் பேதைமையானவற்றைச் சொல்லார் என்கிறார். அதனை

"பிழைத்துஉணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துஉணர்ந்து
ஈண்டிய கேள்வி அவர்"

என்ற குறளில் கூறியுள்ளார்.

இவ்வாறு 'கேள்வி'யறிவின் சிறப்பு, இன்றியமையாமை, பயன் இவற்றை அறிந்த ஒருவர் அதனைப் பெறும் வழியை அறிய நாட்டம் கொள்வர் என்பதை உணர்ந்து வள்ளுவர் 'கேள்வி'யை யாரிடம் பெறுவது என்பது பற்றியும் பேசுகிறார். 'ஒழுக்கமுடையார் வாய்ச் சொல்' மூலமே இக்கேள்வியறிவைப் பெறவேண்டும் என்கிறார். அறம் – ஒழுக்கம், வழக்கு, தண்டம் என்னும் முப்பிரிவினது. ஆயினும் இவற்றுள் ஒழுக்கமே உயிர்க்கு உறுதி பயக்கவல்லது. எனவே வள்ளுவர் ஒழுக்கத்தையே அறம் எனக் கொண்டார் என்று பரிமேலழகர் தம் உரைப் பாயிரத்தில் குறிப்பிடுகிறார். எனவேதான் வள்ளுவரும் ஒழுக்கமுடையாரை அறவோராகக் கருதி அவர் வாய்ச் சொல் மூலமே கேள்வியறிவு பெறவேண்டும் என்றனர். தவிர வள்ளுவர் கற்றறிந்தார் வாய்ச் சொல் எனக் கூறாது "ஒழுக்க முடையார் வாய்ச்சொல்" எனக் கூறியது சிந்தனைக்குரியது. அறிவது வேறு; அறிந்தபடி நடப்பது வேறு. அரிஸ்டாடிலும் அறிவின் முடிவு அறிவது அல்லவென்றும், அறிந்தவழி நடப்பது என்றும் கூறினர். வள்ளுவரும் சொல்லுதல் எளிதென்றும் சொற்படி செய்வது அரிதென்றும் உரைத்தார். எனவே அரிதான செயலொழுக்கம், விழுப்பம் தருவது; அது உயிரினும் மேலது என்றார். அவ்வாறு உள்ளத்தால் பொய்யா தொழுகும் உயர்நெறி, அவ்வாறு ஒழுகுவார்க்கு உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் இடம் தேடித்தரும் என்கிறார் வள்ளுவர். தம் சொற்படி தாமே நடந்து காட்டுபவர் மொழிகளே பொருளும் பயனும் உடையன. தம் சொல்வழித் தாமே நில்லாதார் மொழி புன்மொழியே யாகும். தவிரவும் தம் சொல்வழித் தாமே நிற்க இயலாத ஒருவர் தம் மொழியால் பிறரை ஒழுக்க நெறிக்கு இட்டுச்செல்வது என்பது அரிதான செயலாகும். அது ஓரளவு இயலாததும் ஆகும். எனவேதான் வள்ளுவர் 'ஒழுக்கம் உடைய'வராம் 'நலமிக்க நல்லார்' 'வாய்மொழி'யாம் 'சொல் கேட்பதுவும் நன்றே' என நவின்றார்.

மானுடர் செவிகள் துளைக்கப்படுகின்றன. அணிகள் பூணப் படுகின்றன. இந்நிலை மாக்களுக்கு இல்லை. இது மக்களுக்கும், மாக்களுக்கும் உள்ள வேற்றுமைதான். ஆனால் இந்த வேற்றுமை எவ்வகையிலும் மானுடர் சிறப்பை விளக்குவதாய் இல்லை. மாறாக மானுடச் செவி 'செவியுண'வாம் கேள்வியறிவு பெறுவதாலும், அவ்வறிவால் துளைக்கப் படுவதாலும்தான் பெருமையுறுகிறது. இவை நிகழாத போது மானிடச் செவிகள் கேளாச் செவிகளே. இக்கருத்தை விளக்குவான் வேண்டி வள்ளுவர்

"கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி"

என்றார். ஆன்மிக அறிவின் ஒரு பகுதியே இறைவன் புகழ்

நாமங்கள்; அவற்றைக் கேளாத செவியென்ன செவியே, என இறையடியார்களும் பாடிப் போந்தார்கள். ஒளிவீசும் மணிமாலை யணிந்த 'ஏழிலார்கோ' தம் வரவைக் காணுமலும், தம் பாட்டைக் கேளாமலும் இருந்ததை எண்ணி ஔவையார் அவனைக் குருட னென்றார்; மேலும் 'கேள்வி'யறிவு இல்லாத அவன் செவியை "ஓட்டைச் செவி" என்றார்.

> இருள் தீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே
> குருடேயுமன்று நின் குற்றம் — மருள் தீர்ந்து
> பாட்டும், உரையும் பயிலாதன விரண்டு
> "ஓட்டைச் செவியும்" உள.

என்பது ஔவையின் பாட்டு.

பணிவும், வணக்கமும் நல்ல பண்புக்கு எடுத்துக்காட்டு. அவை மனதில் மொட்டாகி சொல்லில் இதழ் விரித்து, செயலில் மணம் பரப்பும். இப்பணிவு, நிறைந்த அறிவாலும், நுணங்கிய கேள்வி யாலும் மட்டுமே ஏற்படும். நுணங்கிய கேள்வியரல்லாதார் வணங்கிய வாயினர் ஆதல் அரிது. நுணங்கிய கேள்வி யறிவு வணங்கிய வாயைத் தரவல்லது. எனவே அது விரும்பியும் வருந் தியும், முயன்றும் பெறவேண்டிய ஒன்று என்பதில் ஐயமுண்டோ?

> "நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
> வாயின ராதல் அரிது"

என்பது வள்ளுவர் வாக்கு.

கம்பரின் 'அநுமன்' இக்குறளுக்கு இலக்கியமாய்த் திகழ்கிறான். சரணடைந்த விடணனைத் தம்முடன் சேர்த்துக்கொள்ளுவது பற்றி இராமனிடம் தன் கருத்தை அநுமன் கூறும்போது தலைவணங்கி, வாய்புதைத்து நிற்கிறான். இப்பணிவு அநுமனின் அறியாமை, ஆற்றல் குறைவு, இராமனின் உயரிய நிலை என்பனவற்றால் நேர்ந்தது அல்ல. அது அநுமனின் நுணங்கிய கேள்வியறிவின் விளைவு; அதன் விளக்கம். இதனைக் கம்பர் தம்பாடலிலே குறிப் பிடுகிறார்.

> "வணங்கிய சென்னியன் மறைத்த வாயினன்
> நுணங்கிய கேள்வியன் நுவல்வதாயினன்"

என்பது கம்பர் வாக்கு. நுணங்கிய கேள்வியால் அநுமனிடமுள்ள பணிவு "வணங்கிய சென்னி", "மறைத்த வாய்" என்ற மெய்ப் பாடுகளால் புலப்பட்டது. அடுத்து அநுமனின் 'வணங்கிய வாய்'

வழியே பணிவு அவன் சொல்லிலும் விளக்கமுற்றது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

இத்தனையும் சொல்லிய வள்ளுவர் இவ்வதிகாரத்தைச் சற்றே சினந்த குறிப்புத் தோன்றும் ஒரு குறளுடன் முடிக்கிருர். வாயுணவு மக்களுக்கும் மாக்களுக்கும் உண்டு. செவியுணவோ மக்களுக்கு மட்டுமே உரியது. அதுவே அவர் 'ஆறறிவு' உடையவர் என்பதற்குச் சான்று. அது அவர் தம் பெருமையும், சிறப்பும் ஆகும். இச்செவியுணவு பெருத மானுடர் வாயுணவு மட்டும்கொண்ட விலங்கினையொப்பர். அவர் தம் வாழ்வு பயனற்றது. அவர்கள் வாழ்ந்தாலும், இறந்தாலும் நேரப்போவது எதுவும் இல்லை. எனவே அவர்கள் "அவியினும், வாழினும் என்" எனச் சற்றே கோபத்துடன் கேட்டு வள்ளுவர் இவ்வதிகாரத்தை முடிக்கிருர்.

"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்"

என்பது குறள்,

அன்பு மொழியைவிட கடுமொழி சில சமயம் விரும்பிய பயனை விரைந்து நல்கும் என்பதனை அறிந்தவர் வள்ளுவர். அவரது கடுமொழி நம் மான உணர்வைத் தாக்கும் என்பதும், அதனுல் பயனுடைய வாழ்க்கை வாழ நாம் கேள்வியறிவை நாடுவோம் என்பதும் அவர் அறிவார். எனவே தான் வள்ளுவர் இவ்வாறு முடிக்கிருர்.

இவ்வாறு வள்ளுவர் தம் கருத்தை நாம் நன்கு மனங்கொள்ள வைக்கிருர். நாம் வேட்ப அவர் மொழிகிருர். அவர் சொற்கள் "கேட்டார் பிணிக்கும் தகையவாய்" அமைந்தவை; அவை சில; ஆனுல் மாசற்றன; அவை நன்கு தேர்ந்த சொற்கள். இவையெல்லாம் அவர் தேர்ந்த கவிஞர் என்பதனைக் காட்டும். மனிதர், மனித மனம் பற்றிய தம் அறிவை இந்தக் கவிதைத் திறனுடன் சேர்த்துத் தாம் மொழிந்த பாக்களால் வள்ளுவர் நம்மைத் தம் கருத்துக்கு இசையச் செய்து அதன் மூலம் நம்மைக் கேள்வியறிவு பெறுதலாகிய செயலுக்கு இட்டுச் செல்கிருர். வள்ளுவர் நாள் முதல், இற்றைநாள் வரை நாம் 'செவியுணவு' தேடிப்பெறுவது ஒன்றே வள்ளுவர் தம் செயலில் பெரு வெற்றி கொண்டுள்ளார் என்பதனை விளக்குமன்ருே?

வள்ளுவர் கருத்துக்கள் என்றும் அழியாதவை; எக் காலத்துக்கும் எந்நாட்டவருக்கும் ஏற்றவை; அவைகள் கற்பக தருவின் தெய்வத் திரு மலர்கள். இதனையுணர்ந்தே பாரதியும் "வள்ளுவன்

தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'' எனப் பாடி, அவரைப்பெற்றதால் தமிழ்நாடு அடைந்த பெருமையைச் சாற்றினர். நாமும் 'கவிமணி'யின் மணிமொழியால் தெய்வப் புலமைத் திருவள்ளுவரைப் போற்றுவோம்! அவர் வழி ஒழுகுவோம்! உய்வோம்! உயர்வோம்!

"வள்ளுவர் தந்த திருமறையைத் — தமிழ்
மாதின் இனிய உயிர் நிலையை
உள்ளம் தெளிவுறப் போற்றுவோமே — என்றும்
உத்தமராகி ஒழுகு வோமே!''

வாழ்க வள்ளுவர் நாமம்! வளர்க செவிச் செல்வம்!



முதல்

பேராசிரியர் : கோ. சுப்பிரமணியபிள்ளை, எம். ஏ. பி. எல்.

முதல் இலார்க்கு ஊதியம் இல்லை. முதலை வைத்துத்தான் எதுவும் நடக்கும். ஒரு பள்ளிக்கூடத்தில் தமிழ்ப்பாடம் நடந்து கொண்டிருந்தது. தொல்காப்பியம் – எழுத்ததிகாரம் மரபியலில் – ஒரு சூத்திரம்; ''மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்'' என்பதை ஆசிரியர் விளக்கிக் கொண்டிருந்தார். ''ஐயோ, இலக்கணமா? வரமாட்டேன்'' என்று நான் மறுத்தேன். ''வா, வேடிக்கை பார்க்கலாம்'' என்று என் நண்பன் என்னை உள்ளே கர கர வென்று இழுத்துக்கொண்டு போனன். அங்கு ஆசிரியர் கூறுவதைக் கேட்டோம்:-

நமக்கு உயிர் – உடல் என்று இருப்பது போல் எழுத்துக் களுக்கும் உயிர், மெய், உயிர் மெய் என்ற பாகுபாடு உண்டு. வெறும் மெய் யெழுத்துக்கள் உயிரற்ற செத்த வெழுத்துக்கள். அவற்றிற்கு ஒலியும் கிடையாது, உருவமும் கிடையாது. உயிரோடு கூடினல்தான் ஒலியும் உண்டாகும், உருவமும் ஏற்படும். தனி மெய் யெழுத்துக் களினது நடப்பு அகரத்தோடு பொருந்தி நடக்கும். ஒருவன் தனி மெய்களை நாவாற் கருத்துப் பொருளாகிய உருவாக இயக்கும் இயக்கமும், கையாற் காட்சிப் பொருளாகிய வடிவாக இயக்கும் இயக்கமும் அகரத்தோடு பொருந்தி நடக்கும். ''வல்லெழுத் தென்ப க ச ட த ப ற'' ''க கா ர ம்'' போல்வன நாவால் இயக்கப்படுவன. எழுதிக் காட்டுமிடத்துக் 'க' கரம் முதலியன உயிர் பெற்று நின்ற வடிவாக எழுதிப் பின்னர் தனி மெய்யாக்குதற்குப் புள்ளியிட்டுக் காட்டுகின்றவாற்ருன் வடிவை இயக்குமிடத்தும் அகரம் கலந்து நிற்கிறது.

இவ்வாறு விளக்கிய ஆசிரியர் கரும் பலகையில் 'க' எழுத்தை எழுதினர். உடனே 'க' கரும் பலகையைச் சுற்றிச் சுற்றி வந்து கூச்சல்போட ஆரம்பித்தது. ''க'' பேசலுற்றது; '' நானே எழுத் துக்களுக்கெல்லாம் பெரிய எழுத்து, முதல் எழுத்து, என்னை மிஞ்சி வேறேர் எழுத்து எங்குமே கிடையாது. 'அ' முதல் எழுத்து என்று தன்னைத்தானே புகழ்வதாகக் கேள்விப்படுகிறேன். அது சுத்தப்பொய். நானே முதல் எழுத்து. கடவுளுக்கும் முதல் எழுத்தாக

'க' அமைந்திருப்பதிலிருந்தே இதை நன்கு தெரிந்து கொள்ளலாம். என்னையும் இயக்குவதாகச் சொல்கிற அந்த 'அ'வை நான் நேரில் காணவிரும்புகிறேன். அது வரமாட்டேன் என்கிறது. 'அ' வெறும் அற்பம்; அது எதையும் கெடுத்துவிடும். அது சேர்ந்தால் சுத்தம் அசுத்தமாகிவிடும். யோக்கியனும் அயோக்கியன் ஆகிவிடுவான். இத்தகைய 'அ' வா முதல் எழுத்து? எங்கே அதைக்கொண்டு வா. பார்க்கலாம்!'' என்று 'க' கத்தியது. பையன்கள் சிரித்தார்கள், ஆசிரியர் விழித்தார். ''நாங்கள் சேட்டை பண்ணினுல் மண்டையில் குட்டுவீர்களே!'' என்று ஒரு பையன் ஆசிரியரைத் தூண்டிவிட்டான். அவர் உடனே 'க' தலையில் ஒரு குத்துக்குத்திப் புள்ளி வைத்தார். அப்படியே அந்த 'க' எழுத்து திக்கு முக்காடித் திணறி முக்கி முனகி மூச்சுவிடவும் முடியாமல் பேச்சும் நின்று மாண்டு விட்டது. அதை விளக்கி ஆசிரியர் கரும் பலகையில் ''க—அ=க்'' என்று எழுதினுர். பையன்கள் எல்லாம் கைதட்டி ஆரவாரித்தார்கள்.

ஆகா! 'அ' வைத்தன் உள்ளே வைத்துக்கொண்டே தெரியாமல் 'க' இவ்வளவு நேரம் கத்தியது. அந்த 'அ' வெளியே வந்தபொழுது அதைக்கண் கொண்டு காணவும் முடியாமல் உயிர் மெய்யாகிய 'க' வெறும் மெய்யாகிய 'க்' ஆகிச் செத்துவிட்டது. நரசிம்மர் தூணைப் பிளந்து வருவதுபோல் உள்ளே இருந்த 'அ' உருவெடுத்துப் புறப்பட்டது. இரணியன் செத்துக்கிடந்ததுபோல் 'க' செத்துக்கிடந்தது. 'அ'வின் ஆற்றலால் தான் 'க' இயங்கிக் கொண்டிருந்தது என்பதை அது உணரவில்லை. அதுபோல் மனிதனும் ''கொண்டுவா கடவுளை நேரில் காணவேண்டும்'' என்கிருன். கடவுள் நேரில் வரும்பொழுது காணக் கண்ணற்றுப் போய்ச் சவமாய்க்கிடக்கிருன். இதை அப்பர் அழகாகக் கூறினுர்:-


''நடலை வாழ்வுகொண் டென்செய்தீர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலி னஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலி னுர்கிடந் தூர்முனி பண்டமே''

கடவுளுக்கு உவமையாக அகரத்தையே எடுத்துத் திருவள்ளுவரும் காட்டியிருப்பது வியப்பிற் குரித்தாகும். இதைவிடச் சிறந்த உவமை வேறு இல்லாததே அதற்குக் காரணம். இங்ஙனம் மெய்க்கண் அகரம் கலந்து நிற்பதுபோல் பதினேருயிர் எழுத்திலும் அகரம் கலந்து நிற்பதையும் நாம் சிந்திக்கவேண்டும். இறைவன் அசையும் பொருளிலும் அசையாப் பொருளிலும் எல்லாவற்றின் கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்பதுபோல் அகரமும் உயிர்க்

கண்ணும் தனிமெய்க்கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்கும். இவற்றை உட்கொண்டே வள்ளுவர்,

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு''

என்று நம் வாழ்வுக்கு ''முதல்'' வழங்குவதுபோல் முதற்குறளைப் பாடினர். அதாவது, அகரமாகிய முதலையுடைய எழுத்துக்கள் எல்லாம்; அதுபோல இறைவனாகிய முதலையுடைத்து உலகம் என்ற முதலே முதலாவது. ''எழுத்துக்களில் யானே அகரமாகின்றேன்'' என்று கண்ணபிரானும் கூறியருளினன். ககரத்தின் உள்ளே இருந்து அகரம் புறப்பட்டதைக் கரும்பலகையில் கண்டோம் அல்லவா? அதனால் கடவுள் உள்ள இடத்தையும் திருவள்ளுவர் தெளிவாகக் காட்டியிருப்பதை முதற் குறளில் கண்டு வணங்கி வாழ்வோமாக!



திருக்குறள் பகுப்பாய்வு

க. ப. அறவாணன்

திருக்குறள் எழுந்த காலம் வேறு; அதற்கு உரை எழுந்த காலம் வேறு. இரு கட்டத்திற்கும் இடையே நூற்றுக் கணக்கான ஆண்டுகள் கடந்து விட்டன. அதனல்தான் உரைகாரர்களின் உரைப் போக்கில் ஒருமிப்பு இல்லாமல் போய்விட்டது. குறளுக்கு உரை காண்பதில் மட்டுமல்லாமல், குறள் வைப்புமுறை, அதிகாரப் பெயர்வைப்பு, இயற்பகுப்பு இவற்றிலும் கூடக் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. பழைய உரைகாரர் பதின்மரில் பரிமேலழகர், பரிப்பெருமாள், மணக்குடவர், பரிதியார், காளிங்கர், எனும் ஐவரது உரைகள் வெளிவந்துள்ளன. இவ்வுரைகளில் காணப்பெறும் உரை வேறுபாடுகளைப் பேராசிரியர் சாரங்கபாணி எடுத்துக்காட்டி முடிப்பும் கூறியுள்ளார். இக் கட்டுரை பால், இயல், அதிகாரம், குறள் பகுப்புப் பற்றி, முறை வைப்புப் பற்றி பழைய உரைகாரர்களது கருத்துக்கள், தற்கால உரைகாரர்களது கருத்துக்களை மையமாக வைந்தாராயும்.

பால் பகுப்பு:

அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால்-என்ற முப் பிரிவே தொடக்கமுதல் உள்ளதாதலால் திருக்குறள் 'முப்பால்' என்றே அழைக்கப்பட்டிருக்கிறது. ஐம்பத்து மூன்று திருவள்ளுவமாலைப் பாடல்களில், 'திருக்குறள்' எனும் பெயர்வைப்பு எதனுள்ளும் காணப்படவில்லை. மாருகப் பதினைந்து பாடல்களில் (9, 10, 11, 12, 15, 17, 18, 19, 30, 31, 39, 44, 46, 49, 53) 'முப்பால்'—என்ற பெயர்க்குறிப்பே காணப்படுகிறது. கீழ்க் கணக்குத் தொகை கூறும் வெண்பாவும், பரிமேலழகர் உரை சிறப்புப் பாயிரமும், பரிப் பெருமாள் உரை சிறப்புப் பாயிரமும் சில தனிப் பாடல்களும் குறளை 'முப்பால்' என்றே குறிக்கின்றன. ஆதலால் முப்பால் என்பதே திருக்குறளின் இயற்பெயர்; பழம் பெயர்.

அறம் பொருள் காமம் என்ற முறைவைப்புக்கு மாருக, காமம், பொருள், அறம் என்ற வைப்பை டாக்டர். மு. வரதராசனுர் கொண்டுள்ளார். (திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்—பக் 25) தான் எடுத்துக்கொண்ட நோக்குக் கேற்ப நூலைக்கொண்டு செல்லப் பேராசிரியர் காமம், பொருள், அறம் என அமைத்துள்ளார்.

அன்றித் திருவள்ளுவரின் முறைவைப்பே அப்படித்தான் என்றவர் வலியுறுத்தவில்லை. திருவள்ளுவர்க்கு முன்பும் பின்பும் அவர் காலத்தும் அறம் பொருள் காமம் என்ற வைப்பே மேலோங்கி யிருத்தல் வேண்டும்.

அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெரும நின் செல்வம் (புறம்: 28)

சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படும் தோற்றம் போல (புறம்: 31)

எனவரும் புறநானூற்று வரிகளும், 'அறம் பொருள் இன்பம் விடடைதல் நூற்பயனே' (நன்னூல்-10) எனவரும் நன்னூல் நூற்பாவும் இதனை வலியுறுத்தும். திருவள்ளுவர் வாழ்ந்த காலம், வடமொழிச் செல்வாக்கு ஓங்கியிருந்த காலம். ஆதலால் அவர் 'தர்ம அர்த்த காம மோட்சம்' - என்ற ஆரியப் பாகுபாட்டையும், கேட்டவராதல் கூடும்.

அறத்துப்பால், பொருட்பால் எனத் தமிழ்ப் பெயரிட்டவர், இன்பத்துப்பால் எனத் தமிழில் வழங்காது, காமத்துப்பால் என வடமொழியில் பெயரிட்டிருப்பாரோ என்று கேட்கப்படுகிறது. எச் சொல்லைத் திருவள்ளுவர் ஆளுதல் வேண்டும் என்று கட்டளைப் பார்வையில் பார்ப்பதை விட, எச்சொல்லை ஆண்டிருப்பார் என்ற ஆய்வு மனத்தோடு அணுகுவதே முறை.

இன்பம் எனும் சொல்லைத் துன்பம் என்ற சொல்லிற்கு எதிர்ச் சொல்லாகவே திருவள்ளுவர் ஆளுவதாலும், காமத்தையும், இன்பத்தையும் வேறு வேறாக வைத்தே குறள் யாத்திருப்பதாலும் (1166, 1330), காமம் எனும் சொல்லைக் காமத்துப்பாலில் மட்டும் முப்பத்தெட்டு இடங்களில் ஆண்டிருப்பதாலும், தொல்காப்பியரும் சங்க இலக்கியச் சான்றோரும் காமம் எனும் சொல்லை இன்பம் எனும் சொல்லினின்று வேறுபடுத்தி, விரிந்த பொருளில் ஆண்டிருப்ப தாலும் [தொல்: களவு: 1; குறுந்தொகை 32, 204] திருவள்ளுவர் காமத்துப்பால் என்றே பெயரிட்டிருப்பார் எனக் கொள்ளலாம்

காமத்துப்பால் என்ற பால் பகுப்பும் அதில் அடங்கியுள்ள செய்தித் தொகுப்பும் "காமம்" என்ற சொல்லுக்குள் அடங்குகின்றன. ஆனால் பொருட்பால், அறத்துப்பால் பகுப்பும் செய்தியும், அவ்வாறே அடங்குகின்றனவா? காமம் தொடர்பான இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலம் ஆகிய அதிகாரங்கள் காமத்துப் பாலில் பங்கு பெறுமற் போனதேன்? வரைவின் மகளிர், கள்ளுண்ணாமை, சூது, மானம்'

பெருமை, சான்றாண்மை, பண்புடைமை, நாணுடைமை நல்குரவு, இரவு, இரவச்சம், கயமை, கல்வி, கல்லாமை, போன்ற பொருட்பால் அதிகாரங்கள் - அறத்துப்பாலுக்கு எதிரானவையா? பொருட்பால் என்ற சொற் பொருள் என்ன? அப்பாலில் கூறப்பட்ட கருத்துக்கள், அச்சொற் பொருளோடு நெகிழ்ச்சி இல்லாமல் இணைந்திருக் கின்றனவா? - இவை ஆய்தற்குரியன.

இயற் பகுப்பு:

ஒவ்வொரு பாலும் பல இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. உரைகாரர்களிடையே நிரம்பக் கருத்து வேறுபாடு, இயற்பாகு பாட்டில் காணப்படுகிறது.

பாயிரம்-4 இயல்; அறம்-33; ஊழ் 1; பொருள்-70; காமம்-25 என்பர் சிலர்.

பாயிரம்-4; இல்லறம் – 20; துறவற இயல் – 13; ஊழ் – 1 என அறத்துப் பாலை நான்காகப் பிரித்து ஓதுவர். பரிமேலழகர், மணக் குடவர், பரிதி, பரிப்பெருமாள், காளிங்கர் ஆகியோர். திருக்குறள் பாயிர இயல் பற்றித் தனியாய்வு நூலையே [திருக்குறள் விரிவுரை (பாயிரம்)] எழுதியுள்ளார் தமிழ்த்தென்றல் திரு. வி. க. திருக்குறள் பாயிர வியலாகக் கருதப்படும் முதல் நான்கு அதிகாரங்களையும் இடைச் செருகல் என்பர் வ. உ. சி. பாயிரவியலை, முதலியல் எனப் பெயரிட்டழைப்பர் புலவர் குழந்தை,

பொருட்பாலை, அரசியல், அமைச்சியல், அரணியல், கூழியல், படையியல், நட்பியல், குடியியல் என்றேழு இயல்களாக்குவர் நுண் பொருள் மாலையார். பரிப்பெருமாள், அரசியல், அமைச்சியல், பொருளியல், நட்பியல், துன்பவியல், குடியியல் எனறு ஆறுக்குவர். அரசியல், அமைச்சியல், நாடியல். அரணியல், பொருளியல், படையியல், நட்பியல் எனப்பகுப்பர் போக்கியார். காளிங்கர், அரசியல், அமைச்சியல் எனப் பகுப்பர், மணக்குடவர் அரசியல், அமைச்சியல், பொருளியல், நட்பியல், துன்பவியல், குடியியல் என வகுப்பர். அரசு, அமைச்சு, அரண், படை, நட்பு குடியியல் களாகக் கொண்டனர் புலவர் குழந்தையும், பேராசிரியர் மு. வ. வும். தேவநேயப் பாவாணர் அரசியல், உறுப்பியல் என்ற இரண்டியல் களாகவே கொள்வர். அரசியல், அங்கவியல், ஒழிபியல் — என்ற பகுப்புப் பரிமேலழகருடையது.

காமத்துப்பாலை களவியல், கற்பியல், என்ற இரு பிரிவாகப் பரிமேலழகர், புலவர் குழந்தை, பேரா. மு. வ, தேவநேயப்

பாவாணர் ஆகியோர் கொண்டுள்ளனர். காளிங்கர், தலைமகன் கூற்றுக் கிளவி. தலைமகள் கூற்றுக் கிளவி – இருபாற் கிளவி என்று கொள்வார். ஆண்பாற் கூற்றியல், பெண்பாற் கூற்றியல், இருபாற் கூற்றியல் என்பாரும் உளர். மணக்குடவர், புணர்தலும், புணர்தல் நிமித்தமும், பிரிதலும், பிரிதல் நிமித்தமும், இருத்தலும், இருத்தல் நிமித்தமும், இரங்கலும், இரங்கல் நிமித்தமும், ஊடலும், ஊடல் நிமித்தமும் ஆகிய உரிப் பொருள்களையுடைய குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்னும் ஐந்திணைக்கும் திணைக்கு ஐவைந்து அதிகாரமாக இருபத்தைந்து அதிகாரமாக்கி அமைத்துள்ளார்.

இயற்பாகுபாட்டைப் பொறுத்த அளவில், அன்று தொட்டு இன்றுகாறும் நிறைய கருத்து வேறுபாடுகள் இருந்துள்ளன. எல்லாப் பகுப்பு முறைக்கும் குறள் இடந்தந்து நிற்கிறது. எனினும் இப்பகுப்பில் பழம் உரைகாரர்களிடையே உண்டான வேறுபாடுகள், இயற்பகுப்பை திருவள்ளுவர் செய்திடவில்லை என்ற ஊகத்திற்கு இடந்தருகிறது. அவ்வூகம், உண்மை யாதலும் கூடும்.

அதிகாரப் பகுப்பு

நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்கள், ஒவ்வோர் அதிகாரத்திலும் பப்பத்துக் குறட்பாக்கள் என்பதில் அதிகக் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் அதிகாரப் பெயர்வைப்பில் மிகச் சில வேறுபாடுகள் அங்கும் இங்குமாகக் காணப்படுகின்றன.

வாழ்க்கைத் துணை நலம் என்ற அதிகாரத்திற்குப் பின் மக்கட் பேற்றை அமைப்பர் பெரும்பான்மை உரையாசிரியர். காளிங்கர் மட்டும் விருந்தோம்பல் என்ற அதிகாரத்தை அடுத்து வைத்துள்ளார். குறிப்பறிதல் என்ற ஒத்த பெயருடைய அதிகாரம் பொருட்பாலிலும் (அதி. 71), காமத்துப்பாலிலும் (அதி. 110) காணப் படுகிறது. காளிங்கர் 71-ஆம் அதிகாரத்தைக் குறிப்பறிதல் என்றும், 110ஆம் அதிகாரத்தைக் குறிப்புணர்தல் என்றும் அமைக்கிறார். இது தவிர புணர்ச்சி மகிழ்தல் (அதி 111) என்பதனைப் புணர்ச்சியின் மகிழ்தல் என்றும், கண்விதுப் பழிதல் (அதி 118) என்பதனைக் கண்விதுப் பழித்தல் என்றும், அவர்வயின் விதும்பல் (அதி. 127) என்பதனை அவர்வயின் விரும்பல் என்றும், பழைமை (அதி. 81) என்பதனைப் பழமை என்றும் வேறாகக் காட்டுவர்.

ஏழாம் அதிகாரத்தைப் பரிமேலழகர் புதல்வரைப் பெறுதல் என்று அமைத்திருக்க, ஏனையோர் 'மக்கட்பேறு' என்று அமைத்திருக்கின்றனர். புலவர் குழந்தை. பேரா. மு. வ. தேவநேயப்

பாவாணர் ஆகியோரும் இங்ஙனமே கொண்டுள்ளனர். மக்கட்பேறு என்பது பழைய பாடம் என்பதாலும், மக்கட் பேறு என்றே முன்னைய குறளில் திருவள்ளுவர் குறித்திருப்பதாலும் – மக்கட் பேறு எனும் பெயரையே திருவள்ளுவர் கண்டவராதல் கூடும்.

புலவர் குழந்தை கடவுள் வாழ்த்து எனும் பெயருக்குப் பதிலாக 'இறைநலம்' என்றும், தேவநேயர் பாவாணர் 'முதற்பகவன் வாழ்த்து' என்றும், கொண்டுள்ளனர். பழைய உரைகாரர் ஒருங்கு போற்றிய 'கடவுள் வாழ்த்து' எனும்பெயரே, திருவள்ளுவம் கொண்ட அதிகாரம் பெயராதல் வேண்டும். அதிகாரங்களின் பெயர் வைப்பிலும், முறை வைப்பிலும் பிறழ்ச்சியோ, உறழ்ச்சியோ நிரம்ப இன்மையால், அவை திருவள்ளுவராலேயே அமைக்கப்பெற்றிருத்தல் வேண்டும்.

குறள் பகுப்பும் வைப்பும் :

பப்பத்தாகக் கூற வேண்டும் எனும் நோக்கில் குறள் எழுதப் பட்டதால், சில நெகிழ்ச்சிகள் அதிகாரத்தின் கீழ் அமைந்துவிட்டன. நட்பு பற்றி நிரம்பச் செய்திகள் இருப்பதால் அதனை ஓர் அதிகாரத்தில் அடக்கமுடியாமல் நட்பு, நட்பாராய்தல், தீநட்பு, கூடாநட்பு என நான்கு அதிகாரங்களாக விரிதலைப் பார்க்கிறோம். சில அதிகாரங்களில் பத்துப் பாக்கட்கான செய்திச் செறிவு இல்லாமையால் சில செய்திகள் திரும்பத் திரும்ப வருதலைப் பார்க்கிறோம்.

அகரம் தொடங்கி னகரம் ஈறாக அமைந்த தமிழ் எழுத்து முறைக் கேற்ப, திருக்குறளும் அகரத்தில் தொடங்கி, னகரத்தில் முடிவதாக உரைப்பர். ஆனால் காளிங்கர், மணக்குடவர், பரிப்பெருமாள் ஆகியோர், 'பெறின்' என முடியும் குறளுக்குப் பதிலாக 'அகத்து' என முடியும் குறளை

> "புலத்தலின் புத்தேள் நாடுண்டோ நிலத்தொடு
>
> நீரியைந் தன்னார் அகத்து"

1330-ஆம் குறளாக வைத்துள்ளார்.

பரிமேலழகர், குறள்களின் முறைவைப்புக்கும் காரணங் காட்டி, உட்பகுப்புச் செய்து உரைவகுக்கிறார். இத்தகு முறைமை பிற உரைகளில் முழுமையாக இல்லை. இதனால் பரிமேலழகர் கொள்ளும் வைப்புமுறையும் அதிகார வைப்பும் திருவள்ளுவர் கொண்டவை அல்ல என அறியலாம்.

குறளே அதிகாரம் விட்டு அதிகாரம் மாறிக் கிடத்தல் உண்டு. விழ்வாரின் எனத் தொடங்கும் 1198-ஆம் குறள் தனிப்படர் மிகுதி (அதி 120)' எனும் அதிகாரத்தில் ஏனையோர் வைத்திருக்க, காளிங்கர் நினைந்தவர் புலம்பல் (அதி 121) எனும் அதிகாரத்தின் இறுதிக் குறளாக வைத்துள்ளார். 1198-ஆம் குறள் இருந்த இடத்தில், அவர்வயின்விதும்பல் (அதி 127) என்ற அதிகாரத்துள்ள 'உரன் நடைஇ' எனத் தொடங்கும் குறளை வைத்துள்ளார். நினைந்தவர் புலம்பல் (அதி 121) என்ற அதிகாரத்தில் உள்ள விடாஅது (1210) எனுங் குறளை அவர் வயின்விதும்பல் (அதி 127) என்ற அதிகாரத்தின் ஆறுவது குறளாக வைத்துள்ளார். விடாஅது என்ற குறள் இருந்த இடத்தில், தனிப்படர் மிகுதி (அதி 120) என்ற அதிகாரந்து எட்டாம் குறளைக் கொண்டுள்ளார்.

இம்மாற்றங்கட்குக் காரணம், தனிப்படர் மிகுதி (120) நினைந்தவர் புலர்பல் (121), அவர்வயின் விதும்பல் (127) என்ற மூன்று அதிகாரங்களும் தனிமைத் துயர் பற்றிப் பேசுவனவாதலால் இக் குறள் மாற்றங்கள் நிகழ்ந்தன போலும்.

ஆக, பால், இயல், அதிகார, குறள்பகுப்புக்களில் உரைகாரர் களிடை கருத்து வேறுபாடுகள் உள்ளன.


பால், அதிகாரப்பெயர் வைப்புக்களையும், முறை வைப்புக்களையும் திருவள்ளுவரே செய்தனராதல் வேண்டும்.

இயற்பகுப்பைப் திருவள்ளுவர் அமைத்திடவில்லை.

குறள் உட்பகுப்பையும் திருவள்ளுவம் அமைத்திடவில்லை.

குறள் முறைவைப்பு, தற்போதுள்ளபடியே திருவள்ளுவர் காலத்தும் இருந்திருந்தது என்பதற்கில்லை.

இயற்பகுப்பு, குறள் உட்பகுப்பு, முறைவைப்பு ஆகியன உரைகாரர்களது பிற்காலப் படைப்பே.



திருக்குறளும் - திருத்தொண்டரும்

புலவர் ச. கணபதிராமன், எம். ஓ. எல்.

தேனினும் இனிய தமிழ்மொழியில் அமைந்த நூல்களுள் தலை சிறந்தது திருக்குறள். இந்நூலைப் பொதுமறை என்றும் தமிழ் மறை என்றும் தமிழ்நாட்டு மக்கள் போற்றிப் புகழ்வர். தென்னாட்டில் எழுந்த திருக்குறள் எந்நாட்டவர்க்கும் எக்காலத்தவர்க்கும், எச் சமயத்தவர்க்கும் பொது நூலாய் இலங்குகின்றது. இந்நூலின் பெருமையினை அறிந்த பழந்தமிழ்ப் புலவர்கள் தங்கள் தங்கள் நூல் களுள் இதனைச் சான்றாக எடுத்துக்காட்டினார்கள். ஓதற்கு எளிதாய் உணர்தற் கரிதாய் இலங்கும் திருக்குறள் தமிழகத்தின் செம்மைக்கும், சீர்மைக்கும் சிறந்த நிலைக்களனாக நின்று நிலவுவது போல், சிவ நெறிக்கும், திருநெறிக்கும் சிறந்த சான்றாய் மிளிர்வது திருத் தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணமாகும். திருக்குறளின் பெருமையினையும் திருத்தொண்டர் புராணத்தின் திருவினையும் நன்கறிந்த பெரும் புலவர் ஒருவர் அருமை சான்ற ஆறு தமிழ் நூல் களுள் இவை இரண்டினையும் இணைத்தார். அப்பாடல்,

"வள்ளுவர் நூல் அன்பர்மொழி வாசகம் தொல்காப்பியமே
தெள்ளு பரிமேலழகர் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் நூலின் தரம்"

என்பதாகும்.

இருமையில் ஒருமை

திருவள்ளுவரும், திருத்தொண்டர் புராணத்தை இயற்றிய சேக்கிழார் பெருமானும் தமிழ்த் தாயின் தவச் செல்வர்கள். வள்ளுவர் என்ற குடிப் பெயரும், சேக்கிழார் என்ற மரபுப் பெயரும் இப்பெரு மக்கள் இருவருக்கும் இயற் பெயராய் நின்று ஒளிர்வது இனிமை பயப்பதாகும். திருக்குறள் தமிழ்மறை என்று சிறப்பிக்கப்படுவது போல் திருத்தொண்டர் புராணம் திருமுறை என்று போற்றப்படு கின்றது "திரு" என்ற அடைமொழியினை இரு நூல்களும் பெற்றிருப்பதால், இவையிரண்டையும், தெய்வ நெறி போற்றும் திரு நூல்கள் எனலாம். வையகம் வள்ளுவரைத் தெய்வப் புலவர்

என்று கூறி வாழ்த்தும். சேக்கிழாரை தெய்வ நெறிப் புலவர் என்று சிறப்பிக்கும்.

வாழ்வியலும் - வரலாறும்

தெய்வப் புலவரான திருவள்ளுவர் மக்கள் செம்மையுடன் வாழ்வதற்கு வழி வகைகளை வகுத்துக் காட்டினர். தெய்வ நெறிப் புலவரான சேக்கிழார் பெருமான் வள்ளுவர் வகுத்துக் கொடுத்த வாழ்வியலைப் பின் பற்றி, வாழ்ந்து காட்டிய பெரு மக்களின் வரலாறுகளைத் தெய்வத் தமிழில் இழைத்துப் போற்றினர். சேக்கிழார் பெருமானல் நமக்கு அறிமுகப்படுத்தப்பெற்ற அடியார்கள் செம்பொன்னையும் ஓட்டையும் ஒக்கவே நோக்கிய சீர்மையாளர்கள். கற்றதனல் ஆய பயன் இறைவனது திருவடியினை வாழ்த்துவதே என்று எண்ணியவர்கள். பொறிவாயில் ஐந்தவித்துப் பற்றற்ருன் பாதத்தினைப் பற்றியவர்கள். தனக்குவமை இல்லாதான் புகழ்பாடி அவனது திருத்தாளினை அடைந்து பேரின்ப நிலையினைப் பெற்றவர்கள். பிறப் பென்னும் பேதமை நீங்க சிறப் பென்னும் செம் பொருளைக் கண்ட அடியார்களின் வரலாற்றை சேக்கிழார் பெருமான் பாடும்போது தெய்வப் புலவரான திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் கருத்துக்களை ஆங்காங்கே எடுத்தாண்டுள்ளார். சேக்கிழார் பெருமான் ஆண்டுள்ள திருக்குறள் கருத்துக்கள் ஏறத்தாழ எழுபதுக்கும் மேற்பட்டவை எனலாம். அவற்றுள் ஒரு சிலவற்றை மட்டும் இனி காண்போம்.

இல்லற இனிமை :

சுந்தரர் அணிதிகழ ஆரூரில் கற்பகத்தின் பூங்கொம்போகாமன் தன் பெருவாழ்வோ, பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ என்று போற்றத்தக்க முறையில் தெய்வத்திருவாய்த் துலங்கிய பரவை நாச்சியாரோடு இன்பநலம் துய்த்து யாண்டும் சென்று இறைநெறியினைக் கமழச்செய்து திருவொற்றியூர் வந்து சேர்ந்தார். திருவொற்றியூரில் திருவுடைமங்கையான நங்கை சங்கிலி அம்மையை நம்பியாரூரர் கண்டு காதல் கொண்டார். கங்கைவார் சடையண்ணலின் கருணையால் 'கன்னிறைந்த பெருஞ்சிறப்பினைக் கலியாணம் செய்துகொண்டு' நங்கை சங்கிலியொடு நல்லறம் நடத்தி வந்தார். நம்பியாரூரர் நல்லறம் நடத்திய தன்மையினை, சேக்கிழார் பெருமான்,

"பண்டுநிகழ் பான்மையினற் பசுபதிதன்னருளாலே
வண்டமர் பூங்குழலாரை மணம்புணர்ந்த வன்ஞெண்டர்
புண்டரிகத் தவள்வனப்பைப் புறங்கண்ட தூநலத்தைக்
கண்டு கேட்டு உண்டு உயிர்த்துற்றமர்ந் திருந்தார் காதலினல்"

என்று குறிப்பிடுகின்ருர். நம்பியாரூரர் நங்கை சங்கிலியோடு

கண்டு, கேட்டு, உண்டு உயிர்த்து உற்றமர்ந்திருந்தார் என்று குறிப்பிடுவது நமக்கு தெய்வப் புலவர் திருவள்ளுவர் இயற்றிய

"கண்டு கேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள"

என்ற குறளை நினைவுறுத்துகிற தன்றோ?

மழைக்குதவும் பெருங்கற்பு :

விழுமிய வேளாண் குடிக்கு வைப்பனைய மேன்மையினர் மானக் கஞ்சாறர் என்னும் அடியார். சோழவேந்தனது படைத்தலைமை யினைப்பெற்றிருந்த இவர், அடியார் வேண்டுவதைத் தட்டாது கொடுத்துவக்கும் தகைமையாளராய் இலங்கினர். எல்லாருக்கும் நன்றாம் பணிதல் என்ற குறளின் வண்ணம் நடந்து காட்டிய நற்றவச் செல்வர் இவர். இப்பெருந்தகையினை,

"பணிவுடைய வடிவுடையார் பணியினொடும் பனிமதியி
னணிவுடைய சடைமுடியார்க் காளாகும் பதம்பெற்ற
தணிவில் பெரும் பேறுடையார் தம்பெருமான் கழல் சார்ந்த
துணிவுடைய தொண்டர்க்கே ஏவல்செயும் தொழில் பூண்டார்"

என்று சேக்கிழார் சிறப்பிக்கின்றார். இப்பெருமகனார்க்கு வாய்த்த புனைசாயல் மயிலனைய வாழ்க்கைத் துணைவியை தொண்டர்சீர் பரவுவார் "மழைக்குதவும் பெருங் கற்பு மனைக்கிழத்தியார்" என்று பாராட்டுகின்றார். "மழைக்குதவும் பெருங்கற்பு மனைக்கிழத்தி" என்பது மழையினை வேண்டுங்கால் பெய்விக்கும் கற்பினையுடையவர் என்ற பொருளில் அமைந்திலங்குவது. இக்கருத்து வள்ளுவப் பெருந்தகையின்,

"தெய்வம் தொழா அள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்ற குறளிலிருந்து மலர்ந்து மணம் விசுவதன்றோ?

மழைக்குதவும் பெருங்கற்பு மனைக்கிழத்தியார் என்ற தேனினும் இனிய இச் சொல்

"வான் தரு கற்பினள்" (கலி. 16)

என்ற கலித்தொகை அடிகளை நமக்கு நினைவுறுத்துகின்றது.

ஒன்றிய உணர்வு

திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட அப்பர் பெருமான் திருவள்ளுவர் வகுத்துக் கொடுத்த வழியில் நின்று திருவரு

எழுதை உண்டு திருவாளன் திருவடியில் இணைந்து மகிழும் பேறு பெற்றவர். உற்ற நோய் நோன்று உயிர்க்குறுகண் செய்யாது நற்றவச்செல்வராய் இலங்கிய நாவுக்கரசர்பால் பக்தி கொண்டவர் அப்பூதியடிகள்.

அப்பூதியடிகள் சோழநாட்டிலுள்ள திங்களூரில் வாழ்ந்து வந்த செம்மையாளர். செஞ்சடையண்ணலின் சீர்பாடும் அடியார்களின் அடித்தொண்டர். சிவம் பெருக்கிய திருநாவுக்கரசரின் திருவருட் செயல்களைச் செவியுற்ற அவர், அவர் பால் ஆருத காதல் கொண்டு, எங்கும் எதிலும் நாவுக்கரசரின் நற்பெயரைச் சூட்டி மகிழ்ந்தார். திங்களூரிலிருந்த அப்பூதியடிகள் நாவுக்கரசரைக் கண்டு வணங்கும் பேறு கிடைக்கப் பெறுவதற்கு முன்பே அவர் பால் காதல் கொண்டு அவரை வணங்கிய தன்மையினை சேக்கிழார் பெருமான்,

"காண்டகைமை யின்றியுமுன் கலந்த பெருங் கேண்மையினர்
பூண்ட பெரும் காதலுடன் போனகமும் கறியமுதும்
வேண்டுவன வெவ்வேறு விதங்கள் பெற விருப்பினுல்
ஆண்டவரசமுது செயத் திருவமுதாம் படியமைத்து"

என்று குறிப்பிடுகின்றர். நாவுக்கரசரைக் காணும் முன், அவர்பால் அப்பூதியடிகள் "கலந்த பெருங்கேண்மை" கொண்டார் என்ற இக்கருத்து, திருவள்ளுவரின்,

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்"

என்ற குறளை நமக்கு நினைவுறுத்துகிறதன்றோ?

புறக்கண்டு மகிழ்தல்

திருவிழி மிழலையில் மாரிவறங் குன்றியதால் வற்கடம் வந்துற்றது. வாரி சுருங்கியதால் வானோர்க்குச் செய்யும் பூசனையும் செய்யப்படவில்லை. மகேஸ்வர பூசையும் தடைபட்டது. இந்நிலையில் சிவம் பெருக்கும் பிள்ளையாரான சம்பந்தரும், தாண்டகவேந்தரான நாவுக்கரசரும் திருவிழி மிழலைக்கு வந்தனர். உண்ணவும் உடுக்கவும் வகையறியாது தவித்த மாக்களது வாட்டத்தைப் போக்க விழி மிழலை விகிர்தரை வேண்டினர். வேண்டுவோருக்கு வேண்டியதை ஈந்துவக்கும் விகிர்தரும் இமையப் பாவையின் திருமுலைப் பாலுண்ட தமது திருமகருக்கு, வாசியுள்ள காசும், கைத்தொண்டு செய்து சிறந்த நாவுக்கரசருக்கு வாசியில்லாக் காசும் நல்கி பஞ்சத்தைப் போக்க அருள் செய்தார். காசுகள் பெற்ற பெருமக்கள் இருவரும் அக்காசுகளுக்குப் பொருள் வாங்கி மக்களை உண்பித்து அவர்களது மனக் கவலையை யொழித்து அவர்களின் முகமலர்ச்சி

யினைக் கண்டு தாங்களும் மகிழ்ச்சியில் திளைத்தனர். இவர்கள் பெற்ற இன்பத்தினை,

"ஆறு சடைமேல் அணிந்தருளும்
அண்ணல் வைத்த படிக்காசால்
ஈறிலாத பொருளுடைய இரு
வருடைய திருமடங்கள்
சோறு நாளும் தொண்டர் மகிழ்ந்
துண்ண உண்ணத் தொலையாதே
ஏறு பெருகும் புவி போற்ற
இன்புற்றிருக்கும் அந்நாளில்"

என்று பாடுகின்றார். உலகு இன்புறுவதைக் கண்டு கற்றறிந்த பெருமக்கள் இருவர் என்ற திருக்குறளின் கருத்து இங்கு நினைக்கத்தக்கது. அக்குறள்

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்"

என்பதாம்.

செயற்கருஞ் செயல்

செயற் கரிய செயல்கள் செய்தவர்களே பெரியார்கள் என்று வரையறுத்துக் கூறுகின்றது வள்ளுவம். வள்ளுவத்தின் இக்கருத்துக்கு ஏற்ற இலக்கியமாகத் திகழ்ந்தவர் இயற்பகைநாயனார். இந்நாயனாரின் செயற்கருஞ் செயலை,

"செய்வதற் கரியசெய்கை செய்த நற்றொண்டர்போக"

"இயற்பகை முனிவா ஓலம் ஈண்டு நீவருவாய் ஓலம்
அயர்ப்பிலா தானே ஓலம் அன்பனே ஓலம் ஓலம்
செயற்கரும் செய்கை செய்ததீரனே ஓலம் என்றான்
மயக்கறு மறையோலிட்டு மாலயன் தேட நின்றான்"

என்று பெரிய புராணம் சிறப்பித்துப் பேசுகின்றது. பெரிய புராணத்தின் இக் கூற்று,

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்"

என்ற திருக்குறளை அடியொற்றி எழுந்ததாகும்.

விருந்தோம்பல் :

வள்ளுவப் பெருந்தகையின் விருந்தோம்பல் என்ற அதிகாரத்திற்கு இளையான்குடி மாற நாயனார் சிறந்த இலக்கியமாகத் திகழ்கின்றார். இப்பெருந்தகையாளர் விருந்தோம்பல் என்னும் வேளாண்மையின் பொருட்டுத்தான் இல்வாழ்க்கை இலங்குகின்றது என்று எண்ணி விருந்தோம்பலை ஆற்றி வந்தவர். செல்விருந்து ஓம்பி நல்விருந்து பார்த்திருந்த செம்மையாளர். இப்பெரியாரும் இவரது மனைவியாரும் விருந்து ஓம்பிய திறத்தை சேக்கிழார் பெருமான்

"கொண்டுவந்து மனைபுகுந்து குலாவுபாதம் விளக்கியே
மண்டு காதலினாதனத்திடை வைத்தருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தினிலாறு சுவைத்திறத்தினிலொப்பிலா
அண்டர் நாயகர் தொண்டரிச்சையினமுது செய்யவளித்துளார்"

என்று சிறப்பித்துப் பேசுகின்றார்.

அரசருள் ஏறு

ஆறு அங்கங்களையுடைய அரசன்தான் அரசர்களுள், ஏறு போன்றவன் என்று வள்ளுவப் பெருந்தகை குறிப்பிடுகின்றார். இதனை,

'படைகுடி கூழ்அமைச்சு நட்பு அரண்ஆறும்
உடையான் அரசருள் ஏறு''

என்ற திருக்குறளால் அறியலாம். இக்குறளின் கருத்தைச் சேக்கிழார் பெருமான் மூர்த்தி நாயனார் புராணத்தில்,

"தாழும் செயலின்றொரு மன்னவன் தாங்கவேண்டும்
சூழும்குடியும் முதலாயின கொள்கைத் தேனும்
சூழும்படை மன்னவன் தோளிணைக் காவலின்றி
வாழும்தகைத் தன்றிந்த வையகம் என்றுசொன்னார்"

என்று எடுத்து மொழிகின்றார். திருக்குறளுக்கு விரிவுரை போல் அமைந்துள்ளது இச் செய்யுள்.

இவ்வாறாகச் சேக்கிழார் பெருமான் திருக்குறள் கருத்துக்களை எடுத்தாளுவதோடு, இதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாக இலங்கும் அடியார்களின் வரலாறுகளையும் செம்மை சான்ற முறையில் அமைத்துக் கொடுத்துள்ளார். "இன்னா செய்தார்க்கும் இனியவை செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு" என்ற குறளுக்கு மெய்ப்பொருளாயனார் எடுத்துக்காட்டாய் இலங்குகின்றார். "சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி, துலையல்லார் கண்ணும் கொளல்"

என்ற குறட்பாவுக்கு இலக்கியமாகத் திகழ்கின்ருர் ஏனுதிநாதர். ''தற்காத்துத் தற்கொண்டாற் பேணி தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்'' என்ற மணிமொழிக்கு மங்கையர்க்கரசியே சான்ருய் நின்று நிலவுகின்ருர். ''எல்லார்க்கும் நன்ரும் பணிதல் அவருள்ளும், செல்வர்க்கே செல்வம் தகைத்து'' என்னும் வள்ளுவர் வாக்கிற்கு குலச்சிறையார் என்ற முதலமைச்சர், வாய்மை யாக விளங்குகின்ருர். சுருங்கக்கூறின், நாயன்மார்கள் அனைவரும், குறள்வழி நின்றே, கூத்தன் திருவடியினை அடைந்தனர் எனக் குறிப்பிடலாம்.

சேக்கிழார், திருக்குறளை நன்கு கற்றுத் தெளிந்து அதன் வழி நின்ற பெருந்தகையாளர். திருக்குறளின்பால் ஆருத அன்பு கொண்டவர். மலையினும் பெரியது, கடலினும் பெரியது எது என்று மன்னன் சேக்கிழாரிடம் விடுத்த வினுக்களுக்கு,

''நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது''

என்றும்,

''பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது''

என்றும், குறட்பாக்களை எடுத்துக் காட்டிப் பதிலிறுத்தார் என்னும், செவிவழிக்கதை இங்கு நினைக்கத்தக்கது.

அறநெறி வாழ்க்கையினை வலியுறுத்த எழுந்த திருக்குறளும், அருள்நெறி வாழ்க்கையின் செம்மையினை எடுத்துக்காட்ட எழுந்த திருத்தொண்டர் புராணமும் தமிழர்களின் பெட்டகங்கள் எனக்குறிப் பிடலாம். இந்த இருநூல்களும் தமிழர்கள் தூய தனிப்பண்பினையே விளக்குபவை. இரண்டும் தமிழ் மண்ணிலேயே பூத்த நறுமலர்கள். இவை இரண்டும் தெய்வீகமணத்தை திசையெலாம் கமழச்செய்யும் ஆற்றல் சான்றவை. இவைகளால் தமிழ் உயர்ந்தது. தமிழர் உயர்வர் என்பது திண்ணம்.



வள்ளுவர் கண்ட ஆமைகள்

திருமதி காந்திமதியம்மாள்

முற்காலத்தில் தேவர்கள் திருப்பாற் கடலை கடைந்து அதிலிருந்து தோன்றிய அமிருதத்தை தாங்கள் சாகாதிருக்கும் பொருட்டு உண்டார்கள். ஆனால் நமது தெய்வப் புலவராகிய திருவள்ளுவர் தமது அறிவுக் கடலைக் கடைந்து அதனின்று தோன்றிய அமுதமாகிய திருக்குறளை உலக மக்கள் யாவரும் பருகு வற்கு வழங்கியிருக்கின்றார்.

வள்ளுவர், ஓர் அறிவு படைத்த பயிர் இனங்களிலிருந்து ஆறு அறிவு படைத்த மக்களினம் வரை, அதனதன் தன்மைகளை ஆராய்ந்தும், கடைசி இனமான மக்களினத்தின் உணர்வை அளந்தும், அத்தன்மையதான அறிவை பூதக்கண்ணாடியாக்கி அவற்றின் மூலம் நுண் அணுப் போன்ற உண்மைகளை உலக மக்கள் பெரிதாகக் கண்டுணருமாறு விளக்கிக் காட்டுகின்றார். அவர் இயற்கை உண்மைகளை மனித இனத்தின் வாழ்வொடு பொறுத்தி உவமைகள் மூலம் எளிதில் மனிதன் கண் பதியுமாறு கூறியிருக் கின்றார்.

இங்கு நான் கூற இருக்கும் வள்ளுவர் கண்ட ஆமை இனங்கள் 19 வகைப்படும். அவைகளில் முதலாவது ஆமை நீர்வாழ் இனங் களில் ஒன்று. இதைக் கண்ணுற்ற வள்ளுவர் அதன் அற்புதச் செயலை சிந்திக்கின்றார். ஆமையானது நீரின் அடிப்பாகத்திலிருந்து மேற் பாகத்திற்கு மிதந்து வரும்பொழுது தன் முதுகுப் புறமான கெட்டி யான ஓட்டிற்கு வெளியே தன் தலையையும், தன் கால்கள் நான்கினையும் நீட்டிக் கொண்டு வருகிறது. தனக்கு வேண்டாத போழ்தாவது, அல்லது தனக்கு பகையாக காணுமிடத்திலாவது, அங்ஙனம் வெளித் தோன்றுவனவாகிய ஐந்து பகுதிகளையும் உள்ளடக்கி ஓட்டிற்குள் பாதுகாப்பிற்காக ஒடுக்கிக் கொள்கிறது. இந்த ஆமையின் அபூர்வ குணத்தைக் கண்ட வள்ளுவர், மனிதன் தனது ஐம்பொறிகளினால் ஏற்படுகின்ற ஆசையையும் அடக்க வேண்டும் என்று கூறவருமிடத்து, ஆமையின் குணத்தை உவமை யாக எடுத்து அழகாகக் கையாண்டிருக்கிறார்.

எப்படி ஆமையானது தனது ஐந்து உறுப்பினையும் இடர்வரா வண்ணம் அடக்குமாறு போல, மனிதனும் ஒருபிறப்பின்கண் தனது ஐம்பொறிகளையும் பாவம் சேராவண்ணம் அடக்குவானாகில், அவ்வன்மை அவனுக்கு எழு பிறப்பின் கண்ணும் அரணு தலையுடைத்து என்று கூறுகிறார்.

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து"

என்பது குறள். இனி வள்ளுவர் இந்த நீர்வாழ் இனமான ஆமையிற் கண்ட அடக்கத்தின் உண்மைநிலை மனித வாழ்வுக்கு, மனிதன் பின்பற்றினால் எவ்வளவு நல்ல காவலாக இருக்குமென்று கூறிவிட்டு, மனிதன் வாழ்விலே இன்னும் 18 விதமான ஆமைகளைப் பற்றி எடுத்துக் கூறுகின்றார். இவைகளில் அறத்துப்பாலில் 10 வகையும், பொருட்பாலில் 8 வகையும் உள்ளன.

அவையாவன

அறத்துப்பாலில்

1. பிறன் இல் விழையாமை
2. அழுக்காறாமை
3. வெஃகாமை
4. புறம் கூறாமை
5. பயன் இல சொல்லாமை
6. கள்ளாமை
7. வெகுளாமை
8. இன்னா செய்யாமை
9. கொல்லாமை
10. நிலையாமை

இனி பொருள்பாலில்

1. கல்லாமை
2. சிற்றினம் சேராமை
3. பொச்சாவாமை
4. வெருவந்த செய்யாமை
5. இடுக்கண் அழியாமை
6. அவை அஞ்சாமை
7. பெரியாரைப் பிழையாமை
8. கள் உண்ணாமை

இனி அறத்துப்பாலிலுள்ள 10 ஆமைகளையும், பொருள் பாலிலுள்ள 8 ஆமைகளையும், மனித வாழ்விலே அவை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என கூறுகின்ருர்.

முதலாவது அறத்துப்பாலில்

பிறன் இல் விழையாமை என்கிற ஆமை பற்றி கூறுகின்ருர். இந்த பிறனில் விழையாமையாகிய குணம் மனிதனுக்கு அவசியம் வேண்டும். ஏனென்ருல்

‘ எளிதுஎன இல்இறப்பான் எய்தும் எஞ்ஞான்றும்
விளியாது நிற்கும் பழி ''

எளிதென்று பிறனில் விழைந்தவனை தேவேந்திரன் எப்படி ஆனுன் என்பதையும், கௌதமரின் மனைவி அகலிகை அதற்கு உடன் பட்டவள் பழி எய்தியதையும் அடியில் வரும் கம்பராமாயணப்பாடல் களால் காண்க.

சரந்தரு சாபமல்லாற் றடுப்பருஞ் சாபம் வல்ல
வரம்தரு முனிவனெய்த வருதலும் வெருவி மாயா
நிரந்தர உலகில் நிற்கும் நெடும்பழி பூண்டாள் நின்ருள்
புரந்தரன் நடுங்கி ஆங்கோர் பூசையாய்ப் போகலுற்ருன்.

தீவிழிசிந்த நோக்கிச் செய்ததையுணர்ந்து செய்ய
தூயவனவனை நின்கைச் சுடுசரமனைய சொல்லால்
ஆயிரமாதர்க் குள்ளவறிகுறி உனக்குண்டாகென்று
ஏயினன் அவையெல்லாம் வந்து இயைந்தன இமைப்பின்முன்னம்

எல்லையில் நாணமெய்தி யாவர்க்கு நகைவந்தெய்தப்
புல்லிய பழியினேடும் புரந்தரன் போயபின்றை
மெல்லியலாளை நோக்கி விலைமகளனைய நீயும்
கல்லியலாதி யென்ருன் கருங்கல்லாய் மருங்குவீழ்வாள்

ஆகவே இந்திரனும், அகலிகையும் நீங்காத பழிக்குள்ளானுர்கள். வள்ளுவர் கூறியிருக்கின்ற இதர ஆமைகளைப்பற்றி கூறப்புகின் விரியுமாகையால் இத்துடன் முடித்துக்கொள்கின்றேன்.

'உலக வொளி'

திரு. மு. ரவீந்

வெள்ளி, வியாழன் விளங்கிரவி வெண்டிங்கள் முதலியன புறத்திருளை விரைவிலே நீக்கும் ஒளிகளாம்; திருவள்ளுவரது திருக்குறள் உலகத்தோரது உள்ளிருளை நீக்கும் ஒளியாம் என்று மதுரைப் பாலாசிரியனுர் கூறியுள்ளார்.

> "வெள்ளி வியாழம் விளங்கிரவி வெண்டிங்கள்
> பொள்ளென நீக்கும் புறஇருளைத் — தெள்ளிய
> வள்ளுவரின் குறள் வெண்பா அகிலத்தோர்
> உள்ளிருள் நீக்கும் ஒளி"

ஓதற் கெளிதாயும் உணர்தற்கரிதாயும் தீதற்ருேர் உள்ளுதொறு முள்ளுதொறு முள்ள முருக்க வல்லதாயுமுள்ளது வள்ளுவர் வாய்மொழி. மணலைத் தோண்டுந்தோறும் நீர் பெருகும், மக்கள் வாய்வைத்துண்ணுந்தொறும் தாயினது மார்பின் கண் நல்ல பால் பெருகும். அவைபோல திருவள்ளுவரது திருக்குறளை ஆராயுந் தோறும் அறிவுடைய புலவர்க்கு அறிவு வளரும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

> மணற்கிளைக்க நீருறும் மைந்தர்கள் வாய்வைத்
> துணச் சுரக்குந் தாய்முலை யொண்பால் — பிணக்கிலா
> வாய்மொழி வள்ளுவர் முப்பான் மதிப்புல வோர்க்(கு)
> ஆய்ந் தொறும் ஊறும் அறிவு

வள்ளுவர் செய்திருக்குறளை வழுவற நன்குணர்ந்தோர்கள் உள்ளங்களிலெல்லாம் அறிவொளி நீங்காது நின்று அவர்தம் வாழ்க்கையினை நடத்திச் செல்ல உறுதுணையாக விளங்கும் என்பது வெள்ளிடை விலங்கலாம்.

உலகோர் அக இருளை நீக்கும் திருக்குறள் தெரிக்கும் அறிவியலையும் வாழ்வியலையும் ஆராய்வதே எனது நோக்கமாகும். உலகத் தோற்றத்தைப் பற்றி ஆராய்கின்ற அறிவு மனிதனிடத்து இருவேறு உணர்வுகளினல் உண்டாகியது என்பர். ஒருணர்வு யோக நிலைக்கும். மற்ருெருணர்வு விஞ்ஞான நிலைக்கும் அழைத்துச்

சென்றது. சிறந்த அறிவியல் அறிஞர்கள் இவ்விரு வேறு உணர்வுகளையும் ஒற்றுமைப்படுத்தி அவற்றின் மூலம் உலகத் தோற்றதின் முதலினை ஆராய்வராயினர். ஐரோப்பிய நாட்டினரது அறிவியல் கலை முதன் முதலில் கிரேக்க நாட்டில்தான் தொடங்கிற்று. கிரேக்க அறிவியல் கலைஞர்கள் தங்கள் அறிவு வேட்கையினைத் தணிப்பதற்கு வியப்புணர்ச்சியினால் உந்தப்பட்டு உலகப் புறப் பொருள்களில் உற்சாகத்துடன் உள்ளத்தைச் செலுத்தி உலகத் தோற்றத்தைப் பற்றி ஆராயத் தொடங்கினர். கீழை நாட்டார்கள் உயிரின் அநுபவத்தை முன்னணியில் நிறுத்தி வாழ்க்கையின் துன்பத்தினின்றும் விடுபட இவ்வுலகத் தோற்றத்தைப்பற்றி ஆராயத் தலைப்பட்டனர். தெளிந்த அறிவுடைய அறிவியல் கலைஞர்கட்கு இவ்விரண்டு முறையும் உடன்பாடேயாம்.

மாசுண்ட தங்கத் தட்டினை ஒருவன் துலக்கத் துலக்க மாசு நீங்கி வருங்கால் அவன் உருவமே அத்தட்டில் முனைந்து விளங்குதற்போல உலகத்தை ஆராய்ந்து செல்லச் செல்ல உயிரைப் பற்றிய விளக்கமே அங்கு முனைத்துக் காணப்படும் அண்டத்தை ஆராயப் பிண்டம் தெரியும். பிண்டத்தை ஆராய அண்டம் தெரியும். இவ்வாராய்ச்சினைத் அறிவியல்கலை என அறிஞருலகம் கூறும்.

விஞ்ஞானிகள் ஆய்வுக் களத்தில் தங்கள் பரிசோதனைகளைச் செய்வது போல அறிவியல் கலைஞர்கள் தங்கள் மூளையினையே ஆய்வுக் களங்களாக வைத்து முடிவு காண்கின்றனர். திருவள்ளுவர் புறவுலக அறிவியலைப் பற்றியும் உயிர் உலக அறிவியலைப் பற்றியும் நன்கு தெளிந்த ஒட்பமுடைய அறிவியல் கலைஞராவர். உலகத் தோற்றத்தையும் ஆராய்ந்தார்; அவ்வுலகில் மனிதனுக்குரிய இடம் என்ன என்பதனையும் தெரிவித்தார். இவ்விரண்டையும் பற்றி ஆராயாத அறிவியல் அறிஞரே இல்லையெனலாம். வாழ்க்கையை எப்படி நடத்துவது, வாழ்க்கையின் நோக்கம் யாது — மனித ஒழுக்கத்திற்குரிய அடிப்படைகள் யாவை—மக்களுக்குரிய குடிமைப் பண்பு—நல்ல அரசியல் முறை—கல்வி—நீதி—உண்மை—அழகு முதலியவற்றைப் பற்றி தன் முன்னோர் நினைத்தவை, தான் ஆழ்ந்து சிந்தித்தவை—வழக்கில் இருந்தவை முதலியவற்றை துணையாகக் கொண்டு ஆராய்ந்த ஆராய்ச்சியே திருவள்ளுவரது அறிவியல் எனலாம்.

கிறிஸ்துவிற்கு முன் 624இல் தேல்ஸ் என்பவர் முதன் முதலில் உலகத் தோற்றத்தைப் பற்றி ஆராய்ந்தார். அவர் உலகம் தட்டை வடிவான தென்றும், அவ்வுலகம் தண்ணீரினின்றும் தோன்றியதென்றும் கூறிச் சென்றார். அவருக்குப் பின்னர் கி. மு. 611-இல்

தோன்றிய அனக்ஸி மேண்டர் என்பார் பொதுவான உருவமற்ற சுட்டிக்காட்ட வொண்ணாத ஒரு பொருளினின்றும் உலகம் தோன்றியிருக்க வேண்டும் எனக் கூறினர். அவருக்குப்பின் கி. மு. 588இல் தோன்றிய அனக்ஸி மெனெஸ் என்பார் காற்றே உலகத் தோற்றத்தின் முதற் பொருள் எனக் குறிப்பிட்டார். இரண்டாவது வகைப்பட்ட கிரேக்க அறிவியல் கலைஞர்கள் உலகம் பலதிறப்பட்டிருந்த தினல் எண் அல்லது அளவிலிருந்துதான் உலகம் தோன்றியிருக்க வேண்டுமென்றனர் மூன்றாவது வகைப்பட்ட அறிவியலார் உண்மைப் பொருள் ஒன்றுதான் அவ்வொன்று ஆதியும் அந்தமுமில்லாது. அறிவற்ற பொருள்கள் அதனின்றும் தோன்றுவதில்லை இல்லாதவொன்றுக்குத் தோற்றமில்லைமெனக் குறித்துச் சென்றனர். மாற்றமடையும் பொருள்கள் யாவும் கானல் நீர் போன்றவை பொறிகளால் உணரப்படுபவை பொய்த் தோற்றமுடையனவெனவும் பகுத்தறிவினல் ஆராய்வதே உண்மைப் பொருளெனவும் குறித்தனர்.

(Heracleitus) ஈராகிளிட்டஸ் என்பார் உலகம் பொங்கழலிலிருந்து தோன்றி அவ்வழலுக்கே இறுதியில் இரையாகிவிடும் என்றும் கூறினர். தீ காற்ருகி, அக்காற்று நீராகி, அந்நீர் மண்ணுக மாறுகின்றது என்பது அறிஞர் ஈராகிளிட்டஸ் கருத்தாகும். இது இறங்கு முறையாகும். மண் நீராயும், நீர்வளியாயும், வளிதீயாயும் மாறும் இது ஏறுமுறையாகும் இக்கருத்துத் தமிழர்க்கும் உடன்பாடே எனக் கருதுகின்றேன்.

பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்ருய் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்ருய் விளைந்தாய் போற்றி

எனத் திருவாசகம் ஏறு வரிசையிலும்,

தீயின் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
காலின் ஊக்கம் கண்டோன் நிழல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன் என்று

என இறங்கு வரிசையிலும் வைத்துக் கூறுவதைப் பார்மின் பின்னர் கி. மு. 495இல் பிறந்த எம்பிடோக்கள்ஸ் என்பார் ஒரு பூதம் மற்ரெரு பூதமாக மாறமுடியாது மண் வளி தீ நீர் என்னும் நான்கு பூதங்களும் கலந்த மயக்கமே உலகம் என்ருர். ஆனல் இந்நான்கு பூதங்களும் அறிவற்றவை இவை தம்முள் சேறுமாறு எங்ஙனம்?

விருப்பு வெறுப்பு என்னும் இரண்டு முரண்பட்ட ஆற்றல்களினால் இந்நான்கு பூதங்களும் சேருவதும் பிரிவதுமாகவிருக்கின்றன என்றார். பின்னர்த் தோன்றிய அணுவாதிகள் சிதலது நீர்வாய் சிறிதுகளாற் பெரும் புற்றுரு அமைந்த பெற்றிய தென்ன உலகம் அணுக்களாலேயே யாகும் என்றனர். பின்னர் கி. மு. 500இல் அனக்ஸாகோராஸ் (Anaxagores) என்பவர் பொருள்கள் சிருட்டிக்கப் படுவனவல்ல அழிக்கப்படுவனமல்ல பொருள்களின் இயக்கத்தை அமைத்து பொருள்களால் உலகத்தை அமைகின்ற பேரறிவுப் பிழம்பு ஒன்று உள்ளது எனக் கண்டவர் இவர்தான் இவருக்குப் பின்னர்தான் ஒரு பொருட் கொள்கையும் இரு பொருட் கொள் கையும் தோன்றின. இரண்டு கொள்கைகளுக்கும் இவரே தந்தை யெனக் கருதப்பட்டார். இப்பேரறிவுப் பிழம்பு உலகத்தை அமைத்ததே ஒழிய உலகத்தை உண்டாக்க இல்லை என்பது அவர் கருத்து. (World forming intelligence and not a world creating intelligence). இவ்வறிவுப் பிழம்பும் ஏனைய பொருள்களும் என்றும் இருந்தன இப்பிழம்புப் பொருட்களைக் கூட்டி உலகத்தை அமைத்தது. உலக அமைப்பில் ஒரொழுங்கு, அழகு, இயைபு (harmony) முதலியவை இருப்பதினால் கண் மூடித்தனமான ஆற்ற லினால் ஆக்க முடியாது. உலக அமைப்பில் ஒரு நோக்கமுள்ளது என முடிவுக்கு வந்தார்.

நம் நாட்டில் தொல்காப்பியர் எழுத்து சொல் பொருள் இலக் கணங்களைக் குறிக்க வந்தவர். அவர் எழுதிய வாழ்க்கைக்குரிய இலக்கணம் பொருளதிகாரம் எனப்படும். அதில்

> ''நிலம் தீ நீர் வளிவிசும்போ டைந்தும்
> கலந்தமயக்கம் உலகம்; ஆதலின்
> இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாமைத்
> திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும் (மரபியல் 86)

இவ்வுலகம் ஐம்பெரும் பூதங்கள் சேர்க்கையால் உண்டானது என் கிறார். திருவள்ளுவர்க்கும் இக்கருத்து உடன்பாடே; எனினும் இப் பூதங்கள் ஐந்தினுக்கும் முதல்களாகச் சொல்லப்பட்ட சுவையொளி ஊறு ஓசை, நாற்றம் என்னும் தன் மாத்திரைகளால் உலகம் ஆன தென்றும் இதனை நன்கு தெரிந்துகொண்டவனே உலக இயல்பினை தெரிந்த வனவான் என்பார். ''சுவையும் ஒளியும் ஊறும் ஓசையும் நாற்றமுமென்று சொல்லப்பட்ட தன் மாத்திரைகளெந்தனது கூறுபாட்டையும் ஆராய்வான் கண்ணதே உலகம்'' என்கிறார்.

"சுவையொளி யூறோசை நாற்ற மென்றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு"

இப்பூதங்கள் அறிவற்ற பொருள்கள் ஆகையால் இவற்றைச் செயற் படுத்த ஒரு பேரறிவுப் பொருள் வேண்டப் படுகிறது.

"அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு" —

இவ்வுலகத்தை அமைக்கின்ற முதற் பொருள் இறைவனுவான். அவன் பேரறிவு படைத்தவன் எனக் குறிப்பிடுவாராய் வாலறிவன் என இரண்டாம் குறளில் அப்பொருளின் தன்மையைச் சுட்ட ஒரு சொல் பெய்திருக்கிருர். அண்டத்தை அமைத்த இவ்வாலறிவன் உள்ளமாகிய பிண்டத்திலும் நீங்காது உடனுயிருக்கின்ருன் என்பாராய் மலர்மிசை யேகினன் என மூன்ஒம் குறட்பாவில் குறிப்பிடு கின்ருர். அவன் ஒரு பொருளையும் விழையாதவனென்றும் உயிர் களுடைய துன்பத்தைப் போக்க பேராசை வாரியனுய் இருக்கின்ருன் எனக் குறிப்பிட வேண்டுதல் வேண்டாமை யிலான் என்ருர்.

"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகு மறிவு" —

என்பதால் உள்ளம் சார்ந்த வண்மை யிலங்குமாகையால் இறைவனை நினைத்த வண்ணம் செய்கின்ற பணி இறைவன் பொருள்சேர் புகழ் என்றும் அவ்வாறு நினையாது செய்கின்ற நற்பணிகள் நல்வினை யென்றும் நற்பணிக்கு மாறுபட்ட பணிகளினல் தீவினைதான் பெருகு மென்றும் குறிப்பிட்டார். உயிர்கள் போல் ஐம்புல வேட்கையுடையவ னல்லன் என்பாராய் பொறிவாயிலைந்தவித்தான் என்றும் அவன் நெறியின்கண் வழுவாது நிற்பவர்கள் நீடுவாழ்வார்களென்றும் நுவல்கின்ருர். அவனுக்கு உவமை ஒருவாற்ருனும் கூற முடியா தென்று கூறி அறவாழி அந்தணன் என அவனைக் குறிப்பிடுகின்ருர். அவனடியைச் சார்ந்தால் நீடுவாழ முடியு மென்றும், யாண்டும் இடும்பை இலவென்றும் இரு வினையும் சேரா வென்றும் மனக்கவலை மாளும் என்றும் பிறவிப் பெருங்கடல் நீந்துவர் என்றும் குறிப்பிடு கின்ருர்.

உலகம் ஆதிபகவனை முதலாக உடைய தென்னும் முதற் குறட் பாவில் ஏன் இவ்வுலகம் அமைக்கப்பட்ட தென்னும் ஆசங்கை நிகழு மன்றே. அதற்கு மாற்றம் இறுப்பாராய் வாலறிவனை வணங்கவும் அதனல் அறிவு பெறத் தகுதியுள்ள மக்களுயிர் உய்தற் பொருட்டு என்பவராய்

"கற்றதனு லாய பயன்என்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅர் எனின்"

எனக் கூறுகின்ருர். தன்மாத்திரைகளைச் சேர்த்து இறைவன்

உலகத்தினை அமைக்கின்றான் எனவும் அவ்வமைப்பும் தன்னை போன்ற அறிவுடைய பொருள்களான உயிர்கள் விளக்கம் பெற ஆகும் எனவும் கண்டோம். இவ்வறிவு விளக்கம் எவ்வாறு பெற முடியும்? சிலர் ஐம்பொறிகளினால் ஏற்படுகின்ற உணர்வு மயக்க உணர்வு என்பர். சிலர் பொய் என்பர், சிலர் உண்மையென்பர். கண்ணால் காணப்படுகின்ற பொருள்கள் மூலம் வரும் அறிவு கானல் நீர் போன்ற மயக்க அறிவேயென்றும் இவற்றை நீக்கி பகுத்தறிவினால் காணப்பெறும் அறிவே உண்மையான நிலைபெற்ற அறிவென்றும் கூறுவர்.

உயிர் உடலுக்குள் அடைந்து கிடக்கிறது. அவ்வுயிரை உலகோடு தொடர்பு படுத்துவன மெய் வாய் கண் மூக்கு செவி யென ஐம்பொறிகளாகும். உயிர் இவ்வைந்து சாளரத்தின் வழியாக வெளியுலகினைக் கண்டு அறிவுச் செல்வத்தைப் பெறுகின்றது. ஐம்பொறிகளும் இல்லா மனிதன் உலகத்தோடு தொடர்பு கொள்ள முடியாது. ஐம்பொறிகளும் சரிவர அமையப்பெற்ற மனிதன் மெய்யின் மூலம் ஊற்றினையும், வாயின் மூலம் சுவையையும், கண் மூலம் ஒளியினையும், மூக்கின் மூலம் உயிர்ப்பையும், செவியின் மூலம் கேள்வியையும் அடைகின்றான். இயற்கையிலேயே இருக்கும் நுட்ப அறிவும், ஐம்பொறிகளின் மூலம் செல்லும் அறிவும் – இவ்விரண்டின் சேர்க்கையினால் சிந்தனை பிறந்தது அதனால் உண்டாகின்ற அறிவும் என மனித உள்ளத்தில் மூன்று வகையான அறிவு நிறைந்து கிடக்கின்றது.

"கோளில் பொறியில் குணமில என்பதனால் தத்தமக் கேற்ற புலன்களைக் கொள்கையில்லாத பொறிகள், பயன்படுதலுடையன வல்ல" என்று குறிப்பிடுவதனால் ஐம்பொறிகள் அறிவு விளக்கத்திற்கு அமைந்தவையே யென்றும்

"ஐயுணர்வு எய்திய கண்ணும்" எனவும்,

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு" எனவும்

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு" எனவும்

"கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள" எனவும்

"கற்றில னாயினும் கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாந் துணை"

எனவும் கூறி ஐம்பொறிகளின் மூலமாகத்தான் உயிரின் அறிவு

விளக்க முறுகின்றதென்றும், "உண்மை யறிவே மிகும்" என்ப தால் மதிநுட்பமும்

"மதிநுட்பம் நூலோ டுடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை"

என்பதினுல் உயிரின் கண் நுட்ப அறிவு இருக்கின்றது என்றும், இரண்டு முடையவர்கள் சிந்தனை செய்து செயலாற்றுவர் என்பதால் "அதிநுட்பம் யாவுள முன்னிற்பவை" என்று கூறினர்.

இவ்வுலகம் உடலோடு கூடி இயங்கும் உயிர்கட்கு அறிவு விளக்கத்தைக் கொடுக்கும் பல்கலைக்கழகமாக விளங்குகிறது. இவ்வுயிர் உடலோடு கூடியே இயங்குமென்பதனை "உடம்பொடு உயிரிடையென்ன" என்றும் "ஊனைக் குறித்த உயிரெல்லா மென்றும்" குறிப்பிடுகின்ருர். இவ்வுயிர் என்றும் உள்ள பொருள் என்பதற்கு மன்னுயிர், மன்னுமுயிர்க்கு என்னும் சொற்களை அடையிட்டுக்காட்டுகின்ருர். உயிர்கள் பல என்பதற்குத்

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை எண்ணிக்கொண் டற்று"

என்னும் குறட்பாவினுல் சுட்டுகின்ருர்.

இவ்வாறு உயிர்கள் தம் அனுபவத்தாலும், பிறர் அனுபவங்களை விளக்கும் நூல்களைக் கற்றலானும் அறிவினைப் பெருக்கிக் கொள் கிறது. உடலோடு கூடிய உயிர் அவ்வுடலை விட்டுப் பிரியுமளவும் கற்றல் வேண்டும் என்பதை

"என்னெருவன் சாந்துணையும் கல்லாதவாறு" என்று வினவுகின்ருர். கற்றலினுலும், கேட்டலினுலும் அறிவு நிரம்பப் பெறுதல் வேண்டும் என்பது அவர் கருத்து. அறிவு பெருகப்பெருக நன்றின்பால் உய்க்கும் உணர்வு பிறக்கும்.

"சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு"

இதையே Reason என்பர் ஆங்கிலேயர். மாந்தர்க்குக் கற்றனைத் தூறு ம்அறிவு என்பதை Knowledge என்பர்.

"அறிவு அற்றங் காக்கும் கருவி" என்பதனை Wisdom என்றும்

"அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்"

"அறிவினு னுகுவ துண்டோ பிறிதினேய்
தந்நோய்போற் போற்ருக் கடை"

என்ற இடத்து Ethical Consciousness என்றும்,

"பிறப்பென்னும் பேதைமை நீங்கிச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு"

என்னுமிடத்து God Consciousness என்றும் பொருள் கொள்ள லாகும்.

உயிர் உலகில் அறிவை பெருக்கிக் கொண்டிருக்குங்கால் தன் முன்பாக இருந்த பொருள்கள் அழிவதைப் பார்க்கின்றது. அப்பொழுது பெற்றுவரும் அனுபவத்தால் நிலைத்த பொருள் இது நிலையாத பொருள் இது எனப் பகுத்தறிய முற்படுகிறது. ஐம்பொறி களினல் அறிவு விளக்கம் பெறினும் அவ் வைம்பொறி வழியே நாம் செல்லுதல் தகாது என்ற நினைப் புணர்ந்து நன்றின்பால் உய்க்கும் அறிவைப் பெருகிறது. இவ் ஐவகை உணர்வும் தம் வயப்பட்டு மெய்ப் பொருளை உள்ளதை, செம்பொருளைக் காண முயல்கிறது. பிறவிக்கு வித்தாகிய அவாவினை அறுக்க அவாவினை உண்டு பண்ணும் பொருள்களிலிருந்து உயிர் நீங்க முற்படுகிறது.

எல்லாப் பொருட்கும் சார்பாய அச்செம் பொருளை உணர்ந்து, அவாவினை உண்டாக்கும் பொருள்களில் மனத்தைச் செலுத்தாமல் வாழ்கின்றவனுக்குத் துன்பங்கள் உண்டாகா.

"சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்" என்றார்.

இவ்வுலகப் பற்று விடுதற்கு மனத்தின்கண் மாசின்றிப் பற்றற்றான் பற்றினைப் பற்ற வேண்டும்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

உலகில் நன்றாக வாழவேண்டும். வாழ்வதற்கு இவ்வுலகம் அமைக் கப்பட்டது. அவ்வாறு வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவான் என்கிறார் வள்ளுவர். வள்ளுவர் இவ்வுலக வாழ்க்கையை வெறுத்து ஒதுக்கின்றவர் அல்லர். இவ்வுலகைப் பற்றுக்கோடாகக் கொண்டு அறிவு விளக்கம் பெற்று பேரறிவுடைய பெருமானின் திருத்தாட்களைச் சேருவதே இவ்வுலகப் படைப்பின் நோக்கம் என்பது வள்ளுவரது கருத்தாகும்.

தானல்லாத வுடம்பை யானென்றும் தன்னுடையை யில்லாத பொருளை எனதென்றுங் கருதி அவற்றின் கண் பற்றுச் செய்தற் கேதுவாகிய மயக்கத்தைக் கெடுப்பவன் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகுவான் என்கிறார்.

"யானென தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்"

இவ்வாறு புலன் கண்மேல் பழைய பயிற்சி வசத்தான் உலக உணர்வு தலைப்படுமன்றே அவ்வுணர்வும் பிறவிக்கு வித்தாகலின் அதனை இடைவிடாது மெய்ப் பொருளுணர்வால் அறுத்தால் ஒரு நிலைமையனும் இயல்பைக் கொடுக்கும் என்பார்.

"ஆரா வியற்கை வாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்"

என முடிந்த முடிபாகக் கூறுகின்றார்.

உலகில் காட்சிப் படுகின்ற ஏனை உயிர்களும் உண்டும், உறங்கியும் தன்னைக் காத்தும் இன வளர்ச்சி செய்தும் வருவதைக் கண்ட மனிதன் அவை இறப்பதையும் காணும் போது அவற்றிடம் அன்பு காட்ட வேண்டும் என்னும் உணர்வு பிறக்கின்றதே. அவ்வுணர்வும் அறிவினால் தோன்றுவதேயாம். பிற உயிர்களிடம் அன்பு செய்வதே இப்பிறவியின் தலையாய கருமம் என்பதை

"அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு"

இவ்வன்பின்வழி எல்லா உயிர்களிடத்திலும் அருளுணர்வு பெருகி வளர்ந்தால்தான் வீட்டுலகு பெற முடியும்.

"நல்லாற்றான் நாடி யருளாள்க பல்லாற்றாற்
தேரினும் அஃதே துணை" என்றும்

"அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளிலார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு"

என்றும் அருளுணர்வினால்தான் அறவாழி அந்தணனை அடைதல் ஒல்லும் என்பதும் அவர்தம் கருத்தாகும்.

குடம்பையினின்ற புள் அக்குடம்பையினையே பற்றுக்கோடாகக் கொண்டு முழுவளர்ச்சியுற்ற பின்னர் அதனை உடைத்துக்கொண்டு வெளியே பறந்து போதல் போல மனித உயிர் இவ்வுலகினையே பற்றுக் கோடாகக்கொண்டு ஐம்பொறிவாயில்களின் மூலம் அறிவு விளக்கம் பெற்று அவ்வறிவு விளக்கத்தினால் அறிவுடைய பொருள், அறிவற்ற பொருள், நிலையுடைய பொருள், நிலையற்ற பொருள் முதலியவற்றின் தன்மையை ஐயந்திரிபற உணர்ந்து மெய்யுணர்வுற்று மெய்ப்பொருளுடன் சேரவேண்டும் என்பதே திருவள்ளுவரது அறிவியலாகும்.

வாழ்வியல் :

உலக உயிர்களிடம் அன்பு காட்டுவதே இப்பிறவியின் தலையாய கடமை என்பதை முன்னர் பார்த்தோம். மனிதன் அவ்வாறு வாழும்பொழுது தன்னைச் சேர்ந்தவர்க்கு நல்வினைகளை ஆற்றுவதும், மற்றோர்க்கு நன்மை பயவாத வினைகளை ஆற்றுவதும் ஏதிலார்க்குத் தீவினைகளை ஆற்றுவதும் இயல்பாக முடியும். இவ்வாறு இன்றி எல்லார்க்கும் ஒப்பநாடி நன்மை பயக்கும் வினையே நினைத்தும், பேசியும், செய்தும் வரவேண்டுமென்றால் நன்மை பயக்கும் அறத்தின் தன்மையினை நன்கு தெரிந்து மனத்தில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும். இன்பம் பயக்கும் நினைப்புக்கள் அறமாகா, சொற்கள் அறமாகா, வினைகள் அறமாக, ஆனால் அறத்தொடு கூடிய நினைப்பு, சொல், செயல் இவையே இன்பம் பயக்கும்.

> "அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
> புறத்த புகழு மில"

என்றார். இனியவர்க்கு இன்பம் பயப்பதால் செய்யும்வினை அறமுமாகா. பின் அறம் என்பதை எவ்வாறு காண்டல் கூடும்.

செயலைச் செய்யும்பொழுது உண்மை தூய்மையாக, மாசு மறுவற்ற நிலையில் இருக்கவேண்டும். தான் செய்யும் செயலால் ஒருவன் ஆக்கம் அடைவானோ? என்னும் அழுக்காறு இல்லாமலும் நன்புலன்மேல் செல்லுகின்ற அவாவும் அது ஏதுவாகப் பிறர்பால் வரும் வெகுளியும் அதுபற்றி வரும் கடுஞ்சொல்லுமாகிய நான் கினையும் கடிந்து செல்வதே அறமாகும்.

> "மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
> ஆகுல நீர பிற"

> "அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
> இழுக்கா இயன்ற தறம்"

எனவும் குறிப்பிடுகின்றார்.

அறம் தன் மனத்தில் மட்டும் பொருந்திய தின்று (Subjective) செயற்பாட்டினால் பிறரும் கண்டு அறச்செயல் எனக் கூறுதற்குரியது (Objective). தன்மனத்திற்குப் பொருந்துவன வெல்லாம் அறம் எனக்கொள்ளாமல் பிறரும் கண்டு இது அறச்செயல்தான் என்று கூறும் திறனுடையதே அறமெனப்பெறும். இவ்வறம் மக்களுக்கு இன்றியமையாதது. திருவள்ளுவர் உலகத்தை வெறுத்து ஒதுக்கி காடுகளில் திரிந்தும், நாகமுழை புக்கிருந்து தாகமுதல் தவிர்த்தும் வாழும் வாழ்க்கையைப் பாரித்துரைத்திலர். இவ்வுலகம் இன்னாதது. ஆனாலும் இனிமையைக் காணவேண்டும். இனிமையைக்காண முயற்சி செய்யவேண்டும். இவற்றினைப் பிறர்க்கும் அறிவுறுத்த வேண்டுமென்றே. (Sweetness and light)

"இணரூழ்த்து நாறு மலரனையர் கற்றது
உணர விரைத்துரையா தார்" என்றுர்.

"இலக்க முடம்(பு) இடும்பைக்கென்று கலக்கத்தைக்
கையாறுக் கொள்ளாதா மேல்"

என்றபடி இன்பம் விழையாது வினை விழைந்து தன் கேளிர் துன்பத்தைத் துடைத்து ஊன்றுந் தூணுக மனிதன் இலங்க வேண்டும்.

இவ்வறம் பெருக இல்லறம் மிக இன்றியமையாததாகும் கரவான கூடா ஒழுக்கத்தைத் தடுப்பதற்கே திருமணம் செய்து கொள்ளவேண்டு மென்று கூறிய அறிஞர் பலருண்டு. திருவள்ளுவர் உயிர் வளர்ச்சிக்கு ஏற்ற ஒரு வழி திருமணம் எனக் கருதினுர். தன் வாழ்க்கை தன்னிட மில்லாப் பெண் மைப் பெரும் பண்புகள் நிறைந் திருக்கும் ஒரு பெண் கொடியினுல் நிரம்பப் பெறும் அவளன்றித் தானெரு பொருளில்லை. வாழ்க்கைச் செலவில் தனிமையைக் கடிந்து ஒருவருக் கொருவர் துணையாக இருந்து வாழ்வாங்கு வாழ வேண்டியவர்கள் என்பதைக் காட்ட வாழ்க்கைத் துணை எனக் குறிப்பிட்டார். மனைவி இல்லாத வாழ்க்கை எனைமாட்சித்தாயினும் இல்லை யென்றும் நற்குண நற்செய்கைகளை யுடைய மனைவியைப் பெற்றவன் இவ்வுலகில் அடையப் பெருத பேறுகளே இல்லை யெனவும், அவ்வாறு நன்மனைவி யில்லாதவர்கள் என்னுடையரேனும் ஒன்றுமிலரே யெனவும் குறிப்பிடுகின்றுர்.

கணவன் மனைவியிடத்தும், மனைவி கணவனிடத்தும் காட்டும் பரிவும், அதனுடன் உடல், உள்ளம், உயிர் கலந்த கேண்மையும் இரு சாராரிடமும் நல்ல காதற் பண்பினை உண்டாக்கி எல்லாவித அனுபவங்களிலும் மிகப் பயனுடையதாக இருக்கச் செய்வதே நல்ல திருமணத்தின் சாரம் என்கிருர் பெட்ரண்ட்ரசல் என்னும் பேரறிஞர்.

("The essence of a good marriage is respect for each other's personality combined with that deep intimacy, physical, mental, and spiritual which makes a serious love between man and woman the most fructifying of all human experiences")

Betrand Russel in Marriage and Morals.

பிளேட்டோ போன்ற பேரறிஞர்கள் பெண்கள் ஆண்களைவிடக் குறைந்த தகுதியுடையவர்கள் என்றும் ஆடவர்களுடைய மறைப் பொருட்களைக் கேட்கத் தகுதியற்றவர்கள் என்றும், ஆடவர்களே

ஆடவர்களுக்குத் துணைவர் ஆவர். பெண் டிரல்லர் என்றும் கூறுகின்றார். ஆனல் வள்ளுவரோ

"ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு"

"பெண்ணின் பெருந்தக்க யாவுள" என ஒருமை மகளிரைச் சிறப்பிக்கின்றார்.

இருவரும் அழுந்திய காதலுணர்ச்சியோடு கலந்து வாழும் வாழ்க்கை யிழந்தவர்கள் இல்வாழ்க்கையின் மிகச் சிறந்த பகுதியினை இழந்தவர்களே. காதலுணர்ச்சி தானக அரும்ப வேண்டும். அதற்கு நல்ல உரிமை உணர்வு வேண்டும். அது ஒரு கடமை யென நினைக்கும் பொழுது அவ்வுணர்ச்சி கொல்லப்படுகிறது.

(Love Can only flourish as long as it is free and spontaneous, it tends to be killed by the thought that it is a duty.)

திருமண வாழ்க்கை மணம் புரிவோருடன் நின்று விட்டால் அவர்களைப் பற்றிச் சமுதாயம் பேசிப் பயனில்லை. சமுதாயத்துடன் பிணைக்கின்ற ஒன்று மக்கட் பேருகும்.

"மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"

எனத் திருவள்ளுவர் கூறுகின்றார். உலகில் தோன்றிய, சமயத் தலைவர்களுள் கன்பூஷியஸ், முகமதுநபி நீங்கலாக ஏனைய தலைவர்கள் சமூக அரசியல் துறைகளில் பாரா முகமாயிருந்தனர். உயிரினை முழுமையடையச் செய்யத் (Perfection of the soul) தவம், ஒழுக்கம், தன்னல மறுப்பு (meditation, discipline and self denial) முதலிய வற்றைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றனர். திருவள்ளுவரும் சமயக்கணக்கர் மதிவழி செல்லாமல் உலகியல் கூறிப்பொருள் இதுவெனத் தெரிவித்தவர். சமூகத்தில் மனைவி கணவனுக்கு ஆற்ற வேண்டிய கடமை, தந்தை மகனுக்குச் செய்யவேண்டிய உதவி, மகன் தந்தைக்காற்றும் நன்றி, நிலைபேறுடைய அரசியலிக்கு மக்களாற்ற வேண்டிய கடமைகள், மக்கள் இன்பத்துடன் வாழ அரசியல் தலைவர் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள், உயிருக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு முதலியவற்றை அணிபெறச் சொல்லியிருக்கின்றார். இவர் போல அறத்தைப் பற்றியும், பொருளைப் பற்றியும் இன்பத்தைப் பற்றியும், விட்டைப் பற்றியும் கூறிய அறிஞர் வேறு ஒருவரும் இலர். ஆகவேதான் இவர் உலகவொளி எனக் கருதப்படுகின்றார். நிற்க.

மக்கள் மன இயல்புக் கேற்ருற் போல அரசியல் அமைப்பு அமைதல் வேண்டும். மக்களுக்கு அரசியலே ஒழிய அரசியலுக்கு மக்களல்லர். மக்கள் நோக்கங்கள் எண்ணங்கள் நிறைவேற அரசியல் மிகப் பெரிதும் உதவி புரிய வேண்டுமே யன்றி அரசியல் தலைவர் எனப்படுவோர் ஏவல் செய்யுமாறெல்லாம் (மக்கள் தங்கள் இயல்புக்கு மாருனவற்றை) மக்கள் நடக்கக் கடவரல்லர். உதாரணமாக பிளாட்டோ என்பார் அரசியலுக்கு ஏற்ப மக்கள் தங்கள் இயல்பினை மாற்றிக் கொள்ளவேண்டும். அரசாங்கம் வாழவேண்டும். அதுதான் என்றும் நிலைபெற்றிருப்பது, அது நலமாக இருப்பதற்கு ஏற்ற கல்விதான் மக்கள் கற்கவேண்டும் எப்போது அரசியற்கு அபாயம் நேரிடுகிறதோ அப்பொழுதெல்லாம் அந்நாட்டு இளைஞர்கள் நாட்டைக் காப்பாற்றப் பயன்படுத்தப்படுவர். பெற்ரோர்களிடமிருந்து பிள்ளைகள் பிறந்தவுடன் பிரித்து எடுத்துச் செல்லப்படுவர்; இவை போன்ற கட்டுத்திட்டம் இயல்பான மனிதவுணர்ச்சிகளைக் கொன்று விடுவதாக இருக்கிறது. வள்ளுவர் அரசியல் தன் தந்தை தன் மகனுக்கேற்ற கல்வியைக் கொடுக்கவும், தான் பாசத்தோடு வளர்க்கவும், தனக்குப் பிறகு தன்மகன் குடும்பத்திற்குத் தலைவனுகவும் உதவி செய்கிறது. அவ்வாறு குடும்பப் பாசம் இல்லையெனில் நாடுமுன்னேற முடியாது. தன்மகன் தனக்குரியவன். அவனுக்கு வேண்டியதை நாம் சேர்த்து வைக்க வேண்டும், என்ற உரிமை யுணர்வு கொள்ளமுடியும். அப்பொழுது தான் எல்லாவகைத் துன்பங்களையும் ஏற்கத்தயாரக இருப்பான்.

> "இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
> குற்ற மறைப்பான் உடம்பு"

என்றும்

> "குடிசெயவல் என்றும் ஒருவற்குத் தெய்வம்
> மடிதற்றுத் தான்முந் துறும்"

என்றும் வள்ளுவர் கூறுகின்ருர்.

இவ்வாறு திருவள்ளுவர் வாழ்வியல் அறத்தின் மீது அமைக்கப் பட்டதென்றும், அவ்வறமும் மனத்துக்கண் மாசில்லாமல் அழுக்காறு அவா வெகுளி இன்னச்சொல் நான்கும் இழுக்கா இயன்று செல்வதென்றும் அவ்வறம் பெருகுவதற்கு இல்லறம் சிறந்த அமைப்பென்றும் இவ்வில்லறமும் இரு சாராரின் உடல், உள்ளம், உயிர் முதலியவற்ருேடு கலந்து அமர வாழ்க்கையைக் காண உதவியாயிருக்க வேண்டுமென்றும், அவ்வில்லறத்தின் பயனுக விளங்கும் மக்கட் பேறே சமுதாயத்துடன் இணைக்கும் கருவியென்றும் நன் குடும்பம்

தன்மகன் என்ற உரிமை உணர்ச்சியை வளர்ப்பதே இயல்பான அரசியல்முறை என்றும் அவ்வாறிருந்தால் மக்கள் அருமையுடைத் தென்று அசாவாமல் பெருமையை முயற்சியினால் அடைவர் என்றும், மக்களின் இயல்பிற்கேற்ற அரசியல் அமைப்பே சிறந்ததெனவும் காணக்கிடக்கின்றது.

அகவையிலும், அநுபவத்திலும் சிந்தித்த சிலவற்றை உங்கள் முன்பாக வைத்துள்ளேன். அறிஞர்கள் ஆராயவேண்டுகிறேன்.

> தொன்மையாவாம் எனமெனவயு நன்ருகா இன்று
> தோன்றியநூல் எனுமெனவயும் தீதாக

என்னும் உமாபதி சிவத்தின் அருள்வாக்கை உங்களுக்கு ஞாபகப் படுத்திக்கொண்டு விடைபெறுகிறேன்.



"உலகெலாம் பரப்பி வாழ்வோம்"

(நெல்லை, ஆ. கணபதி)

வற்ருது நீரினை என்றுமே சுரந்திடும்
வளமிகும் அருவி யாகி
வையத்து மக்களை ''வா''வென்ற ழைத்துதன்
வாழ்வெலாம் நீரை நல்கும்

குற்ருலச் சாரலின் சிறப்பையும் வளத்தையும்
கூட்டமாய் வந்து வந்து
குளித்துக் களித்திடும் போதில் உணர்ந்தவர்
கூறவும் வார்த்தை யுண்டோ?

பெற்றோரின் பாசமும் பிள்ளைகள் நேசமும்
பிரியமாய்க் காத லிக்கும்
பெண்ணும் மனைவியின் உறவதும் பேசிடப்
பிறிதுமோர் வார்த்தை யுண்டோ?

சற்றேனும் இவைகளைப் பொருத்தமாய் விளக்கிடத்
தகுந்தவோர் வார்த்தை கண்டால்
தயங்காமல் யாவரும் திருக்குறட் சிறப்பினைத்
தகுதியைக் கூற இயலும்! (1)

☆ ☆ ☆

வையத்து மக்களின் வாழ்வையே உயர்த்திடும்
வழிமுறை நிறைந்த தாகி
வாழ்வாங்கு வாழ்ந்திட ஓரேழு சீரினில்
வாய்த்தநற் குறளு மாகி

ஐயத்தை நீக்கிட அமைந்தமுப் பாலதாய்
அகிலமே போற்று வண்ணம்
அமைந்திட்ட திருக்குறள் தோன்றி(இ) ரண்டாயிரம்
ஆண்டுகள் ஆன பின்பும்

வையத்து நாடெலாம் போட்டியால் பொருமையால்
வாடியே நலியு மென்றால்
வாழ்கின்ற தமிழகம் தமிழினம் யாவையும்
வள்ளுவப் பெருந்தகையால்

உய்யத்தான் குறளினைக் கண்டதை உலகெலாம்
உணர்த்துதல் கடமை என்ற
உறுதியை இரண்டாயி ரம்ஆண்டில் ஏற்றுநாம்
உலகெலாம் பரப்பி வாழ்வோம்! (2)

நலத்துறைப் பணியும் திருவள்ளுவரும்

T. V. சங்கரக்குமாரு
சுகாதாரக் கல்வியாளர் – நெல்லை நகராட்சி
செயலர் – தமிழ்நாடு பேரூராட்சி ஊழியர் சங்கம்

நாட்டுப் பணிகளிற் சிறந்தது நலத்துறைப் பணியே யாகும். நாம் நலனுற வாழ்ந்தால்தான், நல்ல பல பணிகளைச் செய்ய இயலும். வலி விழந்த மாணவனுல், படிப்பிற் கவனம் செலுத்த இயலாது. நோயினுல் பிடிக்கப்பட்ட தொழிலாளிக்கு வருமானம் குறைந்து, அதன் காரணமாக, அவனைச் சார்ந்துள்ள குடும்பத் தினர் அனைவருமே, அல்லலுறுதலைக் காண்கிறோம், எனவேதான், ஒருவரை யொருவர் சந்தித்தவுடன், முதற்கண் வணங்கி, நாம் கேட்கும் கேள்வி, ''ஐயா நலமா?'' என்பதாகும்.

நலன் என்ருல் என்ன? நோயில்லாத நிலையை மட்டுமே யல்லாது, மனிதனின் உடல் நிலை, மனோ நிலை, சமுதாய நிலை ஆகிய மூன்று இயல்புகளினுடைய ஒருங்கிணைந்து, பரிபூரண நிலையினையே நலன் என்ற சொல் உணர்த்தும் என்று, உலக சுகாதாரக்குழு இயம்புகின்றது. (Swasth Hlnd-World Health Assembly Souvenlr.)

நோயில்லாமல் இருத்தல் வேண்டும். உண்மைதான். நோய்கள் எவ்வகைப்படும்? 'உடலுள் ஏற்படும் நோய்' – 'புறத்தே யிருந்து உடலைத் தாக்குவன' - என்று நோய்கள் இருவகைப்படும். ''உடன் பிறந்தே கொல்லும் வியாதி'' என்னும் முதுமொழியினை, நாம் நன்கு அறிவோம். நோயினை நீக்கி, நலனுடன் வாழ, அல்லும் பகலும் மருந்தினைத் தேடி அலைகின்ருேம். எனினும் திருவள்ளுவர் கூறுகின்ருர் —

'மருந்தென வேண்டாம், யாக்கைக்கு' எப்போது?
''அருந்தியது, அற்றது, போற்றி உணின்.''

எனவே, உணவினை அன்ருடம் உட்கொண்டால் மட்டும் போதாது,

அஃது நன்கு செறித்தல் வேண்டும், அருந்தியது, செறித்த பின், நேரா நேரங்களில், சாப்பிடுதல் வேண்டும். அத்துடன், உணவினைப் "போற்றுதலும்" வேண்டும். போற்றுதல் என்பதன் மூலம், உணவின் தரமறித்து, நமது தேவையை உணர்ந்து. எந்த எந்த உணவுச் சத்து மிகுதியாக வேண்டுமோ, அவற்றை அறிந்து, உணர்ந்து, உண்ணுதல் வேண்டும், என்ற கருத்துக்கள், பெறப்படும். "பருப்பில்லாக் கல்யாணமா?"; "நெய்யில்லா உண்டிபாழ்" என்று முதுமொழிகளை அறிந்திருந்தும், நம் நாட்டு உணவில் புரதச் சத்தும், உயிர்ச்சத்தும், மிக மிகக் குறைந்துள்ளன. எனவே திருவள்ளுவர் கூறுவதற்கு ஒப்ப, புரதச்சத்து மிகுந்த உணவினையும், உயிர்ச்சத்துக்கள் நிறைந்த பசுங்கீரை, நெல்லிக் கனி, கைக்குத்தல் புழுங்கலரிசி போன்றவற்றைச் சாப்பிட்டு வருதல் வேண்டும்.

"மருந்தென வேண்டாவாம் யாக் கைக்கு
அருந்தியது தற்றதுபோற்றி உணின்"

திருவள்ளுவர் மற்ற ஒன்றையும் குறிப்பிடுகின்றார். "மாறுபாடில்லா உண்டி" என்று கூறுவதன் மூலம், பொருந்தா உணவினைத் தவிர்க்க வேண்டும் என்று கூறுகின்றார். பொருந்தா உணவின் மூலம், முரண்படு நோய் (Allergy) நிலையைப் பெறுதலும், அவ்வுணவினை நீக்கி நல்ல உடல் நலன் பெறுதலையும் நாம் நன்கு அறிவோம்.

"மாறுபாடில்லாத உண்டி மறுத் துண்ணின்
ஊறு பாடில்லை உயிர்க்கு"

எல்லாவற்றிற்கும் மேலாக, உணவு திறன் தருகின்ற போது, ஏற்படுகின்ற சூட்டினை ஆய்ந்து, அளவிட்டு, ஒவ்வொரு உணவுப் பொருளும், எவ்வளவு சூடு தருகின்றது என்று கணித்து, சூட்டின் அளவையினை:

காலரீஸ் (Calories) என்று 1936ம் ஆண்டினை யொட்டி, அகில உலகக்குழு 1. (League of Nations) அறிவித்துள்ளது. இதன்படி மனிதனுக்கு, சராசரி 2400 காலரீஸ் சூடு தரும் உணவு வேண்டுமென்றும், எளிய வேலை ஒரு மணி நேரத்திற்கு 75 காலரியும், மிகக் கடின வேலைக்கு மணிக்கு 300 காலரியும், தேவைப்படும், என்றும் கண்டுபிடித்துள்ளார்கள்.

இருபதாம் நூற்றாண்டில், அளவிட்டுக் கண்டுபிடிக்கப்பட்ட இவ்வுண்மையை, இராயிரம் ஆண்டுகட்கு முன்னரே, தமிழர்கள் நன்கு அறிந்திருந்தார்கள் என்பதை,

"தீஅளவு இன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோய் அளவின்றிப் படும்"

என்ற திருக்குறள் நமக்கு உணர்த்துகின்றது.

உடலின் உள்ளேயே ஏற்படும் நோயினை, நல உணவின் மூலமே, தவிர்த்து, நலன் பெறுதல் இயலும். எனினும் புறத்தே யிருந்து வந்து, நம் உடலுள் புகுந்து, விளைவிக்கும் நோய்களைத் தவிர்க்க, போதிய வழிகளைக் கையாண்டு, எதிர்ப்பாற்றலைப் (immunity) பெற்று, தொத்து நோய்களைத் தவிர்க்க வேண்டும். ஜென்னர், லூயி பாஸ்டர், இராபர்ட் காட்ச் போன்ற அறிவியலறிஞர் கண்டு பிடித்த சாதனைகள் மூலம், தக்க முன் நடபடிக்கை எடுத்து, தொத்து நோயே வராமற் தடுத்துள்ளோம்.

"வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்"

என்னும் அறிவுரைக்கேற்ப, மலேரியா அகற்றுதற் திட்டம், வைசூரி அகற்றுதற் திட்டம், கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குதல், பள்ளிப் பிள்ளைகளுக்கு மதிய உணவு அளித்தல், இயற்கைத் தேவைக்கேற்ற இன்ன பிற வசதிகள் செய்தல், முதலிய பல்வேறு நலத்துறைப் பணிகள் மூலம், அநேகமாக, எல்லாவிதமான தொத்து நோய் களையும் அகற்றி விட்டோம்.

நலத் துறைப் பணியினரின், மேற்போந்த நடவடிக்கைகளின் விளைவாக, இறப்பு விகிதம், ஆண்டொன்றிற்கு, ஆயிரம் மக்கட் தொகைக்கு — நாற்பது நாற்பத்தைத்து என்ற நிலை மாறி, இப்போது இருபது பதினைந்து என்ற விகிதத்திற்குக் குறைத் துள்ளது. ஆனல், பிறப்பு விகிதம் அதே நிலையிலும், நாற்பது, நாற்பத்திரண்டு என்ற விகிதத்தில், மக்கட் பெருக்கத்தின் அளவிற் கேற்ப, கூட்டு வட்டி விகிதத்தில் (Compound Intrest) கூடுதலாகிக் கொண்டே வருகிறது. இதே போன்று மனிதனின் சராசரி வாழ்வுக் காலமும், இருபத்தைத்து இருபத்தாறு என்ற நிலையிலிருந்து, ஐம்பத்திரண்டு ஆண்டுகளாக உயர்ந்துள்ளது. †

பெருகிவரும் இம்மக்கட் தொகையால், ஏற்படும் சிலவினம் காரணமாக, நம் நாடு பின் தங்கிய நிலையிலேயே உள்ளது. நம் இந்தியாவில் ஒன்றரை விநாடிகட்கு ஒரு குழந்தையும், நாள் ஒன்றிற்கு 55,000 குழந்தைகளும், ஆண்டு ஒன்றிற்கு ஏறத்தாழ ஆஸ்திரேலியாவின் மொத்த மக்கட் தொகைக்கேற்ப இரண்டு கோடி மக்கள் கூடுதலாகிக் கொண்டிருக்கின்றனர்கள். எனவே தற்போது

† By Hon. Dr. B. S. Moorthy in Rajya Saba. Hindu dt. 27-11-68.

நமக்கு வேண்டும் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன், கூடுதலாகக் கூடிவரும் மக்களுக்காக மட்டும், ஒரு லட்சம் பள்ளிக்கூடங்களும், மூன்று லட்சம் ஆசிரியர்களும், இருபத்து ஐந்து லட்சம், விடுகளும், இன்னபிற வசதிகளும், ஆண்டாண்டுதோறு தேவைப்படும் என்று கணித்துள்ளார்கள். எனவேதான், நலத்துறைப் பணியினர், '' ஓர் இரு குழந்தைகளே போதும், போக்குவரத்து, தனியமைப்பு, மருத்துவம் இன்ன பிறதுறைகளில் அறிவியலறிஞர் கண்டுபிடித்த சாதனங்களைப் பயன்படுத்தி, பயன்பெற்றுள்ளதைப் போல, இத்றதுறையிலும் டாக்டர்.லிப்பி கண்டுபிடித்துள்ள லூப்;இன்னபிற முறைகளைக் கையாளுதல் வேண்டும். இக்கருத்து, மக்களால் முழு மனதுடன் ஏற்கப்பட்டு, பிறப்பு விகிதம் 2½ சதவிகிதமாக குறைக்கப் படுதல் வேண்டும். என்று வலியுறுத்தி வருகின்றனர். மேலும்,

'' ஆகாறு அளவிட்டித் தாயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை ''

என்று திருவள்ளுவர் கூறுவதைப் போல, வரவு குறைவு, எனினும், கூடுதல் மக்களைப் பெற்று சிலவினத்தைக் கூடுதலாக்காதிருக்க வேண்டும், வரவிற் கேற்ற, அதற்குட்பட்ட சிறிய குடும்பங் களிலேயே, 'கேடில்லாத' மகிழ்வு நிலையைக் குடும்பங்களிலும், சமுதாயத்திலும் காணுதல் இயலும்.

எனவே, இப்பெரிய பிரச்சினையைத் தீர்க்க, பெருகி வரும் மக்கள் வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தி, ஆக்க வழிகளில் நம் முன்னேற்றத்தைப் பெற, நாம் செய்ய வேண்டியது என்ன?

'' நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் ''

என்பார் வள்ளுவர்.

நோய் என்ன? அடுத்தடுத்து பிள்ளைகளைப் பெற்ற அன்னை, வலி விழந்து, தனக்கும், கணவருக்கும், குடும்பத்திற்கும், முழுப் பணிவிடை செய்து மகிழ்விக்கும் நிலையினை இழக்கின்றார்,

'' தற்காத்துத்தற் கொண்டாற் பேணி தகை சான்ற சொற் காத்து, சோர் வில்லாது '' இருத்தல் வேண்டும் என்றுதான் பெண் விழைகின்றாள். தற்கொண்டான் பேணி, தற்காத்து, அடிக்கடித் தாய்மையுறும் நிலையினின்றும், அதனல் ஏற்படும் அவதிகளின்றும் விடுதலை பெறவே விரும்புகின்றாள். பிள்ளைகளிடமும், ஏன்? கணவனிடமுமே, கடுஞ்சொல் கூறுது, சொற்காத்து வரவேண்டும் என்றுதான் எண்ணுகின்றாள். ஆனல், இயலவில்லை. காரணம்

என்ன ? வேண்டுமென்றே, விரும்பிப் பெற்றனர் அல்லர் இக் குழந்தைகளின் பெற்றேர். ஏதோ மகிழ்வுற்றேம். மகிழ்வுற்ற மயக்க நிலையிற் பிறந்தன இச்செய்கள் என்று மனதினைத் தேற்றிக் கொள்கின்றனர். ஆண்டவன் கேட்டிருந்தால், மிருகண்ட முனிவரைப் போன்று, நல்ல ஒரு மார்க்கண்டேயரை மட்டும், நாமும் பெற்றிருக்கலாமே, என்று நமக்கு நாமே ஆறுதல் கூறிக்கொள் கிறேம்.

மேற் போந்தவற்றைக் கருத்திற்கொண்டுதான், திருவள்ளு வரும், ஆணித்தரமாக வலியுறுத்திக் கூறுகின்றார்.

"அறிவறிந்த மக்களைப் பெற்றிடு" என்று, 'அறிவுடைய மக்களைப் பெறுவாயாக' என்று கூறுவார் அத்துடன், "அறிவோடு, அறிந்து, ஆழ்ந்து சிந்தித்து, அறிவைப் பயன்படுத்தி அறிவு அறிவு நிலையில், - வெறும் உணர்ச்சியில் மூழ்கி, அறிவு மறைந்த மயக்க நிலையில் அல்ல - மக்கட் பேற்றைப்பெறு" - குழந்தைகளைப் பெற்றெடு - என்று ஆணையிடுகிறார்.

"பெறுமதற்றுள் யாமறிவதில்லை
அறிவறிந்த மக்கட்பேறல்ல பிற"

இவ்வாறு திருவள்ளுவர் கூறுவதற் கொப்ப, "சிந்தித்து செயல்படச் சொல்வதே - நலத்துறைப் பணியின் - சிறப்பாக குடும்ப நலத் துறைப்பணியின் குறிக்கோளாகும். தற்போதுள்ள நான்கு சத விகிதப் பிறப்பு வேகத்தை, இரண்டரை சதவிகிதமாகக், கூடிய விரைவினிற்கொண்டு வந்தால்தான், வீடும், நாடும் நலன்பெறும். முயற்சி திருவினையாக்கும்.

நலத்துறைப் பணியின் செய்முறைகள், கால, தேச, வர்த்த மானத்தால் வேறுபட்டு முன்னேறி வருதலைக் காண்கிறேம். எனினும், அவற்றின் அடிப்படைக் கருத்துக்களை, ஆராய்ச்சிகளின் மூலம், அறிவியலறிஞர் கண்டுபிடித்தற்கு முன்னரே, திருவள்ளுவர் எடுத்தியம்பியுள்ளார் என்பதை இவ் இராயிரம் ஆண்டு விழாவினில் நினைவிற் கொள்வோமாக. வள்ளுவம் என்னும் கடலில் மூழ்கி, இன்னும் பல வேறு முத்துக் குவியல்களைக் கண்டெடுத்துப் பயனனடைவோமாக.

வெல்க வள்ளுவம், வாழ்க தமிழகம்.

திருக்குறள் மனனச் சூத்திர அம்மானை

மு. கணபதியா பிள்ளை, R I. M. P., குற்றலம்.

இதனுள்

திருக்குறள் மனனத்திற்கு அனுகுணமாக திருக்குறளின் தலைப்பு எழுத்துக்களைக் கொண்டு ஒவ்வொரு அதிகாரமும் ஒவ்வொரு கண்ணியாக அமைக்கப்பெற்றது.

வணக்கப்பகுதி

— வெண்பா —

ஈசனரி வேத னிமய மகள் பொன்வானி
மாசுனகர் வேள்கணேசர் வள்ளுவர்—வாசுரி
நாயன்மா ராழ்வார் நபிபுத்த ரேசகத்யர்
தூயன்பர் பாதம் துணை.

குருவணக்கம்

எல்லையிலாச் சோதி யெனதிதயத் தீந்தருளும்
வல்லவராந் தென்பனையூர் மாதவர்கள் நல்லடியை
உந்தியிலும் நெஞ்சினிலு முச்சியிலும் வைத்தேற்றிப்
புந்தியுறப் போற்றுவ னிப் போது.

————

திருக்குறள் முப்பாலின் 133 அதிகார

— வெண்பா —

பாயிரம்நான் கில்லறமீர் பான்துறவு பன்மூன்றேழ்
ஆயமுப்பா னெட்டறப்பா லாகுமே — தோய்பொருட்பால்
ஏழுநா ளுமின்பப் பாலிருபத் தைந்தாய்க் கொண்
டாளுங் குறளாதிகா ரம்.

————

அறத்துப்பால் 38ன் அதிகார வரிசைத் தலைப்பு

— எண்சீர் விருத்தம் —

கடவுள்வான் சிறப்பு நீத்தார் அறன்வலி
இல்வாழ் வில்வாழ்
வுடைத்துணை புதல்வரன்பு விருந்தின்சொல்
லுரைத்தல் நன்றி
நடுநிலை யடக்கொழுக்கம் பிறனில்நா
டாப் பொறைமை
அடவழுக் காறு வெஃகல் புறங்கூரு
பயனிலாச் சொல்
கடுவினையொப் புறவாய் விகை
புகழருள் புலானிக்கம் நோற்
புடைகூடாவொழுக்கம் கள்ளல்
வாய்மைகாய் வின்னு செய்யா

துடிகொலை நிலையிலாமை துறவு மெய்
யுணர் வவா வூழ்
இடுமதிகார முப்பானெண் குறள்
அறத்துப் பாலே.

திருக்குறள் பொருட்பால் 70 அதிகார வரிசைத் தலைப்பு

(பன்னீரடி ஆசிரிய விருத்தம்)

இறைமாட்சி கல்விகல் லாமைகேள்வியினறிவு
குற்றமே கடிதல் பெரியோர்
இனியதுணை சிற்றினம் சேரா தெரிந்து செயல்
ஏற்றவலி கால மிடனே
தெரிந்துதெளி வினையாடல் சுற்றந் தழால் பொச்சா
செங்கடுங் கோன் வெருவலே
செய்யாமை கண்ணோட்டமொற்றுட லூக்கமடி
தீர்வதாள் வினை இடுக்கண்
விரியா வமைச்சுசொல் வன்மைவினையின் தூய்மை
வினைத்திட்பம் வினைசெயல்வகை
வினை தூது மன்சேர்தல் குறிப்பவையு மறிதலவை
அஞ்சாமை நாடரண்பொன்
பரவல்படை மாட்சிச் செருக்குநட்பதுவாய்தல்
பழமைதீ நட்பு கூடாப்
பட்சமொடு பேதமை புல் லறிவாண்மையிகல்பகை
மாட்சிபகையின் திறமை தேர்
வரியவுட் பகை பெரியோர்ப் பிழையாமை பெண்வழிசே
ரதுவரைவின் மகளிர்கள்கு
தகைதங் குடிமைமானம் பெருமை சான்ருண்மை
ஆம்பண்பு நன்றியிற் சீர்
எரியும் நாணுடைமை குடி செயலுழவுநல்குறவு
இரவிரவி னஞ்சல் கயமை
எழுபததி காரத் தியம்பிப் பொருட்பாலை
யீந்தவள் ளுவர் வாழ்கவே

திருக்குறள் இன்பப்பால் 25 அதிகார வரிசைத் தலைப்பு

எழுசீர்க்கழி நெடிலடிவிருத்தம்

நலதகையணங்கு குறிப்பறி புணர்ச்சி
நலம்புனை காதல்நாண் துறவு
அலர் பிரிவாற்ற படர்மெலி விடர்க்கண்
பசப்புதல் தனிப்படர் புலம்பல்
நலிகன பொழுது உறுப்பழிதனெஞ்ச
நவில்நிறை விதும்புதல் குறிப்பு
ஒலிபுணர் புலத்தல் புலவியந்துனுக்கம்
ஊடலிர் பானைத்தின்பதுவே.
முப்பாலின் அதிகார தலைப்பு 333 முற்றிற்று

திருக்குறள் மனனச் சூத்திர அம்மானை

ஒவ்வொரு இரண்டாவது அடியின் தலைப்பு மட்டும் மோனை கருதி வேறுயிருக்கும். பிற எல்லாம் குறளின் பத்து அதிகாரத்தின் தலைப்பு எழுத்துக்களாம்

அறத்துப்பால் 38 அதிகாரத்தின் தலைப்புக் கண்ணிகள்

கடவுள் வாழ்த்து

1) அகரமுதல் கற்ற மலர்வேண் டிருள்பொறிவாய்
குகதனக் கறவாழி கோளில்பிறப் பம்மானே

வான்சிறப்பு

2) வானின்று துப்பார்விண் ணோரின் கெடுப்பவிசும்
பானெடுஞ் சிறப் பொடுதானம் நீரின் றம்மானே

நீத்தார் பெருமை

3) ஒழுக்கத்துறந் தாரிருமை உரனைந்த செயற்கரிய
அழுக்குசுவை நிறைகுணமென் னந்தணரா மம்மானே

அறன்வலியுறுத்தல்

4) சிறப்பீ னறத்தி னெல்லு மனத் தழுக்கா றன்றறிவாம்
அறத்தாறு வீழறத்தான் செயற்பால வம்மானே

இல்வாழ்க்கை

5) இல்துறந்தார் தென்பழியஞ் சன்பறத் தாற்றினியல்
வல்லாற் றறனெனவே வையத்து ளம்மானே

வாழ்க்கைத் துணைநலம்

6) மனைமனை மாட்சியில்ல பெண்தெய்வம் தற்காத்துப்
புனைசிறை பெற்றான் புகழ்மங்க லம்மானே

புதல்வரைப் பெறுதல்

7) பெறுமெழு தம்பொருள் அமிழ்தினு மக்கள்குழல்
மறுதந்தை தம்மினீன்ற மகன்தந்தை யம்மானே

அன்புடைமை

8) அன்பிற்கு மன்பிலனருபா டன்பீனு மன்பறத்தின்
என்பிலன்ப கப்புறத்து அன்பின்வழி யம்மானே

விருந்தோம்பல்

9) இருந்தோம் விருந்துவரு அகனமார்வித் தும்செல்வி
உரிந்தினை பரிந்தோ முடமைமோப்ப மம்மானே

இனியவைகூறல்

10) இன்சொ லகனமுகத் துன்புபனரி யல்லநயன்
என்சிறுமை யின்சொ லினியவுள வம்மானே

செய்நன்றி அறிதல்

11) செய்யாமற் காலபயன் தினைத்துதவி மறவற்க
எய்யெழுமை நன்றிகொன்ற என்நன்றி யம்மானே

நடுவு நிலைமை

12) தகுதிசெப்பம் நன்றே தக்கார்கே டுங்கெடுவல்
சுகிகெடு வாகசமன் சொல்வாணிக மம்மானே

அடக்கமுடைமை

13) அடக்கர் ாக் கச்செறி நிலையிலெல்லார்க் கும்ஒருமை
கடையாகா ஒன்னுன்தீ கதங்காத்து அம்மானே

ஒழுக்கமுடைமை

14) ஒழுக்கம் பரிந்தொழுக்க மறப்பினமுக் காஞெழுக்கம்
ஒழுக்க நன்றிக்கொழுக்க முலகத்தோ டம்மானே

பிறனில்விழையாமை

15) பிறனறன் விளிந்தாரி னெனைத்தெளி தெனப்பகையே
அறனி பிறனலக்கு அறன்வரையா னம்மானே

பொறையுடைமை

16) அகழ்வார் பொறுத்தவின்மை நிறையொறுத்தாரை ஒருத்தல்
துகழ்திற னல்லமிகு துறந்தாருண் ணம்மானே

அழுக்காறுமை

17) ஒழுக்கா விழுப்பேயறன் அழுக்காற் றழுக்கேகொடு
அழுக்கா வவ்வித்தழுக்கா அவ்வியமுக் கம்மானே

வெஃகாமை

18) நடுபடுசிற் றின்பமில மஃகி யருள்வேண்டல்
எடுபடு மஃகாமை அறனிறலி யம்மானே

புறங்கூறுமை

19) அறங்கூ றறனபுறங் கன்னனின் றறந்சொல்பிறன்
எறிபகத் துன்னியற னேதிலா ரம்மானே

பயனிலசொல்லாமை

20) பல்லார் பயனில்நயன் நயன்சாராச் சிர்பயனில்
பொல்லா நயனியரும் பொருள்சொல்லு வம்மானே

தீவினையச்சம்

21) தீவினை தீயவறி மறந்துமிவன் திப்பாவ
ஆவயெனைத் தீயதன்னை யருங்கேட னம்மானே

ஒப்புரவறிதல்

22) கைமாறு தாளாற்றிப் புத்தேருளாத் தூருணி
நைபயன் மருந்திட்னில் நயனுடையொப் பம்மானே

ஈகை

23) வறியார்நல் லாறிவனி னுற்றுவராற் ருர்பாத்தூண்
தறியித் துவக்கிரத்தில் சாதலினை யம்மானே

புகழ்

24) ஈதலுரைப் பாரொன்ரு நிலவரைநத் தந்தோன்றின்
மதபுகழ் வசைவசையில் வசையொழியவம்மானே

அருளுடைமை

25) அருட்செல்வ நல்லாற் றருள்மன் னுயிரல்லல்
பொருளருளில் பொருளற்ருர் தெருள்வலியா ரம்மானே

புலால் மருத்தல்

26) தன்னூன் பொருளா படையருள லுண்ணுதினல்
உண்ணுசெயிரினவி சொரிகொல்லா னம்மானே

தவம்

27) உற்றதவ மூந்துறந்தா ரொன்னுர் வேண்டியதவஞ்செய்
எற்றுசுடத் தன்னுயிர்கூற் றிவர்பலராமம்மானே

கூடாஒழுக்கம்

28) வஞ்சவா னுயர்வலியில் தவமறைந்து பற்றற்றேம்
நெஞ்சில்புறங் குன்றிமனக் கணைமழித்த லம்மானே

கள்ளாமை

29) எள்ளாமை யுள்ள யிருகளவி னருளளவின்
அள்ளுகள வென்னள வளவல்கள்வா ரம்மானே

வாய்மை

30) வாய்மை பொய்மை தன்னெஞ்சு உள்ளமன மிர்பொய்யா
ஆய்புறந் தூய்மை எல்லா யாமெய்யா மம்மானே

வெகுளாமை

31) செல்லிடத்துச் செல்லா மறத்தல்நகை தன்னைச்சினம்
இல்சினத்தை யிணாருள்ளி யிறந்தாரா மம்மானே

இன்னாசெய்யாமை

32) சிறப்பின் கறுத்துசெய்யா இன்னா வறிவினின்னா
பிறப்பெனைத்தான் தன்னுயிர்க்குப் பிறர்க்குகோ யம்மானே

கொல்லாமை

33) அறவினைப குத்தொன்று நல்லாறு நிலைகொல்லா
குறிதன்னுயிர் நன்றாகும் கொலையுயிரென்னம்மானே

நிலையாமை

34) நில்லாத கூத்தாட்டு அற்கா நாள் நாநெருதல்
ஏல்லொருகு டம்பை யுறங்குபுக்கி லம்மானே

துறவு

35) யாதனின் வேண்டினட லியல்பாமற் றும்யானே
பாதமே பற்றிதலைப் பற்றபற்று வம்மானே

மெய்யுணர்தல்

36) பொருள லிருளையத்தின் ஐயுணர்வெப் பொருள்கற்றீண
டிருளோர் பிறப்பென்சார் புணர்காம மம்மானே

அவாவறுத்தல்

37) அவாவேண்டும் வேண்டாமை தூய்மையற்றஞ்சுவ
அவாவினைய வாயில்லார்க் கின்பமாரா வம்மானே

ஊழ்

38) ஆகூழாற் பேதைநுண்ணி இருவேநல் லவைபரியின்
நாகுவகுந் தான்துறப்பார் நன்னூழி லம்மானே

அறத்துப்பால் அதிகாரம் 38 அம்மானே

முற்றிற்று

திருக்குறள் பொருட்பால் 70 அதிகாரத்தின் தலைப்புக் கண்ணிகள்.

இறைமாட்சி

1) படையஞ் சாதூங்கா அறனியற்றலுங் காட்சி
குடையின்சொல் முறைசெவிகை கொடையளியா மம்மானே

கல்வி

2) கற்களண் கண்ணுவப்ப உடைதொட்ட யாதானும்
நிற்கவொரு மைக்கண்தா மின்கேடி லம்மானே

கல்லாமை

3) அரங்கின்றிக் கல்லாதான் கல்லாகல் லாதான்கல்
உரங்குளநுண் ணல்லார்மேற் பிறந்தவிலங் கம்மானே

கேள்வி

4) செல்வச் செவிக்குசெவி கற்றிழுக்க லெனைத்தானும்
செல்பிழைத்துக் கேட்பினுமே நுணங்குசெவி யம்யானே

அறிவுடைமை

5) அறிவற்றஞ் சென்றெப் பொருளெண் ணுலக மெல்வ
அறிவுடையா ரஞ்செதிர தாமறிவு அம்மானே

குற்றம் கடிதல்

6) செருக்கிவற லுந்தினைந்து குற்றம்வரு தன்குற்றம்
வெருக்கைசெயற் பற்றுள் வியகாத லம்மானே

பெரியாரைத் துணைகோடல்

7) அறனறிந் துற்ற அரியநல்மிற் சூழ்தக்கார்
முறையிடிக்கி டிப்பாரே முதலிபல்லா ரம்மானே

சிற்றினம் சேராமை

8) சிற்றின நிலமனத்தான் மனத்துமனம் தூய்மைமனம்
துற்று மனநலமூன் றேநலின மம்மானே

தெரிந்து செயல்வகை

9) அழிவ தெரிந்தாக்கம் தெளிவகைசெய் யெண்ணரி
எழுவாற்றி னன்ருற்ற லெள்ளாத வம்மானே

வலியறிதல்

10) வினைவலி ஒல்வ உடைத்தமை பீலிநுனி
அனையாற்றி னுகா றளவவுள வம்மானே

காலம் அறிதல்

11) பகல்பருவத் தருவினைஞா லங்கால மூக்கம்பொள்
அகசெறுந ரெய்தற் கரியகொக்கு வம்மானே

இடனறிதல்

12) தொடங்கமுர ணுற்ருரெண் நெடுங்கடலோ வஞ்சாமை
நிடங்கொள் சிறுபடையான் சிறைகாலா மும்மானே

தெரிந்து தெளிதல்

13) அறங்குடி யரியகுணம் பெருமையற்ருர் காதல்
திறந்தேரான் தேறற்க தேராறு மம்மானே

தெரிந்து வினையாடல்

14) நன்மையும் வாரியன்ப னனையறிந்தாற் செம்வானை
நண்ணரிநனை வினைக்குவினை நாடோறு மம்மானே

சுற்றம் தழால்

15) பற்றவிருப் பளவசுற்றம் கொடுத்த பெருங்காக்கை
உற்றபொதுத் தமராகி உழைப்பிரிந்த தம்மானே

பொச்சாவாமை

16) இறந்தபொச்சா பொச்சாப்பார்க் கச்சமுன் னிழுக்காமை
உறிந்தரிய புகழ்ந்தயிகழ் உள்ளியதா மம்மானெ

செங்கோன்மை

17) ஓர்ந்துவா றேக்கியந்த ணர்குடித ழியியல்வேல்
கூர்ந்திறை எண்பதத்தான் குடிகொலையி லம்மானே

கொடுங்கோன்மை

18) கொலைவேல்நா டோறுங்கூ ழல்லற்பட் டாமன்னர்
அலைதுளியி னின்மைமுறை யாபயனு மம்மானே

வெருவந்த செய்யாமை

19) தக்காங் கடிதோ வெருவிறைய ருங்கடுஞ்சொல்
சிக்கா மொழியினத்தா செருக்கல்லா ரம்மானே

கண்ணேட்டம்

20) கண்ணேட்ட மிர்பண் ணுளபோற்கண் ணிற்குமண்ணேர்
கண்ணே கரும மொறுயெயக்கண் டம்மானே

ஒற்ருடல்

21) ஒற்றெல்லார்க் கொற்றி வினைகடா துறந்து மறந்
தொற்ருெற்றி யொற்ருெற் றுணர்சிறப்பா மம்மானே

ஊக்கம் உடைமை

22) உடையவுள்ள மிரசக்கம் வெள்ளத்துள்ளுவசிதவி
உடையுள்ள மேபரிய துரமொருவற் கம்மானே

மடியின்மை

23) குடியிர் மடிகுடியு நெடுதீர் படியிடியும்
மடிமைகுடி யாண்மை மடியிலா வம்மானே

ஆள்வினையுடைமை

24) அருமைவினை யிர்தாளா ணின்ப முயற்சி
செருமடி பொறியின்மை தெய்வமுழையம்மானே

இடுக்கண் அழியாமை

25) இடுக்கண்வெள் ளத்திடும்பை மடுத்த வடக்கியற்றே
இடுக்கிலக்க மிரிப மின்றமை யம்மானே

அமைச்சு

26) கருவியும்வன் கண்பிரித்தல் தெரிதலற மதிசெயற்கை
அறிகொன்று பழுதெண்ணு முறையமைச்சு வம்மானே

சொல்வன்மை

27) நா நலமாகக் மங்கேட்டார் திலன்சொல்லு வேட்பசொலல்
பாண விரைந்துபல சொல்லிணரூழ்த் தம்மானே

வினைத்தூய்மை

28) துணையென்றும் ஓத லிடுக்கணெற்றென் றின்ருள்
குணரிபழி கடிந்தவழக் கொண்டசலத் தம்மானே

வினைத்திட்பம்

29) வினையூ ஞெராஸ் கடைசொல் விறெய்தி யெண்ணரியுரு
இனிக்கலங் காதுதுன்ப மெனைத்திட்ப மம்மானே

வினைசெயல்வகை

30) சூழ்ச்சிதூங் குகவொல்லும் வினையும் பொருள் முடிவும்
ஊழ்ச்செய் வினை நாட்டார்க் குறைசிறியாரம்மானே

தூது

31) அன்புடைமை யன்பறியு நூலா ரறிதொகக்கற்
றின்கடன் தூய்மை விடுமிறுதி யம்மானே

மன்னரைச் சேர்ந்தொழுகல்

32) அகலாது மன்போற்றின் செவியெப் பொருள்குரிப்ப
குகவேட் பனவினையர் கொளப்பழைய மம்மானே

குறிப்பறிதல்

33) கூருமை ஐயங்குறிப்பிற் குறித்தகுறிப்
பாரு வடுத்தீர் முகம்பகைநுண் ணம்மானே

அவையறிதல்

34) அவையிடை யவையொளியார் நன்ருற்றின் கற்றறிந்தார்
எவையுணர்வ புல்லவையாமங்கணத்து எம்மானே

அவையஞ்சாமை

35) வகையறிந்து கற்ருருட் பகைகற்ரு ருற்றின்வாள்
பகைபல் லவைகல்லா வுளரெனினு மம்மானே

நாடு

36) தள்ளாபெரும் பொறையே உறுபசிபல் கேடறியா
அள்ளிருபு ணல்பிணிநா டாங்கமையு மம்மானே

அரண்

37) ஆற்றுமணிநீ குயர்சிறுகொ ளற்கெல்லாம்
ஏற்றுமுற்றி முற்ரு முனையெனோமா வம்மானே

பொருள் செயல்வகை

38) பொருளல்ல யில்லாரைப் பொருளெனற னருளொடுனு
அருளென்குன் றேறிசெய்க ஒண்பொருளு மம்மானே

படைமாட்சி

39) உறுப்பு வுலைவொலித்த அழிவின்று கூற்றுமறம்
நிறுதா ரடற்சிறுமை நிலைமக்க ளம்மானே

படைச்செருக்கு

40) என்காணை பேராண்மை கைவேல் விழித்தவிழுப்
புண்சுழ லுறினிழைத்த புரந்தார்கண் ணம்மானே

நட்பு

41) செயற்கரிய நிறைநிர நவில்நகுதல் புணர்ச்சிமுகம்
இயலழிவி லுடுக்கைநட்பிற் கிளையரா மம்மானே

நட்பாராய்தல்

42) நாடாதாய்ந் தாய்குணனும் குடிபிறந்த முக்கேட்டி
கேடாவூ தியமுளற்க கெடுமறிவு அம்மானே

பழைமை

43) பழைமைநட் பிற்பழகி விழையே தமையெல்லை
அழிவந்த கேளிழுக்கம் கெடாவிழையா ரம்மானே

தீநட்பு

44) பருகுவா ருறினுறுவ அமரகஞ்செய் தேபேதை
இரிநகையொல் லுங்கனவி வெனைத்துமா வம்மானே

கூடாநட்பு

45) சிரிடமி னம்பலநல் முகமனத்தி னட்டார்சொல்
பாரிற் றெழுமிகச்செய் பகைநட்பா மம்மானே

பேதைமை

46) இருபே தமைநாறு ஓதியொரு மைப்பொய்
பிரியேதி வார்மையல் பெரிதிகழா வம்மானே

புல்லறிவாண்மை

47) மூவறிவி லார்வெண்மை கல்லாத அற்றமரும்
ஏவவும்காறுதா னுலகத்தா நம்மானே

இகல்

48) இகலென்ப பகல்கருதி இகலிம்பத் திரிகலும்
மிகலிகற்கி கல்காறு னிகலாறு மம்மானே

பகைமாட்சி

49) வலியார்க்கன் பிலனஞ்சு நிங்கான் வழிகாணுச்
சிலைகொடுந் துங்குணனில் செறுவார்கல் லம்மானே

பகைத்திறம் தெரிதல்

50) பகைவில்லே ரேமுற் பகைதன் துணைதேறின்
இகமேநோ வற்கவகை யினிதாயுயிர்ப் பம்மானே

உட்பகை

51) நிழல்வாளுட் பகைமனமா னுறலொன்று செப்பின்
உழலர மெட்பகவு டம்பாடு வம்மானே

பெரியோரைப் பிழையாமை

52) ஆற்றுபெரி யார்கெடல்கூற் றுண்டெரிவ கைமாண்ட
ஏற்றகுன்றன் னுரேந்தி யிறந்தமைந்த வம்மானே

பெண் வழிச்சேறல்

53) மனைபேணு தில்லாள் மனையாளை யில்வாளை
நினையிமை பெண் நட்டா ரறவினையெண் ணம்மானே

வரைவின் மகளிர்

54) அன்பின் பயன்றூக்கி யிர்பொருட் பொதுதநலம்
இன்னிறையா யும்வரைவி விருமனரா மம்மானே

கள்ளுண்ணாமை

55) உட்கப் படாவுணர்க வின்றுள் நாண் கையறிதுஞ்
சுட்குளொற்றி யிர்களித்தான் கள்ளுண்ணு னம்மானே

சூது

56) வேண்டற்க வொன்றையுருள் சிறுமை கவரகடார்
ஈண்டு பழகுபொரு ளுடையிழத் தோறம்மானே

மருந்து

57) மிகுனு மருந்தற்றால் அற்றமானு பாடிழிவ
உருதீநோய் நாடியுற்று னுற்றவனு மம்மானே

குடிமை

58) இற்பிறந் தாரொழுக்கு நகையடுக்கி வழங்குசலம்
நற்குடி நலநிலத்தில் நலம்வேண்டி னம்மானே

மானம்

59) இன்றியமை சீர்பெருக்கத் தலைகுன்றின் புகழொட்டார்
இன்றுமருந் தோமயிர்நீப் பிளிவரி னம்மானே

பெருமை

60) ஒளிபிறப்பு மேலிருந்து மொருமைபெருமை சிறியார்
பிளியிறப் பேப்பணியும் பெருமையற்ற மம்மானே

சான்றாண்மை

61) கடன்குண மன்புகொல்லா ஆற்றுவார் சால்பின்று
நடவின்மை யூழிகபயர் சான்றவ ரம்மானே

பண்புடைமை

62) எண்பத மண்புடைமை உறுநயன் நகைபண்பு
பண்ணர நண்புநகல் பண்பிலா னம்மானே

நன்றியல் செல்வம்

63) வைத்தான் பொருளிட்ட மெச்சங் கொடுவேதம்
தெத்தற்ருர் நச்சன்பு சிருடையா நம்மானே

நாணுடைமை

64) கருமத்நா லூணூர் னளிபிறர்நா ணுறல்
குறிபிறர் நாணக் குலஞ்சுடுநா ணம்மானே

குடிசெயல்வகை

65) கருமமாள் குடிசூழாக் குற்றநல் லாண்மை
இருமமர குடியிடும்பைக் கிடுக்கண்கா லம்மானே

உழவு

66) சுழன்றுமு வாருழுதுண் பலயிரவா ருழவினர்
இலைதொடி யேரினுஞ்செவ் வானிலமென் றம்மானே

நல்குரவு

67) ஈரின்மை தொல்வரவின் நல்குரவு நற்பொருள்
நீரிஞ்சா ரின்று நெருப்பினுந்துப் பம்மானே

இரவு

68) இரக்கவின் பங்கரப்பி யிரத்தலு மிர்கரப்பு
இரக்கவிக ழிரப்பாரை யிவர்ரிரப் பம்மானே

இரவச்சம்

69) கரவா திரந்துமின்மை யிடதென்னி ராவிற்கு
இரப்பவிர வென்னிரவுன் கரப்பவர்க்கு அம்மானே

கயமை

70) மக்களே நன்றறிவார் தேவரகப் பட்டியச்சம்
உக்கரையிர்ங் கைசொ ஞடுப்பதெற்றிற் கம்மானே

பொருட்பால் 70 அதிகாரத் தலைப்புக் கண்ணி முற்றிற்று

இன்பத்துப்பாலில் 25 அதிகாரத்தின் தலைப்புக் கண்ணி

தகையணங் குறுத்தல்

1) அணங்குநோக் கும்பண்டு கண்டார்கூற் றங்கொடும்
குணடா ஒண்பிணையோர் உண்டார்க ணம்மானே

குறிப்பறிதல்

2) இருநோக்கு கண்ணேக்கி யான்குறியு ருச்செரூர்
அருமசையி யற்கேதி லார்கண்ணே டம்மானே

புணர்ச்சி மகிழ்தல்

3) கண்டுபிணி தாம்விழ்வார் நீங்கினே வேட்டவுறு
அண்டுதம்மில் விழுமூட லறிதோறு மம்மானே

நலம்புனேந்துரைத்தல்

4) நன்னீர் மலர்முறிமேற் காணிலனிச் சம்மதியும்
மன்னறுவாய் மாதர் மலரனிச்ச மம்மானே

காதற் சிறப்புரைத்தல்

5) பாலோ,டுடம்பு கருமணிவாழ் வுள்ளுவனீர்
ஆலோர்கண் நெஞ்சிமைப்பி னுவந்துறைவ ரம்மானே

நாணுத்துறவுரைத்தல்

6) காமனே ஞநானே காமத் தொடலேமடல்
ஆமைகட லன்னநிறை யறிகிறர்யா மம்மானே

அலரறிவுறுத்தல்

7) அலர்மல ரன்னவுள கவ்வைகளித் தோறுகண்ட
நிலவூரவர் நெய்யா லவர்தாம்வேண் டம்மானே

பிரிவாற்ருமை

8) செல்லாமை யின்க ணரிதரோ வளித்தோம்பின்
தொல்பரி துறையின்ன தொடியரிதாற் யம்மானே

படர்மெலிந்திரங்கல்

9) மறைகரத்த விர்காமம் துப்பினின்பங் காமன்னு
உரைகரத்த பூங்கொடியா ருள்ளம்போன் றம்மானே

கண்விதுப் பழிதல்

10) கண்தெரிந்து கதுமெனப்பெய் படலாற்ரு, வோவுதந்து
மன்பேன வாராக்கால் மறைபெறலா மம்மானே

பசப்புறு பருவரல்

11) நயந்த வவர்சாய லுள்ளுவக்காண் விளக்கற்றம்
பயந்துபுல் லிப்பசந்தாள் பசக்கபசப் பம்மானே

தனிப்படர் மிகுதி

12) தாம்விழ்வாழ் விழுநர்விழ் நாம்காத லொருதலையான்
தாம்பருவ ரல்விழ்வார் தசையுறுர்க் கம்மானே

நினைந்தவர் புலம்பல்

13) உள்ளி னெனைத்து நினை யாமுந்தந் நெஞ்சமன்றி
வெள்ளி மறைப்பெனைத்தும் விளியும்விடா தம்மானே

கனவு நிலையுரைத்தல்

14) காதற் கயல்நனவிற் கனவில்நன் வேமூன்றில்
போதுதுஞ்சுங் கால்நனவி னனவினு லம்மானே

பொழுதுகண்டிரங்கல்

15) மாலையோபுன் கண்ணை பனிகா தலர்காலை
மாலைநோய் காலையழல் பதிபொருளா மம்மானே

உறுப்புநலனழிதல்

16) சிறிமை நயந்ததணப் பணைகொடி யார்தொடியே
முறிபாடு பெறுமுயங்கி முயக்குகண்ணரி னம்மானே

நெஞ்சொடுகிழத்தல்

17) நினைத்தொன்று காத விருந்துகண்செற் றுர்கலந்து
துணர்காமம் பரிந்தவருள் ளத்துன்று வம்மானே

நிறையழிதல்

18) காமக்கா மம்மறைப்பேன் நிறைசெற்றுர் செற்றவர்நான்
நேமபன்மா யப்புலப்பல் நினைந்தபி லம்மானே

அவர்வயின்விதும்பல்

19) வாளற் றிலங்கிழா யுரங்கூடிக் காண்வருக
ஊழி புலப்பன்வினை யொருநாள்பெறி னம்மானே

குறிப்பறிவுறுத்தல்

20) கரப்பினுங் கண்மணியில் முகைசெறி பெரிதுதண்ணம்
நெருநெற்றுத் தொடிநோக்கிப் பெண்ணினு லம்மானே

புணர்ச்சிவிதும்பல்

21) உள்ளுதினைப் பேறு தூடற் கெழுதுகாணும்
வள்ளுய்த் திளித்த மலரினுங்கண் ணம்மானே

நெஞ்சொடுபுலத்தல்

22) அவருருக் கெட்டார்க் கினியன் பெருதனியே
துவநாணு வெள்ளினிளி துன்பதஞ்ச மம்மானே

புலவி

23) புல்லாவுப் பமையவந்தா ரூடிநலத் துனியூடல்
நில்லாது நோதலெவன் நீருமூட லம்மானே

புலவிநுணுக்கம்

24) பெண்ணூடி கோட்டுப்பூ யாரினுமிம் மையுள்ளி
தண்வழுத்தித் தும்முதன்னை நினைந்திருந்து மம்மானே

ஊடலுவகை

25) இல்லையூட லிற்புலத்தல் புல்லி தவறியுணல்
ஒல்லூட லில்லூடி யூடுடுத லம்மானே

இன்பத்து அதிகாரம் 25ன் தலைப்புக்கண்ணி முற்றிற்று.

முப்பாலான திருக்குறள் மனனத் திறவுகோல் முற்றிற்று

சுபம் 1

வாழ்க உலகம்! மகிழ்க உயிர்கள்!
மலர்க அறநெறி!!! வளர்க தமிழ்!!!!